# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின்
# யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை தணிக்கை அறிக்கை

## மார்ச் 2022உடன் முடிந்த ஆண்டிற்கானது

**புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு**

**அறிக்கை எண் 1 - 2023**

# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின்
# யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை தணிக்கை அறிக்கை

## மார்ச் 2022உடன் முடிந்த ஆண்டிற்கானது

**புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு**

**அறிக்கை எண் 1 - 2023**

# பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **முகவுரை** | | xi |
| **தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்** | | xiii |
| **அத்தியாயம் - I<br>கண்ணோட்டம்** | | |
| யூனியன் பிரதேசம் பற்றிய குறிப்பு | 1.1 | 1 |
| புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு | 1.1.1 | 1 |
| யூனியன் பிரதேசத்தின் நிதிநிலைத் தணிக்கை அறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறை | 1.2 | 3 |
| அறிக்கையின் கட்டமைப்பு | 1.3 | 5 |
| அரசுக் கணக்கின் கட்டமைப்பு மற்றும் வரவு–செலவுத் திட்ட நடைமுறைகள் மீதான கண்ணோட்டம் | 1.4 | 6 |
| நிதிகளின் குறுவிவரம் | 1.4.1 | 8 |
| அரசின் சொத்துக்கள் மற்றும் கடன்பொறுப்புகளின் குறுவிவரம் | 1.4.2 | 10 |
| நிதிச் சமநிலை: பற்றாக்குறைகள் மற்றும் மொத்தக் கடன்களின் இலக்குகளை எய்துதல் | 1.5 | 12 |
| தணிக்கை பரிசோதனைக்குப் பிறகு பற்றாக்குறைகள் மற்றும் மொத்தக்கடன் | 1.6 | 15 |
| நிலுவையிலுள்ள கடன்களின் பகுப்பாய்வு | 1.6.1 | 15 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் – II**<br>**புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதிகள்** | | |
| 2020–21க்கெதிராக 2021–22 ஆண்டில் நிதித் திரட்டுகளில் ஏற்பட்ட முக்கியமான பெரும் மாற்றங்கள் | 2.1 | 17 |
| நிதி ஆதாரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு | 2.2 | 18 |
| யூனியன் பிரதேசத்தின் நிதி ஆதாரங்கள் | 2.3 | 19 |
| யூனியன் பிரதேசத்தின் வரவினங்கள் | 2.3.1 | 20 |
| வருவாய் வரவினங்கள் | 2.3.2 | 21 |
| மூலதன வரவினங்கள் | 2.3.3 | 34 |
| நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் யூனியன் பிரதேசத்தின் செயல்திறன் | 2.3.4 | 35 |
| நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தியமை | 2.4 | 36 |
| செலவினத்தின் வளர்ச்சியும் கூறுகளும் | 2.4.1 | 36 |
| வருவாய் செலவினம் | 2.4.2 | 39 |
| மூலதன செலவினம் | 2.4.3 | 46 |
| செலவின முன்னுரிமை | 2.4.4 | 52 |
| பொதுக் கணக்கு | 2.5 | 53 |
| நிகரப் பொதுக் கணக்குக் கையிருப்புகள் | 2.5.1 | 54 |
| சேமநிதிகள் | 2.5.2 | 55 |
| கடன் மேலாண்மை | 2.6 | 56 |
| கடன் விவரக்குறிப்பு – கூறுகள் | 2.6.1 | 56 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| நிதிப் பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அதற்கான நிதியளிப்பு | 2.6.2 | 59 |
| கடன் விவரக்குறிப்பு: முதிர்வு மற்றும் செலுத்தங்கள் | 2.6.3 | 61 |
| கடன்தாங்கும் தன்மையின் பகுப்பாய்வு | 2.7 | 62 |
| கடனாகப் பெறப்பட்ட நிதிகளின் பயன்பாடு | 2.7.1 | 66 |
| உத்திரவாதங்களின் நிலை | 2.7.2 | 67 |
| ரொக்க இருப்பின் மேலாண்மை | 2.7.3 | 68 |
| முடிவுரை மற்றும் பரிந்துரைகள் | 2.8 | 72 |
| **அத்தியாயம் – III**<br>**வரவு–செலவுத் திட்ட மேலாண்மை** | | |
| வரவு–செலவுத் திட்ட நடைமுறை | 3.1 | 75 |
| 2021–22 காலகட்டத்தில் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியேயான செலவினங்கள் மற்றும் சேமிப்பின் சுருக்க விவரம் | 3.1.1 | 77 |
| சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் | 3.1.2 | 79 |
| நிதியொதுக்கக் கணக்குகள் | 3.2 | 80 |
| வரவு–செலவுத் திட்ட மற்றும் கணக்கியல் செயல்முறையின் ஒழுங்குமுறை | 3.3 | 81 |
| சட்டத்தின் அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவினம் | 3.3.1 | 81 |
| தேவையற்ற அல்லது மிகையான துணைநிலை மானியங்கள் | 3.3.2 | 82 |
| தேவையற்ற துணைநிலை மானிய ஒதுக்கீடு | 3.3.3 | 83 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| தேவையற்ற/மிகையாக/ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள் | 3.3.4 | 85 |
| செலவிடப்படாத தொகை மற்றும் பெரிய அளவிலான சேமிப்புகள்/ஒப்படைப்புகள் | 3.3.5 | 86 |
| அதிகப்படியான செலவினம் மற்றும் அதன் முறைப்படுத்தல் | 3.3.6 | 91 |
| வரவு–செலவுத் திட்டம் மற்றும் கணக்கியல் செயல்முறையின் திறன் குறித்த கருத்துரைகள் | 3.4 | 92 |
| வரவு–செலவுத் திட்ட ஏற்பாடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியேயானவைக்கும் உள்ள இடைவெளி | 3.4.1 | 92 |
| சேமிப்புகள்/மிகைக்கான காரணங்கள் | 3.4.2 | 94 |
| வரவு–செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட முக்கிய கொள்கை அறிவிப்புகள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியேயான நிதி வழிமுறைகள் | 3.4.3 | 95 |
| விரைவுச் செலவினம் | 3.4.4 | 97 |
| தெரிவு செய்யப்பட்ட மானியங்களின் பகுப்பாய்வு | 3.4.5 | 99 |
| முடிவுரை மற்றும் பரிந்துரைகள் | 3.5 | 101 |
| **அத்தியாயம் – IV**<br>**கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்** | | |
| யூனியன் பிரதேச தொகுநிதி அல்லது பொதுக்கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்ட நிதி | 4.1 | 103 |
| வரவு–செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவான பொறுப்புகளை உள்ளடக்காமை | 4.2 | 104 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| வட்டி ஈட்டும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி செலுத்தும் பொறுப்பை மேற்கொள்ளாமை | 4.3 | 105 |
| மாநில செயலாக்க முகமைகளுக்கு நேரிடையாக மாற்றம் செய்யப்பட்ட நிதி | 4.4 | 106 |
| பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தலில் காலதாமதம் | 4.5 | 108 |
| தற்காலிக முன்பணங்களை சரிகட்டாமை | 4.6 | 110 |
| கணக்குச் சிறு தலைப்பு '800'ஐ பாகுபாடற்ற வகையில் உபயோகித்தல் | 4.7 | 112 |
| தன்னாட்சி அமைப்புகள் ஆண்டுக்கணக்குகள்/தனி தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிக்காமை | 4.8 | 114 |
| முறைகேடுகள், இழப்புகள், களவுகள் போன்றவை | 4.9 | 115 |
| யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான பின்தொடர் நடவடிக்கை | 4.10 | 116 |
| முடிவுரை மற்றும் பரிந்துரைகள் | 4.11 | 116 |
| **அத்தியாயம் – V**<br>**யூனியன் பிரதேச பொதுத்துறை நிறுவனங்கள்** | | |
| அரசு நிறுவனங்களின் பொருள் வரையறை | 5.1 | 119 |
| உரிமைக் கட்டளை | 5.2 | 119 |
| பொதுத்துறை நிறுவனங்களின் பரப்பு மற்றும் தன்மை | 5.3 | 120 |
| யூனியன் பிரதேச GSDPயில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு | 5.4 | 120 |
| யூனியன் பிரதேச அரசு நிறுவனங்களில் முதலீடுகள் | 5.5 | 121 |
| பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் கடன்கள் | 5.5.1 | 121 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| பங்கு விலக்கல், மறுசீரமைப்பு மற்றும் தனியார்மயமாக்கல் | 5.5.2 | 122 |
| பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து மீள்வரவுகள் | 5.6 | 122 |
| பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டிய இலாபம் | 5.6.1 | 122 |
| பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஆதாயப்பங்கு | 5.6.2 | 122 |
| கடன் சேவைகள் | 5.7 | 123 |
| வட்டி பரப்பு | 5.7.1 | 123 |
| அரசு நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறன் | 5.8 | 124 |
| பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட வருவாய் | 5.8.1 | 124 |
| பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் | 5.8.2 | 126 |
| அரசு முதலீட்டின் உண்மையான வருவாய் விகிதம் (RoRR) | 5.8.3 | 127 |
| நட்டத்தைச் சந்திக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் | 5.9 | 129 |
| அரசு நிறுவனங்களில் ஏற்பட்ட நட்டம் | 5.9.1 | 129 |
| அரசு நிறுவனங்களில் முதலீடு தேய்தல் | 5.9.2 | 130 |
| பொதுத்துறை நிறுவனங்கள் கணக்குகளை சமர்ப்பித்தல் | 5.10 | 131 |
| கணக்குகளை காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் | 5.10.1 | 131 |
| அரசு நிறுவனங்கள் கணக்குகளை காலக்கெடுவிற்குள் சமர்ப்பித்தல் | 5.10.2 | 132 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வை பொறுப்பு – கணக்குகளின் தணிக்கை மற்றும் துணைநிலைத் தணிக்கை | 5.11 | 133 |
| நிதிநிலை அறிக்கையில் கட்டமைப்பு | 5.11.1 | 133 |
| சட்டமுறை தணிக்கையாளர்கள் மூலம் அரசு நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல் | 5.11.2 | 133 |
| அரசு நிறுவனங்களின் கணக்குகளின் மீதான கூடுதல் தணிக்கை | 5.11.3 | 134 |
| இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வைப் பொறுப்பின் முடிவுகள் | 5.12 | 135 |
| திருத்தியமைக்கப்பட்ட தணிக்கையாளர்களின் அறிக்கைகள் | 5.12.1 | 135 |
| கணக்கியல் தரநிலைகள்/இந்திய கணக்கியல் தரநிலைகளின் விதிகளை கடைபிடிக்காமை | 5.12.2 | 135 |
| மேலாண்மைக் கடிதங்கள் | 5.13 | 136 |
| முடிவுரை மற்றும் பரிந்துரைகள் | 5.14 | 136 |

# இணைப்புகள்



| இணைப்பு எண் | விவரங்கள் | பத்தி | பக்கம் |
|---|---|---|---|
| 2.1 | புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் நிதி நிலைமையின் சுருக்கம் | 2.1 | 139 |
| 3.1 | வரவு–செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய சொற்தொகுதிகளின் விளக்கம் | 3.1 | 143 |
| 3.2 | ரூபாய் 50 இலட்சம் அல்லது அதற்கு மேலான துணைநிலை மானியங்கள் பகுதியளவு தேவையற்றது என நிரூபிக்கப்பட்ட நேர்வுகளின் விவரங்கள் | 3.3.3 | 147 |
| 3.3 | ரூபாய் 10 இலட்சம் அல்லது அதற்கு மேலான முற்றிலும் தேவையற்ற மறுநிதியொதுக்கங்கள் | 3.3.4 | 149 |
| 3.4 (அ) | ரூபாய் ஒரு கோடிக்கும் மேலான சேமிப்புகள் ஒப்புவிக்கப்படாத நேர்வுகளின் விவரங்கள் | 3.3.5.1 | 152 |
| 3.4 (ஆ) | மொத்த சேமிப்புகள் (₹ ஒரு கோடிக்கும் மேலானவை) ஒப்புவிக்கப்படாத நேர்வுகளின் விவரங்கள் | 3.3.5.1 | 154 |
| 3.5 | மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் மற்றும் ₹ 10 இலட்சத்திற்கும் அதிகமாக ஒப்புவிப்பு செய்யப்பட்ட நேர்வுகளின் விவரங்கள் | 3.3.5.2 | 156 |
| 3.6 | ஒவ்வொரு நேர்விலும் சேமிப்புகள் ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு மேலாகவும் உள்ள நேர்வுகளின் விவரங்கள் | 3.3.5.3 | 157 |
| 3.7 | விரைவுச் செலவினம் | 3.4.4 | 162 |

| இணைப்பு எண் | விவரங்கள் | பத்தி | பக்கம் |
|---|---|---|---|
| 4.1 | 2021–22 காலகட்டத்தில் கணக்கு சிறு தலைப்பு "800–பிற செலவினங்களின்" கீழ் பதிவு செய்யப்பட்டவை | 4.7 | 169 |
| 4.2 | 2021–22 காலகட்டத்தில் கணக்கு சிறு தலைப்பு "800–பிற வரவினங்களின்" கீழ் பதிவு செய்யப்பட்டவை | 4.7 | 170 |
| 4.3 | கணக்குகள் பெறப்படாத தன்னாட்சி அமைப்புகள்/குழுமங்களின் பட்டியல் | 4.8 | 171 |
| 4.4 | அரசுப்பொருட்களின் முறைகேடு/இழப்பு/ பணக்கையாடல்கள் போன்ற நேர்வுகள் | 4.9 | 174 |
| 5.1 | 2021–22 காலகட்டத்தில் CAGயின் தணிக்கை அதிகாரத்தின் கீழுள்ள அரசு நிறுவனங்களின் பட்டியல் | 5.3 | 175 |
| 5.2 | பொதுத்துறை நிறுவனங்களின் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட வருவாய் | 5.8.1 | 176 |
| 5.3 | பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் | 5.8.2 | 178 |
| 5.4 | சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி நிகர மதிப்பு அழிந்துள்ள பொதுத்துறை நிறுவனங்களின் விவரங்கள் | 5.9.2 | 180 |
| 5.5 | கணக்குகள் நிலுவையிலுள்ள நிறுவனங்களின் விவரங்கள் | 5.10.2 | 181 |
| | சுருக்கக் குறியீடுகளின் விளக்கம் | | 182 |

## முகவுரை

1. இந்த அறிக்கை 1963ஆம் ஆண்டு யூனியன் பிரதேச அரசுகள் சட்டத்தின் 49ஆம் பிரிவின் கீழ் துணைநிலை ஆளுநருக்குப் பணிந்தனுப்புவதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

2. அத்தியாயம் I அரசுக் கணக்குகளின் கட்டமைப்பின் கண்ணோட்டம், வரவு–செலவுத் திட்ட நடைமுறைகள், முக்கியக் குறியீடுகளின் பெரும் நிதிப் பகுப்பாய்வு மற்றும் பற்றாக்குறை/மிகையை உள்ளடக்கிய யூனியன் பிரதேசத்தின் நிதி நிலைமையை விவரிக்கிறது.

3. 31 மார்ச் 2022 அன்று முடிந்த ஆண்டுக்கான புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் நிதிக் கணக்குகள் மற்றும் நிதியொதுக்க கணக்குகளை ஆய்வு செய்ததில் எழுந்த தணிக்கைக் குறிப்புகள் முறையே அத்தியாயம் II மற்றும் IIIல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. 'கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்' மீதான அத்தியாயம் IV, நடப்பாண்டில், பல்வேறு நிதி விதிகள், விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளின் மீதான யூனியன் பிரதேச அரசின் இணக்கத்தன்மையை எடுத்துரைக்கிறது. தேவைப்படும் நேர்வுகளில், அறிக்கைக்கு தேவையான தகவல்கள் புதுச்சேரி யூனியன் பிரதேச அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

5. அத்தியாயம் V அரசு நிறுவனங்களின் நிதிச் செயல்பாட்டைப் பற்றி சுருக்கமாக வழங்குவதுடன் துணைநிலைத் தணிக்கை மேற்கொள்ள CAGக்கு உள்ள சட்ட உரிமையைப் பற்றியும் விவரிக்கிறது.

6. இத்தமிழ் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கைக் குறிப்புகள் ஆங்கில அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கில அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளும் தமிழ் அறிக்கையில் மாறுபடாமல் இருக்க அனைத்து முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மொழிபெயர்ப்பு அறிக்கையில் ஐயப்பாடு எழுந்தால், ஆங்கில அறிக்கையையே அதிகார பூர்வமானதாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

# தணிக்கைக்
# குறிப்புகளின் சுருக்கம்

# தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

## யூனியன் பிரதேசம் பற்றிய சிறப்புக் குறிப்பு

புதுச்சேரி யூனியன் பிரதேசம், 490 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. யூனியன் பிரதேசம் என்பது புவியியல் ரீதியாக ஒன்றோடொன்று சேராத பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய நான்கு மண்டலங்களைக் கொண்டது. 2011ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி யூனியன் பிரதேசத்தின் மக்கட்தொகை 12.48 இலட்சம் ஆகும். இது 2001ம் ஆண்டின் மக்கட்தொகையோடு ஒப்பிடுகையில் கடந்த பத்தாண்டு காலத்தொகுப்பில் 25.72 சதவீத வளர்ச்சியை கண்டிருந்தது. 2021-22ல் யூனியன் பிரதேசத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP), தற்போதைய விலையில் ₹ 37,485 கோடியாகும்.

**(பத்தி 1.1)**

## நிதி நிலைமை

வருவாய் பற்றாக்குறை/மிகை, நிதி பற்றாக்குறை/மிகை மற்றும் நிலுவையிலுள்ள கடன் மற்றும் GSDPக்கும் உள்ள விகிதம் ஆகிய மூன்று முக்கிய நிதி அளவுருக்களைக் கொண்டு யூனியன் பிரதேசத்தின் நிதி நிலைமை நோக்கப்படுகிறது.

2017-18ல் ₹ 196 கோடியாக இருந்த வருவாய் மிகை, 2021-22ல் ₹ 899 கோடி வருவாய் பற்றாக்குறையாக மாறியுள்ளது. வருவாய் பற்றாக்குறை ஏறுமுகமாக உள்ளதால், வருவாய் பற்றாக்குறையை முற்றிலுமாக தவிர்க்க வேண்டுமென்ற இலக்கினை கருதியபடி யூனியன் பிரதேச அரசு அடைவது சாத்தியமில்லை.

GSDPயுடனான நிதிப்பற்றாக்குறை நடப்பாண்டில் 2.81 என்ற விகிதத்தில் உள்ளது. இது இலக்கான 3 சதவீதத்திற்குட்பட்டு இருந்தது.

நிலுவையிலுள்ள மொத்த கடன் மற்றும் GSDPக்கான விகிதம் 2021-22ன் இறுதியில் 26.27 சதவீதமாக இருந்தது. இது இலக்கான 25 சதவீதத்தை விட உயர்ந்திருந்தது,

**(பத்தி 1.5)**

## யூனியன் பிரதேசத்தின் நிதியங்கள்

**வருவாய் வரவினங்கள்:** 2021-22 காலகட்டத்தில், வருவாய் வரவினங்கள் முந்தைய ஆண்டை விட ₹ 1,969 கோடி (33.43 சதவீதம்) அதிகரித்துள்ளது. GSDPயுடனான வருவாய் வரவினத்தின் மேலோங்குநிலை விகிதம் 2020-21ல் 4.64லிருந்து 2021-22ல் 6.63ஆக அதிகரித்துள்ளது.

**(பத்தி 2.3.2.1)**

**சொந்த நிதி ஆதாரங்கள்:** சொந்த நிதி ஆதாரங்களின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2021-22ல் முந்தைய ஆண்டைக் காட்டிலும், 66.12 சதவீதம் அதிகரித்துள்ளது.

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, வருவாய் முதன்மைத் தலைப்புகளின் கீழ், வருவாய் நிலுவைகளாக இருந்த ₹ 1,067.90 கோடியில், ₹ 674.92 கோடி, ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

**(பத்தி 2.3.2.2)**

**உதவி மானியங்கள்:** இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள் முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2021-22 காலகட்டத்தில் ₹ 43 கோடி அளவிற்கு குறைந்தது. இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியம் வருவாய் வரவினத்தில் 31.03 சதவீதமாக இருந்தது.

**(பத்தி 2.3.2.3)**

**மொத்தச் செலவினம்:** 2017-18ல் ₹ 6,201 கோடியாக இருந்த மொத்தச் செலவினம் 2021-22ல் ₹ 8,911 கோடியாக (43.70 சதவீதம்) அதிகரித்தது. மொத்தச் செலவினத்தில் பொது, சமூக மற்றும் பொருளாதார சேவைகள் மீதான செலவினம் முறையே 31.46 சதவீதம், 31.63 சதவீதம் மற்றும் 36.91 சதவீதமாக இருந்தது.

**(பத்தி 2.4.1)**

**வருவாய் செலவினம்:** வருவாய் செலவினம், 2021-22 காலகட்டத்தில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் ₹ 1,488 கோடி (20.50 சதவீதம்) அதிகரித்திருந்தது. மொத்தச் செலவினத்தில் வருவாய் செலவினம் 98.17 சதவீதமாக இருந்தது. GSDPயின் சதவீதமாகப் பார்க்கையிலும், 2020-21ல் 20.34ஆக இருந்த வருவாய் செலவினம், 2021-22ல் 23.34ஆக அதிகரித்திருந்தது. 2021-22 காலகட்டத்தில், வருவாய் வரவினத்துடனான வருவாய் செலவினத்தின் மேலோங்குநிலை 0.61ஆக இருந்தது.

**(பத்தி 2.4.2)**

**ஏற்கப்பெற்ற செலவினம்:** 2021-22 காலகட்டத்தில், ஏற்கப்பெற்ற செலவினம், வருவாய் செலவினத்தில் 54.92 சதவீதமாகவும், வருவாய் வரவினத்தில் 61.13 சதவீதமாகவும் இருந்தது.

**(பத்தி 2.4.2.2)**

**ஊக்குதவித் தொகைகள்:** நடப்பாண்டின்போது ₹ 23.41 கோடி அளவிற்கு மறைமுக ஊக்குதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

**(பத்தி 2.4.2.3)**

**மூலதன செலவினம்:** மூலதன செலவினம் குறைந்து வரும் போக்கில் இருந்தது. 2017-18ம் ஆண்டில் மூலதன செலவினம் ₹ 315 கோடி செலவிடப்பட்டதற்கு எதிராக, 2021-22 காலகட்டத்தில் ₹ 163 கோடி செலவிடப்பட்டது. இது மொத்தச் செலவினத்தில் 1.83 சதவீதமாக மட்டுமே இருந்தது.

**(பத்தி 2.4.3)**

**முடிவுறாத் திட்டங்கள்:** பொதுப் பணிகள் மற்றும் மின்சக்தித் துறைகளில் 60 முடிவுறாத் திட்டங்களில் ₹ 124.94 கோடி அளவிற்கு முடக்கப்பட்டது.

**(பத்தி 2.4.3.3)**

2017-18ல் 19.29ஆக இருந்த மொத்தச் செலவினத்திற்கும் GSDPக்கும் இடையேயான சதவீதம், 2021-22ல் 23.77ஆக உயர்ந்தது. பொது வகை மாநிலங்களைப் பொறுத்தவரை, இது 2017-18ல் 16.13 சதவீதமாகவும், 2021-22ல் 15.84 சதவீதமாகவும் இருந்தது. 2017-18ல் மொத்தச் செலவினத்தில் 12.29 சதவீதமாக இருந்த கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு மீதான செலவினம், 2021-22ல் 10.83 சதவீதமாக வீழ்ச்சியுற்றதுடன் இந்த இரண்டாண்டுகளிலும் இது பொது வகை மாநிலங்களை விட குறைவாக இருந்தது.

**(பத்தி 2.4.4)**

**கடன் விவரக்குறிப்பு:** 2017-18ல் ₹ 8,799 கோடியாக இருந்த நிலுவையில் உள்ள கடன்கள் (பொதுக் கணக்குக் பொறுப்புகளையும் உள்ளடக்கியவை) 2021-22ல் ₹ 12,593 கோடியாக அதிகரித்திருந்தது மற்றும் அதே காலகட்டத்தில், அதன் வளர்ச்சி வீதம் 6.02 சதவீதத்திலிருந்து 15.68 சதவீதமாக அதிகரித்திருந்தது. 2021-22ம் ஆண்டில், மொத்தக் கடன் வரவினமான ₹ 2,516 கோடியிலிருந்து கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்கு ₹ 891 கோடி (35.41 சதவீதம்) பயன்படுத்தப்பட்டு, மீதமுள்ள ₹ 1,625 கோடி மூலதன செலவினத்திற்கு கிடைத்தது.

**(பத்தி 2.6.1)**

**முதிர்வு விவரக் குறிப்பு:** மொத்த பொதுக்கடனில் 66.18 சதவீதம் அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நிலையில்

உள்ளது என்பதனை பொதுக்கடனிற்கான முதிர்வு விவரக் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது.

**(பத்தி 2.6.3)**

**வட்டிச் செலுத்தங்களின் சுமை:** 2020-21ல் வருவாய் வரவினத்தில் 12.85 சதவீதமாக இருந்த வட்டிச் செலுத்தங்களின் சுமை, 2021-22ல் 11.16 சதவீதமாக குறைந்தது.

**கடன் திரும்பச் செலுத்தங்கள்:** 2019-20ல் 73.06 சதவீதமாக இருந்த கடன் வரவினங்களில் கடன் திரும்பச் செலுத்தங்கள், 2021-22ல் 35.41 சதவீதமாக குறைந்தது. 2021-22ல் கடன் வரவினங்களில் கடன் திரும்பச் செலுத்தங்கள் திடீரென வீழ்ச்சியுற்றதற்கு, GST இழப்பீட்டு பற்றாக்குறைக்காக இந்திய அரசு ₹ 1,096 கோடியை கடனாக விடுவித்ததே முக்கிய காரணமாகும்.

**(பத்தி 2.7)**

## வரவு-செலவுத் திட்ட மேலாண்மை

**சுருக்கம்:** முதல்நிலை மற்றும் துணைநிலை மானியங்களை உள்ளடக்கிய யூனியன் பிரதேச சட்டப்பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ₹ 10,530.68 கோடி ஆகும். இதில், ₹ 9,818.24 கோடி அளவிற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டு ₹ 712.44 கோடி சேமிப்பு ஏற்பட்டது.

**(பத்தி 3.1.1)**

**வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாமல் செலவினம்:** ஆறு துணைத் தலைப்புகளின் கீழ், எந்தவொரு முதல்நிலை அல்லது துணைநிலை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடும் இல்லாமல் ₹ 14.14 கோடி மறுநிதியொதுக்கம் செய்யப்பட்டு, ₹ 14.14 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

**(பத்தி 3.3.1.1)**

**தேவையற்ற துணைநிலை மானிய ஒதுக்கீடு:** இருபது மானியங்கள்/ நிதியொதுக்கங்களில், 2021-22 காலகட்டத்தில் ₹ 50 இலட்சம் அல்லது அதற்கும் கூடுதலாக ஒதுக்கப்பட்ட ₹ 554.95 கோடி அளவிற்கான துணைநிலை மானியத்தில் ₹ 460.58 கோடி அளவிற்கு மிகையாக இருந்தது.

**(பத்தி 3.3.3)**

**தேவையற்ற/மிகையாக செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள்:** ₹ 10 இலட்சம் மற்றும் அதற்கும் மேல் மறுநிதியொதுக்கம் செய்யப்பட்ட 70 துணைத் தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினமான ₹ 716.69 கோடியானது, மொத்த ஒதுக்கீடான ₹ 836.08 கோடிக்கும் குறைவாக இருந்ததால், இந்தத்

துணைத் தலைப்புகளில் செய்யப்பட்ட ₹ 45.33 கோடி மறுநிதியொதுக்கம் தேவையற்றது. இந்த 70 துணைத் தலைப்புகளில், 15 துணைத் தலைப்புகளில் எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை.

**(பத்தி 3.3.4)**

**எதிர்பார்க்கப்பட்ட மீதங்கள் ஒப்படைக்கப்படாமை:** இருபத்து மூன்று மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் ஏற்பட்ட சேமிப்பான ₹ 705.76 கோடியில் (₹ ஒரு கோடி மற்றும் அதற்கு மேலும் ஏற்பட்ட சேமிப்பு), ₹ 592.74 கோடி (சேமிப்பில் 83.99 சதவீதம்) ஒப்படைக்கப்படவில்லை மற்றும் 19 மானியங்கள்/நிதியொதுக்கங்களை பொறுத்தவரையில், அவற்றில் ஏற்பட்ட சேமிப்பான ₹ 476.58 கோடியில் எந்தவொரு தொகையும் ஒப்படைக்கப்படவில்லை.

**(பத்தி 3.3.5.1)**

**பெருமளவில் சேமிப்புகள் உள்ள மானியங்கள்:** முப்பத்து மூன்று மானியங்களில் 13 மானியங்களில், ஒவ்வொரு நேர்விலும் ₹ 10 கோடி அல்லது அதற்கு மேலாக (நான்கு மானியங்கள் ₹ 50 கோடிக்கும் மேலாக சேமிப்பு உள்ளவை) ₹ 587.62 கோடி சேமிப்பு (மொத்த சேமிப்பான ₹ 712.44 கோடியில் 82.48 சதவீதம்) இருந்தது. 138 துணைத் தலைப்புகளில், ஒவ்வொரு நேர்விலும் ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மற்றும் மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கும் மேலாகவும் சேமிப்பு ஏற்பட்டு மொத்த ஒதுக்கீடான ₹ 687.54 கோடியில் ₹ 553.67 கோடி (80.53 சதவீதம்) சேமிப்பாக இருந்தது.

**(பத்தி 3.3.5.3)**

**தொடர்ந்து நிகழும் சேமிப்புகள்:** கடந்த ஐந்தாண்டு காலத்தில் மொத்தமுள்ள 33 மானியங்களில், 18 மானியங்களில் ₹ 50 இலட்சத்திற்கும் மேலாக சேமிப்புகள் தொடர்ந்து ஏற்பட்டது கண்டறியப்பட்டது.

**(பத்தி 3.3.5.4)**

**விரைவுச் செலவினம்:** 97 துணைத் தலைப்புகளைப் பொறுத்தவரை, மார்ச் 2022ல், ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மற்றும் மொத்த செலவினத்தில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(பத்தி 3.4.4)**

## கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்

**பொதுக்கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்ட நிதி:** ஓட்டுநர் உரிமம், பதிவுச் சான்றிதழ், வரி விதிப்பு மற்றும் அனுமதிச்சீட்டு ஆகியவற்றிற்கு

சேவைக் கட்டணமாக போக்குவரத்துத் துறையால் வசூலிக்கப்பட்ட ₹ 9.41 கோடிக்கான தொகை பொதுக்கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்டது.

**(பத்தி 4.1)**

**மிகத் தெளிவான பொறுப்புகளை உள்ளடக்காமை:** ஒப்பந்ததாரர்களுக்கான செலுத்தங்களுக்காக மார்ச் 2022 அன்றுள்ளவாறு, ₹ 76.68 கோடி அளவிற்கு ஏற்கப்பெற்ற பொறுப்புறுதிகளை பொதுப்பணித் துறை நிலுவையில் கொண்டிருந்தது.

**(பத்தி 4.2)**

**செயலாக்க முகமைகளுக்கு நேரிடையாக மாற்றம் செய்யப்பட்ட நிதி:** 2021-22ம் ஆண்டில், இந்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ₹ 222.64 கோடியை இந்திய அரசு நேரடியாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பல்வேறு செயலாக்க முகமைகளுக்கு மாற்றம் செய்தது. இந்த நிதிகள் யூனியன் பிரதேச அரசின் வரவு-செலவுத் திட்டம் வழியாக செலுத்தப்படாததால், நிதிக் கணக்குகள் இந்த நிதிகளின் ஓட்டம் அல்லது தொடர்புடைய செலவினத்தை உள்ளடக்கவில்லை.

**(பத்தி 4.4)**

**பயன்பாட்டுச் சான்றிதழ்கள்:** 769 நேர்வுகளில் ₹ 502.16 கோடிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையிலுள்ளது. இவற்றில், ₹ 37.91 கோடிக்கான 199 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஒன்பது ஆண்டு காலத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

**(பத்தி 4.5)**

**தற்காலிக முன்பணங்கள்:** 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, பல்வேறு பணம் பெற்று வழங்கும் அதிகாரிகளால் பெறப்பட்ட ₹ 130.70 கோடிக்கான 1,100 தற்காலிக முன்பணங்கள் சரிசெய்யப்படாமல் இருந்தன. இவற்றில் ₹ 17.65 கோடிக்கான 296 தற்காலிக முன்பணங்கள், 10 ஆண்டுகளுக்கும் மேலாக சரிசெய்யப்படாமல் இருந்தன.

**(பத்தி 4.6)**

**கணக்குச் சிறு தலைப்பு '800'ஐ பாகுபாடற்ற வகையில் உபயோகித்தல்:** 2021-22ல் பத்து பெருந்தலைப்புகளின் கீழ் ₹ 2,389.24 கோடி அளவிற்கு (இந்தத் தலைப்புகளின் மொத்தச் செலவினமான ₹ 2,641.53 கோடியில் 90.45 சதவீதம்) சிறு தலைப்பு "800 - பிற செலவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதே போல், 10 பெருந்தலைப்புகளின் கீழ் ₹ 17.47 கோடிக்கான வருவாய் வரவினங்கள் (இத்தலைப்புகளில் மொத்த வரவினமான ₹ 18.38 கோடியில் 95.05 சதவீதம்) சிறு தலைப்பு "800 - பிற வரவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

**(பத்தி 4.7)**

**ஆண்டுக் கணக்குகள் சமர்ப்பிக்காமை:** 2021-22 வரை 70 அமைப்புகள்/ குழுமங்களில் 61 அமைப்புகள்/குழுமங்களிடமிருந்து பெறப்படவேண்டிய ஆண்டு கணக்குகள் தணிக்கையில் பெறப்படவில்லை. 17 அமைப்புகள்/ குழுமங்களைப் பொறுத்தவரை, கணக்குகள் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலிருந்தன.

**(பத்தி 4.8)**

**முறைகேடுகள் மற்றும் இழப்புகள்:** மார்ச் 2022 வரையில் பல்வேறு துறைகளில் 322 நேர்வுகளில் ₹ 27.98 கோடிக்கான அரசுப் பணம், முறைகேடு, இழப்பு மற்றும் பணக்கையாடல்கள் செய்யப்பட்டுள்ளதாக யூனியன் பிரதேச அரசு தெரிவித்திருந்தது. ₹ 27.25 கோடிக்கான 50 நேர்வுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, விசாரணை முடிவுகள் எதிர்நோக்கப்படுகிறது.

**(பத்தி 4.9)**

## யூனியன் பிரதேச பொதுத்துறை நிறுவனங்கள்

**பொதுத்துறை நிறுவனங்களின் தன்மை மற்றும் முதலீடுகள்:** 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, 13 அரசு நிறுவனங்கள் (பொதுத்துறை நிறுவனங்கள்) இருந்தன. இவற்றில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 12 செயல்படும் நிறுவனங்களும் ஒரு செயல்படாத நிறுவனமும் உள்ளன. பொதுத்துறை நிறுவனங்களில் மொத்த முதலீடு (பங்கு மூலதனம் மற்றும் நீண்டகாலக் கடன்கள்) ₹ 731.81 கோடியாகும்.

**(பத்திகள் 5.3 மற்றும் 5.5)**

**வழங்கப்பட்ட ஆதாயப்பங்கு:** யூனியன் பிரதேச அரசானது முதலீடு செய்த பங்கு மூலதனத்திற்கு குறைந்தபட்ச ஆதாயப்பங்கை வழங்குவதற்கான எந்தவொரு கொள்கையையும் வகுக்கவில்லை. யூனியன் பிரதேச அரசால் பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடான ₹ 712.39 கோடியிலிருந்து ஆதாயப்பங்கு வடிவில் பெறப்பட்ட வருவாய் வெறும் 0.79 சதவீதம் மட்டுமேயாகும்.

**(பத்தி 5.6.2)**

**உண்மையான வருவாய் விகிதம்:** 2021-22ல் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்த நட்டம் ஏற்பட்டதால், புராதன மதிப்பில் கணக்கிடப்பட்ட அரசு முதலீட்டின் மீதான உண்மையான வருவாய் விகிதம் (−) 4.58 சதவீதம் என எதிர்மறையாக இருந்ததுடன், தற்போதைய மதிப்புடன் ஒப்பிடும் போதும், அது (-) 1.73 சதவீதம் என எதிர்மறையாகவே இருந்தது.

**(பத்தி 5.8.3)**

**ஈட்டப்பட்ட இலாபம்:** பன்னிரெண்டு செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில், ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 38.48 கோடி இலாபத்தையும், ஏழு பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 49.87 கோடி நட்டத்தையும் ஈட்டியது, ₹ 11.39 கோடி திரண்ட மொத்த நட்டத்தில் முடிந்தது.

**(பத்தி 5.9.1)**

**கணக்குகளை காலக்கெடுவிற்குள் தயாரித்தல்:** பல்வேறு காரணங்களால் 12 அரசு நிறுவனங்களின் கணக்குகளும் இறுதி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன. நான்கு நிறுவனங்கள் நிலுவையிலிருந்த ஐந்து கணக்குகளை 2021-22 காலகட்டத்தில் தணிக்கைக்கு சமர்ப்பித்தன.

**(பத்தி 5.10.2)**

**கணக்கியல் தரநிலைகளை கடைபிடிக்காமை:** ஒரு நிறுவனம் கட்டாயக் கணக்கியல் தரநிலைகளை கடைபிடிக்கவில்லை என சட்டமுறைத் தணிக்கையாளர்கள் அறிக்கை அளித்துள்ளனர்.

**(பத்தி 5.12.2)**

# அத்தியாயம் I

# கண்ணோட்டம்

# அத்தியாயம் I: கண்ணோட்டம்

## 1.1 யூனியன் பிரதேசம் பற்றிய குறிப்பு

***புவியியல் விவரக்குறிப்பு:*** புதுச்சேரி யூனியன் பிரதேசம், 490 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. யூனியன் பிரதேசமானது புவியியல் ரீதியாக ஒன்றோடொன்று சேராத பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய நான்கு மண்டலங்களைக் கொண்டது. யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ல் உள்ள விதிகளின்கீழ் புதுச்சேரி யூனியன் பிரதேசம் நிர்வகிக்கப்படுகிறது.

***மக்கட்தொகை விவரக்குறிப்பு:*** 2011ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி யூனியன் பிரதேசத்தின் மக்கட்தொகை 12.48 இலட்சம் ஆகும். தேசிய மக்கட்தொகை ஆணையத்தின் முன்கணிப்பின்படி, 2021-22ல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் உத்தேச மக்கட்தொகை 16.08 இலட்சமாகும். இது 2011ம் ஆண்டின் மக்கட்தொகையோடு ஒப்பிடுகையில் கடந்த பத்தாண்டு காலத்தொகுப்பில் 25.72 சதவீதம் வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. யூனியன் பிரதேசத்தில் வறுமைகோட்டிற்குக் கீழே உள்ள மக்கட்தொகையின் சதவீதம் 9.69 ஆகும். இது அகில இந்திய சராசரியான 21.92ஐ விட குறைவாகும். யூனியன் பிரதேசத்தின் கல்வியறிவு நிலை 81.24 சதவீதத்திலிருந்து (2001 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி) 85.80 சதவீதமாக (2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி) உயர்ந்துள்ளது.

***பொருளாதார விவரக்குறிப்பு:*** 2021-22ல் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP), தற்போதைய விலையில் ₹ 37,485 கோடியாகும். யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்கள் ₹ 7,859 கோடியாகவும் மற்றும் வருவாய் செலவினங்கள் ₹ 8,748 கோடியாகவுமிருந்து ₹ 889 கோடி வருவாய் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. 2021-22 காலகட்டத்தில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மொத்த வரவினங்கள் ₹ 10,375 கோடி மற்றும் மொத்தச் செலவினங்கள் ₹ 9,802 கோடியாகும்.

### 1.1.1 புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு

GSDP என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மாநில எல்லைக்குள் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின்

---

இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள சொற்கூறுகள் மற்றும் சுருக்கக் குறியீடுகளின் விளக்கம் பக்கம் எண் 182ல் பட்டியலிடப்பட்டுள்ளன.

மதிப்பாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் யூனியன் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி மாற்றங்களின் அளவைக் குறிப்பிடுவதால், GSDPயின் வளர்ச்சி யூனியன் பிரதேசத்தின் பொருளாதாரத்தின் ஒரு முக்கியச் சுட்டிக்காட்டியாகும்.

மாறிவரும் பொருளாதாரக் கட்டமைப்பைப் புரிந்துகொள்ள GSDPயின் பிரிவுவாரியான பங்களிப்பில் ஏற்படும் மாற்றங்களும் முக்கியமாகும். பொதுவாக முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை என பிரிக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகள், வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளுக்கு ஒத்தவையாகின்றன. நடப்பு விலையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் யூனியன் பிரதேசத்தின் GSDPயின் ஆண்டு வளர்ச்சியின் போக்குகள் **அட்டவணை 1.1**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1: தேசிய GDPயுடன் ஒப்பிடும் போது GSDPயின் போக்குகள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| தேசிய GDP (2011-12 தொகுதி) | 1,70,90,042 | 1,88,99,668 | 2,00,74,856 | 1,98,00,914 | 2,36,64,637 |
| முந்தைய ஆண்டை விட GDPயின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | 11.03 | 10.59 | 6.22 | (-) 1.36 | 19.51 |
| GSDP (2011-12 தொகுதி) | 32,129 | 36,386 | 36,724 | 35,685 | 37,485 |
| முந்தைய ஆண்டை விட GSDPயின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | 8.64 | 13.25 | 0.93 | (-) 2.83 | 5.04 |

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், புதுச்சேரி)

GSDPயின் பிரிவுவாரியான பங்களிப்பில் மாற்றங்கள் மற்றும் GSDPயின் பிரிவுவாரியான வளர்ச்சி ஆகியவை முறையே **விளக்கப்படங்கள் 1.1** மற்றும் **1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.




QE: விரைவு மதிப்பீடு

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், புதுச்சேரி)




(A: உள்ளபடியேயானவை; RE: திருத்திய மதிப்பீடு; QE: விரைவு மதிப்பீடு)

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், புதுச்சேரி)

## 1.2 யூனியன் பிரதேசத்தின் நிதிநிலைத் தணிக்கை அறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறை

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் (UT சட்டம், 1963) பிரிவு 49ன் படி, யூனியன் பிரதேசத்தின் கணக்குகள் தொடர்பான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) அறிக்கைகள் யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவர் அதை யூனியன்

பிரதேசத்தின் சட்டப்பேரவையின் முன்வைப்பார். யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை தணிக்கை அறிக்கை (UTFAR) யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 49ன் கீழ் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது..

கணக்குகள் மற்றும் கருவூலங்களின் இயக்குநர் ஆண்டுதோறும் யூனியன் பிரதேச அரசின் நிதிக் கணக்குகள் மற்றும் நிதியொதுக்கக் கணக்குகளைத் தயாரிக்கிறார். இவை, யூனியன் பிரதேச அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அத்தகைய கணக்குகளுக்குப் பொறுப்பான அலுவலகங்கள் மற்றும் துறைகளால் வழங்கப்பட்ட செலவுச் சீட்டுகள், செலுத்துச் சீட்டுகள், துணைக் கணக்குகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட விவர அறிக்கைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இக்கணக்குகள் முதன்மை தணிக்கைத் துறைத் தலைவர் (தணிக்கை - II), தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அவர்களால் தற்சார்பாக தணிக்கை செய்யப்பட்டு, CAG அவர்களால் சான்றளிக்கப்படுகிறது.

யூனியன் பிரதேச அரசின் நிதிக் கணக்குகள் மற்றும் நிதியொதுக்கக் கணக்குகள் இந்த அறிக்கையின் முக்கியத் தரவுகளாகும். பின்வருவனவும் மற்ற ஆதாரங்களாகும்.

- யூனியன் பிரதேசத்தின் வரவு–செலவுத் திட்டம்: திட்ட கணிப்பிற்கெதிராக நிதி அளவுருக்கள் மற்றும் ஒதுக்கீட்டு முன்னுரிமைகளை மதிப்பிடுவதற்கும் அதனுடன் அவற்றை செயல்படுத்தும் திறனை மதிப்பிடுதல் மற்றும் தொடர்புடைய விதிகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்குதல் ;
- முதன்மை தணிக்கைத் துறைத் தலைவர் (தணிக்கை – II), தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையின் முடிவுகள்;
- துறை அதிகாரிகளிடமுள்ள பிற தரவுகள்;
- GSDP தரவுகள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்குத் தொடர்புடைய புள்ளிவிவரங்கள்;
- CAGயின் பல்வேறு தணிக்கை அறிக்கைகள்; மற்றும்
- இந்திய அரசின் நிதி பொறுப்புடைமை மற்றும் நிதி மேலாண்மைச் சட்டத்தின் (Fiscal Responsibility and Budget Management - FRBM) கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட நிதிநிலை வரைபடம்.

நிதிநிலை வரைபடம், இந்திய அரசின் சிறந்த நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றின் சூழமைவில் இந்தப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. வரைவு அறிக்கை அரசுக்கு மார்ச் 2023ல்

அனுப்பிவைக்கப்பட்டது. 29 மார்ச் 2023ல் புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் நிதிச் செயலருடன் இந்த அறிக்கை குறித்து விவாதிக்க ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. நிதிச் செயலர் தெரிவித்த கருத்துகள், அறிக்கையில் பொருத்தமாக சேர்க்கப்பட்டுள்ளன.

## 1.3 அறிக்கையின் கட்டமைப்பு

UTFAR பின்வரும் ஐந்து அத்தியாயங்களாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அத்தியாயம் - I | **கண்ணோட்டம்**<br>இந்த அத்தியாயம் அறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறையை விவரிப்பதோடு, அதன் அடிப்படைத் தரவுகள், அரசுக் கணக்குகளின் கட்டமைப்பின் கண்ணோட்டம், வரவு–செலவுத் திட்ட நடைமுறைகள், முக்கியக் குறியீடுகளின் பெரும நிதிப் பகுப்பாய்வு மற்றும் பற்றாக்குறை/மிகையை உள்ளடக்கிய யூனியன் பிரதேசத்தின் நிதி நிலைமையையும் விவரிக்கிறது. |
| அத்தியாயம் - II | **யூனியன் பிரதேசத்தின் நிதிகள்**<br>இந்த அத்தியாயத்தில் யூனியன் பிரதேசத்தின் நிதிகளின் பரந்த தோற்றம், முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது பெரும் நிதித் திரள்களில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள், 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்திற்கான ஒட்டுமொத்த போக்குகள், யூனியன் பிரதேசத்தின் கடன்களின் விவரக்குறிப்புகள் மற்றும் யூனியன் பிரதேசத்தின் நிதிக் கணக்குகளின் அடிப்படையில் முக்கிய பொதுக்கணக்கு நடவடிக்கைகள் ஆகியவை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. |
| அத்தியாயம் - III | **வரவு–செலவுத் திட்ட மேலாண்மை**<br>யூனியன் பிரதேசத்தின் நிதியொதுக்கக் கணக்குகளின் அடிப்படையில் இவ்வத்தியாயம் அமைந்துள்ளதுடன் யூனியன் பிரதேச அரசின் நிதியொதுக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டு முன்னுரிமைகள் மீது மதிப்பாய்வு செய்வதோடு, யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963 மற்றும் GFR 2017ல் பரிந்துரைக்கப்பட்ட வரவு–செலவுத் திட்ட மேலாண்மை தொடர்புடைய விதிகளில் ஏற்பட்ட விலகல்கள் பற்றிய அறிக்கையையும் அளிக்கிறது. |
| அத்தியாயம் - IV | **கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்**<br>யூனியன் பிரதேச அரசின் பல்வேறு அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் தரம் மற்றும் வகுத்துரைக்கப்பட்ட பல்வேறு நிதி விதிகள் மற்றும் விதிமுறைக்கு யூனியன் பிரதேச அரசின் பல்வேறு துறை அதிகாரிகளின் இணக்கமற்ற நேர்வுகளை இவ்வத்தியாயம் எடுத்துரைக்கிறது. |

| அத்தியாயம் - V | **யூனியன் பிரதேசத்தின் பொதுத்துறை நிறுவனங்கள்**<br><br>இந்த அத்தியாயம் அரசு நிறுவனங்களின் நிதிச் செயல்பாட்டைப் பற்றி சுருக்கமாக குறிப்பிடுகிறது. CAGயால் நியமிக்கப்பட்ட சட்டமுறைத் தணிக்கையாளர்கள் மேற்கொண்ட தணிக்கை மீது துணைத் தணிக்கை மேற்கொள்ள CAGக்கு உள்ள சட்ட உரிமையைப் பற்றியும் இது விவரிக்கிறது. |
|---|---|

## 1.4 அரசுக் கணக்கின் கட்டமைப்பு மற்றும் வரவு–செலவுத் திட்ட நடைமுறைகள் மீதான கண்ணோட்டம்

இந்த அறிக்கையின் **அத்தியாயம் II**ல் கொடுக்கப்பட்டுள்ள யூனியன் பிரதேச அரசின் நிதிப் பகுப்பாய்வுகளை மதிப்பிட, அரசுக் கணக்குகளின் கட்டமைப்பைப் புரிந்து கொள்ளுதல் மிக அவசியமாகிறது.

நிதி அடிப்படையிலான கணக்கியல் மற்றும் அரசின் பரிவர்த்தனைகளின் செயல்பாட்டு வகைப்பாடு ஆகிய இரட்டைக் கொள்கைகளால் அரசுக் கணக்குகள் வரையறுக்கப்படுகின்றன. அனைத்து வரவினங்கள் மற்றும் செலவினங்களை தொகுநிதி, எதிர்பாராச் செலவு நிதி மற்றும் பொதுக் கணக்கு ஆகிய மூன்று நிதிகளில் ஒன்றிற்கு ஒதுக்கீடு செய்யப்படுவதை நிதி அடிப்படையிலான கணக்கியல் உள்ளடக்கியுள்ளது. இந்நிதிகள் யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ஆல் உருவாக்கப்பட்டு, பொதுப் பொறுப்புடைமையின் கருவிகளாக செயல்படுகின்றன.

## அரசுக் கணக்குகளின் கட்டமைப்பு




அரசின் கணக்கியல் வகைப்பாட்டுமுறை செயல்பாட்டு வகைப்பாடு சார்ந்ததாகவும் பொருளாதாரம் சார்ந்ததாகவும் இருக்கிறது.

| | நடவடிக்கைகளின் பண்பு | வகைப்பாடு |
|---|---|---|
| CGAஆல் LMMHல் தரப்படுத்தப் பட்டவை | செயற்கூறு: கல்வி, சுகாதாரம் முதலியன/துறை | மானியத்தின்கீழ் பெருந்தலைப்பு (4-எண்ணிலக்கம்) |
| | துணை செயற்கூறு | இடைநிலைப் பெருந்தலைப்பு (2-எண்ணிலக்கம்) |
| | செயல்முறைத் திட்டம் | சிறுதலைப்பு (3-எண்ணிலக்கம்) |
| மாநில/யூனியன் பிரதேச அரசின் வசம் உள்ளவை | திட்டம் | துணைத்தலைப்பு (2-எண்ணிலக்கம்) |
| | துணை திட்டம் | விரிவான தலைப்பு (2-எண்ணிலக்கம்) |
| | பொருளாதாரத் தன்மை/ செயல்பாடு | செலவின பொருள் தலைப்பு – சம்பளம், சிறு பணிகள் போன்றவை (2-எண்ணிலக்கம்) |

துறை, செயல்கூறு அல்லது செயல்முறைத் திட்டம் மற்றும் செலவினத்தின் தலைப்பு ஆகியவற்றை அறிய செயல்பாட்டு வகைப்பாடு உதவுகிறது. பொருளாதார வகைப்பாடு வருவாய், மூலதனம் மற்றும் கடன்கள் என இந்த வழங்கீடுகளை சீரமைக்க உதவுகிறது. 4-எண்ணிலக்க பெருந்தலைப்புகளின் முதல் எண்ணிலக்கத்தில் பதியப்பட்ட எண்

அளவையியலால் பொருளாதார வகைப்பாடு அடையப்படுகிறது. உதாரணமாக, 0 மற்றும் 1 ஆகியவை வருவாய் வரவினங்களையும், 2 மற்றும் 3 வருவாய் செலவினங்களையும் குறிக்கிறது. சில செலவின பொருள் தலைப்புகளின் உள்ளார்ந்த பொருள் வரையறை மற்றும் பகிர்வின் மூலமும் பொருளாதார வகைப்பாடு அடையப்படுகிறது. உதாரணமாக, 'சம்பளம்' எனும் செலவின பொருள் தலைப்பு வருவாய் செலவினத்தையும், 'கட்டுமானம்' எனும் செலவின பொருள் தலைப்பு மூலதன செலவினத்தையும் குறிக்கிறது. வரவு–செலவுத் திட்ட ஆவணங்களில் செலவின பொருள் தலைப்பு என்பது நிதியொதுக்கத்தின் முதல்நிலை அலகாகும்.

### வரவு–செலவுத் திட்ட நடைமுறைகள்

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 27ன் அடிப்படையில், ஆண்டு நிதிநிலை அறிக்கையின் வடிவத்தில் யூனியன் பிரதேசத்தின் மதிப்பிடப்பட்ட வரவினங்கள் மற்றும் செலவினங்கள் மீதான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு, யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநரால் யூனியன் பிரதேச சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. பிரிவு 28(2)ன் படி, இந்த அறிக்கை மானியங்களுக்கான கோரிக்கை வடிவில் யூனியன் பிரதேச சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. இவற்றின் ஒப்பளிப்பிற்குப் பிறகு, யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 29ன் கீழ், தொகுநிதியிலிருந்து நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக ஒரு நிதியொதுக்கீட்டு சட்ட வரைவு சட்டப்பேரவையால் நிறைவேற்றப்படுகிறது. வரவு–செலவுத் திட்டம் மற்றும் யூனியன் பிரதேச அரசின் பிற வரவு–செலவுத் திட்ட முன்னெடுப்புகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மீதான தணிக்கை முடிவுகள் இவ்வறிக்கையின் **அத்தியாயம் III**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

### 1.4.1 நிதிகளின் குறுவிவரம்

உள்ளபடியேயான நிதி முடிவுகள் மற்றும் 2021-22ன் திட்ட மதிப்பீட்டிற்கெதிராக 2020-21ம் ஆண்டின் உள்ளபடியேயான விவரங்களை **அட்டவணை 1.2** வழங்குகிறது.

**அட்டவணை 1.2: 2020-21ன் உள்ளபடியேயானவைக்கு எதிராக 2021-22ம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியேயானவை**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | கூறுகள் | 2020-21 | 2021-22 | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கும் உள்ளபடி–யேயான–வைக்குமான சதவீதம் | GSDPக்கும் உள்ளபடி–யேயான–வைக்குமான சதவீதம்* |
|---|---|---|---|---|---|---|
| | | உள்ளபடியே–யானவை | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | உள்ளபடியே–யானவை | | |
| 1 | வரி வருவாய் | 1,948 | 4,134 | 3,236 | 78.28 | 8.63 |
| | (i) சொந்த வரி வருவாய் | 1,948 | 4,134 | 3,236 | 78.28 | 8.63 |
| | (ii) மத்திய வரிகள்/தீர்வைகளில் பங்கு | இல்லை | இல்லை | இல்லை | | |
| 2 | வரியல்லாத வருவாய் | 1,460 | 2,056 | 2,184 | 106.23 | 5.83 |
| 3 | மத்திய அரசிடமிருந்து பெற்ற உதவி மானியங்கள் | 2,482 | 2,050 | 2,439 | 118.98 | 6.51 |
| 4 | **வருவாய் வரவினம் (1+2+3)** | **5,890** | **8,240** | **7,859** | **95.38** | **20.97** |
| 5 | மீளப்பெறப்பட்ட கடன்களும், முன்பணங்களும் | இல்லை | இல்லை | இல்லை | | |
| 6 | பல்வகை வரவுகள் | இல்லை | இல்லை | இல்லை | | |
| 7 | கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள் # | 2,529 | 1,684 | 2,516 | 149.41 | 6.71 |
| 8 | **மூலதன வரவினங்கள் (5+6+7)** | **2,529** | **1,684** | **2,516** | **149.41** | **6.71** |
| 9 | **மொத்த வரவினங்கள் (4+8)** | **8,419** | **9,924** | **10,375** | **104.54** | **27.68** |
| 10 | **வருவாய்ச் செலவினம்** | **7,260** | **8,724** | **8,748** | **100.28** | **23.34** |
| 11 | வட்டிச் செலுத்தங்கள் | 757 | 831 | 877 | 105.54 | 2.34 |
| 12 | **மூலதன செலவினம்** | 240 | 315 | 163 | 51.75 | 0.43 |
| 13 | கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 5 | 1 | இல்லை | | |
| 14 | **மொத்தச் செலவினம் (10+12)** | **7,505** | **9,040** | **8,911** | **98.57** | **23.77** |
| 15 | **வருவாய் பற்றாக்குறை(-)/மிகை(+) (4-10)** | **(-) 1,370** | **(-) 484** | **(-) 889** | | **2.37** |
| 16 | **நிதிப் பற்றாக்குறை {14-(4+5+6)}** | **(-) 1,615** | **(-) 800** | **(-) 1,052** | | **2.81** |
| 17 | **முதல்நிலை பற்றாக்குறை/மிகை (16-11)** | **(-) 858** | **31** | **(-) 175** | | **0.48** |

* தற்போதைய விலையில் GSDP ₹ 37,485 கோடி.

\# கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள்: பொதுக் கடனின் நிகர மதிப்பு (வரவினங்கள்-செலவினங்கள்) + எதிர்பாராச் செலவு நிதியின் நிகர மதிப்பு மற்றும் பொதுக் கணக்கின் நிகர மதிப்பு (வரவினங்கள்-செலவினங்கள்) + ஆரம்ப மற்றும் இறுதி ரொக்கக் கையிருப்பின் நிகர மதிப்பு.

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

முந்தைய ஆண்டை விட 2021-22ல் ₹ 1,969 கோடி வருவாய் வரவினங்கள் அதிகரித்திருந்தாலும், வருவாய் செலவினமும் ₹ 1,488 கோடி அதிகரித்து ₹ 889 கோடி வருவாய் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது என்பதைக் காணமுடிகிறது. 2020-21ல் ₹ 240 கோடியாக இருந்த மூலதன செலவினம் ₹ 77 கோடி குறைந்து, 2021-22ல் ₹ 163 கோடியாக இருந்தது. 2020-21ல் ₹ 1,615 கோடியாக இருந்த நிதிப் பற்றாக்குறை, 2021-22ல் ₹ 1,052 கோடியாக குறைந்துள்ளது.

GST செயல்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட வருவாய் இழப்பின் காரணமாக 2021-22ல் யூனியன் பிரதேசம் ₹ 1,425.24 கோடியை மொத்த இழப்பீடாகப் பெற்றது. இதில் ₹ 328.95 கோடி வருவாய் வரவினங்களின் கீழ் மானியமாக யூனியன் பிரதேசத்தால் பெறப்பட்டது. எனினும், 2021-22ம் ஆண்டில் GST இழப்பீட்டு நிதியில் போதுமான இருப்பு இல்லாததால், யூனியன் பிரதேசத்தின் வேறு எந்த ஆதாரங்களிலிருந்தும் அல்லாமல், GST இழப்பீட்டு நிதியிலிருந்து வசூலிக்கப்படும் வரியிலிருந்து திரும்பச் செலுத்தும் பொறுப்புகளுடன் யூனியன் பிரதேசம் ₹ 1,096.29 கோடியை கடனாக, இந்திய அரசிடமிருந்து பெற்றது. இது, யூனியன் பிரதேச அரசின் கடன் வரவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டின் காரணமாக 2021-22ல் வருவாய் பற்றாக்குறையான ₹ 889 கோடி மற்றும் நிதிப் பற்றாக்குறையான ₹ 1,052 கோடி ஆகியவை GST இழப்பீட்டிற்கு பதிலாக பெறப்பட்ட ₹ 1,096.29 கோடி கடன் வரவுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டும்.

### 1.4.2 அரசின் சொத்துக்கள் மற்றும் கடன்பொறுப்புகளின் குறுவிவரம்

அரசின் நிதிக் கடன்பொறுப்புகளையும் செலவினங்களிலிருந்து உருவாக்கப்பட்ட சொத்துக்களையும் அரசுக் கணக்குகள் சித்தரிக்கின்றன. கடன்பொறுப்புகளானது உள்நாட்டுக் கடன்கள், இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொதுக் கணக்கிலிருந்து பெற்ற வரவினங்கள் மற்றும் சேமநிதிகள் ஆகியவற்றை முக்கியமாக உள்ளடக்கியிருந்தன. சொத்துக்களானது மூலதன முதலீடு மற்றும் யூனியன் பிரதேச அரசால் கொடுக்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் ரொக்க கையிருப்புகள் ஆகியவற்றை முக்கியமாக உள்ளடக்கியிருந்தன.

**அட்டவணை 1.3: சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் சுருக்கமான நிலைமை**

**(₹ கோடியில்)**

| பொறுப்புகள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவின் (–) சதவீதம் | | | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவின் (–) சதவீதம் |
| **தொகுநிதி** | | | | | | | | | |
| அ | வெளி நாட்டுக்கடன் | 49.61 | 49.61 | -- | | | | | |
| | உள்நாட்டுக் கடன் | 7,969.95 | 8,650.38 | 8.54 | அ | மொத்த மூலதன முதலீடுகள் | 7,326.36 | 7 ,489.14 | 2.22 |
| ஆ | இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 2,042.06 | 2,986.23 | 46.24 | ஆ | கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 14.56 | 14.47 | (-) 0.62 |
| எதிர்பாராச் செலவு நிதி | | **0.50** | **0.50** | -- | | | | | |
| **பொதுக் கணக்கு** | | | | | | | | | |
| அ | சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை | 419.13 | 479.38 | 14.37 | அ | முன்பணங்கள் | 0 .58 | 0 .55 | |
| ஆ | வைப்புநிதிகள் | 550.10 | 587.84 | 6.86 | ஆ | வழங்கீடு | 0.00 | 0.00 | 0 |
| இ | சேமநிதிகள் | 247.25 | 306.77 | 24.08 | இ | அனாமத்து மற்றும் பல்வகை | -- | 86.75 | -- |
| ஈ | வழங்கீடுகள் | 154.98 | 154.98 | -- | ரொக்கக் கையிருப்பு (ஒதுக்கப்பட்ட நிதிகளில் முதலீடுகள் உட்பட) | | 1,675.39 | 2,249.53 | |
| உ | அனாமத்து மற்றும் பல்வகை | 69.80 | -- | -- | | | | | |
| | | | | | மொத்தம் | | **9,016.89** | **9,840.44** | |
| | | | | | வருவாய் கணக்கில் பற்றாக்குறை | | **2,486.49** | **3,375.25** | |
| **மொத்தம்** | | **11,503.38** | **13,215.69** | **15.45** | **மொத்தம்** | | **11,503.38** | **13,215.69** | |

2020-21ல் ₹ 7,969.75 கோடியாக இருந்த யூனியன் பிரதேசத்தின் உள்நாட்டுக் கடன்கள் 8.54 சதவீதம் அதிகரித்து 2021-22ல் ₹ 8,650.38 கோடியாக உள்ளதைக் காணலாம். 2020-21ல் ₹ 2,042.06 கோடியாக இருந்த இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள், 46.24 சதவீதம் உயர்ந்து 2021-22ல் ₹ 2,986.23 கோடியாக இருந்தது. உதவி மானியங்களுக்கு பதிலாக இந்திய அரசு ₹ 1,096.29 கோடியை GST இழப்பீட்டிற்காக கடனாக விடுவித்ததால் இது ஏற்பட்டது. 2020-21ல் ₹ 7,326.36 கோடியாக இருந்த மொத்த மூலதன முதலீடுகள் 2.22 சதவீதம் அதிகரித்து 2021-22ல் ₹ 7,489.14 கோடியாக இருந்தது.

## 1.5 நிதிச் சமநிலை: பற்றாக்குறைகள் மற்றும் மொத்தக் கடன்களின் இலக்குகளை எய்துதல்

மத்திய நிதிக்குழுவில் யூனியன் பிரதேச அரசு உள்ளடக்கப்படவில்லை என்பதால் FRBM சட்டம் இயற்றப்படவில்லை. இருப்பினும், இந்திய அரசின் FRBM சட்டத்தின் கொள்கைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்ட நிதிநிலை வரைபடத்திற்கு (ஜூன் 2012) இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2020-21 வரை யூனியன் பிரதேச அரசு பல்வேறு நிதி அளவுருக்களுக்கு நிதிநிலை வரைபடத்தின் அடிப்படையில் இலக்குகள் நிர்ணயித்திருந்தாலும், 2021-22க்கு எவ்வித இலக்கும் நிர்ணயிக்கவில்லை. FRBMல் கருதப்பட்ட இலக்குகளையே 2021-22லும் யூனியன் பிரதேச அரசு கடைபிடித்ததாகக் கூறியது.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், அரசின் நிதிகளில் ஒட்டுமொத்த நிதி ஏற்றதாழ்வுகளை மூன்று முக்கிய நிதி அளவுருக்களான வருவாய், நிதி மற்றும் முதன்மைப் பற்றாக்குறைகள் சுட்டிக்காட்டுகின்றன. வரவினங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையேயான இடைவெளியை அரசுக் கணக்கிலுள்ள பற்றாக்குறை காட்டுகிறது. மேலும், இந்தப் பற்றாக்குறைக்கு எவ்வாறு நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு நிதியளிக்கப்படுகிறது என்பது அதன் நிதி நலனை காட்டும் முக்கிய குறியீடுகளாகும். இப்பற்றாக்குறைகளின் போக்கு, இயல்பு, அளவு மற்றும் நிதியளிக்கும் விதம் ஆகியவற்றையும், வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறைகளின் உள்ளபடியேயான மதிப்பீட்டிற்கெதிராக 2021-22 நிதியாண்டிற்கான நிதிநிலை வரைபடத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஆகியவற்றையும் இந்தப் பிரிவு எடுத்துரைக்கிறது. நிதிநிலை வரைபடத்தில் இலக்கிடப்பட்ட முக்கிய நிதி மாறிகளும் உள்ளபடியேயானவையும் அட்டவணைகள் **1.4**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4: 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் நிதிநிலை வரைபடத்திற்கும் நிதி மாறிக்குமான ஒப்பீடு**

| ஆண்டு | நிதி மாறிகள் | வருவாய் பற்றாக்குறை (–) / மிகை (+) (₹ கோடியில்) | நிதிப் பற்றாக்குறை / GSDP | GSDPக்கும் அரசின் மொத்த கடன் நிலுவைக்கும் உள்ள விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **2017-18** | நிதிநிலை வரைபடத்தில் முன்மொழியப்பட்ட இலக்கு | (+) 16.78 | (-) 0.64 | 25.08 |
| | உள்ளபடியேயானவை | (+) 196.01 | (-) 0.61 | 27.31 |
| **2018-19** | நிதிநிலை வரைபடத்தில் முன்மொழியப்பட்ட இலக்கு | (-) 2.00 | (-) 1.28 | 23.90 |
| | உள்ளபடியேயானவை | (+) 13.54 | (-) 0.82 | 24.95 |

| ஆண்டு | நிதி மாறிகள் | வருவாய் பற்றாக்குறை (−) / மிகை (+) (₹ கோடியில்) | நிதிப் பற்றாக்குறை / GSDP | GSDPக்கும் அரசின் மொத்த கடன் நிலுவைக்கும் உள்ள விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| **2019-20** | நிதிநிலை வரைபடத்தில் முன்மொழியப்பட்ட இலக்கு | (+) 60.00 | 0.84 | 22.39 |
| | உள்ளபடியேயானவை | (-) 54.49 | 1.00 | 21.90 |
| **2020-21** | நிதிநிலை வரைபடத்தில் முன்மொழியப்பட்ட இலக்கு | (+) 100.00 | 0.95 | 21.12 |
| | உள்ளபடியேயானவை | (-) 1,369.59 | 4.44 | 25.62* |
| **2021-22** | நிதிப் பொறுப்பு மற்றும் வரவு−செலவுத் திட்ட மேலாண்மையில் (FRBM#) முன்மொழியப்பட்ட இலக்கு | 0.00 | 3.00 | 25.00 |
| | உள்ளபடியேயானவை | (-) 888.75 | 2.81 | 26.27* |

* GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசால் 2020-21 மற்றும் 2021-22ம் ஆண்டுகளில் முறையே விடுவிக்கப்பட்ட ₹ 742 கோடி மற்றும் ₹ 1,096.29 கோடியை தவிர்த்து கணக்கிடப்பட்டது

\# நிதி நிலை வரைபடம் 2021-22 முதல் நிறுத்தப்பட்டது மற்றும் FRBMல் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதித் தணிக்கை அறிக்கைகள் மற்றும் 2021-22 ஆண்டுக்கான FRBM)

பற்றாக்குறைகள், நிதிக் கடன்பொறுப்புகள் மற்றும் GSDPயின் போக்குகள் **விளக்கப்படங்கள் 1.3, 1.4** மற்றும் **1.5**ல் அளிக்கப்பட்டுள்ளன.

**விளககப்படம் 1.3 : பற்றாக்குறைக் குறியீடுகளின் போக்குகள்**









➢ 2017-18ல் ₹ 197 கோடியாக இருந்த யூனியன் பிரதேசத்தின் வருவாய் பற்றாக்குறை ஐந்தாண்டுகளில் உயர்ந்து 2021-22ல் ₹ 889 கோடியாக இருந்தது என்பதை **அட்டவணை 1.3**ல் இருந்து காணலாம். வருவாய் வரவினத்தால் வருவாய் செலவினத்தையே எதிரேற்க இயலாமல், வருவாய் பற்றாக்குறை ஏற்படுவது ஒரு கவலைக்குரிய காரணமாகும். மேலும், கடன்களை உள்ளடக்கிய மூலதன வரவினத்தின் ஒரு பகுதி, வருவாய் செலவினங்களை

எதிரேற்கப் பயன்படுத்தப்படாமல் இருந்திருந்தால் அதை ஆக்க வளமுடைய மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தி இருக்கலாம்.

- 2017-18ல் ₹ 8,799 கோடியாக இருந்த மொத்தக் கடன்பொறுப்புகள் 2021-22ல் ₹ 12,593 கோடியாக அதிகரித்தது. GSDPக்கும் நிலுவையிலுள்ள கடன்பொறுப்புகளுக்குமான விகிதம் 2017-18ல் 27.39ஆக இருந்து 2021-22ல் 28.69ஆக[1] உயர்ந்தது. 2017-18ல் ₹ 1,062 கோடியாக இருந்த இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் 2021-22ல் ₹ 2,986 கோடியாக உயர்ந்தது. GST இழப்பீடு பற்றாக்குறைக்கு உதவி மானியங்களுக்கு பதிலாக ₹ 1,096.29 கோடியை கடனாக இந்திய அரசு விடுவித்ததன் காரணமாக இது இவ்வாறு உயர்ந்தது.

- 2021-22 காலகட்டத்தில், யூனியன் பிரதேசத்தால் FRBMல் எதிர்நோக்கியபடி, GSDPக்கும் நிதிப் பற்றாக்குறைக்கும் உள்ள விகிதத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. 2021-22 காலகட்டத்தில், FRBMல் கருதப்பட்ட இலக்கான 3 சதவீதம் மற்றும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 2.13 சதவீதத்திற்கெதிராக, GSDPக்கும் நிதிப் பற்றாக்குறைக்கும் உள்ள விகிதம் 2.81 ஆகும்.

## 1.6 தணிக்கை பரிசோதனைக்குப் பிறகு பற்றாக்குறைகள் மற்றும் மொத்தக்கடன்

### 1.6.1 நிலுவையிலுள்ள கடன்களின் பகுப்பாய்வு

வெளிநாட்டுக்கடன், உள்நாட்டுக்கடன், சந்தைக் கடன்கள் மற்றும் இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்களை பொதுக் கடன் உள்ளடக்கியிருந்தது. நிலுவையிலுள்ள மொத்த கடன்பொறுப்புகள் நிலுவையிலுள்ள பொதுக் கடன் மற்றும் நிலுவையிலுள்ள பொதுக் கணக்குக் கடன்பொறுப்புகளை உள்ளடக்கியிருந்தன.

(i) GSDPயின் சதவீதமாகக் கடன் மற்றும் (ii) நிலுவையிலுள்ள அரசுக் கடன்களின் வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் யூனியன் பிரதேச அரசின் மொத்த நிலுவைக்கடன்கள்/கடன்பொறுப்புகள் மீதான பகுப்பாய்வு **அட்டவணை 1.5**ல் விவரிக்கப்பட்டுள்ளது.

---

[1] GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசால் கடனாக விடுவிக்கப்பட்ட ₹ 1,096.29 கோடியை தவிர்த்து கணக்கிடப்பட்டது.

**அட்டவணை 1.5: நிலுவையிலுள்ள மொத்த கடன்கள்/பொறுப்புகள்**

**(₹ கோடியில்)**

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மொத்த நிலுவைக்கடன்கள்/ பொறுப்புகள் | 8,799 | 9,137 | 9,449 | 10,886 | 12,593 |
| நிலுவையிலுள்ள கடன்களின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | 6.02 | 3.84 | 3.41 | 15.21 | 15.68 |
| தற்போதைய விலையில் GSDP | 32,129 | 36,386 | 36,724 | 35,685 | 37,485 |
| மொத்த நிலுவையிலுள்ள கடனுக்கும் GSDPக்குமான விகிதம் (சதவீதத்தில்) | 27.39 | 25.00 | 24.89 | 27.89* | 28.69* |

* GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசால் 2020-21 மற்றும் 2021-22ம் ஆண்டுகளில் முறையே கடனாக விடுவிக்கப்பட்ட ₹ 742 கோடி மற்றும் ₹ 1,096 கோடியை தவிர்த்து கணக்கிடப்பட்டது

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

- முந்தைய ஆண்டைக் காட்டிலும் நிலுவையிலுள்ள கடன்கள் 15.68 சதவீதம் அளவிற்கு அதிகரித்திருந்தது.
- 2021-22 காலகட்டத்தில் ₹ 163 கோடி மட்டுமேயான மூலதன செலவினம் மற்றும் ₹ 1,052 கோடி நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், நிதியாண்டில் பெறப்பட்ட கடன்கள் வருவாய் செலவினங்களுக்காக முக்கியமாக வட்டிச் செலுத்தங்களுக்கு நிதியளிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டது என்பதையும் மூலதன சொத்து உருவாக்கத்திற்கு குறைவான முன்னுரிமையே அளிக்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. குறைக்கப்பட்ட மூலதன உருவாக்கத்தின் அளவினால், கடன் என்பது எதிர்கால தலைமுறைக்கு சுமையாகும்.

# அத்தியாயம் II

# புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதிகள்

# அத்தியாயம் II: புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதிகள்

## முன்னுரை

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதி குறித்த பரந்த கண்ணோட்டத்தை இந்த அத்தியாயம் வழங்குகிறது. மேலும், இது 2017-18 முதல் 2021-22 வரையிலான ஐந்தாண்டு காலகட்டத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த நிதிப் போக்குகள், கடன் நிலைத்தன்மை, முக்கிய பொதுக்கணக்கு நடவடிக்கைகள் மற்றும் யூனியன் பிரதேசத்தின் நிதிக் கணக்குகளின் அடிப்படையில் முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க நிதித் திரட்டுக்களில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களை பகுப்பாய்வு செய்கிறது. தேவையான நேர்வுகளில் யூனியன் பிரதேச அரசிடமிருந்தும் கூடுதல் தகவல்கள் பெறப்பட்டன.

## 2.1 2020–21க்கெதிராக 2021–22 ஆண்டில் நிதித் திரட்டுகளில் ஏற்பட்ட முக்கியமான பெரும் மாற்றங்கள்

முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில், நடப்பு நிதியாண்டில் புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் முக்கிய நிதித் திரட்டுகளில் ஏற்பட்ட முக்கியமான பெரும் மாற்றங்கள் குறித்த ஒரு கழுகுப் பார்வையை இந்தப்பகுதி அளிக்கிறது. இந்த சுட்டிக்காட்டிகள் ஒவ்வொன்றும் பின்வரும் பத்திகளில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. யூனியன் பிரதேச அரசின் நிதிநிலைமை பற்றிய பல்வருடப் புள்ளி விவரம் **இணைப்பு 2.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2020-21ஐ ஒப்பிடுகையில் 2021-22ல் முக்கிய நிதித் திரட்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களை **அட்டவணை 2.1** வழங்குகிறது.

**அட்டவணை 2.1: 2020-21ஐ ஒப்பிடுகையில் 2021-22ல் முக்கிய நிதித் திரட்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்**

| | |
|---|---|
| வருவாய் வரவினங்கள் | ✓ யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்கள் 33.43 சதவீதம் அதிகரித்தது<br>✓ யூனியன் பிரதேசத்தின் சொந்த வரி வரவினங்கள் 66.12 சதவீதம் அதிகரித்தது<br>✓ வரி அல்லாத வரவினங்கள் 49.59 சதவீதம் அதிகரித்தது<br>✓ இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள் 1.73 சதவீதம் குறைந்தது |
| வருவாய் செலவினங்கள் | ✓ வருவாய் செலவினங்கள் 20.50 சதவீதம் அதிகரித்தது<br>✓ பொது சேவைகள் மீதான வருவாய் செலவினங்கள் 14.64 சதவீதம் அதிகரித்தது<br>✓ சமூக சேவைகள் மீதான வருவாய் செலவினங்கள் 12.69 சதவீதம் அதிகரித்தது<br>✓ பொருளாதார சேவைகள் மீதான வருவாய் செலவினங்கள் 34.57 சதவீதம் அதிகரித்தது<br>✓ உதவி மானியங்கள் மீது யூனியன் பிரதேச அரசு செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளவில்லை |

| | |
|---|---|
| மூலதன செலவினங்கள் | ✓ மூலதன செலவினங்கள் 32.08 சதவீதம் குறைந்தது<br>✓ பொது சேவைகள் மீதான மூலதன செலவினங்கள் 58.97 சதவீதம் குறைந்தது<br>✓ சமூக சேவைகள் மீதான மூலதன செலவினங்கள் 33.33 சதவீதம் குறைந்தது<br>✓ பொருளாதார சேவைகள் மீதான மூலதன செலவினங்கள் 21.93 சதவீதம் குறைந்தது |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | ✓ கடன்கள் மற்றும் முன்பணங்களின் வழங்கல் 2020-21ல் ₹ 5.03 கோடியாக இருந்ததற்கெதிராக இந்த ஆண்டில் ₹ 0.06 கோடியாக இருந்தது<br>✓ கடன்கள் மற்றும் முன்பணங்களின் மீள்பெறுகைகள் 56 சதவீதம் குறைந்தது |
| பொதுக் கடன் | ✓ பொதுக் கடன் வரவினங்கள் 0.51 சதவீதம் குறைந்தது<br>✓ திரும்பச் செலுத்தப்பட்ட பொதுக்கடன் 6.32 சதவீதம் அதிகரித்தது |
| பொதுக் கணக்கு | ✓ பொதுக் கணக்கு வரவினங்கள் 37.31 சதவீதம் குறைந்தது<br>✓ பொதுக் கணக்கிலிருந்து வழங்கல்கள் 40.32 சதவீதம் குறைந்தது |
| ரொக்க இருப்பு | ✓ முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் 2021-22ல் ரொக்க இருப்பு ₹ 575 கோடி அளவிற்கு (34.33 சதவீதம்) அதிகரித்தது |

## 2.2 நிதி ஆதாரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

2021-22 காலகட்டத்தில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதி ஆதாரங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் 2020-21உடன் **அட்டவணை 2.2** ஒப்பிடுகிறது. **விளக்கப்படங்கள் 2.1** மற்றும் **2.2**, 2021-22 காலகட்டத்தில் தொகுநிதியிலிருந்து பெறப்பட்ட வரவினங்கள் மற்றும் செலவின விவரங்களை சதவீத அடிப்படையில் அளிக்கின்றன.

**அட்டவணை 2.2: 2020-21 மற்றும் 2021-22 காலகட்டத்தில் நிதி ஆதாரங்கள் மற்றும் பயன்பாட்டின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| | விவரங்கள் | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவு (–) |
|---|---|---|---|---|
| நிதி ஆதாரங்கள் | இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள ஆரம்ப ரொக்க இருப்பு | 1,642.05 | 1,675.39 | 33.34 |
| | வருவாய் வரவினங்கள் | 5,889.99 | 7,858.92 | 1,968.93 |
| | கடன்கள் மற்றும் முன்பணங்களின் மீள்பெறுகைகள் | 0.34 | 0.15 | (-) 0.19 |
| | பொதுக் கடன் வரவினங்கள் (நிகர இருப்பு) | 1,690.84 | 1,624.60 | (-) 66.24 |
| | பொதுக் கணக்கு வரவினங்கள் (நிகர இருப்பு) | (-) 43.66 | 0.98 | 44.64 |
| | **மொத்தம்** | **9,179.56** | **11,160.04** | **1,980.48** |

| | விவரங்கள் | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவு (–) |
|---|---|---|---|---|
| பயன்பாடு | வருவாய் செலவினங்கள் | 7,259.58 | 8747.67 | 1,488.09 |
| | மூலதன செலவினங்கள் | 239.56 | 162.78 | (-) 76.78 |
| | வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 5.03 | 0.06 | (-) 4.97 |
| | இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள இறுதி ரொக்க இருப்பு | 1,675.39 | 2,249.53 | 574.14 |
| | **மொத்தம்** | **9,179.56** | **11,160.04** | **1,980.48** |

(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

விளக்கப்படம் 2.1: நிதி ஆதாரங்களின் கூறுகள்
(₹ கோடியில்)
₹ எங்கிருந்து பெறப்பட்டது




விளக்கப்படம் 2.2: நிதி ஆதாரங்களின் பயன்பாடு
(₹ கோடியில்)
₹ எங்கு வழங்கப்பட்டது




(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

## 2.3 யூனியன் பிரதேசத்தின் நிதி ஆதாரங்கள்

யூனியன் பிரதேசத்தின் நிதி ஆதாரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**வருவாய் வரவினங்கள்:** வரி வருவாய், வரியல்லாத வருவாய் மற்றும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்களை உள்ளடக்கியது.

**மூலதன வரவினங்கள்:** மீட்கப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம், கடன்கள் மற்றும் முன்பணங்களிலிருந்து மீள்பெறுகைகள், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவினங்கள் (சந்தைக் கடன்கள், நிதி நிறுவனங்கள்/வணிக வங்கிகளிலிருந்து கடன்கள்) மற்றும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் போன்ற இதர மூலதன வரவினங்களை உள்ளடக்கியவை. வருவாய் மற்றும் மூலதன

வரவினங்கள் இரண்டுமே யூனியன் பிரதேசத்தின் தொகுநிதியின் பகுதியாகும்.

**நிகர பொதுக் கணக்கு வரவினங்கள்:** சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி, சேமநிதிகள், வைப்புநிதிகள், அனாமத்துகள், செலுத்துகைகள் போன்ற சில நடவடிக்கைகள் தொடர்பான வரவினங்கள் மற்றும் வழங்கீடுகள் தொகுநிதியின் பகுதியாக கருதப்படமாட்டாது. இவை யூனியன் பிரதேச அரசுச் சட்டம், 1963ன் பிரிவு 47Aன் கீழ் அமைக்கப்பட்ட பொதுக் கணக்கில் வைக்கப்படுகின்றன. இவை யூனியன் பிரதேச சட்டப்பேரவையால் வாக்களிக்கப்படுவதில்லை. இங்கு அரசு ஒரு வங்கியாளராகச் செயல்படுகிறது. வழங்கீடுகளுக்குப் பிறகான கையிருப்பு, அரசின் பயன்பாட்டிற்கான நிதியாகும்.

### 2.3.1 யூனியன் பிரதேசத்தின் வரவினங்கள்

**விளக்கப்படம் 2.3** ஒட்டுமொத்த வரவினங்களின் கூறுகளை வழங்குகிறது. மூலதன மற்றும் வருவாய் வரவினங்களைத் தவிர, பொதுக்கணக்கிலிருந்து கிடைக்கக்கூடிய நிதிகளையும் (அதில் செய்யப்பட்ட வழங்கீடுகளுக்குப் பிறகான நிகர இருப்பு) அரசு அதன் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு பயன்படுத்திக் கொள்கிறது.

**விளக்கப்படம் 2.3: 2021-22 காலகட்டத்தில் யூனியன் பிரதேசத்தின் வரவினங்களின் அமைப்பு**

**(₹ கோடியில்)**




## 2.3.2 வருவாய் வரவினங்கள்

மொத்த வருவாய் வரவினங்கள் மற்றும் அதன் கூறுகளின் போக்குகள் இப்பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. நிதிக் கணக்குகளின் அட்டவணை 14, அரசின் வருவாய் வரவினங்களை விவரிக்கிறது.

### *2.3.2.1* வருவாய் வரவினங்களின் வளர்ச்சி மற்றும் போக்குகள்

2017-22 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், வருவாய் வரவினங்களின் வளர்ச்சி மற்றும் போக்குகள் மற்றும் GSDPயுடன் ஒப்பிடுகையில் வருவாய் மேலோங்குநிலை ஆகியவற்றை **அட்டவணை** 2.3 வழங்குகிறது. மேலும், GSDPக்குத் தொடர்புடைய வருவாய் வரவினங்களின் போக்குகள் மற்றும் வருவாய் வரவினங்களின் கூறுகள் ஆகியவை முறையே **விளக்கப்படங்கள்** 2.4 மற்றும் 2.5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.3: GSDPக்குத் தொடர்புடைய வருவாய் வரவினங்களின் போக்குகள்**

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| வருவாய் வரவினங்கள் (₹ கோடியில்) | 6,003 | 6,400 | 6,781 | 5,890 | 7,859 |
| வருவாய் வரவினங்களின் வளர்ச்சி வீதம் (சதவீதம்) | 11.52 | 6.61 | 5.95 | (-) 13.14 | 33.43 |
| சொந்த வரி வருவாய் (₹ கோடியில்) | 2,806 | 3,188 | 2,475 | 1,948 | 3,236 |
| வரியல்லாத வருவாய் (₹ கோடியில்) | 1,374 | 1,584 | 1,638 | 1,460 | 2,184 |
| சொந்த வருவாயின் வளர்ச்சி வீதம் (சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய்) (சதவீதம்) | 14.65 | 14.16 | (-) 13.81 | (-) 17.14 | 59.04 |
| மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (₹ கோடியில்) (2011-12 தொகுதி) | 32,129 | 36,386 | 36,724 | 35,685 | 37,485 |
| GSDPயின் வளர்ச்சி வீதம் (சதவீதம்) | 8.64 | 13.25 | 0.93 | (-) 2.83 | 5.04 |
| வருவாய் வரவினங்கள்/GSDP (சதவீதம்) | 18.68 | 17.59 | 18.46 | 16.51 | 20.97 |
| **மேலோங்குநிலை விகிதங்கள்**[1] | | | | | |
| GSDPயுடன் ஒப்பிடுகையில் வருவாய் மேலோங்குநிலை (விகிதம்) | 1.33 | 0.50 | 6.41 | 4.64 | 6.63 |
| GSDPயுடன் ஒப்பிடுகையில் யூனியன் பிரதேசத்தின் சொந்த வரிகளின் மேலோங்குநிலை (விகிதம்) | 1.95 | 1.03 | (-) 24.08 | 7.53 | 13.11 |

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம் அளித்த GSDP எண்ணிலக்கங்கள்)

2017-18ல் ₹ 4,180 கோடியாக இருந்த சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாயினை உள்ளடக்கிய யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்கள் 29.67 சதவீத அளவிற்கு அதிகரித்து 2021-22ல் ₹ 5,420 கோடியாக இருந்தது. முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் சொந்த வருவாயின் வளர்ச்சி வீதம் 59.04 சதவீதம் அதிகரித்து, 2020-21ல் ₹ 1,370 கோடியாக இருந்த யூனியன் பிரதேச வருவாய் பற்றாக்குறை 2021-22ல் ₹ 889 கோடியாக குறைந்தது.

---

[1] அடிப்படை மாறுபாட்டு காரணியைப் பொறுத்து நிதி மாறுபாட்டு காரணி மாறுபடும் அளவின் குறியீடு அல்லது நெகிழ்திறனை இந்த மேலோங்கு நிலை (buoyancy) விகிதம் குறிக்கும். உதாரணமாக, GSDPயுடன் ஒப்பிடுகையில் வருவாய் வரவினங்களின் மேலோங்கு நிலையான 1.85 என்பது, GSDP ஒரு சதவீதம் அதிகரிப்பதால் வருவாய் வரவினங்களில் 1.85 சதவீத புள்ளிகள் அதிகமாகும் என்பதைக் குறிக்கும்.




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்களுக்குத் தொடர்புடைய பொதுவான போக்குகள் பின்வருமாறு:

2017-18ல் ₹ 6,003 கோடியாக இருந்த வருவாய் வரவினங்கள், 30.92 சதவீத அளவிற்கு உயர்ந்து, 2021-22ல் ₹ 7,859 கோடியாக இருந்தது. 2021-22ம் ஆண்டில், GSDPயின் வளர்ச்சி வீதம் 5.04 சதவீதமாக இருந்தது. அதே சமயம், வருவாய் வரவினங்களின் வளர்ச்சி விகிதம் (33.43 சதவீதம்) அதிகரித்து ₹ 1,370 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறை 35.11 சதவீதம் குறைந்து ₹ 889 கோடியாக இருந்ததற்கு பங்களித்தது.

2021-22 காலகட்டத்தில் வருவாய் வரவினங்களில் 68.97 சதவீதம் யூனியன் பிரதேசத்தின் சொந்த வள ஆதாரங்களிலிருந்து (₹ 5,420 கோடி) பெறப்பட்டிருந்தது. உதவி மானியங்களின் பங்கு 31.03 சதவீதமாக (₹ 2,439 கோடி) இருந்தது.

யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்கள் முந்தைய ஆண்டை விட ₹ 1,969 கோடி அளவிற்கு அதிகரித்ததற்கு, வரி வருவாய் (₹ 1,288 கோடி) மற்றும் வரியல்லாத வருவாய் (₹ 724 கோடி) அதிகரித்ததே காரணமான அதே வேளையில், நடப்பாண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள் (₹ 43 கோடி) குறைந்தது. மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் (State Goods and Services Tax - SGST) கூறுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (Integrated Goods and Services Tax - IGST) பரிமாற்றத்தில் அதிகமாகப் பெறப்பட்ட வரவுகள், அதிக மதுபானம் மற்றும் சாராய விற்பனை மற்றும் தொழில் வரி வரவுகள் அதிகரித்தமை (₹ 840 கோடி), மாநில ஆயத்தீர்வை (₹ 298 கோடி) மற்றும் விற்பனை, வணிகம் போன்றவற்றின் மீதான வரி (₹ 107 கோடி) ஆகியவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டதே சொந்த வரி வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களாகும். அதே போல், மின்சக்தியின் அதிகப்படியான விற்பனை (₹ 715 கோடி) மற்றும் வட்டிச் செலுத்தங்கள் (₹ 33 கோடி) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பே வரியல்லாத வருவாயின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

நடப்பாண்டில், வருவாய் வரவினங்கள் 33.43 சதவீதம் (₹ 1,969 கோடி) அதிகரித்ததால், 2020-21ம் ஆண்டில் ₹ 1,370 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறை 2021-22ல் ₹ 889 கோடியாகக் குறைந்ததற்கு முக்கிய பங்களித்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்துவதன் மூலம் எழும் வருவாய் இழப்பிற்கான மொத்த இழப்பீட்டுத் தொகையாக ₹ 1,425 கோடியை 2021-22 காலகட்டத்தில் யூனியன் பிரதேச அரசு பெற்றது. இதில், ₹ 329 கோடியை வருவாய் வரவினங்களின் கீழ் மானியங்களாக பெற்றது. எனினும், 2021-22 காலகட்டத்தில் GST இழப்பீட்டு நிதியில் போதுமான இருப்பு இல்லாத காரணத்தால், இந்திய அரசிடமிருந்து கடனாக யூனியன் பிரதேச அரசு பெற்ற ₹ 1,096 கோடி யூனியன் பிரதேச அரசின் கடன் வரவினங்களாக வகைப்படுத்தப்பட்டது. யூனியன் பிரதேசத்தின் வேறு எந்த ஆதாரங்களிலிருந்தும் அல்லாமல், GST இழப்பீட்டு நிதியிலிருந்து வசூலிக்கப்படும் துணை வரியிலிருந்து திருப்பிச் செலுத்தும் கடமைப் பொறுப்புடன் இது வழங்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின் காரணமாக, வருவாய் பற்றாக்குறையான ₹ 889 கோடி மற்றும் நிதிப் பற்றாக்குறையான ₹ 1,052 கோடி ஆகியவை GST இழப்பீட்டிற்கு பதிலாக பெறப்பட்ட ₹ 1,096 கோடி கடன் வரவினங்களுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டும்.

### *2.3.2.2* யூனியன் பிரதேசத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்

சொந்த நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள யூனியன் பிரதேசத்தின் செயல்திறன், சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய் ஆதாரங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. வரி மற்றும் வரி

அல்லாத வருவாயின் வளர்ச்சி வீதங்களின் போக்குகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

### *சொந்த வரி வருவாய்*

வரி மற்றும் தீர்வைகளின் மொத்த வசூலிப்பு மற்றும் வளர்ச்சி பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.6** மற்றும் **அட்டவணை 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**அட்டவணை 2.4: யூனியன் பிரதேசத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்**

**(₹ கோடியில்)**

| வருவாய் தலைப்பு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | இன வரிக்கோடு |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை வரி | 1,008 | 632 | 597 | 549 | 656 | |
| யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 852 | 1,499 | 781 | 433 | 1,273 | |
| மாநில ஆயத்தீர்வை | 770 | 850 | 868 | 798 | 1,096 | |
| வாகனங்கள் மீதான வரிகள் | 104 | 114 | 139 | 84 | 99 | |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு கட்டணம் | 71 | 92 | 88 | 82 | 111 | |
| நில வருவாய் | 1 | 1 | 2 | 2 | 1 | |
| **மொத்தம்** | **2,806** | **3,188** | **2,475** | **1,948** | **3,236** | |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2020-21ல் ₹ 1,948 கோடியாக இருந்த யூனியன் பிரதேசத்தின் வரி வருவாய், முந்தைய ஆண்டைக்காட்டிலும் ₹ 1,288 கோடி (66.12 சதவீதம்) அதிகரித்து,

2021-22ல் ₹ 3,236 கோடியாக இருந்தது. 2021-22 ஆண்டின் போது, யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, விற்பனை, வணிகம் போன்றவற்றின் மீதான வரி மற்றும் மாநில ஆயத்தீர்வை ஆகியவை முறையே ₹ 840 கோடி, ₹ 298 கோடி மற்றும் ₹ 107 கோடி அதிகரித்திருந்தது. ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) பரிமாற்றத்தில் இந்திய அரசிடமிருந்து அதிகமாகப் பெறப்பட்ட வரவுகளே யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (UTGST) அதிகரித்ததற்குக் காரணமாகும். தொழில் வரியின் அதிகரித்த வசூலிப்பே விற்பனை, வணிகம் போன்றவற்றின் மீதான வரிகள் 2021-22ம் ஆண்டில் அதிகரித்ததற்கு முக்கிய காரணமாயிற்று. அதே போல், மதுபானங்களின் விற்பனை அதிகரித்ததால் மாநில ஆயத்தீர்வையில் அதிகரிப்பு ஏற்பட்டது மற்றும் வாகனங்கள் மீதான வரியைப் பொறுத்தவரை, மாநில மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டங்களின் கீழ் அதிகமான வரவினங்கள் பெறப்பட்டது காரணமாயிற்று.

### யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (UT GST)

அரசியலமைப்பு திருத்தச் சட்டம் (நூற்று ஒன்று), 2016ன் விதிகளுக்கிணங்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை (GST) அமல்படுத்துவதன் மூலம் எழும் வருவாய் இழப்பிற்கான இழப்பீட்டுத் தொகைக்கு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தகுதியாகின்றன. GST (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017ன்படி, ஐந்தாண்டு காலத்திற்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்தியதன் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடு செய்யும். இந்திய தணிக்கைத் துறைத் தலைவரால் தணிக்கை செய்யப்பட்ட வருவாய் எண்ணிலக்கங்கள் கிடைக்கப் பெற்ற பின்னர், ஒவ்வொரு நிதியாண்டிற்கும் யூனியன் பிரதேசத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடு கணக்கிடப்படும். அடிப்படை ஆண்டின் போது (2015-16) யூனியன் பிரதேசத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு உட்படுத்தப்பட்ட வரிகளின் மூலம் பெறப்பட்ட வருவாய் ₹ 1,095.37 கோடியாகும். எந்தவொரு ஆண்டிலும், கணக்கிடப்படும் வருவாயானது அடிப்படை ஆண்டின் வருவாயில் ஆண்டிற்கு 14 சதவீத வளர்ச்சி வீதத்தை பயன்படுத்துவதன் மூலம் கணக்கிடப்படவேண்டும்.

2021-22ம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட வருவாய் ₹ 2,404.31 கோடியாகும். 2021-22ம் ஆண்டிற்கான GST வருவாய் எண்ணிலக்கங்கள், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST) மற்றும் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) போன்ற வரவுகளின் இயல்பிற்கேற்ப நிதிக் கணக்குகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. 2021-22 காலகட்டத்தின்போது, உத்தேசிக்கப்பட்ட வருவாய், GSTக்கு முந்தைய யூனியன் பிரதேச அரசின் வரிகளை உள்ளடக்கிய வருவாய்

வரவினங்கள் மற்றும் GSTயின் கீழான வரிகள் ஆகியவை **அட்டவணை 2.5**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5: உத்தேசிக்கப்பட்ட வருவாய், GSTக்கு முந்தைய யூனியன் பிரதேச அரசின் வரிகளை உள்ளடக்கிய வருவாய் வரவினங்கள் மற்றும் GSTயின் கீழான வரிகள் பற்றிய விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| காலம் | உத்தேசிக்கப் பட்ட வருவாய் * | GSTக்கு முந்தைய வரிகள்*** | SGST | IGST | வசூலிக்கப் பட்ட மொத்த வரி | பெறப்பட்ட இழப்பீடு ** | GST இழப்பீட்டுப் பற்றாக்– குறைக்காக கடனாக விடுவிக்கப்பட்ட கடன்கள் | இழப்பீடு மற்றும் இழப்பீட்டிற்கான கடன் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்தம் | பற்றாக்– குறை / மிகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6= (3+4+5)** | **7** | **8** | **9= (6+7+8)** | **10 = (2-8)** |
| 2021-22 | 2,404.31 | 655.84 | 366.33 | 906.83 | 1,929.00 | 328.95 | 1,096.29 | 3,354.24 | இறுதி செய்யப் படவில்லை |

* அடிப்படை ஆண்டு (2015-16) வருவாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 14 சதவீத வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது

** 2021-22ம் ஆண்டில் பெறப்படவேண்டிய இழப்பீடு ஒத்திசைவின் கீழ் உள்ளது

*** இதில் உட்படுத்தப்படாத வரிக்கூறுகளும் அடங்கும்

(யூனியன் பிரதேச அரசால் கணக்கிடப்பட்டபடி திருப்பிச் செலுத்துவதைத் தவிர்த்த எண்ணிலக்கங்கள்)

(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

மேலுள்ள அட்டவணையில் காணப்பட்டவாறு, 2021-22 ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட வருவாய் ₹ 2,404.31 கோடியாகும். யூனியன் பிரதேச அரசு இதுவரை இழப்பீடாக ₹ 328.95 கோடியை பெற்றுள்ளது மற்றும் ₹ 1,096.29 கோடி GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக கடனாக விடுவிக்கப்பட்டது. 2021-22க்கான வருவாய் சான்றளித்தல் மற்றும் இழப்பீடு பெறுவதில் மிகை அல்லது பற்றாக்குறை இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

### *வருவாய் நிலுவை*

அரசுக்கு வரவேண்டிய வருவாய் தாமதமாகப் பெறப்படுவதை வருவாய் நிலுவைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதேபோல், தாமதமான மதிப்பீட்டின் காரணமாக சாத்தியமுள்ள வரவினங்கள் முடக்கப்படுவதையும் மதிப்பீட்டின் நிலுவை சுட்டிக்காட்டுகிறது. இவை இரண்டும், யூனியன் பிரதேசத்தின் சாத்தியமுள்ள வருவாய் வரவினங்களின் இழப்பிற்கும் முடிவில் வருவாய் பற்றாக்குறை/மிகையையும் பாதிக்கிறது.

வருவாய் முதன்மைத் தலைப்புகளின் கீழ், 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, ₹ 1,067.90 கோடி வருவாய் நிலுவைகள் இருந்தன. அவற்றில், **அட்டவணை 2.6**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, ₹ 674.92 கோடி ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

**அட்டவணை 2.6: வருவாய் நிலுவைகள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | துறைகள் | மொத்த நிலுவைகள் | ஐந்தாண்டு களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நிலுவைகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | கணக்குகள் மற்றும் கருவூலம் | 2.37 | 0.11 | சமய நிறுவனங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் தொடர்பான நிலுவைகள் |
| 2 | வேளாண்மை | 0.31 | 0.31 | புதுச்சேரி வேளாண் பணி மற்றும் தொழில் கழகம் (PASIC) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வாடகை, விதைகளின் விலை மற்றும் பிற சேவைகளுக்கான நிலுவைத் தொகை |
| 3 | வணிக வரிகள் | 271.28 | 215.77 | இவை PGST/ CST மற்றும் VAT சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட வேண்டிய வரிகளுக்குத் தொடர்புடைய நிலுவைகள். இதில் பெரும் பகுதி நீதிமன்ற வழக்குகளில் அடங்கும். |
| 4 | மின்சாரம் | 486.43 | 258.67 | மின்சாரக் கட்டணங்கள் செலுத்தாததன் காரணமாக நிலுவைகள் ஏற்பட்டன. |
| 5 | ஆயத்தீர்வை | 69.15 | 52.33 | கள்ளுக்கடை மற்றும் சாராயக் கடைகளின் குத்தகைதாரர்கள் கிஸ்தியை செலுத்தாதது நிலுவைகள் ஏற்பட காரணமாக இருந்தது. |
| 6 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் | 0.04 | 0.04 | ஏனாமிலுள்ள கோரிங்கா ஆற்றில் மீன்பண்ணை குத்தகை நிலுவை |
| 7 | தொழில்கள் மற்றும் வர்த்தகம் | 0.13 | 0.11 | செயலற்ற தொழிற்சாலைகளின் வாடகை தொடர்பான நிலுவைத் தொகை |
| 8 | நீதி | 0.04 | 0.03 | சில வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவரின் தலைமறைவு மற்றும் தள்ளுபடி கருத்துரு நிலுவையில் இருந்ததால் அபராதம் மற்றும் பறிமுதல்கள் செய்வதில் நிலுவைகள் ஏற்பட்டன. |
| 9 | பொதுப்பணிகள் | 56.47 | 17.23 | தண்ணீர் கட்டணம் மற்றும் உரிமத்தொகை தொடர்பான நிலுவைத் தொகை |

| வரிசை எண் | துறைகள் | மொத்த நிலுவைகள் | ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நிலுவைகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 10 | வருவாய் | 174.38 | 124.94 | நிலவரி, சுரங்கம் தோண்டுதலின் உரிமக் கட்டணம் போன்றவற்றின் நிலுவைத் தொகை |
| 11 | ஊரக வளர்ச்சி | 0.16 | 0.04 | வாடகை வசூலிப்பில் நிலுவை |
| 12 | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை | 0.39 | 0.16 | எழுதுபொருள் மற்றும் அச்சிடுதல், அரசிதழ்கள் விற்பனை, அச்சக பட்டிகள் போன்றவற்றில் அரசுத் துறைகளின் நிலுவைத் தொகைகள் |
| 13 | சுற்றுலா | 0.15 | 0.12 | அறை வாடகை, உணவு மற்றும் பிற பட்டிகளுக்கு விருந்தினர்கள்/ அரசு அதிகாரிகள் செலுத்த வேண்டிய வாடகையால் நிலுவைகள் ஏற்பட்டன |
| 14 | போக்குவரத்து | 6.60 | 5.06 | -- |
| **மொத்தம்** | | **1,067.90** | **674.92** | |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட துறைகளால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

மேலும், 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு வசூலிக்கப்படாத வருவாயின் அளவு, 2021-22ல் அரசால் திரட்டப்பட்ட மொத்த வருவாயில் (₹ 7,858.92 கோடி) 13.59 சதவீதம் என்பதை **அட்டவணை 2.6** சுட்டிக்காட்டுகிறது.

## மதிப்பீட்டில் நிலுவைகள்

வணிக வரித் துறையால் அளிக்கப்பட்ட மதிப்புக் கூட்டு வரி (VAT) தொடர்பான ஆண்டின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள மதிப்புக் கூட்டு வரி நேர்வுகள், மதிப்பீடு செய்ய வேண்டிய நேர்வுகளின் நிலுவை, ஆண்டில் தீர்க்கப்பட்ட நேர்வுகள் மற்றும் ஆண்டு முடிவில் இறுதி செய்யாமல் நிலுவையிலுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.7**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.7: மதிப்பீட்டில் நிலுவைகள்**

| வருவாய் தலைப்பு | தொடக்க இருப்பு | 2021-22 காலத்தில் மதிப்பீட்டிற்கான புதிய நேர்வுகள் | மதிப்பீடுகளின் மொத்த நிலுவை | 2021-22 காலத்தில் தீர்க்கப் பட்ட நேர்வுகள் | ஆண்டு இறுதியில் இருப்பு | தீர்க்கப் பட்டவை–களின் சதவீதம் (நிலை 5க்கு 4) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) = (2)+(3) | (5) | (6)= (4)-(5) | (7) |
| மதிப்புக் கூட்டு வரி ஆய்வு மதிப்பீடு | 18,721 | இல்லை | 18,721 | 1,998 | 16,723 | 10.67 |

(ஆதாரம்: துறையால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

2008-09 முதல் 2016-17 வரையான காலகட்டத்திற்குரிய 18,721 நேர்வுகளில், 2021-22 காலகட்டத்தில் 1,998 நேர்வுகள் மட்டுமே தீர்த்து வைக்கப்பட்டன என்பது காணப்பட்டது. அதே போல் 2015-17 காலகட்டத்திற்குரிய 5,411 நேர்வுகளில், 553 நேர்வுகள் மட்டுமே தீர்த்து வைக்கப்பட்டன. தீர்த்து வைக்கப்படும் நேர்வுகளின் சதவீதம் மிகவும் குறைவாக உள்ள காரணத்தாலும், புதிய வரி விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதாலும், நிலுவையிலுள்ள அனைத்து நேர்வுகளையும் தீர்த்து வைக்க துறை காலக்கெடுவுடன் கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### துறையால் கண்டறியப்பட்ட வரி ஏய்ப்பு, திருப்பிக் கொடுத்தல் போன்ற நேர்வுகள்

வணிக வரித் துறையால் கண்டறியப்பட்ட வரி ஏய்ப்பு நேர்வுகளின் எண்ணிக்கை, இறுதி செய்யப்பட்ட நேர்வுகள் மற்றும் கூடுதல் வரிக்கான கேட்புகள் ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.8**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.8: கண்டறியப்பட்ட வரி ஏய்ப்புகள்**

| வரிசை எண் | வருவாய் தலைப்பு | 31 மார்ச் 2021 அன்றுள்ளவாறு நேர்வுகளின் நிலுவை | 2021-22ல் கண்டறியப் பட்ட நேர்வுகள் | மொத்தம் | மதிப்பீடு/விசாரணை முடிந்த நேர்வுகள் மற்றும் அபராதத்துடன் கூடுதல் கேட்பு போன்றவற்றின் எண்ணிக்கை | | 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நேர்வுகளின் எண்ணிக்கை | கேட்புத் தொகை (₹ கோடியில்) | |
| 1 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 26 | 47 | 73 | 33 | 1.26 | 40 |
| 2 | விற்பனை வரி/VAT | 238 | 0 | 238 | 183 | 7.20 | 55 |
| 3 | மாநில ஆயத்தீர்வை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

(ஆதாரம்: துறையால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

ஆண்டு தொடக்கத்திலுள்ள 238 நேர்வுகளில், 55 நேர்வுகள் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலுள்ளன என்று காணப்பட்டது. நிலுவையிலுள்ள விற்பனை வரி/VAT நேர்வுகளில் 76.90 சதவீதத்தை துறை நடப்பாண்டில் தீர்த்திருந்தாலும், புதிய வரி விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதால், அனைத்து நேர்வுகளையும் தீர்த்து வைக்க துறை காலக்கெடுவுடன் கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டும்; இல்லையேல் நிலுவையைத் தீர்த்தலில் ஏற்படும் காலதாமதம் யூனியன் பிரதேசத்தின் வருவாய் இழப்பிற்கு வழிவகுக்கக்கூடும்.

## *திருப்பிக் கொடுத்தல் நேர்வுகளில் நிலுவை*

வணிக வரித் துறை (யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி) தொடர்பான 2021-22 ஆண்டு தொடக்கத்தில் நிலுவையிலுள்ள திருப்பிக் கொடுத்தல் நேர்வுகளின் எண்ணிக்கை, நடப்பாண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள், நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட திருப்பிக் கொடுத்தல் மற்றும் 2021-22 ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள நேர்வுகள் ஆகியவை **அட்டவணை 2.9**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.9: திருப்பிக் கொடுத்தல் நேர்வுகளின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | விவரங்கள் | யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | |
|---|---|---|---|
| | | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை |
| 1 | ஆண்டு தொடக்கத்தில் நிலுவையிலுள்ள கோரிக்கைகள் | 3 | 0.82 |
| 2 | நடப்பாண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள் | 182 | 56.64 |
| 3 | நடப்பாண்டில் கொடுக்கப்பட்டவை | 166 | 50.58 |
| 4 | நடப்பாண்டில் நிராகரிக்கப்பட்டவை | 15 | 6.16 |
| 5 | ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள நேர்வுகள் | 4 | 0.72 |

(ஆதாரம்: துறையால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

## *வரியல்லாத வருவாய்*

வட்டி வரவினங்கள், ஆதாயப் பங்குகள் மற்றும் இலாபங்கள், சுரங்க வரவினங்கள், துறை வரவினங்கள் போன்றவற்றை வரியல்லாத வருவாய் உள்ளடக்கியிருந்தது. 2017-22 காலகட்டத்திற்குரிய வரியல்லாத வருவாயின் விவரங்கள் **அட்டவணை 2.10**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10: வரியல்லாத வருவாயின் கூறுகள்**

**(₹ கோடியில்)**

| வருவாய் தலைப்பு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | இன வரிகோடு |
|---|---|---|---|---|---|---|
| வட்டி வரவினங்கள் | 99 | 95 | 99 | 67 | 100 |  |
| ஆதாயப் பங்குகள் மற்றும் இலாபங்கள் | 2 | 1 | 3 | 0 | 2 |  |
| இதர வரியல்லாத வருவாய், இதில் | 1,273 | 1,488 | 1,536 | 1,393 | 2,082 |  |
| (அ) மின்சக்தி | 1,197 | 1,353 | 1,423 | 1,295 | 2,010 |  |
| (ஆ) மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் | 17 | 26 | 11 | 17 | 18 |  |
| (இ) நீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 15 | 24 | 21 | 17 | 18 |  |
| (ஈ) துறைமுகங்கள் மற்றும் கலங்கரை விளக்கங்கள் | 12 | 11 | 12 | 10 | 8 |  |
| (உ) வீட்டு வசதி | 1 | 7 | 7 | 7 | 5 |  |
| (ஊ) பல்வகை பொது சேவைகள் | 5 | 31 | 37 | 2 | 2 |  |
| (எ) கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு | 1 | 7 | 2 | 1 | 1 |  |
| (ஏ) ஏனையவை | 25 | 29 | 23 | 44 | 20 |  |
| **மொத்தம்** | **1,374** | **1,584** | **1,638** | **1,460** | **2,184** |  |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18 முதல் 2021-22 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், யூனியன் பிரதேசத்தின் மொத்த வருவாய் வரவினங்களில் வரியல்லாத வருவாய் 23 மற்றும் 28 சதவீதம் என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. இது, 2017-18ல் ₹ 1,374 கோடியிலிருந்து 2021-22ல் ₹ 2,184 கோடியாக அதிகரித்தது. 2020-21ல் ₹ 1,295 கோடியாக இருந்த மின்சக்தி விற்பனை, 2021-22ல் ₹ 2,010 கோடியாக அதிகரித்ததே வரியல்லாத வருவாயின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணியாக இருந்தது.

### *2.3.2.3 இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள்*

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்களின் விவரங்கள் **அட்டவணை 2.11**லும், வருவாய் வரவினங்களுக்கெதிரான உதவி மானியங்கள் **விளக்கப்படம் 2.7**லும் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.11: இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள்**

(₹ கோடியில்)

| தலைப்பு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| திட்டம் சாரா மானியங்கள் | 28 | 5 | -- | 5 | 5 |
| மாநில/யூனியன் பிரதேச அரசின் திட்ட பணிகளுக்கான மானியங்கள் | 11 | -- | -- | -- | -- |
| மத்திய திட்டங்களுக்கான மானியங்கள் | -- | -- | -- | -- | -- |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள் (CSS) | 383 | 152 | 201 | 164 | 225 |
| இதர மாற்றங்கள்/சட்டப்பேரவை கொண்ட மாநில/யூனியன் பிரதேசங்களுக்கான மானியங்கள் | 1,401 | 1,471 | 2,467 | 2,313 | 2,209 |
| மொத்தம் | 1,823 | 1,628 | 2,668 | 2,482 | 2,439 |
| கடந்த ஆண்டைவிட உயர்வு/குறைவு (சதவீதத்தில்) | 4.95 | (-) 10.70 | 63.88 | (-) 6.97 | (-) 1.73 |
| வருவாய் வரவினத்தில் உதவி மானியங்களின் பங்கு (சதவீதத்தில்) | 30.37 | 25.44 | 39.35 | 42.14 | 31.03 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப்படம் 2.7: 2017-18 முதல் 2021-22 வரையான காலகட்டத்தில் வருவாய் வரவினங்களுக்கெதிரான உதவி மானியங்கள்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2021-22 காலகட்டத்தில், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள் ₹ 43 கோடி (1.73 சதவீதம்) குறைந்திருந்தது. மொத்த மானியங்களை வருவாய் வரவினங்களின் சதவீதமாகப் பார்க்கையிலும், அது 2020-21ல் 42.14 சதவீதத்திலிருந்து 2021-22ல் 31.03 சதவீதமாக குறைந்திருந்தது. மத்திய நிதியுதவியான ₹ 1,875 கோடியில், ஜனவரி முதல் மார்ச் 2022 வரை ₹ 624 கோடி (33 சதவீதம்) விடுவிக்கப்பட்டது.

### 2.3.3 மூலதன வரவினங்கள்

**மூலதன வரவினங்களானது** மீட்கப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம், கடன்கள் மற்றும் முன்பணங்களின் மீள்பெறுகைகள், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவினங்கள் (சந்தைக் கடன்கள், நிதி நிறுவனங்கள்/வணிக வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள்) மற்றும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் போன்ற இதர மூலதன வரவினங்களை உள்ளடக்கியிருந்தது. 2017-22 காலகட்டத்தில் மூலதன வரவினங்களின் வளர்ச்சி போக்குகள் மற்றும் கூறுகள் **அட்டவணை 2.12**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.12: மூலதன வரவினங்களின் வளர்ச்சி போக்குகள் மற்றும் கூறுகள்**

**(₹ கோடியில்)**

| வரவினங்களின் ஆதாரம் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| **மூலதன வரவினங்கள்** | **1,062** | **1,008** | **1,044** | **2,529** | **2,516** |
| பல்வகை மூலதன வரவினங்கள் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| கடன்கள் மற்றும் முன்பணங்களின் மீள்பெறுகைகள் | 1 | 1 | 1 | இல்லை | இல்லை |
| **நிகரப் பொதுக் கடன் வரவினங்கள்** | **1,061** | **1,007** | **1,043** | **2,529** | **2,516** |
| *வெளிநாட்டுக் கடன்* | இல்லை | 50 | இல்லை | இல்லை | இல்லை |
| *உள்நாட்டுக்கடன்* | 989 | 957 | 1,043 | 1,787 | 1,420 |
| *வளர்ச்சி வீதம்* | 32.22 | (-) 3.24 | 8.99 | 71.33 | (-) 20.54 |
| *இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள்* | 72 | இல்லை | இல்லை | 742 | 1,096 |
| *வளர்ச்சி வீதம்* | -- | (-) 100.00 | -- | 742 | 47.71 |
| கடன் மூலதன வரவினங்களின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | 29.39 | (-) 5.09 | 3.57 | 142.47 | (-) 0.51 |
| கடன் அல்லாத மூலதன வரவினங்களின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | (-) 50.00 | -- | -- | (-) 100 | -- |
| GSDPயின் வளர்ச்சி வீதம் | 8.64 | 13.78 | 3.84 | (-) 4.10 | 5.04 |
| மூலதன வரவினங்களின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்) | 29.20 | (-) 5.08 | 3.57 | 142.24 | (-) 0.51 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

பொதுக்கடன் வரவினங்கள் குறைந்ததன் காரணமாக 2021-22 காலகட்டத்தில் மூலதன வரவினங்கள் ₹ 13 கோடி அளவிற்கு குறைந்தது. 2020-21ல் ₹ 1,787 கோடியாக இருந்த யூனியன் பிரதேசத்தின் கடன் மூலதன

வரவினங்கள் 2021-22ல் ₹ 1,420 கோடியாக குறைந்தது. சந்தைக் கடன்கள் (₹ 367 கோடி) குறைந்ததே இந்த குறைவிற்கு காரணமாகும்.

பொதுக்கடன் வரவினங்கள் எதிர்காலத்தில் திரும்பச் செலுத்தும் கடமையை உருவாக்குகின்றன; இவை சந்தை, நிதி நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்படுகின்றன. 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலகட்டத்தில், பொதுக்கடன் வரவினங்களின் 45.37 சதவீதம், முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட பொதுக் கடன்களை திரும்பச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டு, மீதமுள்ள 54.63 சதவீதம் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

### 2.3.4 நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் யூனியன் பிரதேசத்தின் செயல்திறன்

சொந்த நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள யூனியன் பிரதேசத்தின் செயல்திறன், அதன் சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய் ஆதாரங்களை உள்ளடக்கிய சொந்த ஆதாரங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22ம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் உள்ளபடியேயானவை **அட்டவணை 2.13**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.13: கணிப்புகளுக்கெதிரான வரி மற்றும் வரியல்லாத வரவினங்கள்**

| | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் | உள்ளபடியே-யானவை | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக உள்ளபடியானவை மீதான வேறுபாடு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| **சொந்த வரி வருவாய்** | 4,134 | 3,236 | (-) 21.72 |
| **வரியல்லாத வருவாய்** | 2,056 | 2,184 | 6.23 |

(ஆதாரம்: நிதிக் கணக்குகள் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள்)

வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை விட சொந்த வரி வருவாய் ₹ 898 கோடி குறைந்திருந்தது. எனினும், வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை விட வரியல்லாத வருவாய் ₹ 128 கோடி அளவு அதிகரித்திருந்தது.

எனினும், யூனியன் பிரதேசம், இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்களை சார்ந்திருக்கிறதென்பது, அதன் மொத்த வருவாய் வரவினமான ₹ 7,859 கோடியில் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியமான ₹ 2,439 கோடி உள்ளடங்கியதால் தெளிவாகிறது. இது யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினத்தில் 31.03 சதவீதமாகும்.

## 2.4 நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தியமை

யூனியன் பிரதேச அரசு நிதிநிலை வரைபடத்தின் கட்டமைப்பிற்குள் செலவினங்களை செய்யும் பொறுப்பை கொண்டுள்ளது. அதே நேரத்தில், யூனியன் பிரதேசத்தின தற்போதைய நிதித் திருத்தம் மற்றும் ஒருங்கிணைப்பு நடைமுறை, மூலதன உள்கட்டமைப்பு மற்றும் சமூகப் பிரிவின் வளர்ச்சிக்கான செலவினங்களை பாதிக்கக்கூடாது என்பதையும் உறுதிப்படுத்தவேண்டும். இருப்பினும், 2021-22 ஆண்டில், யூனியன் பிரதேச அரசு எந்த நிதிநிலை வரைபட இலக்கையும் நிர்ணயிக்கவில்லை. துணைப் பத்திகளுடன் சேர்ந்து இப்பத்தி யூனியன் பிரதேசத்தின் செலவின ஒதுக்கீடு குறித்த பகுப்பாய்வை வழங்குகிறது.

### 2.4.1 செலவினத்தின் வளர்ச்சியும் கூறுகளும்

2017-22 காலகட்டத்தில் யூனியன் பிரதேச அரசின் மொத்தச் செலவினம், அவற்றின் கூறுகள் மற்றும் அவற்றின் பிரிவுவாரியான பங்களிப்பு ஆகியவை **அட்டவணைகள் 2.14** மற்றும் **2.15** மற்றும் **விளக்கப்படங்கள் 2.8** மற்றும் **2.9**ல் அளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.14: மொத்தச் செலவினம் மற்றும் அவற்றின் கூறுகள்**

**(₹ கோடியில்)**

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவினம் (TE) | 6,201 | 6,703 | 7,163 | 7,505 | 8,911 |
| வருவாய் செலவினம் (RE) | 5,807 | 6,387 | 6,836 | 7,260 | 8,748 |
| மூலதன செலவினம் (CE) | 394 | 313 | 327 | 240 | 163 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 0 | 3 | 0 | 5 | 0 |
| **GSDPயின் சதவீதத்தில்** | | | | | |
| மொத்தச் செலவினம்/GSDP | 19.30 | 18.42 | 19.50 | 21.03 | 23.77 |
| வருவாய் செலவினம்/GSDP | 18.07 | 17.55 | 18.61 | 20.34 | 23.34 |
| மூலதன செலவினம்/GSDP | 1.23 | 0.86 | 0.89 | 0.67 | 0.43 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள்/GSDP | 0.00 | 0.01 | 0.00 | 0.01 | 0.00 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18ல், ₹ 6,201 கோடியாக இருந்த யூனியன் பிரதேசத்தின் மொத்தச் செலவினம், ₹ 2,710 கோடி (43.70 சதவீதம்) அதிகரித்து, 2021-22ல் ₹ 8,911 கோடியாக உயர்ந்திருந்தது என்பதை **அட்டவணை 2.14** காட்டுகிறது. 2021-22ம் ஆண்டில், இது முந்தைய ஆண்டை விட

18.73 சதவீதம் அதிகரித்து இருந்தது. GSDPயின் சதவீதமாகப் பார்க்கையில், 2017-18ல் 19.30ஆக இருந்த மொத்தச் செலவினம், 2021-22ல் 23.77ஆக அதிகரித்தது. வருவாய் செலவினம், 2017-18ல் ₹ 5,807 கோடியிலிருந்து கணிசமான அளவு அதிகரித்து, 2021-22ல் ₹ 8,748 கோடியாக இருந்தது. இது, மொத்தச் செலவினத்தின் அதிகரிப்பிற்கு பங்களித்தது. இதன் விளைவாக, 2021-22ம் ஆண்டில் ₹ 889 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது.

**அட்டவணை 2.15: செலவினங்களில் பல்வேறு பிரிவுகளின் பங்கு**

**(சதவீதத்தில்)**

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| பொது சேவைகள் | 31.64 | 32.42 | 32.58 | 32.92 | 31.46 |
| சமூக சேவைகள் | 37.77 | 37.70 | 36.30 | 33.80 | 31.63 |
| பொருளாதார சேவைகள் | 30.53 | 29.84 | 31.12 | 33.21 | 36.91 |
| ஏனையவை (உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்) | 0.06 | 0.04 | 0.00 | 0.07 | 0.00 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப் படம் 2.8: மொத்தச்செலவினம் – கூறுகளின் பகிர்வின் போக்குகள்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப் படம் 2.9: மொத்தச்செலவினம் – 'நடவடிக்கைகள்' வாரியாக போக்குகள்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

யூனியன் பிரதேசத்தின் செலவினங்கள் தொடர்பான பொதுவான போக்குகள் பின்வருமாறு:

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021-22 காலகட்டத்தில் வருவாய் செலவினம் ₹ 1,488 கோடி (20.50 சதவீதம்) அதிகரித்தும் மூலதன செலவினம் ₹ 77 கோடி (32.08 சதவீதம்) குறைந்தும் இருந்தன. GSDPயின் சதவீதமாகப் பார்க்கையில், கடந்த சில ஆண்டுகளில் மூலதன செலவினத்தின் பங்கு 2017-18ல் 1.23லிருந்து 2021-22ல் 0.43ஆக கணிசமாகக் குறைந்துள்ளது.

மொத்தச் செலவினங்களில், வருவாய் செலவினத்தின் பங்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக (2017-22) தொடர்ந்து அதிகரித்து வருவதை **விளக்கப்படம் 2.8**ல் காணலாம். இது 2021-22 காலகட்டத்தில் மொத்தச் செலவினத்தில் 98.17 சதவீதமாக இருந்தது. 2017-18ல் ₹ 3,388 கோடியாக இருந்த ஏற்கப்பெற்ற செலவினம் 2021-22ல் ₹ 4,804 கோடியாக படிப்படியாக அதிகரித்ததே வருவாய் செலவினம் தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணமாகும். மேலும், 2017-22 காலகட்டத்தில் பொது சேவைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம், மொத்தச் செலவினங்களின் சதவீதமாகப் பார்க்கையில், சுமார் 32ஆக இருந்தது. அதே காலகட்டத்தில் சமூக சேவைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம் 37.77லிருந்து 31.63ஆக படிப்படியாக குறைந்துள்ளது.

2017-18 காலகட்டத்தில் மொத்தச் செலவினத்தில் 6.35 சதவீதமாக இருந்த மூலதன செலவினம், 2021-22ல் 1.83 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது உள்கட்டமைப்பு மேம்பாடு/மூலதன சொத்துக்கள் உருவாக்குதல் ஆகியவற்றிற்கு குறைந்த முன்னுரிமை வழங்கப்பட்டதை குறிக்கிறது.

2021-22 காலகட்டத்தில் முந்தைய ஆண்டைக் காட்டிலும், பொது சேவைகள், சமூக சேவைகள் மற்றும் பொருளாதார சேவைகளின் செலவினங்கள் முறையே ₹ 333 கோடி (13.48 சதவீதம்), ₹ 282 கோடி (11.12 சதவீதம்) மற்றும் ₹ 797 கோடி (31.98 சதவீதம்) அதிகரித்து இருந்தது.

## 2.4.2 வருவாய் செலவினம்

தற்போதைய சேவைகளின் நிலையை பராமரிப்பதற்கும், கடந்த கால கடமைப்பொறுப்பிற்கு பணம் செலுத்துவதற்கும் வருவாய் செலவினமானது மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இது யூனியன் பிரதேசத்தில் கூடுதலாக உள்கட்டமைப்பு மற்றும் சேவைக் கட்டமைப்புகளை உருவாக்க வழிவகுக்காது.

வருவாய் செலவினம் 2020-21ல் ₹ 7,260 கோடியாக இருந்ததுடன் ஒப்பிடுகையில், அது ₹ 1,488 கோடி அதிகரித்து 2021-22ல் ₹ 8,748 கோடியாக உயர்ந்திருந்தது. இது, நடப்பாண்டில் மொத்தச் செலவினமான ₹ 8,911 கோடியில் 98.17 சதவீதமாக இருந்தது. GSDPயின் சதவீதமாகப் பார்க்கையிலும், 2020-21ல் 20.34ஆக இருந்த வருவாய் செலவினம், 2021-22ல் 23.34ஆக அதிகரித்தது. 2021-22 காலகட்டத்தில், வருவாய் வரவினத்துடனான வருவாய் செலவினத்தின் மேலோங்குநிலை 0.61ஆக இருந்தது.

2017-18 முதல் 2021-22 வரையான காலகட்டத்திற்கான ஒட்டுமொத்த வருவாய் செலவினம், அதன் வளர்ச்சி வீதம், மொத்தச் செலவினத்துடன் அதன் விகிதம் மற்றும் GSDPக்கு எதிராக அதன் மேலோங்குநிலை மற்றும் வருவாய் வரவினங்கள் ஆகியவை **அட்டவணை 2.16**ல் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2021-22 ஆண்டுக்குத் தொடர்புடைய வருவாய் செலவினத்தின் பிரிவுவாரியான பங்கீடு **விளக்கப்படம் 2.10**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16: வருவாய் செலவினம் - அடிப்படைஅளவுருக்கள்**

**(₹ கோடியில்)**

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவினம் (TE) | 6,201 | 6,703 | 7,163 | 7,505 | 8,911 |
| வருவாய் செலவினம் (RE) | 5,807 | 6,387 | 6,836 | 7,260 | 8,748 |
| வருவாய் செலவினத்தின் வளர்ச்சி வீதம் (சதவீதம்) | 6.39 | 9.99 | 7.03 | 6.20 | 20.50 |
| மொத்தச் செலவினத்தில் வருவாய் செலவினத்தின் பங்கு (சதவீதத்தில்) | 93.65 | 95.29 | 95.43 | 96.73 | 98.17 |
| வருவாய் செலவினம் / GSDP (சதவீதம்) | 18.07 | 17.55 | 18.61 | 20.34 | 23.34 |
| வருவாய் வரவினங்களுக்கான சதவீதக் கணக்கில் வருவாய் செலவினம் | 96.73 | 99.80 | 100.81 | 123.26 | 111.31 |

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| **வருவாய் செலவினத்தின் மேலோங்குநிலை** | | | | | |
| GSDPயுடன் (விகிதம்) | 0.74 | 0.75 | 7.57 | (-) 2.19 | 4.06 |
| வருவாய் வரவினங்களுடன் (விகிதம்) | 0.56 | 1.51 | 1.18 | (-) 0.47 | 0.61 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப்படம் 2.10: வருவாய் செலவினத்தின் பிரிவுவாரியான பங்கீடு (சதவீதத்தில்)**




(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

மொத்த வருவாய் செலவினத்தின் சதவீதக் கணக்கில் பார்க்கையில், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டிச்செலுத்தங்கள் மற்றும் கடன் சேவைகள் மற்றும் பொருளாதார சேவைகள் தவிர, மற்ற அனைத்து பிரிவுகளின் செலவினங்களும் குறைந்திருந்தது.

2021-22 காலகட்டத்தில் 20.50 சதவீதமாக இருந்த வருவாய் செலவினத்தின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது, GSDPயின் சதவீதமாகப் பார்க்கையில் வருவாய் செலவினம் 2020-21ல் 20.34 சதவீதத்தில் இருந்து 2021-22ல் 23.34 சதவீதமாக உயர்ந்துள்ளது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ₹ 8,724 கோடிக்கெதிராக, உள்ளபடியேயான வருவாய் செலவினம் ₹ 8,748 கோடியாக இருந்தது.

### *2.4.2.1 வருவாய் செலவினத்தில் பெரும் மாற்றங்கள்*

2020-21ல் ₹ 7,260 கோடியாக இருந்த வருவாய் செலவினம் ₹ 1,488 கோடி நிகர அதிகரிப்பு ஏற்பட்டு, 2021-22ல் ₹ 8,748 கோடியாக இருந்தது. 2020-21

மற்றும் 2021-22 காலகட்டங்களில் வருவாய் செலவினத்தின் பல்வேறு கணக்குத் தலைப்புகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் **அட்டவணை 2.17**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.17: 2020-21ஐ ஒப்பிடுகையில் 2021-22ல் வருவாய் செலவினத்தில் ஏற்பட்ட மாறுபாடுகள்**

**(₹ கோடியில்)**

| பெருந்தலைப்புகள் மற்றும் விவரங்கள் | | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவு (−) |
|---|---|---|---|---|
| 2048 | கடன் குறைப்பு மற்றும் தவிர்த்தலுக்கான நிதி ஒதுக்கம் | 15.00 | 59.56 | 44.56 |
| 2049 | வட்டிச்செலுத்தங்கள் | 757.25 | 876.42 | 119.17 |
| 2055 | காவல் | 230.23 | 269.13 | 38.90 |
| 2071 | ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் | 1,062.72 | 1,183.08 | 120.36 |
| 2202 | பொதுக்கல்வி | 740.23 | 809.66 | 69.43 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 94.24 | 108.41 | 14.17 |
| 2210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் | 594.72 | 700.04 | 105.32 |
| 2217 | நகரக வளர்ச்சி | 107.24 | 88.88 | (-) 18.36 |
| 2225 | அட்டவணை இனத்தோர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 113.36 | 151.43 | 38.07 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன் | 507.39 | 603.98 | 96.59 |
| 2401 | பயிர் பராமரிப்பு | 71.10 | 81.43 | 10.33 |
| 2405 | மீன்வளம் | 48.00 | 60.04 | 12.04 |
| 2408 | உணவு சேமிப்பு மற்றும் கிடங்கு | 235.18 | 202.67 | (-) 32.51 |
| 2505 | ஊரக வேலைவாய்ப்பு | 14.40 | 3.10 | (-) 11.30 |
| 2801 | எரிசக்தி | 1,711.19 | 2,300.94 | 589.75 |
| 2851 | கிராம மற்றும் சிறுதொழில்கள் | 16.63 | 33.26 | 16.63 |
| 2852 | தொழில்கள் | 40.24 | 123.01 | 82.77 |
| 3054 | சாலைகள் மற்றும் பாலங்கள் | 30.54 | 44.93 | 14.39 |
| 3456 | குடிமைப்பொருள் வழங்கல் | 9.50 | 118.77 | 109.27 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2021-22 காலகட்டத்தில், வட்டி செலுத்தங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் மற்றும் மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்தின் கீழ் வருவாய்ச் செலவுகள் முறையே திட்டம் சாரா திட்டங்களுக்கான கடன்கள் மீதான வட்டி, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்கள் மற்றும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான செலவினங்கள் அதிகரித்ததே காரணம் என்பதை **அட்டவணை 2.17** சுட்டிக்காட்டுகிறது. 2021-22ம் ஆண்டில் மின் திட்டங்கள் மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கலைப் பொறுத்த வரையில் முறையே பொது மற்றும் இதர செலவினங்களின் மீதான செலவினங்கள் ஆகியவற்றால் செலவினங்கள் அதிகரித்தன.

அதேபோல், இதர மேம்பாட்டுத் திட்டங்கள், உணவு மானியங்கள் மற்றும் தேசிய ஊரகப் பணியாளர் உத்தரவாதத் திட்டங்களுக்கான செலவினங்களைக் குறைத்ததே முறையே நகரக வளர்ச்சி, உணவு சேமிப்பு மற்றும் கிடங்கு மற்றும் ஊரக வேலை வாய்ப்புகள் ஆகியவற்றின் கீழ் குறைவு ஏற்பட்ட காரணமாயிற்று.

சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனைப் பொறுத்தமட்டில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் (₹ 71.19 கோடி) கீழ் ஓய்வூதியங்கள் மற்றும் பிற காப்பீட்டுத் திட்டங்களின் (₹ 13.82 கோடி) அதிகரிப்பு, அட்டவணை இன மாணவர்களுக்குப் பல்வேறு படிப்புதவித்தொகை, பயிற்சி கால உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை (₹ 11.70 கோடி) வழங்கப்படுவதால் முக்கியமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

### 2.4.2.2 ஏற்கப்பெற்ற செலவினம்

வருவாய் கணக்கின்கீழ், யூனியன் பிரதேச அரசால் ஏற்கப்பெற்ற கட்டாயச் செலவினத்தில் வட்டிச் செலுத்தங்கள், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மீதான செலவினம் போன்றவை அடங்கும். அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து முதல் சாட்டப்பட்ட செலவினமாக இது செய்யப்படுகிறது. ஏற்கப்பெற்ற செலவினங்களின் மேல்நோக்கிச் செல்லும் போக்கு, அரசுக்கு வளர்ச்சிப் பணிகளின் மீதான செலவினத்தின் நெகிழ்தன்மையை குறைத்துக்கொள்ள வழிவகுக்கிறது. ஏற்கப்பெற்ற செலவினத்தின் பல்வேறு கூறுகள் மற்றும் மொத்த வருவாய் செலவினத்தில் அவற்றின் பங்கு ஆகியவை **அட்டவணை 2.18** மற்றும் **விளக்கப்படம் 2.11**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.18: ஏற்கப்பெற்ற செலவினத்தின் கூறுகள்**

**(₹ கோடியில்)**

| ஏற்கப்பெற்ற செலவினத்தின் கூறுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சம்பளம்[2] | 1,956 | 2,165 | 2,364 | 2,342 | 2,734 |
| ஓய்வூதியம் மீதான செலவினம் | 746 | 868 | 994 | 1,073 | 1,193 |
| வட்டிச் செலுத்தங்கள் | 686 | 707 | 690 | 757 | 877 |
| **மொத்தம்** | **3,388** | **3,740** | **4,048** | **4,172** | **4,804** |
| **வருவாய் வரவினத்தின் சதவீதத்தில்** | | | | | |
| சம்பளம் | 32.58 | 33.83 | 34.86 | 39.76 | 34.79 |
| ஓய்வூதியம் மீதான செலவினம் | 12.43 | 13.56 | 14.66 | 18.22 | 15.18 |
| வட்டிச் செலுத்தங்கள் | 11.43 | 11.05 | 10.18 | 12.85 | 11.16 |
| **மொத்தம்** | **56.44** | **58.44** | **59.70** | **70.83** | **61.13** |

[2] சம்பளத்திற்காக வழங்கப்பட்ட உதவி மானியங்களையும் உள்ளடக்கியது.

| ஏற்கப்பெற்ற செலவினத்தின் கூறுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| **வருவாய் செலவினத்தின் சதவீதத்தில்** | | | | | |
| சம்பளம் | 33.68 | 33.90 | 34.58 | 32.26 | 31.25 |
| ஓய்வூதியம் மீதான செலவினம் | 12.85 | 13.59 | 14.54 | 14.78 | 13.64 |
| வட்டிச் செலுத்தங்கள் | 11.81 | 11.07 | 10.09 | 10.43 | 10.03 |
| **மொத்தம்** | **58.34** | **58.56** | **59.21** | **57.47** | **54.92** |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

யூனியன் பிரதேச அரசின் மொத்த ஏற்கப்பெற்ற செலவினங்கள் கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வருவதை **அட்டவணை 2.18**யிலிருந்து காணலாம். 2017-18ல் ₹ 3,388 கோடியாக இருந்த ஏற்கப்பெற்ற செலவினங்கள், ₹ 1,416 கோடி அளவு அதிகரித்து 2021-22ல் ₹ 4,804 கோடியாக இருந்தது. 2021-22ம் ஆண்டில், ஏற்கப்பெற்ற செலவினம், வருவாய் செலவினத்தில் 54.92 சதவீதமாகவும், வருவாய் வரவினத்தில் 61.13 சதவீதமாகவும் இருந்தது. உறுதியற்ற செலவினங்களின் ஒரு பகுதி தற்போதுள்ள சமூக மற்றும் பொருளாதார சேவைகளின் செயல்பாட்டிற்காகவும் பராமரிப்பிற்காகவும் செலவிடப்படுபவை. இவை வருவாய் செலவினத்தில் 45.08 சதவீதம் மட்டுமே இருந்தது.

**சம்பளங்கள் மீதான செலவினமானது**, முந்தைய ஆண்டை விட ₹ 392 கோடி (16.74 சதவீதம்) அதிகரித்து, நடப்பாண்டில் ₹ 2,734 கோடியாக இருந்தது. இது, வருவாய் வரவினங்களில் (₹ 7,859 கோடி) 34.79 சதவீதமாகவும் வருவாய் செலவினத்தில் (₹ 8,748 கோடி) 31.25 சதவீதமாகவும் இருந்தது. 2017-18ல் ₹ 1,956 கோடியாக இருந்த சம்பளங்கள் மீதான செலவினம், 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் ₹ 778 கோடி (39.78 சதவீதம்) அதிகரித்து, 2021-22ல் ₹ 2,734 கோடியாக உயர்ந்திருந்தது.

**ஓய்வூதியம் மீதான செலவினமானது**, 2020-21ல் ₹ 1,073 கோடியில் இருந்து 11.18 சதவீதம் உயர்ந்து, 2021-22ல் ₹ 1,193 கோடியாக அதிகரித்து, வருவாய் வரவினங்கள் மற்றும் வருவாய் செலவினங்களில் முறையே 15.18 சதவீதமாகவும் 13.64 சதவீதமாகவும் இருந்தது. 2017-18ல் ₹ 746 கோடியாக இருந்த ஓய்வூதியம் மீதான செலவினம், 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், ₹ 447 கோடி அளவு (59.92 சதவீதம்) அதிகரித்து, 2021-22ல் ₹ 1,193 கோடியாக உயர்ந்திருந்தது.

**வட்டி செலுத்தங்கள் மீதான செலவினம்**, முந்தைய ஆண்டைவிட ₹ 120 கோடி (15.85 சதவீதம்) அதிகரித்தது. இது வருவாய் வரவினங்கள் மற்றும் வருவாய் செலவினங்களில் முறையே 11.16 சதவீதம் மற்றும் 10.03 சதவீதமாக இருந்தது. 2017-18ல் ₹ 7,737 கோடியாக இருந்த பொதுக்கடன், 2021-22 காலகட்டத்தில் ₹ 11,686 கோடியாக உயர்ந்ததால், அதே காலகட்டத்தில் வட்டிச் செலுத்தங்களும் ₹ 686 கோடியிலிருந்து ₹ 877 கோடியாக அதிகரித்தது. வட்டிச் செலுத்தங்களின் அதிகரிப்பு வருவாய் பற்றாக்குறைக்கு பங்களித்தது.

அரசு தனது மறுமொழியில் (மார்ச் 2023) கடனைத் திருப்பிச் செலுத்துவதை தணிக்கை தவிர்த்து விட்டதன் காரணமாக ஏற்கப்பெற்ற செலவினங்கள் அதிகமாகக் காட்டப்பட்டன என்று தெரிவித்தது. கடனைத் திருப்பிச் செலுத்துவது வருவாய் செலவினம் அல்லாததால் சேர்க்கப்படவில்லை, ஆதலால், அரசின் பதில் ஏற்கத்தக்கதல்ல.

### *2.4.2.3 ஊக்குதவித் தொகைகள்*

2017-18 முதல் 2021-22 வரையான காலகட்டத்தில் யூனியன் பிரதேச அரசால் வழங்கப்பட்ட ஊக்குதவித் தொகைகள் **அட்டவணை 2.19**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.19: 2017-22 காலகட்டத்தில் ஊக்குதவித் தொகைகள் மீதான செலவினம்**

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ஊக்குதவித் தொகைகள் (₹ கோடியில்) | 157 | 173 | 223 | 282 | 280 |
| வருவாய் வரவினங்களில் ஊக்குதவித் தொகைகளின் சதவீதம் | 2.62 | 2.70 | 3.29 | 4.79 | 3.56 |
| வருவாய் செலவினங்களில் ஊக்குதவித் தொகைகளின் சதவீதம் | 2.70 | 2.71 | 3.26 | 3.88 | 3.20 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

வருவாய் செலவினத்தில் **ஊக்குதவித் தொகைகளின்** சதவீதம் 2017-18ல் 2.70 சதவீதத்திலிருந்து (₹ 157 கோடி) 2021-22ல் 3.20 சதவீதமாக (₹ 280 கோடி) அதிகரித்தது. இது, "33-ஊக்குதவிகள்" என்ற பொருள் தலைப்பின் கீழ், முக்கியமாக வருவாய் மற்றும் உணவு (₹ 203 கோடி), வேளாண்மை மற்றும் உழவர் நலன் (₹ 27 கோடி) மற்றும் சமூக நலன் (₹ 16 கோடி) ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினங்களைக்

குறிக்கிறது. 2021-22ல் ஊக்குதவித் தொகைகளின் கீழ் செய்யப்பட்ட செலவினங்கள் வருவாய் பற்றாக்குறையான ₹ 889 கோடியில் 10.49 சதவீத அளவுக்கு பங்களித்தது.

2021-22 காலகட்டத்தில், யூனியன் பிரதேச அரசு மானிய எண் 17- கல்வி மற்றும் மானிய எண் 21-சமூக நலன் ஆகியவற்றின் கீழ் ₹ 23.41 கோடி மறைமுக ஊக்குதவித் தொகையை வழங்கியது. பொருள் தலைப்பு 33-ஊக்குதவித் தொகைகளின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்குதல், கைத்தொழில் செய்வோர்/ கட்டடப் பணியாளர்களுக்கு இலவசமாக உபகரணங்கள் வழங்குதல், உடல் ஊனமுற்ற அனைவருக்கும் இலவச அரிசி வழங்குதல், ஏழை மக்களுக்கு அரிசி மற்றும் துணிகள் வழங்குதல் மற்றும் 9ம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு மிதிவண்டி இலவசமாக வழங்குதல் போன்ற திட்டங்கள், பொருள் தலைப்பு 21-வழங்கீடு மற்றும் பொருள்கள் மற்றும் பொருள் தலைப்பு 50-இதர செலவுகள் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்டன. செலவினத்தின் விவரங்கள் **அட்டவணை 2.20**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.20: 2021-22 காலகட்டத்தில் பள்ளிக் கல்வி மற்றும் சமூக நலன் துறைகளின் கீழ் செய்யப்பட்ட செலவினம்**

**(₹ கோடியில்)**

| விவரங்கள் | தொகை |
|---|---|
| புத்தகங்கள், எழுதுபொருட்கள் போன்றவற்றின் இலவச வழங்கீடு | 3.10 |
| 9ம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் மிதிவண்டி இலவசமாக வழங்கல் | 0.59 |
| கைத்தொழில் செய்வோர்/கட்டடப் பணியாளர்களுக்கு இலவசமாக உபகரணங்கள் வழங்குதல் | 0..50 |
| ஏழை மக்களுக்கு அரிசி மற்றும் துணிகள் வழங்குதல் | 12.14 |
| உடல் ஊனமுற்ற அனைவருக்கும் இலவச அரிசி வழங்குதல் | 7.08 |
| **மொத்தம்** | **23.41** |

இத்தகைய செலவினங்கள் ஊக்குதவிகள் என்ற பொருள் தலைப்பின் கீழ் வரும் ஆண்டுகளில் பதிவு செய்யப்படும் என்று அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

### *2.4.2.4* உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர அமைப்புகளுக்கு யூனியன் பிரதேச அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர அமைப்புகளுக்கு முந்தைய ஆண்டுகளில் மானியங்கள் மற்றும் கடன்கள் வடிவில் வழங்கப்பட்ட நிதியுதவியும் அவற்றுடன் ஒப்பீடு செய்யப்பட்ட, நடப்பாண்டில் வழங்கப்பட்ட நிதியுதவியும் **அட்டவணை 2.21**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.21: உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி**

**(₹ கோடியில்)**

| நிதியுதவி அளிக்கப்பட்ட அமைப்புகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| **(அ) உள்ளாட்சி அமைப்புகள்** | | | | | |
| நகராட்சிகள் | 7.64 | 9.79 | 6.66 | 17.93 | 4.13 |
| பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் | 0.77 | 1.44 | 2.41 | 2.20 | 0.00 |
| **மொத்தம் (அ)** | **8.41** | **11.23** | **9.07** | **20.13** | **4.13** |
| **(ஆ) ஏனையவை** | | | | | |
| கல்வி நிறுவனங்கள் (அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவை) | 104.37 | 48.36 | 36.43 | 44.74 | 90.46 |
| மேம்பாட்டு முகமைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகள் | 381.23 | 319.68 | 229.72 | 310.10 | 160.19 |
| கூட்டுறவு அமைப்புகள் | 14.62 | 10.07 | 36.26 | 14.69 | 19.02 |
| மின் துறை* | | | | | 205.17 |
| பிற அமைப்புகள்** | 150.90 | 359.02 | 467.90 | 390.05 | 32.58 |
| **மொத்தம் (ஆ)** | **651.12** | **737.13** | **770.31** | **759.58** | **507.42** |
| **மொத்தம் (அ+ஆ)** | **659.53** | **748.36** | **779.38** | **779.71** | **511.55** |
| வருவாய் செலவினம் | 5,807 | 6,387 | 6,836 | 7,260 | 8,748 |
| வருவாய் செலவினத்தில் நிதியுதவியின் சதவீதம் | 11.36 | 11.72 | 11.40 | 10.74 | 5.85 |

* பல்வேறு அரசுத் துறைகளின் நிலுவையில் உள்ள மின் நுகர்வுக் கட்டணங்களைத் தீர்த்தல்

** நலவாழ்வு சங்கங்களும் அறநிலைய அமைப்புகளும்

(ஆதாரம்: புதுச்சேரி கணக்குகள் மற்றும் கருவூல இயக்குநரகத்தால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

நகராட்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி 2021-22ல் 79.48 சதவீதம் குறைந்தது. அதே சமயம், 2020-21 மற்றும் 2021-22ம் ஆண்டுகளில் ஒட்டுமொத்த நிதியுதவி ₹ 779.71 கோடியிலிருந்து ₹ 511.55 கோடியாக குறைந்தது.

இது ஒரு நேர்மறையான போக்கினைக் காட்டுகிறது என்றும் இந்த அமைப்புகள் தங்கள் சொந்த வளங்களைக் கொண்டு தற்சார்பு முயற்சிகளை மேற்கொள்கின்றன என்றும் அரசு தனது மறுமொழியில் தெரிவித்தது (மார்ச் 2023).

### 2.4.3 மூலதன செலவினம்

சாலைகள், கட்டடங்கள் போன்ற நிலையான உள்கட்டமைப்புச் சொத்துக்களை உருவாக்குவதற்கு செய்யப்படும் செலவினம் மூலதன செலவினம் ஆகும்.

யூனியன் பிரதேசத்தின் மூலதன செலவினம், கடந்த ஐந்தாண்டு காலத்தில், 2017-18ல் ₹ 394 கோடியிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு குறைந்து 2021-22ல் ₹ 163 கோடியாக இருந்தது. இது 2021-22 காலகட்டத்தில் மொத்தச் செலவினத்தில் 1.83 சதவீதமாக இருந்தது. எனினும், 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் யூனியன் பிரதேச அரசு எந்த ஆண்டிலும், சொத்துக்களை உருவாக்குவதற்கு, வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக செலவிடவில்லை. 2021-22ல் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ₹ 315 கோடிக்கெதிராக, ₹ 163 கோடி மட்டுமே (51.75 சதவீதம்) செலவிடப்பட்டது.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில், ஆண்டுவாரியான மூலதன செலவினங்களின் விவரங்கள் மற்றும் மொத்தச் செலவினத்தில் அவற்றின் சதவீதம் ஆகியவை **விளக்கப்படம் 2.12**ல் கொடுக்கப்பட்டுள்ளது.




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

மூலதன செலவினத்தின் போக்கு குறைந்து வருவதை **விளக்கப்படம் 2.12**லிருந்து காணலாம். ஐந்தாண்டு காலத்தில், மூலதன செலவினம் ₹ 231 கோடி அளவு செங்குத்தாகக் குறைந்தது என்பது போதுமான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் இருந்தபோதிலும், யூனியன் பிரதேசம் உள்கட்டமைப்பு மற்றும் மூலதனப் பணிகளுக்கு செலவிட முடியவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

2020-21ம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தப் படுவதற்கான செலவினங்கள் உள்ளடக்கப்பட்டதால், 2021-22ல் செலவினம் குறைந்ததாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023). கடந்த ஐந்தாண்டுகளிலும் மூலதன செலவினம் குறையும் போக்கை காட்டியதால், அரசின் பதில் ஏற்கத்தக்கதல்ல.

### *2.4.3.1 மூலதன செலவினத்தில் பெரும் மாற்றங்கள்*

2020-21ல் ₹ 239.56 கோடியாக இருந்த மூலதன செலவினத்தில் ₹ 76.78 கோடி நிகர குறைவு ஏற்பட்டு 2021-22ல் ₹ 162.78 கோடியாக

இருந்தது. 2020-21 மற்றும் 2021-22 காலகட்டங்களில், மூலதன செலவினத்தின் பல்வேறு கணக்குத் தலைப்புகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் **அட்டவணை 2.22**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.22: 2020-21ஐ ஒப்பிடுகையில் 2021-22ல் மூலதன செலவினம்**

**(₹ கோடியில்)**

| | பெருந்தலைப்புகள் மற்றும் விவரங்கள் | 2020-21 | 2021-22 | அதிகரிப்பு (+)/ குறைவு (–) |
|---|---|---|---|---|
| 4055 | காவல் துறை மீதான மூலதன செலவு | 5.53 | 8.30 | 2.77 |
| 4059 | பொதுப் பணிகள் மீதான மூலதன செலவு | 30.29 | 6.29 | (-) 24.00 |
| 4070 | இதர நிர்வாக சேவைகள் மீதான மூலதன செலவு | 2.93 | 1.07 | (-) 1.86 |
| 4202 | கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாட்டு பணிகள் மீதான மூலதன செலவு | 54.16 | 17.78 | (-) 36.38 |
| 4210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் மீதான மூலதன செலவு | 7.18 | 14.34 | 7.16 |
| 4711 | வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டப்பணிகள் மீதான மூலதன செலவு | 5.34 | 3.53 | (-) 1.81 |
| 4851 | கிராம மற்றும் சிறுதொழில்கள் மீதான மூலதன செலவு | 0.46 | 1.77 | 1.31 |
| 5051 | துறைமுகங்கள் மற்றும் கலங்கரை விளக்கங்கள் மீதான மூலதன செலவு | 3.50 | 1.66 | (-) 1.84 |
| 5054 | சாலைகள் மற்றும் பாலங்கள் மீதான மூலதன செலவு | 82.46 | 45.01 | (-) 37.45 |
| 5452 | சுற்றுலா மீதான மூலதன செலவு | 2.98 | 14.87 | 11.89 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2020-21ம் ஆண்டில் நிலம் கையகப்படுத்துதலுக்கான இழப்பீடு செலுத்தப்பட்டதால், பொதுப்பணிகள் மற்றும் சாலைகள் மற்றும் பாலங்களின் மீதான மூலதன செலவு குறைந்துள்ளது என்று **அட்டவணை 2.22** குறிப்பிடுகிறது. இதேபோல், மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்தின் கீழ் மோட்டார் வாகனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்ததன் காரணமாக அதிகரிப்பு ஏற்பட்டது.

### *2.4.3.2* பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடுகளின் தரம்

மார்ச் 2022 நிலவரப்படி, அரசு ₹ 1,045.54 கோடி (12 பொதுத்துறை நிறுவனங்களில் ₹ 714.58 கோடி[3] மற்றும் 359 கூட்டுறவு அமைப்புகளில் ₹ 330.96 கோடி) முதலீடு செய்திருந்தது. ஆண்டு வாரியாக செய்யப்பட்ட முதலீடுகள், மீள்வரவுகள் மற்றும் மீள்வரவுகளின் சராசரி விகிதம் ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.23**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3 ₹ 712.39 கோடி (புதுச்சேரி அரசின் முதலீடு), ₹ 1.68 கோடி (இந்திய அரசின் முதலீடு) மற்றும் ₹ 0.51 கோடி (இதர முதலீடுகள்) ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அட்டவணை 2.23: முதலீட்டிலிருந்து வந்த மீள்வரவு**

| முதலீடு/மீள்வரவு/கடனுக்கான செலவுத்தொகை | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு இறுதியில் உள்ளவாறு முதலீடுகள் (₹ கோடியில்) | 1,027.79 | 1,033.70 | 1,043.09 | 1,043.54 | 1,045.54 |
| மீள்வரவு (₹ கோடியில்) | 0.09 | 0.09 | 0.06 | 0.03 | 1.95 |
| மீள்வரவு (சதவீதம்) | 0.01 | 0.01 | 0.01 | இல்லை | 0.19 |
| அரசு வாங்கிய கடன்களுக்கான சராசரி வட்டிவீதம் (சதவீதம்) | 8.02 | 7.88 | 7.42 | 7.44 | 7.47 |
| வட்டி வீதத்திற்கும் மீள்வரவுக்கும் உள்ள வேறுபாடு (சதவீதம்) | 8.01 | 7.87 | 7.41 | 7.44 | 7.28 |
| அரசுக் கடன்களின் மீதான வட்டி மற்றும் முதலீடுகளிலிருந்து வந்த மீள்வரவுகளுக்குமான வேறுபாடு (₹ கோடியில்) | 82.34 | 81.37 | 77.34 | 77.61 | 76.15 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18 முதல் 2019-20 வரையிலான காலகட்டத்தில், மீள்வரவுகளின் சராசரி விகிதம் 0.01 சதவீதமாகவும் 2020-21ல் அவை சொற்பமாகவும் மற்றும் 2021-22ல் 0.19 சதவீதமாகவும் இருக்கையில், 2017-22 காலகட்டத்தில் யூனியன் பிரதேச அரசால் செலுத்தப்பட்ட சராசரி வட்டி விகிதம் 7.42 சதவீதம் மற்றும் 8.02 சதவீதம் என்ற ஈரெல்லைக்குள் இருந்தது.

2021-22 காலகட்டத்தில், மொத்தமுள்ள 12 செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில் ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 38.48 கோடி இலாபத்தையும் ஏழு பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 49.87 கோடி நட்டத்தையும் அடைந்தன. இது 2021-22ல் ₹ 11.39 கோடி ஒட்டுமொத்த நட்டத்தில் முடிந்தது. 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, மொத்தமுள்ள 12 பொதுத்துறை நிறுவனங்களில், ஏழு நிறுவனங்களின் நிகர மதிப்பு[4] முற்றிலுமாக அழிக்கப்பட்டது. மீதமுள்ள ஐந்து பொதுத்துறை நிறுவனங்களின் நிகர மதிப்பு நேர்மறையாக இருந்தது. நட்டத்தை அடைந்த ஏழு அரசு நிறுவனங்களில் யூனியன் பிரதேச அரசு ₹ 461.60 கோடி ஒட்டுமொத்த முதலீட்டை செய்திருந்தது. நிகர மதிப்பு முற்றிலுமாக அழிக்கப்பட்ட ஏழு அரசு நிறுவனங்களில் ₹ 482.13 கோடி முதலீட்டை யூனியன் பிரதேச அரசு செய்திருந்தது. 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, யூனியன் பிரதேச அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடு, அவற்றின் நிகர இலாபம்/நட்டம் மற்றும் நிகர மதிப்பு ஆகியவை **அட்டவணை 2.24**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

---

4 நிகர மதிப்பு என்பது செலுத்தப்பட்ட மொத்த பங்கு மூலதன மற்றும் இலவச சேமநிதிகள் மற்றும் உபரி இவற்றின் கூட்டுத் தொகையுடன் ஒட்டுமொத்த நட்டம் மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வருவாய் செலவினத்தை கழித்த தொகையாகும். இலவச சேமநிதிகள் என்பது இலாபம் மற்றும் பங்குத்தொகை மிகைக் கணக்கிலிருந்து உருவாக்கப்பட்டது. ஆனால், சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வது மற்றும் தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து கழிக்கப்பட்ட தொகைகளைக் கொண்ட சேமநிதிகளைத் தவிர்த்தது.

**அட்டவணை 2.24: பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடு அவற்றின் நிகர இலாபம்/நட்டம் மற்றும் நிகர மதிப்பு ஆகியவற்றின் நிலை**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | நிறுவனம் | பொதுத் துறை நிறுவனத்தின் நிலை | வரி கழித்தபின் நிகர இலாபம்/நட்டம் | | நிகர மதிப்பு | 2021-22ல் பங்கு மூலதனத்தில் செய்யப்பட்ட முதலீடு | 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு ஒட்டு மொத்த முதலீடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு | தொகை | | | |
| 1 | புதுச்சேரி வேளாண் பணி மற்றும் தொழில் கழகம் (PASIC) | **நட்டம் ஈட்டுபவை** | 2012-13 | (-) 1.28 | (-) 23.26 | இல்லை | 15.00 |
| 2 | புதுச்சேரி வேளாண் விளை பொருட்கள், உணவு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம் (PAPSCO) | -do- | 2013-14 | (-) 7.23 | (-) 17.19 | இல்லை | 9.88 |
| 3 | புதுச்சேரி ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம் (PADCO) | -do- | 2016-17 | (-) 2.09 | 0.75 | இல்லை | 13.18 |
| 4 | புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுக் கழகம் (PCDWDAP) | -do- | 2018-19 | (-) 1.40 | (-) 11.08 | இல்லை | 3.82 |
| 5 | புதுச்சேரி நெசவாலை கழகம் (PTC) | -do- | 2015-16 | (-) 27.31 | (-) 206.35 | இல்லை | 367.35 |
| 6 | புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் (PRTC) | -do- | 2019-20 | (-) 3.62 | (-) 34.08 | இல்லை | 34.78 |
| 7 | புதுச்சேரி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (PTDC) | | 2020-21 | (-) 6.94 | (-) 16.81 | இல்லை | 17.59 |
| | **உபமொத்தம்** | | | **(-) 49.87** | **(-) 308.02** | **இல்லை** | **461.60** |
| 8 | சுதேசி பாரதி நெசவாலை வரையம் (SBTML) | **இலாபம் ஈட்டுபவை** | 2014-15 | 22.19 | (-) 21.19 | இல்லை | 33.71 |
| 9 | புதுச்சேரி பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம் (PBCMDC) | -do- | 2014-15 | 1.23 | 6.80 | இல்லை | 4.81 |
| 10 | புதுச்சேரி தொழில் வளர்ச்சி மேம்பாடு மற்றும் முதலீட்டுக் கழகம் (PIPDIC) | -do- | 2017-18 | 0.00 | 124.41 | இல்லை | 104.04 |
| 11 | புதுச்சேரி வடிசாலை வரையம் (PDL) | -do- | 2016-17 | 0.96 | 57.28 | இல்லை | 8.45 |
| 12 | புதுச்சேரி மின்னாற்றல் கழகம் (PPCL) | -do- | 2020-21 | 14.10 | 149.94 | இல்லை | 99.78 |
| | **உபமொத்தம்** | | | **38.48** | **317.24** | **இல்லை** | **250.79** |
| | 359 கூட்டுறவு அமைப்புகளில் முதலீடு | | | | | | **330.96** |
| | மத்திய அரசு முதலீடு | | | | | | **1.68** |
| | இதர முதலீடுகள்[5] | | | | | | **0.51** |

(ஆதாரம்: அந்தந்த நிறுவனங்களால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

5 புதுச்சேரி வேளாண் விளை பொருட்கள், உணவு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம் (₹ 0.05 கோடி), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை (₹ 0.15 கோடி), தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகம், (₹ 0.26 கோடி) மற்றும் கண்ணனூர் நூற்பு மற்றும் நெசவாலை, மாஹே (₹ 0.05 கோடி) ஆகிய நான்கு பொதுத்துறை நிறுவனங்களில் இதர முதலீடுகள்.

நட்டத்தை அடைந்த ஏழு பொதுத்துறை நிறுவனங்களில், ஆறு பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்மறையான நிகர மதிப்பைக் கொண்டுள்ளன. புதுச்சேரி ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம் (PADCO) மட்டுமே நேர்மறையான நிகர மதிப்பைக் கொண்டுள்ளது. அதே போல், இலாபம் ஈட்டும் ஐந்து பொதுத்துறை நிறுவனங்களில் ஒரு பொதுத்துறை நிறுவனம் மட்டும், அதாவது, சுதேசி பாரதி நெசவாலை வரையம் மட்டும் எதிர்மறையான நிகர மதிப்பைக் கொண்டுள்ளது. 2021-22உடன் முடிந்த கடந்த ஐந்தாண்டுகளில் இவற்றில் எந்தவொரு பொதுத்துறை நிறுவனத்திலும் எந்த முதலீடும் செய்யப்படவில்லை.

2021-22 ஆண்டிற்கான சராசரி கடனுக்கான செலவினமான 7.47 சதவீதத்தைக் கருத்தில் கொண்டால், இந்நிறுவனங்கள் குறைந்தபட்சம் ₹ 53.21 கோடி வருமானத்தை ஈட்டியிருக்க வேண்டும். ஆனால், அதற்கெதிராக, இந்நிறுவனங்கள் அவற்றின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி ₹ 11.39 கோடி மொத்த நட்டத்தை பதிவு செய்திருந்தன.

நட்டமடையும் பொதுத்துறை நிறுவனங்களை நெறிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

### *2.4.3.3 முடிவுறாத் திட்டங்களில் முடக்கப்பட்ட மூலதனம்*

யூனியன் பிரதேசத்தில் முடிவுறாமல் இருக்கும் திட்டங்களில் முடக்கப்பட்ட மூலதனங்கள் **அட்டவணைகள் 2.25** மற்றும் **2.26**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.25: 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு முடிவுறாத் திட்டங்களின் காலப்பிரிவு விவரம்**

**(₹ கோடியில்)**

| துவங்கப் பட்ட ஆண்டு | முடிவுறாத் திட்டங்களின் எண்ணிக்கை | மதிப்பிடப் பட்ட தொகை | செலவினம் (31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு) |
|---|---|---|---|
| 2007 | 1 | 6.26 | 6.27 |
| 2009 | 1 | 8.00 | 0.00 |
| 2011 | 1 | 0.15 | 0.10 |
| 2014 | 2 | 11.69 | 4.34 |
| 2015 | 1 | 0.21 | 0.09 |
| 2016 | 7 | 67.56 | 51.76 |
| 2017 | 1 | 0.15 | 0.16 |
| 2018 | 3 | 22.78 | 10.20 |
| 2019 | 6 | 41.54 | 13.82 |
| 2020 | 11 | 45.65 | 27.57 |
| 2021 | 15 | 22.90 | 10.28 |
| 2022 | 11 | 3.33 | 0.35 |
| **மொத்தம்** | **60** | **230.22** | **124.94** |

(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

**அட்டவணை 2.26: 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு முடிவுறாத் திட்டங்களின் துறை வாரியான விவரம்**

**(₹ கோடியில்)**

| துறை | முடிவுறாத் திட்டங் களின் எண்ணிக்கை | மதிப்பிடப் பட்ட தொகை | செல–வினம் |
|---|---|---|---|
| பொதுப் பணிகள்/ பாசனம் | 56 | 217.63 | 118.47 |
| மின்சாரம் | 4 | 12.59 | 6.47 |
| **மொத்தம்** | **60** | **230.22** | **124.94** |

மதிப்பிடப்பட்ட தொகையான ₹ 230.22 கோடிக்கெதிராக, ₹ 124.94 கோடி செலவிடப்பட்டதை **அட்டவணைகள் 2.25** மற்றும் **2.26**லிருந்து காணலாம். எனினும், மார்ச் 2022 அன்றுள்ளவாறு, திட்டங்கள் முடிவுறா நிலையிலிருந்தன. முப்பத்திநான்கு திட்டங்களில் ₹ 114.31 கோடி செலவிடப்பட்டிருந்தும், மூன்று முதல் 14 ஆண்டுகள் வரை இத்திட்டங்கள் முடிவுறா நிலையிலிருந்தன. இத்திட்டங்களில் நீண்டகாலமாக பெருமளவில் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தும், அவை எதிர்நோக்கப்பட்ட பலன்களை அளிக்கவில்லை. மேலும், யூனியன் பிரதேசத்தின் மூலதன செலவினம் 2017-18ல் ₹ 394 கோடியிலிருந்து 2021-22ல் ₹ 163 கோடியாக ஐந்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு, அந்தந்த ஆண்டுகளில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பெறப்பட்ட கடன்கள், கடன்களுக்கான சேவைகள் மற்றும் வட்டிப் பொறுப்புகள் போன்ற கூடுதல் சுமைக்கு வழிவகுத்தது.

திட்டங்களை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசு தனது மறுமொழியில் தெரிவித்தது (மார்ச் 2023).

### 2.4.4 செலவின முன்னுரிமை

சமூக மற்றும் பொருளாதாரப் பிரிவு உள்கட்டமைப்புகளின் செலவினப் பொறுப்புகள் பெரும்பாலும் மாநில/யூனியன் பிரதேசங்களின் கடமையாகும். மனிதவள மேம்பாட்டு அளவை அதிகரிக்க அரசு, கல்வி, சுகாதாரம் போன்ற முக்கிய சமூக சேவைகளில் அதன் செலவுகளை அதிகரிக்க வேண்டும். குறிப்பிட்ட செலவினத் தலைப்பிற்கு பொது வகை மாநிலங்கள்/தேசிய சராசரியை விட குறைவான ஒதுக்கீடு செய்யப்பட்டால், குறிப்பிட்ட செலவினங்களுக்குக் குறைவான முன்னுரிமை (மொத்தச் செலவினத்தில் செலவின வகையின் விகிதம்) அளிக்கப்படுகிறது என்று பொருள். வளர்ச்சிச் செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை மேம்படுத்துவதைத் தவிர, மொத்தச் செலவினங்களில் மூலதன செலவினங்களின் விகிதம் மற்றும் கல்வி மற்றும் சுகாதாரப் பிரிவுகளில் செலவிடப்படும் வருவாய் செலவினங்களின் விகிதம் செலவினங்களின் பயன்பாட்டின் தரத்தைப் பிரதிபலிக்கிறது. மொத்தச் செலவினங்களில் இக்கூறுகளின் விகிதம் அதிகமாக இருந்தால், செலவினத்தின் தரம் சிறப்பாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

நடப்பாண்டில் வளர்ச்சி செலவினம், சமூகப் பிரிவுச் செலவினம் மற்றும் மூலதன செலவினங்கள் குறித்து யூனியன் பிரதேச அரசின் நிதி முன்னுரிமை (மொத்தச் செலவினத்தில் செலவின வகைகளின் சதவீதம்) மீதான பகுப்பாய்வு மற்றும் 2017-18 மற்றும் 2021-22 ஆண்டுகளில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பல்வேறு வகை செலவினங்களுக்கு வழங்கப்பட்ட நிதி முன்னுரிமையின் ஒப்பீடும் **அட்டவணை 2.27**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.27: 2017-18 மற்றும் 2021-22 ஆண்டுகளில் யூனியன் பிரதேச அரசின் நிதி முன்னுரிமை**

| யூனியன் பிரதேசத்தின் நிதி முன்னுரிமை | | மொத்தச் செலவினம்/ GSDP | வளர்ச்சி செலவினம்/ மொத்தச் செலவினம் | சமூக பிரிவுச் செலவினம்/ மொத்தச் செலவினம் | மூலதன செலவினம்/ மொத்தச் செலவினம் | பொருளாதார பிரிவின் மீதான செலவினம்/ மொத்தச் செலவினம் | கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு மீதான செலவினம்/ மொத்தச் செலவினம் | சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் மீதான செலவினம்/ மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதுச்சேரி (சதவீதத்தில்) | 2017-18 | 19.29 | 68.33 | 37.79 | 6.36 | 30.54 | 12.29 | 8.14 |
| | 2021-22 | 23.77 | 68.54 | 31.64 | 1.83 | 36.90 | 10.83 | 8.19 |
| பொது வகை மாநிலங்கள் (சதவீதத்தில்) | 2017-18 | 16.13 | 67.82 | 36.65 | 15.56 | 31.17 | 15.17 | 5.09 |
| | 2021-22 | 15.84 | 66.74 | 38.31 | 14.41 | 28.84 | 14.66 | 6.20 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18 மற்றும் 2021-22 ஆகிய இரண்டாண்டுகளிலும் பொது வகை மாநிலங்களை விட புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மொத்தச் செலவினத்தில் வளர்ச்சிச் செலவினத்தின் விகிதம் அதிகமாக இருந்ததை **அட்டவணை 2.27**லிருந்து காணலாம். 2017-18ல் 19.29ஆக இருந்த யூனியன் பிரதேச அரசின் மொத்தச் செலவினத்திற்கும் GSDPக்கும் இடையேயான சதவீதம், 2021-22ல் 23.77ஆக அதிகரித்திருந்தது என்பது 2021-22ல் யூனியன் பிரதேச அரசு, தனது GSDPல் அதிக விகிதத்தை மொத்தச் செலவினத்திற்கு செலவழித்ததை சுட்டிக்காட்டுகிறது. இரண்டாண்டுகளிலும் பொது வகை மாநிலங்களை விட புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மூலதன செலவினம் குறைவாக இருந்தது. மேலும், 2017-18ல் மொத்தச் செலவினத்தில் 6.35 சதவீதமாக இருந்த மூலதன செலவினம், 2021-22ல் 1.83 சதவீதமாக குறைந்திருந்தது. 2017-18ல் மொத்தச் செலவினத்தில் 8.14 சதவீதமாக இருந்த சுகாதார மற்றும் குடும்ப நலன் மீதான செலவினம், சிறிதளவு அதிகரித்து 2021-22ல் 8.19 சதவீதமாக இருந்தது. இரண்டாண்டுகளிலும் இது பொது வகை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக இருந்தது. 2021-22ம் ஆண்டில் கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு மீதான செலவினம் ₹ 49.95 கோடியாக அதிகரித்திருந்த போதிலும், மொத்தச் செலவினங்களின் சதவீதமாகப் பார்க்கையில், இது 2017-18ல் 12.29 சதவீதத்திலிருந்து 2021-22ல் 10.83 சதவீதமாகக் குறைந்திருந்தது மற்றும் இது பொது வகை மாநிலங்களை விட குறைவானதாகவும் இருந்தது.

## 2.5 பொதுக் கணக்கு

தொகுநிதியின் கீழ் வராத சிறுசேமிப்பு, வருங்கால வைப்புநிதி, சேமநிதிகள், வைப்புத்தொகைகள், அனாமத்து, செலுத்துகைகள் போன்ற சில

பரிவர்த்தனைகளின் வரவுகள் மற்றும் செலவுகள், யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 47(அ)வின் கீழ் அமைக்கப்பட்ட பொதுக்கணக்கின்கீழ் வைக்கப்படுகிறது. மேலும், இவை யூனியன் பிரதேச சட்டப்பேரவையின் வாக்களிப்பிற்கு உட்பட்டவையல்ல. பொதுக்கணக்கு வரவினங்களுக்கு அரசு ஒரு வங்கியாளர் போல் செயல்படுகிறது. நடப்பாண்டில் வழங்கீடுகளுக்குப் பிறகுள்ள கையிருப்பு, அரசிற்கு அதன் பல்வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள கிடைக்கக்கூடிய நிதியாகும்.

### 2.5.1 நிகரப் பொதுக் கணக்குக் கையிருப்புகள்

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, யூனியன் பிரதேசத்தின் பொதுக்கணக்கு வரவினங்களின் கூறுகள் வாரியான நிகரக் கையிருப்பு **அட்டவணை 2.28**ல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.28: பொதுக்கணக்கில் கூறுகள் வாரியான நிகரக் கையிருப்புகள்**

**(₹ கோடியில்)**

| பிரிவு | உட்பிரிவு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| I. சிறுசேமிப்பு, வருங்கால வைப்புநிதி முதலியன | சிறுசேமிப்பு, வருங்கால வைப்புநிதி முதலியன | (-) 648.68 | (-) 674.16 | (-) 697.81 | (-) 419.13 | (-) 479.38 |
| J. சேமநிதிகள் | (அ) வட்டியுடன் கூடிய சேமநிதிகள் | -- | -- | -- | -- | -- |
| | (ஆ) வட்டி இல்லாத சேமநிதிகள் | 84.93 | 106.17 | 134.77 | 144.83 | 159.83 |
| K. வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் | (அ) வட்டியுடன் கூடிய வைப்புத் தொகைகள் | (-) 116.07 | (-) 135.49 | (-) 165.49 | (-) 161.94 | (-) 187.02 |
| | (ஆ) வட்டி இல்லாத வைப்புத்தொகைகள் | (-) 381.82 | (-) 335.89 | (-) 341.43 | (-) 388.16 | (-) 400.81 |
| | (இ) முன்பணங்கள் | 0.68 | 0.63 | 0.63 | 0.58 | 0.55 |
| L. அனாமத்து மற்றும் பல்வகை | (ஆ) அனாமத்து | (-) 263.54 | 276.94 | 307.74 | 285.94 | 250.86 |
| | (இ) பிற கணக்குகள் | 1,675.93 | 1,174.24 | 1,074.12 | 927.41 | 1,618.65 |
| | (ஈ) வெளிநாட்டு அரசுகளுடன் கணக்குகள் | -- | -- | -- | -- | -- |
| | (உ) பல்வகை | -- | -- | -- | -- | -- |
| M. செலுத்துகைகள் | (அ) காசாணைகள் மற்றும் பிற செலுத்துகைகள் | (-) 160.41 | (-) 154.97 | (-) 154.98 | (-) 154.98 | (-) 154.98 |
| | (ஆ) அரசுகளுக்கு இடையிலான சீரமைவுக் கணக்கு | -- | -- | -- | -- | -- |
| **மொத்தம்** | | **191.02** | **257.47** | **157.55** | **234.54** | **807.70** |

குறிப்பு : (+) என்பது பற்று நிலுவையையும் (−) என்பது வரவையும் குறிக்கும்

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

பொதுக் கணக்குக் கையிருப்புத் தொகுப்பில் ஆண்டுக்குரிய மாற்றங்கள் **விளக்கப்படம் 2.13**ல் கொடுக்கப்பட்டுள்ளது.




**விளக்கப்படம் 2.13: பொதுக் கணக்குக் கையிருப்புத் தொகுப்பில் ஆண்டுக்குரிய மாற்றங்கள்**

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2020-21ல் ₹ 824 கோடியாக இருந்த பொதுக் கணக்குக் கடன் பொறுப்புகள் 2021-22ல் ₹ 907 கோடியாக அதிகரித்தது. சிறுசேமிப்பு மற்றும் வருங்கால வைப்புநிதி (₹ 60 கோடி) மற்றும் வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (₹ 38 கோடி) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமானது.

## 2.5.2 சேமநிதிகள்

யூனியன் பிரதேச அரசின் பொதுக்கணக்கின் கீழ் குறிப்பிட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக சேமநிதிகள் உருவாக்கப் படுகின்றன. இந்நிதிகள் யூனியன் பிரதேசத்தின் தொகுநிதியிலிருந்து பெறப்படும் பங்களிப்புகள் அல்லது மானியங்கள் மூலம் எதிரேற்கப்பட்டன.

### *2.5.2.1 ஒருங்கிணைந்த கடன்கரைப்பு நிதி*

இந்திய ரிசர்வ் வங்கியின் கோரிக்கையின் பேரில், யூனியன் பிரதேச அரசு 2009-10 நிதியாண்டு முதல் ஒருங்கிணைந்த கடன்கரைப்பு நிதியை அமைத்தது. அரசின் நிலுவையிலுள்ள கடன்பொறுப்புகளை (உள்நாட்டுக் கடன் மற்றும் பொதுக் கணக்குப் பொறுப்புகளை உள்ளடக்கியது) மீட்பதற்கான ஒரு கடன்தீர்ப்பு நிதியாக இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும். அரசு, முந்தைய ஆண்டின் இறுதியில் நிலுவையிலுள்ள

கடன்பொறுப்புகளில் குறைந்தது 0.5 சதவீதமாவது இந்நிதிக்கு பங்களிக்கலாம். 2021-22 காலகட்டத்தில், யூனியன் பிரதேச அரசின் ஆரம்ப நிலுவையிலுள்ள கடன்பொறுப்புகள் ₹ 8,843.96 கோடி (பொதுக்கடன் – ₹ 8,019.56 கோடி மற்றும் பொதுக் கணக்கு - ₹ 824.40 கோடி) ஆகும். இந்த மொத்த நிலுவையிலுள்ள கடன்பொறுப்புகளின் 0.5 சதவீதமான ₹ 44.22 கோடியை யூனியன் பிரதேச அரசு நிதிக்கு வழங்கியிருக்க வேண்டும். எனினும், இதற்கு யூனியன் பிரதேச அரசு ₹ 59.52 கோடி வழங்கியிருந்தது. யூனியன் பிரதேச அரசு, 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, ₹ 466.61 கோடியை முதலீடு செய்திருந்தது.

## 2.6 கடன் மேலாண்மை

கடன் மேலாண்மை என்பது அரசின் கடனை நிர்வகிப்பதற்கான ஒரு உபாயத்தை ஏற்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான அளவு நிதி திரட்டுதல் மற்றும் இடர்பாடு மற்றும் செலவின நோக்கங்களை எய்துதல் மற்றும் அரசு அமல்படுத்திய அல்லது பிற வரவு–செலவுத் திட்ட அறிவிப்புகள் மூலம் நிர்ணயித்திருக்கக்கூடிய வேறு உயரிய கடன் மேலாண்மை இலக்குகளை எய்துவதாகும்.

2017-18 முதல் 2021-22 வரையிலான நிலுவையிலுள்ள கடன்களின் நிலை மற்றும் கடன்/GSDP விகிதம் ஆகியவை **விளக்கப்படம் 2.14**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.14: நிலுவையிலுள்ள கடன்களின் நிலை மற்றும் கடன்/GSDP**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

### 2.6.1 கடன் விவரக்குறிப்பு - கூறுகள்

வெளிநாட்டுக் கடன்/உள்நாட்டுக் கடன் (சந்தைக் கடன்கள், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பிணையங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து

பெறப்பட்ட கடன்கள் போன்றவை) மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களை யூனியன் பிரதேசத்தின் மொத்தக் கடன்கள் உள்ளடக்கியிருந்தன. கடன் போக்குகளின் கூறுவாரியான விவரங்கள் **அட்டவணை 2.29** மற்றும் **விளக்கப்படங்கள் 2.15, 2.16** மற்றும் **2.17**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.29: கடன் போக்குகளின் கூறுவாரியான விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| விவரங்கள் | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| நிலுவையிலுள்ள ஒட்டுமொத்தக் கடன் | | 8,799 | 9,137 | 9,449 | 10,886 | 12,593 |
| பொதுக் கடன் | | **7,737** | **8,098** | **8,379** | **10,062** | **11,686** |
| | வெளிநாட்டுக் கடன் | இல்லை | 50 | 50 | 50 | 50 |
| | உள்நாட்டுக் கடன் | 6,016 | 6,479 | 6,911 | 7,970 | 8,650 |
| | இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | 1,721 | 1,569 | 1,418 | 2,042 | 2,986 |
| **பொதுக் கணக்கு கடன்பொறுப்புகள்** | | **1,062** | **1,039** | **1,070** | **824** | **907** |
| நிலுவையிலுள்ள கடன்களின் வளர்ச்சிவீதம் (சதவீதம்) | | 6.02 | 3.84 | 3.41 | 15.21 | 15.68 |
| **மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP)** | | **32,129** | **36,386** | **36,724** | **35,685** | **37,485** |
| கடன்/GSDP (சதவீதம்) | | 27.39 | 25.11 | 25.73 | 28.43* | 28.69* |
| மொத்தக் கடன் வரவினங்கள் | | 1,061 | 1,007 | 1,043 | 2,529 | 2,516 |
| மொத்தக் கடன் செலுத்தங்கள் | | 570 | 639 | 762 | 838 | 891 |
| நிலுவையிலுள்ள மொத்தக் கடன் | | 491 | 368 | 281 | 1,691 | 1,625 |
| கடன் செலுத்தங்கள்/கடன் வரவினங்கள் (சதவீதம்) | | 53.72 | 63.46 | 73.06 | 33.14 | 35.41 |

* GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசால் 2020-21 மற்றும் 2021-22ம் ஆண்டுகளில் முறையே விடுவிக்கப்பட்ட ₹ 742 கோடி மற்றும் ₹ 1,096 கோடியை தவிர்த்து கணக்கிடப்பட்டது.

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப்படம் 2.15: 2021-22ன் இறுதியில் நிலுவையிலுள்ள கடன்களின் விவரங்கள்**

**மொத்தக் கடன் – ₹ 12,593 கோடி**




**விளக்கப்படம் 2.16: கடன் போக்குகளின் கூறுகள் வாரியான விவரங்கள்**




| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சந்தைக் கடன் | 554 | 519 | 432 | 1,067 | 681 |
| இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | -64 | -151 | -151 | 624 | 944 |
| சிறுசேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை | 46 | 25 | 24 | -278 | 60 |
| சேமநிதிகள் | 10 | 0.16 | 0 | 15 | 60 |
| வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | -16 | -26 | 36 | 43 | 38 |
| அனாமத்து மற்றும் பல்வகை | 405 | -551 | 61 | 177 | -157 |
| செலுத்துகைகள் | 3 | -5 | 0 | 0 | 0 |
| கையிருப்பில் அதிகரிப்பு/குறைவு | -741 | 491 | -21 | -33 | -574 |
| மொத்த நிதிப் பற்றாக்குறை | 197 | 302 | 381 | 1,615 | 1,052 |




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18ல் ₹ 8,799 கோடியாக இருந்த நிலுவையிலுள்ள கடன்கள் (பொதுக் கணக்குக் கடன்பொறுப்புகளையும் உள்ளடக்கியவை) 2021-22ல் ₹ 12,593 கோடியாக அதிகரித்திருந்தது. அதே காலகட்டத்தில், அதன் வளர்ச்சி வீதமும் 6.02 சதவீதத்திலிருந்து 15.68 சதவீதமாக அதிகரித்திருப்பதை காண முடிந்தது. இந்த ஐந்தாண்டு காலத்தில், பொதுக் கடன் வரவினங்களிலிருந்து திரும்பச் செலுத்தப்பட்ட பொதுக் கடனின் சதவீதம் 53.72லிருந்து 2019-20 வரை 73.06ஆக அதிகரித்து, 2021-22ல் 35.41 சதவீதமாக செங்குத்தாகக் குறைந்தது. GST இழப்பீட்டுப் பற்றாக்குறையான ₹ 1,096.29 கோடியை இந்திய அரசிடமிருந்து பொதுக்கடனாகப் பெற்றதன் காரணமாக இக்குறைவு ஏற்பட்டது. 2021-22 காலகட்டத்தில், மொத்தக் கடன் வரவினமான ₹ 2,516 கோடியிலிருந்து கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்கு ₹ 891 கோடி பயன்படுத்தப்பட்டு, மீதமுள்ள ₹ 1,625 கோடி மட்டும் செலவினத்திற்கு கிடைத்தது.

### 2.6.2 நிதிப் பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அதற்கான நிதியளிப்பு

நிதிப் பற்றாக்குறையின் பல்வேறு கூறுகள் மற்றும் அதற்கான நிதியளிப்பு முறை **அட்டவணை 2.30** மற்றும் **விளக்கப்படம் 2.18**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.30: நிதிப் பற்றாக்குறையின் பல்வேறு கூறுகள் மற்றும் அதற்கான நிதியளிப்பு முறை**

**(₹ கோடியில்)**

| விவரங்கள் | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| **நிதிப் பற்றாக்குறையின் கூறுகள்** | | **(-) 197** | **(-) 302** | **(-) 381** | **(-) 1,615** | **(-) 1,052** |
| 1 | வருவாய் பற்றாக்குறை | 196 | 13 | (-) 54 | (-) 1,370 | (-) 889 |
| 2 | நிகர மூலதன செலவினம் | (-) 394 | (-) 313 | (-) 327 | (-) 240 | (-)163 |
| 3 | நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 1 | (-) 2 | 0 | (-) 5 | 0 |

| விவரங்கள் | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| **நிதிப் பற்றாக்குறையின் நிதியளிப்பு முறை** | | | | | | |
| 1 | சந்தைக் கடன்கள் | 554 | 519 | 432 | 1,067 | 681 |
| 2 | இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | (-) 64 | (-) 151 | (-) 151 | 624 | 944 |
| 3 | தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பிணையங்கள் | -- | -- | -- | -- | -- |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | -- | -- | -- | -- | -- |
| 5 | சிறுசேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை | 46 | 25 | 24 | (-) 278 | 60 |
| 6 | வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் | (-) 16 | (-) 26 | 36 | 43 | 38 |
| 7 | அனாமத்தும் பல்வகையும் | 405 | (-) 551 | 61 | 177 | (-) 157 |
| 8 | செலுத்துகைகள் | 3 | (-) 5 | 0 | 0 | 0 |
| 9 | சேமநிதிகள் | 10 | 0.16 | 0 | 15 | 60 |
| **10** | **ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **938** | **(-) 189** | **402** | **1,648** | **1,626** |
| 11 | பணக் கையிருப்பில் மிகை/பற்றாக்குறை | 741 | (-) 491 | 21 | 33 | 574 |
| 12 | **மொத்த நிதிப்பற்றாக்குறை** | **(-) 197** | **(-) 302** | **(-) 381** | **(-) 1,615** | **(-) 1,052** |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப்படம் 2.18: நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளித்தல்**




(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18ல் ₹ 197 கோடியாக இருந்த நிதிப் பற்றாக்குறை, 2021-22ல் ₹ 1,052 கோடியாக அதிகரித்திருந்தது. வருவாய் பற்றாக்குறையின் அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாகும்.

### 2.6.3 கடன் விவரக்குறிப்பு : முதிர்வு மற்றும் செலுத்தங்கள்

கடன் முதிர்வு மற்றும் திரும்பச் செலுத்தங்களின் விவரம், கடன் திரும்பச் செலுத்துகைகள் மற்றும் கடன் சேவைகளில் அரசின் பொறுப்பைக் குறிக்கிறது.

யூனியன் பிரதேச அரசின் கடன் திரும்பச் செலுத்தங்களின் கடன் முதிர்வு விவரக் குறிப்பு மற்றும் சந்தைக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலஅட்டவணை ஆகியவை **அட்டவணை 2.31** மற்றும் **விளக்கப்படங்கள் 2.19** மற்றும் **2.20**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.31: கடன் திரும்பச் செலுத்தங்களின் கடன் முதிர்வு விவரக் குறிப்புகள்**

| திரும்பச் செலுத்துகைகளின் காலம் (ஆண்டுகள்) | தொகை (₹ கோடியில்) | சதவீதம் (பொதுக்கடன் அடிப்படையில்) |
|---|---|---|
| 0 - 1 | 877.49 | 8.91 |
| 1 - 3 | 2,032.61 | 20.64 |
| 3 - 5 | 1,902.42 | 19.32 |
| 5 - 7 | 1,704.47 | 17.31 |
| 7 மற்றும் அதற்கும் மேல் | 3,330.94 | 33.82 |
| **மொத்தம்** | **9,847.93**[6] | **100** |

(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

**விளக்கப்படம் 2.19: கடன் முதிர்வு விவரக் குறிப்பு**




(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

[6] யூனியன் பிரதேச அரசுக்கு திருப்பிச் செலுத்தும் கடமை இல்லாததால், GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக, இந்திய அரசு விடுவித்த கடனான ₹ 1,838 கோடி உள்ளடக்கப்படவில்லை.

**விளக்கப்படம் 2.20: சந்தைக் கடன்களை திருப்பிச் செலுத்தும் கால அட்டவணை**




(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகத்தால் அளிக்கப்பட்ட தரவுகள்)

மொத்த பொதுக்கடனில் 66.18 சதவீதம் அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது என்பதனை சுட்டிக்காட்டும் யூனியன் பிரதேச அரசின் பொதுக்கடனிற்கான முதிர்வு விவரக் குறிப்பு (Maturity profile), அதன் திருப்பிச் செலுத்தும் சுமை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதைக் குறிக்கிறது.

## 2.7 கடன்தாங்கும் தன்மையின் பகுப்பாய்வு

நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மாநிலத்தின் கடன்களை திரும்பச் செலுத்தும் திறனே கடன் தாங்கும் தன்மை என்று வரையறுக்கப்படுகிறது. கடன் அளவு அதிகரிப்பதற்கேற்ப அதைத் தாங்குவதற்கு முதன்மை மிகை அதிக அளவில் தேவைப்படுவதால் பொதுக்கடன் எந்த அளவு அதிகரிக்கிறதோ கிட்டதட்ட அதே அளவு அதன் நிதிக் கொள்கை மற்றும் பொதுக்கடன் ஆகியவை தாங்கும் தன்மையற்றதாகிறது. அதிக அளவு கடனைத் திருப்பிச் செலுத்த அதிக அளவு நிதி மிகையும் தேவைப்படும். மேலும், அதிக அளவு கடனானது பொருளாதாரத்திற்கு வட்டி வீத பாதிப்பை ஏற்படுத்தும். அதிக கடன் நிலை என்பது பொதுவாக அதிகக் கடன் வாங்குதலோடு தொடர்புடையது மட்டுமல்லாமல் அதிக ஆபத்தான பரிமாற்ற நெருக்கடிகளிலும் பொருளாதார வளர்ச்சிக்குத் தீமையாகவும் முடியும்.

நிதிப் பரப்பு என்பது கடன் நிலைத்தன்மை அல்லது சந்தை அணுகலைக் குறைத்து மதிப்பிடாமல் நடப்பிலுள்ள திட்டங்களுக்குத் தொடர்டபுடைய

விருப்புரிமைக் கொள்கைகளை குறித்து ஒரு அரசு மேற்கொள்ள வேண்டிய வழிவகையைக் குறிக்கிறது. யூனியன் பிரதேச கடன் அளவைத் தவிர, யூனியன் பிரதேசத்தின் கடன் நிலைத்தன்மையை நிர்ணயிக்கும் பல்வேறு குறியீடுகளை பகுப்பாய்வு செய்வது முக்கியமானதாகும். கடன்சாரா வரவுகளின் போதுமான நிலை, கடனாகப் பெறப்பட்ட நிதியின் நிகரக் கையிருப்பு[7] மற்றும் வட்டிச் செலுத்தங்களின் சுமை (வட்டிச் செலுத்தங்கள் மற்றும் வருவாய் வரவினங்களின் விகிதக் கணக்கில்) ஆகியவற்றின் அடிப்படையில் யூனியன் பிரதேச அரசின் கடன்தாங்கும் தன்மையை இப்பகுதி மதிப்பீடு செய்கிறது.

2017-18ம் ஆண்டு தொடங்கி ஐந்தாண்டுகளுக்கு யூனியன் பிரதேச அரசின் கடன்தாங்கும் தன்மையை **அட்டவணை 2.32** குறிப்பிடுகிறது.

**அட்டவணை 2.32: கடன் தாங்கும் தன்மையின் குறியீடுகளின் போக்குகள்**

**(₹ கோடியில்)**

| கடன் தாங்கும் தன்மையின் குறியீடுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| நிலுவையிலுள்ள பொதுக் கடன்* | 7,737 | 8,098 | 8,379 | 10,062 | 11,686 |
| நிலுவையிலுள்ள பொதுக் கடன்களின் வளர்ச்சி விகிதம் | 6.77 | 4.67 | 3.47 | 20.09 | 16.14 |
| GSDP | 32,129 | 36,386 | 36,724 | 35,685 | 37,485 |
| GSDPயின் வளர்ச்சி விகிதம் | 8.64 | 13.25 | 0.93 | (-) 2.83 | 5.04 |
| கடன்/GSDP | 24.08 | 22.26 | 22.82 | 26.12$ | 26.27$ |
| நிலுவையிலுள்ள பொதுக் கடன்கள் மீதான சராசரி வட்டி விகிதம் (சதவீதத்தில்) | 8.25 | 8.55 | 8.22 | 8.21 | 8.07 |
| வருவாய் வரவினத்தில் வட்டி செலுத்தங்களின் சதவீதம் | 11.43 | 11.05 | 10.18 | 12.85 | 11.16 |
| கடன் வரவினத்தில் கடன் செலுத்தங்களின் சதவீதம் | 53.72 | 63.46 | 73.06 | 33.14 | 35.41 |
| யூனியன் பிரதேச அரசுக்கு கிடைக்கப்பெற்ற நிகர கடன்# | (-) 127.47 | (-) 265.12 | (-) 396.35 | 1,006.57 | 835 |

[7] கடன் மீட்பிற்கும் (அசல் + வட்டிச் செலுத்தங்கள்) மொத்த கடன் வரவினங்களுக்கும் இடையேயான விகிதமானது எந்த அளவிற்கு கடன் வரவுகள், கடன் மீட்பிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை குறிப்பதோடு கடனாகப் பெறப்பட்டதில் மீதமிருக்கும் நிதியின் நிகரக் கையிருப்பையும் காட்டுகிறது.

| கடன் தாங்கும் தன்மையின் குறியீடுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| கடன் வரவினத்தில் சதவீதமாக நிகர கடன் | (-) 12.01 | (-) 26.33 | (-) 38.00 | 39.80 | 33.19 |
| கடன் நிலைப்பேறுடைமை (கடன் அளவின் பரப்பு@ + முதல்நிலை பற்றாக்குறை) | 517 | 341 | 541 | (-) 1,889 | (-) 476 |

$ GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசால் 2020-21 மற்றும் 2021-22ம் ஆண்டுகளில் முறையே விடுவிக்கப்பட்ட ₹ 742 கோடி மற்றும் ₹ 1,096.29 கோடியை தவிர்த்து கணக்கிடப்பட்டது

* நிலுவையிலுள்ள பொதுக் கடன் என்பது 6002-வெளிநாட்டுக் கடன், 6003-உள்நாட்டுக் கடன் மற்றும் 6004-மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகிய கணக்குத் தலைப்புகளின் கீழ் நிலுவையிலுள்ள தொகை.

\# பொதுக் கடன் திரும்பச் செலுத்துகை மற்றும் பொதுக்கடன் மீதான வட்டி செலுத்தங்கள் ஆகியவற்றிலிருந்து மீதமான பொதுக் கடன் வரவினங்கள் யூனியன் பிரதேச அரசுக்கு கிடைக்கப்பெற்ற நிகரக் கடனாக கணக்கிடப்படுகிறது.

@ கடன் கையிருப்பு (முந்தைய ஆண்டுக்கான நிதிப் பொறுப்புகள்) * வட்டி பரப்பு (GSDPயின் வளர்ச்சி வீதம் கழிக்க சராசரி வட்டி வீதம்)/100

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2021-22ம் ஆண்டில் GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்கு பதிலாக இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ₹ 1,096 கோடி கடனைக் கழித்த பிறகு யூனியன் பிரதேசத்தின் சரியான பொதுக்கடன் ₹ 10,590 கோடியாகவும், கடன்–GSDP விகிதம் 26.27 சதவீதமாகவும் இருந்தது. 2017-18 முதல் 2021-22 காலகட்டத்தில் கடன்தாங்கும் தன்மையின் குறியீடுகளின் போக்குகள் **விளக்கப்படம் 2.21**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.21: கடன் தாங்கும் தன்மையின் குறியீடுகள்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

- 2017–18ல் 6.77 சதவீதமாக இருந்த நிலுவையிலுள்ள கடன்களின் வளர்ச்சி வீதம் 2021–22ல் 16.14 சதவீதமாக அதிகரித்தது. வரவு–செலவுத் திட்ட அளவான ₹ 10,530 கோடிக்கெதிராக நிலுவையில் உள்ள கடன் ₹ 11,686 கோடியாக இருந்தது.
- 2017–20 காலகட்டத்தில் யூனியன் பிரதேசத்தின் கடன்/GSDP விகிதம் 24.08லிருந்து 22.82 சதவீதத்திற்கு படிப்படியாகக் குறைந்து, 2021–22ல் அதிகரித்து 26.27 சதவீதத்தில் நின்றது. அதிகரித்து வரும் கடன்/GSDP விகிதம் உறுதியற்ற மற்றும் நிலையற்றதன்மைக்கு வழிவகுக்கும் என கருதப்படுகிறது.
- வருவாய் வரவினங்கள் மீதான வட்டிச் செலுத்தங்களின் சுமை, 2020–21ல் 12.85 சதவீதத்திலிருந்து 2021–22ல் 11.16 சதவீதமாக குறைந்தது. 2020–21ல் ₹ 5,890 கோடியாக இருந்த வருவாய் வரவினங்கள் 2021–22ல் ₹ 7,859 கோடியாக அதிகரித்ததால், வட்டிச் செலுத்தங்களின் சுமையில் இந்த குறைவு ஏற்பட்டது.
- 2019–20ல் 73.06 சதவீதமாக இருந்த கடன் வரவினங்களில் கடன் திரும்பச் செலுத்தங்கள், 2020–21ல் 33.14 சதவீதமாக குறைந்து, 2021–22ல் 35.41 சதவீதமாக இருந்தது. கடன் வரவினங்களில் கடன் திரும்பச் செலுத்தங்கள் 2020–22ல் திடீரென குறைந்ததற்கு GST இழப்பீட்டு பற்றாக்குறைக்காக இந்திய அரசால் கடனாக 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளில் முறையே விடுவிக்கப்பட்ட ₹ 742 கோடி மற்றும் ₹ 1,096 கோடியே முக்கிய காரணமாயிற்று.
- யூனியன் பிரதேசத்திற்கு கிடைக்கப்பெற்ற நிகரக் கடன்கள் 2021–22ல் ₹ 835 கோடியாக குறைந்தது. 2021–22 காலகட்டத்தில், பொதுக்கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டி ₹ 790 கோடியாக இருந்தது. இது, கடனாகப் பெறப்பட்ட ₹ 2,516 கோடியில் 31.40 சதவீதமாக இருந்தது. நடப்பாண்டில் திரும்பச் செலுத்தப்பட்ட கடன் ₹ 891 கோடியாகும். அதிக அளவு வட்டிச் செலுத்தங்களால் வருவாய் செலவினங்களில் அதிகரிப்பின் காரணமாக கடன் சேவைகளின் திரும்பச் செலுத்தங்கள் யூனியன் பிரதேசத்தின் நிதிநிலையைப் பாதித்தது.
- நிதிப் பற்றாக்குறை காரணமாக வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டன என்பது மூலதன செலவினத்தின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 315 கோடியில் உள்ளபடியேயான மூலதன செலவினம் (₹ 163 கோடி) 48.25 சதவீதமாக குறைந்திருந்ததில் இருந்து தெரியவருகிறது.

### 2.7.1 கடனாகப் பெறப்பட்ட நிதிகளின் பயன்பாடு

மூலதன உருவாக்கத்திற்கும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் ஏற்றவாறு, கடனாகப் பெறப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படவேண்டும். தற்போதைய நுகர்வு மற்றும் நிலுவையிலுள்ள கடன்களின் வட்டிச் செலுத்தங்கள் ஆகியவற்றை எதிரேற்க கடனாகப் பெறப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படுவது நிலையற்றதாகும். கடனாகப் பெறப்பட்ட நிதிகளின் பயன்பாட்டின் போக்குகள் **அட்டவணை 2.33** மற்றும் **விளக்கப்படம் 2.22**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.33: கடனாகப் பெறப்பட்ட நிதிகளின் பயன்பாடு**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | நிலை எண் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கடன்கள் | 1 | 1,061 | 1,007 | 1,043 | 2,529 | 2,516 |
| முந்தைய கடன்களின் செலுத்தங்கள் (அசல்) | 2 | 570 | 639 | 762 | 838 | 891 |
| நிகர மூலதன செலவினம் | 3 | 394 | 313 | 327 | 240 | 163 |
| நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 4 | 0 | 3 | 0 | 5 | 0 |
| கிடைக்கப்பெற்ற நிகரக் கடன்களிலிருந்து எதிரேற்கப்பட்ட வருவாய் செலவினங்களின் பங்கு | 5=1-2-3-4 | 97 | 52 | (-) 46 | 1,446 | 1,462 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18ல் ₹ 1,061 கோடியாக இருந்த மொத்தக் கடன்கள் 137.13 சதவீதம் அதிகரித்து 2021-22ல் ₹ 2,516 கோடியாக இருந்தது. எனினும், கடன் செலுத்தங்கள் அதே காலகட்டத்தில் 56.32 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதை மேற்கூறிய **அட்டவணை 2.33**லிருந்து தெரியவருகிறது. 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலகட்டத்தில், பொதுக்கடன் வரவினங்களில் 45.37 சதவீதம் முந்தைய ஆண்டுகளுக்கான பொதுக்கடன் திரும்பச் செலுத்தங்களுக்காக பயன்படுத்தப்பட்டது.




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

மொத்தக் கடனான ₹ 2,516 கோடியில் ₹ 891 கோடி (35.41 சதவீதம்) கடன் திரும்பச் செலுத்தங்களுக்கும் மற்றும் மீதத்தொகை முக்கியமாக வருவாய் செலவினங்களுக்கும் பயன்படுத்தப்பட்டதிலிருந்து மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதில் குறைந்த அளவு செலவினத்திற்கு வழிவகுக்கிறது என்பதை **அட்டவணை 2.33**லிருந்து காணலாம்.

வருவாய் பற்றாக்குறையை சமாளிக்க ஒப்பந்திக்கப்பட்ட கடன்களைத் தவிர, கடனாகப் பெறப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டது என்று அரசு தனது மறுமொழியில் தெரிவித்தது (மார்ச் 2023). கடனாகப் பெறப்பட்ட நிதியானது முக்கியமாக மூலதன உருவாக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

### 2.7.2 உத்திரவாதங்களின் நிலை

உத்திரவாதங்கள் கொடுக்கப்பட்ட நபர் தவறும் பட்சத்தில், உத்திரவாதங்கள் யூனியன் பிரதேச தொகுநிதியின் தொடர் பொறுப்பாகும். 6 செப்டம்பர் 2001 அன்று யூனியன் பிரதேசங்களுக்கான சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பு, யூனியன் பிரதேசங்களை நிர்வகிக்கும் நோக்கத்திற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 292வது சட்டப்பிரிவின் கீழ், இந்திய அரசே உத்திரவாதங்களை வழங்கி வந்தது. அவ்வாறு உத்திரவாதங்கள் வழங்கப்படும் நிகழ்வுகளில், முதலில் இந்திய அரசின் தொகுநிதியிலிருந்து தொகை சாட்டப்பட்டு, பின்னர் யூனியன் பிரதேச அரசிடமிருந்து திரும்பப் பெறப்படும். 6 செப்டம்பர் 2001ல் யூனியன் பிரதேச சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதையடுத்தும், 10 மே 2006 அன்று இந்திய அரசு வெளியிட்ட அறிவிக்கையையடுத்தும், உத்திரவாதங்களை அளிப்பதற்கான அதிகாரம் புதுச்சேரி யூனியன் பிரதேச அரசுக்கு அளிக்கப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு, யூனியன் பிரதேச அரசு அளித்த அதிகபட்ச உத்திரவாதத் தொகை மற்றும் யூனியன் பிரதேசம் சார்பில் இந்திய அரசு அளித்த உத்திரவாதம் மற்றும் நிலுவையிலுள்ள உத்திரவாதங்கள் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.34**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.34: யூனியன் பிரதேச அரசு மற்றும் யூனியன் பிரதேசம் சார்பில் இந்திய அரசு அளித்த உத்திரவாதங்கள்**

| உத்திரவாதங்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| உத்திரவாதம் அளிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை (₹ கோடியில்) | 63.18 | 63.18 | 63.18 | 53.68 | 53.68 |
| நிலுவையிலுள்ள உத்திரவாதத் தொகைகள் (₹ கோடியில்) | 49.16 | 48.24 | 42.17 | 39.98 | 30.98 |
| உத்திரவாதம் அளிக்கப்பட்ட அதிகபட்சத் தொகைக்கும் மொத்த வருவாய் வரவினங்களுக்குமான சதவீதம் | 1.05 | 0.99 | 0.93 | 0.91 | 0.68 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

வருவாய் வரவினங்களின் சதவீதக் கணக்கில் உத்திரவாதம் அளிக்கப்பட்ட அதிகபட்சத் தொகை, 2020-21ல் 0.91லிருந்து 2021-22ல் 0.68 ஆக குறைந்தது. இந்த ஐந்தாண்டுகளிலும் எவ்வித உத்திரவாதமும் செயல்படுத்தப்படவில்லை.

### 2.7.3 ரொக்க இருப்பின் மேலாண்மை

இந்திய ரிசர்வ் வங்கியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, மாநில/யூனியன் பிரதேச அரசுகள் வங்கியில் தினசரி குறைந்தபட்ச பண இருப்பைப் பராமரிக்கவேண்டும். எந்தவொரு நாளிலும் ரொக்க இருப்பு ஒப்புக் கொள்ளப்பட்ட குறைந்தபட்சத்தை விடக் குறைவாக இருந்தால், அவை அவ்வப்போது சாதாரண வழிவகை முன்பணங்கள் (WMA)/சிறப்பு வழிவகை முன்பணங்கள் (SWMA)/மிகைப்பற்று (OD) ஆகியவற்றின் மூலம் சீர்செய்யப்படுகிறது. சாதாரண WMAக்கான வரம்பு மாநில/யூனியன் பிரதேச அரசுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகிறது.

மாநில/யூனியன் பிரதேச அரசுகள் உபரி ரொக்க இருப்பை குறுகிய மற்றும் நீண்ட கால அரசு பிணையங்கள் மற்றும் கருவூலப் பட்டிகளில் முதலீடு செய்கின்றன. அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் வரவினங்களாக கணக்குத் தலைப்பு "0049-வட்டி வரவினங்களில்" வரவு வைக்கப்படுகின்றன. அதிக ரொக்க இருப்புகள் இருந்தும், மாநில/யூனியன் பிரதேச அரசுகள் சந்தைக்கடன்களை நாடுவது விரும்பத்தக்கதல்ல. ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு இருப்புகள் உபயோகப்படுத்தப்படாமல்,

ரொக்க இருப்புகள் மேலும் அதிகரிப்பதற்கே இது வழிவகுக்கிறது. 2021-22ன் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள ரொக்க இருப்புகள் மற்றும் அவற்றின் முதலீடுகளின் விவரங்கள் **அட்டவணை 2.35**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.35: ரொக்க இருப்பு மற்றும் அதன் முதலீடுகள்**

**(₹ கோடியில்)**

| | 1 ஏப்ரல் 2021 அன்று ஆரம்ப கையிருப்பு | 31 மார்ச் 2022 அன்று இறுதிக் கையிருப்பு |
|---|---|---|
| **(அ) பொது ரொக்க இருப்பு** | | |
| (i) கருவூலத்தில் உள்ள ரொக்க இருப்பு | இல்லை | இல்லை |
| (ii) இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்புத்தொகை | 0.16 | 0.15 |
| (iii) பிற வங்கிகளில் வைப்புத் தொகை | இல்லை | இல்லை |
| (iv) உள்ளூர் செலுத்துகைகள் | இல்லை | இல்லை |
| **மொத்தம்** | **0.16** | **0.15** |
| (v) ரொக்க இருப்பு முதலீட்டு கணக்கில் உள்ள முதலீடு | 1,279.73 | 1,779.36 |
| **மொத்தம் (அ)** | **1,279.89** | **1,779.51** |
| **(ஆ) இதர ரொக்க இருப்புகள் மற்றும் முதலீடுகள்** | | |
| (vi) துறைகளிலுள்ள ரொக்க இருப்பு | 0.44 | 0.31 |
| (vii) நிலையான முன்பணம் | 2.97 | 3.10 |
| (viii) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் முதலீடு | 392.09 | 466.61 |
| **மொத்தம் (ஆ)** | **395.50** | **470.02** |
| **பெரு மொத்தம் (அ) + (ஆ)** | **1,675.39** | **2,249.53** |
| **திரண்ட வட்டி** | **38.16** | **65.79** |

(ஆதாரம்: 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

2020-21ல் ₹ 1,675.39 கோடியாக இருந்த ரொக்க இருப்பு 2021-22ல் ₹ 2,249.53 கோடியாக அதிகரித்தது. நடப்பாண்டில், ரொக்க இருப்பின் முதலீடுகள்[8] ₹ 1,779.36 கோடியாகும். 2017-22 காலகட்டத்தில், ரொக்க இருப்பு முதலீடுகள் மற்றும் ஈட்டப்பட்ட வட்டி ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.36**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[8] ஒவ்வொரு மாநில/யூனியன் பிரதேச அரசும் இந்திய ரிசர்வ் வங்கியில் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய முதலீடே ரொக்க இருப்பு முதலீடாகும். இது, தொகுநிதி, எதிர்பாராச் செலவு நிதி மற்றும் பொதுக்கணக்கு இவற்றின் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமான இருப்பு இரண்டும் சேர்ந்ததாகும்.

**அட்டவணை 2.36: ரொக்க இருப்பின் முதலீட்டுக் கணக்கு (பெருந் தலைப்பு-8673)**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | ஆரம்ப கையிருப்பு | இறுதிக் கையிருப்பு | அதிகரிப்பு (+) / குறைவு (-) | ஈட்டப்பட்ட வட்டி |
|---|---|---|---|---|
| 2017-18 | 1,082.10 | 1,792.64 | 710.54 | 47.90 |
| 2018-19 | 1,792.64 | 1,280.56 | (-) 512.08 | 68.49 |
| 2019-20 | 1,280.56 | 1,272.48 | (-) 8.08 | 67.90 |
| 2020-21 | 1,272.48 | 1,279.73 | 7.25 | 38.16 |
| 2021-22 | 1,279.73 | 1,779.36 | 499.63 | 65.79 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

2017-18ல் ₹ 1,792.64 கோடியாக இருந்த ரொக்க இருப்புகளின் முதலீடுகள் 0.74 சதவீதம் குறைந்து 2021-22ல் ₹ 1,779.36 கோடியாக இருந்ததை **அட்டவணை 2.36**லிருந்து காணலாம். இதே காலகட்டத்தில், 2017-18ல் ₹ 1,061 கோடியாக இருந்த பொதுக் கடன் வரவினங்கள் 137.13 சதவீதம் அதிகரித்து 2021-22ல் ₹ 2,516 கோடியாக உயர்ந்தது என்பதை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும். 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலகட்டத்தில் இருந்த ரொக்க இருப்பு மற்றும் சந்தைக் கடன்கள் **விளக்கப்படம் 2.23**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.23: ரொக்க இருப்பும் சந்தைக் கடன்களும்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

கருவூலப் பட்டிகளில் செய்யப்பட்ட ரொக்க இருப்பு முதலீடுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசின் கடன்கள் ஆகியவற்றின் மாதவாரியான விவரங்கள் **அட்டவணை 2.37**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.37: ரொக்க இருப்பு முதலீட்டு கணக்கு மற்றும் கடன்கள்**

**(₹ கோடியில்)**

| மாதம் மற்றும் ஆண்டு | ரொக்க இருப்பு முதலீட்டுக் கணக்கில் முதலீடு (கருவூலப் பட்டிகள்) | | | கடன்கள் |
|---|---|---|---|---|
| | 14 நாட்கள் | 90 நாட்களுக்குக் குறைவாக | மொத்தம் | |
| ஏப்ரல் 2021 | 710.37 | 801.43 | 1,511.80 | 1.09 |
| மே 2021 | 501.22 | 801.43 | 1,302.65 | -- |
| ஜூன் 2021 | 307.35 | 801.42 | 1,108.77 | -- |
| ஜூலை 2021 | 619.79 | 1,101.42 | 1,721.21 | 517.00 |
| ஆகஸ்ட் 2021 | 549.23 | 1,101.42 | 1,650.65 | -- |
| செப்டம்பர் 2021 | 553.69 | 1,101.42 | 1,655.11 | 126.68 |
| அக்டோபர் 2021 | 1,048.32 | 967.76 | 2,016.08 | 579.92 |
| நவம்பர் 2021 | 925.26 | 1,270.76 | 2,196.02 | 129.24 |
| டிசம்பர் 2021 | 706.62 | 1,270.76 | 1,977.38 | 256.37 |
| ஜனவரி 2022 | 1,375.38 | 1,249.18 | 2,624.56 | 400.39 |
| பிப்ரவரி 2022 | 949.27 | 1,352.25 | 2,301.52 | 198.79 |
| மார்ச் 2022 | 928.82 | 856.18 | 1,785.00 | 306.55 |
| **மொத்தம்** | | | | **2,516.03** |

(ஆதாரம்: புதுச்சேரி கணக்குகள் மற்றும் கருவூல இயக்குநரகத்தால் அளிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் 2021-22ம் ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

2021-22 காலகட்டத்தில் சராசரி மாத ரொக்க இருப்பு முதலீடுகள் ₹ 1,820.90 கோடியாக இருந்தும், 2021-22 காலகட்டத்தில் யூனியன் பிரதேச அரசு ₹ 2,516.03 கோடி[9] கடன்களை நாடியது என்பதை **அட்டவணை 2.37**ல் இருந்து காணலாம். அரசுக் கடன்களின் மீதான சராசரி வட்டி விகிதம் 7.94 சதவீதமாக இருக்கையில், ரொக்க இருப்பின் முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட சராசரி வட்டி 4.30 சதவீதமாக இருந்தது. இவ்வாறு, அதிக ரொக்க இருப்பு இருக்கையில் சந்தைக் கடன்களை நாடுவது நிதி விவேகத்தின் கொள்கைகளுக்கு எதிரானதாகும்.

ரொக்க இருப்பு மற்றும் சந்தை நிலவரத்தைப்பொறுத்து கடன் வாங்குவதற்கு எதிராக, பொதுக் கணக்கு வரவினங்களை பயன்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என அரசு தனது மறுமொழியில் தெரிவித்தது (மார்ச் 2023).

[9] GST இழப்பீட்டுப் பற்றாக்குறைக்காக கடனாக இந்திய அரசால் விடுவிக்கப்பட்ட தொகையும் உள்ளடக்கப்பட்டது.

## 2.8 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

### யூனியன் பிரதேசத்தின் சொந்த வளஆதாரங்கள்

முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2021–22ல் யூனியன் பிரதேச அரசு அதன் வருவாய் வரவினங்களில் ₹ 1,969 கோடி (33.43 சதவீதம்) அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இருப்பினும், வரவு–செலவுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கெதிராக, யூனியன் பிரதேசத்தின் சொந்த வரி வருவாய் 21.72 சதவீதம் (₹ 898 கோடி) குறைந்துள்ளது.

யூனியன் பிரதேசத்தின் வரி அல்லாத வருவாய் முந்தைய ஆண்டை விட 2021–22ல் ₹ 724 கோடி அதிகரித்துள்ளது. 2021–22ல் GSDPக்கெதிரான யூனியன் பிரதேசத்தின் வருவாய் வரவினங்களின் விகிதம் 20.97 சதவீதமாக இருந்தது. நடப்பு ஆண்டில் சொந்த வரி மற்றும் வரி அல்லாத வருவாயில் கணிசமான அதிகரிப்பு இருந்தபோதிலும், யூனியன் பிரதேசம் ₹ 889 கோடி வருவாய் பற்றாக்குறையை சந்தித்துள்ளது.

மார்ச் 2022 நிலவரப்படி, வருவாய் வசூலிப்பில் ₹ 1,067.90 கோடி பெருமளவு நிலுவையில் இருந்தது, அதில் ₹ 674.92 கோடி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

*பரிந்துரை: யூனியன் பிரதேச அரசு, குறைவாக திரட்டப்பட்ட வரி/வரி அல்லாத வருவாயை, காலமுறையில் அவ்வப்போது கண்காணித்து, வரி ஏய்ப்பைக் கண்டறிவதற்கான நெறிமுறைகளை வலுப்படுத்தும் வகையில், ஒரு குறிப்பிடத்தக்க உந்துதல் மூலம் வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் மற்றும் இந்திய அரசு மானியங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க வேண்டும்.*

**(பத்திகள் 2.3.2.1, 2.3.2.2 மற்றும் 2.3.4)**

### வருவாய் செலவினம்

ஐந்தாண்டு காலத்தில் வருவாய் செலவின வளர்ச்சி விகிதம் 2017–18ல் 6.39 சதவீதத்தில் இருந்து 2021–22ல் 20.50 சதவீதமாக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில், அது முந்தைய ஆண்டை விட, ₹ 1,488 கோடி அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் மொத்த செலவினங்களில் வருவாய் செலவினம் 98.17 சதவீதமாக இருந்தது. ₹ 2,516 கோடி மொத்தக் கடன்களில், ₹ 1,462 கோடி வருவாய் செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

### மூலதன செலவினம்

2017–18 ஆண்டில் செய்யப்பட்ட மூலதன செலவினமான ₹ 394 கோடிக்கு எதிராக, 2021–22ல் செய்யப்பட்ட செலவினம் ₹ 163 கோடியாக இருந்தது, இது மொத்த செலவினத்தில் 1.83 சதவிகிதம் மட்டுமே என்பது யூனியன் பிரதேசம் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கவில்லை

என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், மார்ச் 2022 அன்றுள்ளவாறு, முடிவுறாத் திட்டங்களின் மீது ₹ 124.94 கோடி செலவிடப்பட்டதுடன், அவை உத்தேசிக்கப்பட்ட பலனை அளிக்கவில்லை.

***பரிந்துரை:*** *யூனியன் பிரதேச அரசு, உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து, முடிவுறாத் திட்டங்களை விரைவாக முடிப்பதற்கான வழிகாட்டுநெறிமுறைகளை உருவாக்குவதுடன் சரியான நடவடிக்கை எடுக்கும் நோக்கில் நேரம் மற்றும் செலவு அதிகரிப்பதற்கான காரணங்களை கண்காணிக்க வேண்டும். மேலும், முடிவடையும் தருவாயில் உள்ள பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.*

**(பத்திகள் 2.4.2, 2.4.3 மற்றும் 2.7.1)**

## பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடுகள்

மார்ச் 2022 நிலவரப்படி, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் செய்யப்பட்ட ₹ 1,045.54 கோடி முதலீட்டின் மீதான மீள்வரவுகள் சொற்பமாக அதாவது 0.19 சதவீதமாக (₹ 1.95 கோடி) இருந்தது.

***பரிந்துரை:*** *பெரும் நஷ்டத்தைச் சந்திக்கும் அரசு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை யூனியன் பிரதேச அரசு மதிப்பாய்வு செய்து, அவை எந்த சமூக நோக்கத்தையும் நிறைவேற்றவில்லை எனில் அவற்றின் பங்கு விலக்கல்/புத்துயிர்ப்பு/ மூடுதலுக்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.*

**(பத்தி 2.4.3.2)**

## ரொக்க இருப்பின் நிலை

ஆண்டின் இறுதியில் யூனியன் பிரதேசத்தின் ரொக்க இருப்பு (குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் முதலீடு மற்றும் ரிசர்வ் வங்கியில் வைப்புத்தொகை உட்பட) முந்தைய ஆண்டை விட 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

***பரிந்துரை:*** *செயலற்ற ரொக்க இருப்பை பராமரிப்பது விவேகமான ரொக்க இருப்பு மேலாண்மை ஆகாது, எனவே அரசு அதன் தேவையின் அடிப்படையில் மட்டுமே கடன் பெற வேண்டும்.*

**(பத்தி 2.7.3)**

# அத்தியாயம் III

## வரவு-செலவுத் திட்ட

## மேலாண்மை

# அத்தியாயம் III: வரவு-செலவுத் திட்ட மேலாண்மை

புதுச்சேரி யூனியன் பிரதேச நிதியொதுக்கக் கணக்குகளின் அடிப்படையில் இவ்வத்தியாயம் அமைந்துள்ளது. வரவு-செலவுத் திட்ட செயல்முறையின் ஒழுங்குமுறை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறன் மற்றும் துணைநிலை மானியங்கள் மற்றும் இணக்கமான நிதி மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு முன்னுரிமைகள் பற்றிய மதிப்பாய்வுகளை இது கொண்டுள்ளது. இது, கொள்கை மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் நிர்வாக அளவில் நிதி மடைமாற்றம் செய்யப்படாமல் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்கிறது.

## 3.1 வரவு–செலவுத் திட்ட நடைமுறை

வரவு-செலவுத் திட்டத்தின் ஆண்டு நடைமுறை என்பது பொது நிதி ஆதாரங்களை திறம்பட பயன்படுத்துவதை ஒரு வரைபடம் மூலம் விவரிப்பதான ஒரு வழியாகும். வரவு-செலவுத் திட்டத்தின் சொற்தொகுதிகளின் விளக்கம் **இணைப்பு 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டிற்கான துறைகளின் மதிப்பீடுகளை வடிவமைப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்கக்கூடிய வரவு-செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் வெளியீட்டின் மூலம் சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் வரவு-செலவுத் திட்டச் செயல்முறை துவங்குகிறது. யூனியன் பிரதேசத்தில் வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பு செயல்முறை கீழுள்ள செயல்வழிப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

**வரவு–செலவுத் திட்ட தயாரிப்பு செயல்முறை**




CSS: மத்திய நிதியுதவித் திட்டங்கள்; CS: மத்தியத் திட்டங்கள்; EAP: வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்கள்

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் 23, 27 மற்றும் 28(2) பிரிவுகளால், முறையே நிதிச் சட்ட வரைவு, ஆண்டு நிதிநிலை அறிக்கை (வரவு-செலவுத் திட்டம்) மற்றும் மானியக் கோரிக்கைகள் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

யூனியன் பிரதேசத்தின் அந்த ஆண்டுக்கான உத்தேச வரவினங்கள் மற்றும் செலவினங்கள் மீதான ஒரு அறிக்கையை ஆண்டு நிதிநிலை அறிக்கையாக சட்டப்பேரவையில் சமர்ப்பிப்பதற்கு யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 27 கோருகிறது. தொகுநிதியிலிருந்து சாட்டப்பட்ட செலவினங்கள் மற்றும் பிற செலவினங்கள், ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டும். இதில் பிற செலவினங்களை வருவாய் கணக்கின் மீதான செலவினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 29ன் விதிகளுக்கிணக்கமாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டவற்றைத் தவிர யூனியன் பிரதேசத்தின் தொகுநிதியிலிருந்து பணம் எடுக்க இயலாது. நிதியாண்டின் போது வழங்கப்பட்ட துணைநிலை மானியம் அல்லது கூடுதல் மானியம் அல்லது ஒதுக்கீடு ஆகியவை யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 30ன்படி வழங்கப்படுகின்றன.

துணைநிலை மானியத்தைத் தவிர, ஒரு மானியத்திற்குள் மறுஒதுக்கீடு செய்வதற்கு மறுநிதியொதுக்கத்தைப் பயன்படுத்தலாம். தகுதியான அதிகாரியின் மூலம் மானியம் அல்லது சாட்டப்பட்ட நிதியொதுக்கங்களுக்கு எதிராக ஒரு அலகின் ஒதுக்கீட்டிலிருந்து சேமிப்புகளை, அதே பிரிவினுள் உள்ள மற்றொரு அலகின் கீழ் ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கு (வருவாய் - அனுமதிக்கப்பட்டவை, வருவாய் - சாட்டப்பட்டவை, மூலதனம் - அனுமதிக்கப்பட்டவை, மூலதனம் - சாட்டப்பட்டவை) மடைமாற்றம் செய்வதே மறுநிதியொதுக்கமாகும்.

### 3.1.1 2021-22 காலகட்டத்தில் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியேயான செலவினங்கள் மற்றும் சேமிப்பின் சுருக்க விவரம்

2021-22 ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட/சாட்டப்பட்ட மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, செலவினங்கள் மற்றும் சேமிப்பு/மிகை ஆகியவற்றின் சுருக்கநிலை விவரங்கள் **அட்டவணை 3.1ல்** அளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: 2021-22ல் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, செலவினம் மற்றும் சேமிப்பு/மிகை**

**(₹ கோடியில்)**

| மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு | | செலவினங்கள் | | சேமிப்பு (-)/மிகை (+) | |
|---|---|---|---|---|---|
| அனுமதித்தது | சாட்டியது | அனுமதித்தது | சாட்டியது | அனுமதித்தது | சாட்டியது |
| 8,603.13 | 1,927.55 | 7,920.50 | 1,897.74 | (-) 682.63 (7.93 *சதவீதம்*) | (-) 29.81 (1.55 *சதவீதம்*) |

2021-22ம் ஆண்டில் யூனியன் பிரதேச சட்டப்பேரவையால் முதல்நிலை மற்றும் துணைநிலை வரவு-செலவுத் திட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட மொத்தத் தொகை, செலவினம் மற்றும் சேமிப்புகள் உள்ளிட்டவை **விளக்கப்படம் 3.1ல்** சித்தரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 1.1: வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் உட்கூறுகள்**




முதல்நிலை மற்றும் துணைநிலை மானியங்களை உள்ளடக்கிய யூனியன் பிரதேச சட்டப்பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ₹ 10,530.68 கோடி ஆகும். இதில், ₹ 9,818.24 கோடி அளவிற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டு ₹ 712.44 கோடி சேமிப்பு (மொத்த ஒதுக்கீட்டில் 6.77 சதவீதம்) ஏற்பட்டது. ₹ 712.44 கோடி சேமிப்பில், 31 மார்ச் 2022 அன்று, ₹ 116.69 கோடி (16.38 சதவீதம்) ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஒட்டுமொத்த சேமிப்பைக் கருத்தில் கொண்டால், 18 மானியங்களில் வழங்கப்பட்ட துணைநிலை ஒதுக்கீடான ₹ 115.19 கோடி முழுவதுமாக தேவையற்றது மற்றும் 19 மானியங்களில் வழங்கப்பட்ட ₹ 454.48 கோடி பகுதியளவு தேவையற்றது என்பது நிரூபணமானது.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில், வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் அதன் பயன்பாட்டை **விளக்கப்படம் 3.2** காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.2 : 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் அதன் பயன்பாடு (பயன்பாட்டின் சதவீதத்துடன் கூடியது)**




(ஆதாரம் : அந்தந்த ஆண்டுகளுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

2021-22 காலகட்டத்தில், மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடான ₹ 10,530.68 கோடிக்கெதிராக, ₹ 9,818.24 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இது மொத்த ஒதுக்கீட்டில் 93.23 சதவீதமாகும். முக்கியமாக பின்வரும் மானியங்களில் ஏற்பட்ட சேமிப்பால் 2021-22 காலகட்டத்தில் பயன்பாட்டில் சரிவு ஏற்பட்டது:

- மானிய எண் 10 – மாவட்ட நிர்வாகத்தின் கீழ், வருவாய் பிரிவின் கீழ், மொத்த ஒதுக்கீடான ₹ 264.70 கோடிக்கெதிராக, ₹ 173.69 கோடி செலவு செய்யப்பட்டதால் மொத்த ஒதுக்கீட்டில் 34.38 சதவீதமான ₹ 91.01 கோடி சேமிப்பு ஏற்பட்டது.
- மானிய எண் 16 – பொதுப்பணியின் கீழ், மூலதன பிரிவின் கீழ் ₹ 174.17 கோடி மொத்த ஒதுக்கீட்டிற்கெதிராக ₹ 74.89 கோடி மட்டுமே செலவிடப்பட்டு ₹ 99.28 கோடி சேமிப்பு ஏற்பட்டது (இது மொத்த ஒதுக்கீட்டில் 57.00 சதவீதமாகும்).
- மானிய எண் 22 – கூட்டுறவின் கீழ், வருவாய் பிரிவின் கீழ் ₹ 101.70 கோடி மொத்த ஒதுக்கீட்டிற்கெதிராக ₹ 61.80 கோடி மட்டுமே செலவிடப்பட்டு ₹ 39.90 கோடி சேமிப்பு ஏற்பட்டது (இது மொத்த ஒதுக்கீட்டில் 39.23 சதவீதமாகும்).
- மானிய எண் 27 – சமுதாய முன்னேற்றத்தின் கீழ், வருவாய் பிரிவின் கீழ் ₹ 51.47 கோடி மொத்த ஒதுக்கீட்டிற்கெதிராக ₹ 22.69 கோடி மட்டுமே செலவிடப்பட்டு ₹ 28.78 கோடி சேமிப்பு ஏற்பட்டது (இது மொத்த ஒதுக்கீட்டில் 55.92 சதவீதமாகும்).
- மானிய எண் 32 – கட்டட செயல் திட்டங்களின் கீழ் மூலதன பிரிவின் கீழ் மொத்த ஒதுக்கீடான ₹ 65.96 கோடிக்கெதிராக ₹ 30.63 கோடி மட்டுமே செலவிடப்பட்டு ₹ 35.33 கோடி சேமிப்பு ஏற்பட்டது (இது மொத்த ஒதுக்கீட்டில் 53.56 சதவீதமாகும்).

இந்த மானியங்களில் சேமிப்புகள் ஏற்பட்டதற்கான காரணங்கள் பத்தி 3.3.5.4ன் கீழ் விவாதிக்கப்பட்டுள்ளன.

### 3.1.2 சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட செலவினங்கள்

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் சாட்டிய நிதியொதுக்கங்களுக்கான ஒதுக்கீடுகள், செலவினங்கள் மற்றும் சேமிப்புகளின் விவரங்கள் **அட்டவணை 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: 2017-22 காலகட்டத்தில் அனுமதித்த மற்றும் சாட்டிய மொத்தச் செலவினங்கள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | ஒதுக்கீடு | | செலவினங்கள் | | சேமிப்பு (-) / மிகை (+) | |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதித்தது | சாட்டியது | அனுமதித்தது | சாட்டியது | அனுமதித்தது (சதவீதம்) | சாட்டியது (சதவீதம்) |
| 2017-18 | 6,056.59 | 1,532.42 | 5,509.60 | 1,290.34 | (-) 546.99 (9.03) | (-) 242.08 (15.80) |
| 2018-19 | 6,551.92 | 1,410.76 | 6,018.21 | 1,405.00 | (-) 533.71 (8.15) | (-) 5.76 (0.41) |
| 2019-20 | 7,054.42 | 1,833.84 | 6,361.99 | 1,577.75 | (-) 692.43 (9.82) | (-) 256.09 (13.96) |
| 2020-21 | 7,460.29 | 1,795.75 | 6,629.78 | 1,732.15 | (-) 830.51 (11.13) | (-) 63.60 (3.54) |
| 2021-22 | 8,603.13 | 1,927.55 | 7,920.50 | 1,897.74 | (-) 682.63 (7.93) | (-) 29.81 (1.55) |

(ஆதாரம் : அந்தந்த ஆண்டுகளுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

அனுமதிக்கப்பட்ட மானியங்களில் மொத்தச் செலவினம் 2017-18ம் ஆண்டில் ₹ 5,509.60 கோடியிலிருந்து 43.76 சதவீதம் அதிகரித்து, 2021-22ம் ஆண்டில் ₹ 7,920.50 கோடியாக உயர்ந்திருந்தாலும், சாட்டப்பட்ட நிதியொதுக்கங்களில் 2017-18ம் ஆண்டில் ₹ 1,290.34 கோடியிலிருந்து 2021-22ம் ஆண்டில் ₹ 1,897.74 கோடியாக அதாவது 47.70 சதவீதம் அதிகரித்தது. 2017-18ம் ஆண்டில் ₹ 570 கோடியாக இருந்த திரும்பச் செலுத்தப்பட்ட பொதுக்கடன் 2021-22ம் ஆண்டில் ₹ 891 கோடியாக அதிகரித்தது மற்றும் 2017-18ம் ஆண்டில் ₹ 686 கோடியாக இருந்த வட்டிச் செலுத்தங்கள் 2021-22ம் ஆண்டில் ₹ 877 கோடியாக அதிகரித்தது ஆகியவையே சாட்டப்பட்ட நிதியொதுக்கங்களின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

அனுமதிக்கப்பட்ட மானியங்களில் மொத்தச் சேமிப்பு 2017-18ல் 9.03 சதவீதத்திலிருந்து 2020-21ல் 11.13 சதவீதத்திற்கு அதிகரித்து 2021-22ல் 7.93 சதவீதமாக குறைந்தது. சாட்டப்பட்ட நிதியொதுக்கங்களிலும் சேமிப்பு 2017-18ல் 15.80 சதவீதத்திலிருந்து 2021-22ல் 1.55 சதவீதத்திற்கு குறைந்திருப்பது, நேர்மறையான போக்காகும்.

## 3.2 நிதியொதுக்கக் கணக்குகள்

நிதியொதுக்கச் சட்டங்களில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள பல்வேறு நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் சாட்டிய நிதியொதுக்கங்களுக்கு எதிராக, ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசு மேற்கொண்ட செலவினங்களின் கணக்குகளை ஒப்பீடு செய்து காட்டுவதே நிதியொதுக்கக் கணக்குகளாகும். இக்கணக்குகள், முதல்நிலை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, துணைநிலை மானியங்கள், ஒப்புவிக்கப்பட்டவை மற்றும் மறுநிதியொதுக்கங்கள்

ஆகியவற்றை சித்தரிப்பதோடு, வரவு-செலவுத் திட்டத்தில் சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட இரு கூறுகளுக்கும் நிதியொதுக்கச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு குறிப்பிட்ட சேவைகளின் மீது உள்ளபடியேயான மூலதன மற்றும் வருவாய் செலவினங்களையும் குறிக்கின்றன. இவ்வாறு, நிதியொதுக்கக் கணக்குகள் நிதியின் பயன்பாட்டினைப் புரிந்து கொள்ள உதவுவதோடு, நிதிக் கணக்குகளையும் முழுமையாக்குகின்றன.

CAGயால் செய்யப்படும் நிதியொதுக்கங்களின் மீதான தணிக்கை, பல்வேறு மானியங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் நிதியொதுக்கச் சட்டத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க உள்ளனவா என்பதையும், யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 23ல் கருதப்பட்ட வழிவகைகளின்கீழ், சாட்டப்பட வேண்டிய செலவினங்கள் சாட்டப்பட்டனவா என்பதையும் உறுதி செய்வதேயாகும். மேலும், மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் யாவும் சட்டத்திற்குட்பட்டும், சம்பந்தப்பட்ட விதிகள், ஒழுங்கு முறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு ஒத்து அமைந்தனவா என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

## 3.3 வரவு-செலவுத் திட்ட மற்றும் கணக்கியல் செயல்முறையின் ஒழுங்குமுறை

### 3.3.1 சட்டத்தின் அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவினம்

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 29(3)ன் விதிகளுக்கிணங்கி, சட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டைத் தவிர, தொகுநிதியிலிருந்து பணம் எடுக்க இயலாது. இது தவிர்த்து, துணைநிலை மானியம் அல்லது நிதியொதுக்கம் அல்லது எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஆகியவை மூலம் கூடுதல் நிதிகள் வழங்கப்படாமல் புதிய திட்டம்/சேவைகளுக்கான செலவினங்கள் மேற்கொள்ளக்கூடாது.

#### *3.3.1.1* முதல்நிலை/துணைநிலை மானியங்களில் ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவினம்

வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாகவோ அல்லது எந்தவொரு ஒதுக்கீடும் வழங்கப்படாத கூறுகளின் மீதோ செலவினம் மேற்கொள்ளக்கூடாது. எனினும், **அட்டவணை 3.3**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, ஆறு துணைத் தலைப்புகளின் கீழ், எந்தவொரு முதல்நிலை அல்லது துணைநிலை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடும் இல்லாமல் ₹ 14.14 கோடி மறுநிதியொதுக்கம் செய்யப்பட்டு, ₹ 14.14 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது கண்டறியப்பட்டது.

**அட்டவணை 3.3: எந்தவொரு முதல்நிலை அல்லது துணைநிலை ஒதுக்கீடும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரங்கள்**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | ஒதுக்கீடு | மறுநிதி-யொதுக்கம் | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | 2216 | 80 | 103 | 01 | 01 | 0.00 | 63.39 | 63.39 | 0.00 |
| 2 | 21 | 2225 | 01 | 789 | 37 | 01 | 0.00 | 4.56 | 4.55 | (-) 0.01 |
| 3 | 21 | 2235 | 02 | 103 | 15 | 01 | 0.00 | 18.65 | 18.65 | 0.00 |
| 4 | 21 | 2235 | 02 | 104 | 04 | 01 | 0.00 | 1,213.59 | 1,213.59 | 0.00 |
| 5 | 24 | 2245 | 02 | 101 | 01 | 02 | 0.00 | 98.00 | 97.56 | (-) 0.44 |
| 6 | 24 | 2245 | 02 | 101 | 01 | 04 | 0.00 | 16.00 | 15.91 | (-) 0.09 |
| **மொத்தம்** | | | | | | | | **1,414.19** | **1,413.65** | **(-) 0.54** |

(ஆதாரம் : 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

நிர்வாக உத்தரவுகள் மூலம் அந்தந்த மானியங்களுக்குள்ளாகவே மறுநிதியொதுக்க ஆணைகள் வழங்கப்பட்டதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023). துணை நிலை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட பின்பே புதிய திட்டம்/சேவைகள் மீதான செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

### 3.3.2 தேவையற்ற அல்லது மிகையான துணைநிலை மானியங்கள்

யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 30ன் படி, நடப்பு நிதியாண்டின்போது நிதியொதுக்கச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதைக் காட்டிலும் தேவைப்படும் கூடுதல் நிதி, அந்த ஆண்டிற்கான துணைநிலை மானியம் அல்லது கூடுதல் மானியம் அல்லது நிதியொதுக்கம் ஆகியவற்றின் மூலம், நடப்பு நிதியாண்டு காலாவதியாவதற்கு முன் கீழ்கண்டவற்றை எதிரேற்க வழங்கலாம்.

- நடப்பு நிதியாண்டிற்குள்ளாக மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களுக்கான செலவினங்கள்,
- பற்றாக்குறையுள்ள ஒதுக்கீடுகள்,
- புதிய செலவினம் ஆனால் தொழில்நுட்ப ரீதியான புதிய செலவினத் திட்டங்கள் அல்லாதவை மற்றும்
- விடுபட்ட ஒதுக்கீடுகள்.

அத்தகைய கூடுதல் செலவினங்கள் தவிர்க்கமுடியாதவை என கண்டறியப்பட்டு, மறுநிதியொதுக்கத்தின் மூலம் கூடுதல் செலவினங்களை எதிரேற்க மானியத்திற்குள் சேமிப்பு ஏற்பட வாய்ப்பில்லையெனில், சம்பந்தப்பட்ட துறைச் செயலர் துணைநிலை மானியம் அல்லது கூடுதல்

மானியம் அல்லது நிதியொதுக்கத்திற்காக நிதித் துறைக்கு கருத்துரு அனுப்புவார்.

அத்தகைய துணைநிலை மானியங்கள் தேவையற்றது என நிரூபிக்கப்பட்ட நிகழ்வுகள் பின்வரும் பத்தியில் விவாதிக்கப்பட்டுள்ளன.

### 3.3.3 தேவையற்ற துணைநிலை மானிய ஒதுக்கீடு

2021-22 காலகட்டத்தில், வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடான ₹ 10,530.68 கோடிக்கெதிராக (முதல்நிலை மானியம்: ₹ 9,924.41 கோடி மற்றும் துணைநிலை மானியம்: ₹ 606.27 கோடி) ₹ 9,818.24 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. **அட்டவணை 3.4ல்** விவரிக்கப் பட்டுள்ளபடி, 2021-22 காலகட்டத்தில், 20 மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் திரண்ட துணைநிலை மானிய ஒதுக்கீடான ₹ 554.95 கோடியில் (₹ 50 இலட்சம் அல்லது அதற்கும் மேற்பட்டவை) ₹ 460.58 கோடி தேவையற்றது என நிரூபணமானது.

**அட்டவணை 3.4: ₹ 50 இலட்சம் அல்லது அதற்கும் மேல் தேவையற்ற துணைநிலை ஒதுக்கீடு வழங்கப்பட்ட மானியங்களின் விவரங்கள்**

(₹ கோடியில்)

| வரிசை எண் | மானியத்தின் பெயர் | முதல்நிலை மானியம் | துணைநிலை மானியம் | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| (அ) வருவாய் - அனுமதித்தது | | | | | | |
| 1 | 01 - சட்டப் பேரவை | 13.37 | 2.27 | 15.64 | 14.38 | 1.26 |
| 2 | 04 - நீதி நிர்வாகம் | 28.13 | 0.74 | 28.87 | 27.34 | 1.53 |
| 3 | 06 - வருவாய் மற்றும் உணவு | 374.53 | 19.85 | 394.38 | 380.81 | 13.57 |
| 4 | 10 - மாவட்ட நிர்வாகம் | 245.42 | 18.30 | 263.72 | 173.5 | 90.22 |
| 5 | 12 - காவல் | 292.10 | 25.02 | 317.12 | 300.47 | 16.65 |
| 6 | 14 - எழுதுபொருள் மற்றும் அச்சு | 28.12 | 1.25 | 29.37 | 27.04 | 2.33 |
| 7 | 15 - ஓய்வூதியப் பலன்கள் | 1,049.68 | 156.89 | 1,206.57 | 1,183.84 | 22.73 |
| 8 | 16 - பொதுப்பணி | 279 | 22.54 | 301.54 | 293.24 | 8.30 |
| 9 | 17 - கல்வி | 1,035.88 | 21.93 | 1,057.81 | 954.17 | 103.64 |
| 10 | 18 - மருத்துவம் | 759.93 | 28.37 | 788.30 | 714.26 | 74.04 |
| 11 | 20 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 44.35 | 7.40 | 51.75 | 37.81 | 13.94 |
| 12 | 21 - சமூக நலன் | 812.33 | 15.03 | 827.36 | 779.29 | 48.07 |
| 13 | 23 - புள்ளியியல் | 4.82 | 0.54 | 5.36 | 4.82 | 0.54 |
| 14 | 24 - வேளாண்மை | 130.55 | 4.90 | 135.45 | 123.76 | 11.69 |

| வரிசை எண் | மானியத்தின் பெயர் | முதல்நிலை மானியம் | துணைநிலை மானியம் | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 15 | 25 - கால்நடை பராமரிப்பு | 44.48 | 3.45 | 47.93 | 43.96 | 3.97 |
| 16 | 26 - மீன்வளம் | 67.12 | 7.24 | 74.36 | 59.95 | 14.41 |
| 17 | 28 - தொழில்கள் | 126.25 | 1.01 | 127.26 | 121.88 | 5.38 |
| 18 | 29 - மின்சாரம் | 2,221.31 | 89.79 | 2,311.10 | 2,307.75 | 3.35 |
| **மொத்தம் (அ)** | | **7,557.37** | **426.52** | **7,983.89** | **7,548.27** | **435.62** |
| **(ஆ) வருவாய் - சாட்டியது** | | | | | | |
| 19 | 10 - மாவட்ட நிர்வாகம் | 0.05 | 0.93 | 0.98 | 0.20 | 0.78 |
| 20 | 16 - பொதுப்பணி | 0.64 | 0.64 | 1.28 | 0.65 | 0.63 |
| 21 | 33 - பொதுக் கடன் | 830.13 | 107.40 | 937.53 | 931.15 | 6.38 |
| **மொத்தம் (ஆ)** | | **830.82** | **108.97** | **939.79** | **932.00** | **7.79** |
| **(இ) மூலதனம் - அனுமதித்தது** | | | | | | |
| 22 | 16 - பொதுப்பணி | 14.00 | 13.96 | 27.96 | 15.78 | 12.18 |
| 23 | 17 - கல்வி | 2.00 | 0.78 | 2.78 | 1.73 | 1.05 |
| 24 | 28 - தொழில்கள் | 2.00 | 2.87 | 4.87 | 1.76 | 3.11 |
| 25 | 32 - கட்டட செயல் திட்டங்கள் | 0.00 | 1.85 | 1.85 | 1.02 | 0.83 |
| **மொத்தம் (இ)** | | **18.00** | **19.46** | **37.46** | **20.29** | **17.17** |
| **பெருமொத்தம்** | | **8,406.19** | **554.95** | **8,961.14** | **8,500.56** | **460.58** |

(ஆதாரம் : 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

இருபது மானியங்களின் கீழுள்ள 42 நேர்வுகளைப் பொறுத்தவரை, ₹ 1,734 கோடி முதல்நிலை மானிய ஒதுக்கீட்டிற்குக் கூடுதலாக, ₹ 283.24 கோடி துணைநிலை மானியம் வழங்கப்பட்டது. ஆனால், ₹ 1,952.83 கோடி மட்டுமே மொத்த செலவினம் ஏற்பட்டது. எனவே, துணை நிலை மானியத்தில் ஒதுக்கப்பட்ட ₹ 64.41 கோடி ஒதுக்கீடு பகுதியளவு தேவையற்றது என நிரூபணமானது (**இணைப்பு 3.2**).

மேலும் ஏழு மானியங்களின் கீழ் 14 நேர்வுகளில் முதல் நிலை ஒதுக்கீடான ₹ 260.76 கோடியுடன் கூடுதலாக, ₹ 21.33 கோடி துணைநிலை மானியத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் ₹ 230.76 கோடி மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டது. **அட்டவணை 3.5**ல் விவரித்துள்ளபடி, முதல் நிலை ஒதுக்கீட்டில் ₹ 29.99 கோடி சேமிப்பை கருத்தில் கொண்டால், துணை நிலை ஒதுக்கீடு முழுவதும் தேவையற்றது என நிரூபணமானது. இந்த 14 நேர்வுகளில் இறுதி சேமிப்பு ₹ 51.32 கோடியாகும்.

**அட்டவணை 3.5: ரூபாய் 50 இலட்சம் மற்றும் அதற்கு மேலான தேவையற்ற துணைநிலை மானிய ஒதுக்கீடு கூடுதலானது/தேவையற்றதான கணக்குத்தலைப்புகளின் விவரங்கள்**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | முதல் நிலை ஒதுக்கீடு | துணை நிலை மானிய ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு | முதல்நிலை ஒதுக்கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06 | 2039 | 00 | 001 | 01 | 01 | 1,048.21 | 57.00 | 1,105.21 | 1,036.09 | 69.12 | 12.12 |
| 2 | 06 | 2245 | 02 | 101 | 01 | 01 | 10.00 | 81.00 | 91.00 | 0.00 | 91.00 | 10.00 |
| 3 | 10 | 2215 | 01 | 102 | 01 | 01 | 612.00 | 68.00 | 680.00 | 71.94 | 608.06 | 540.06 |
| 4 | 10 | 2216 | 80 | 789 | 11 | 01 | 874.20 | 288.00 | 1,162.20 | 562.98 | 599.22 | 311.22 |
| 5 | 10 | 2216 | 80 | 800 | 19 | 01 | 2,121.20 | 76.00 | 2,197.20 | 1,596.66 | 600.54 | 524.54 |
| 6 | 10 | 2216 | 80 | 800 | 19 | 03 | 37.80 | 59.00 | 96.80 | 7.80 | 89.00 | 30.00 |
| 7 | 14 | 2058 | 00 | 103 | 01 | 01 | 2,059.30 | 81.00 | 2,140.30 | 2,016.13 | 124.17 | 43.17 |
| 8 | 16 | 2059 | 80 | 001 | 02 | 01 | 9,571.03 | 147.00 | 9,718.03 | 9,409.97 | 308.06 | 161.06 |
| 9 | 16 | 2215 | 02 | 001 | 01 | 01 | 5,747.22 | 117.00 | 5,864.22 | 5,693.12 | 171.10 | 54.10 |
| 10 | 17 | 2204 | 00 | 101 | 03 | 01 | 1,112.81 | 492.57 | 1,605.38 | 516.41 | 1,088.97 | 596.40 |
| 11 | 20 | 2230 | 03 | 102 | 07 | 01 | 50.00 | 200.00 | 250.00 | 0.00 | 250.00 | 50.00 |
| 12 | 20 | 2230 | 03 | 800 | 04 | 01 | 100.00 | 295.91 | 395.91 | 0.00 | 395.91 | 100.00 |
| 13 | 26 | 2405 | 00 | 800 | 20 | 01 | 1,552.76 | 110.00 | 1,662.76 | 1,465.58 | 197.18 | 87.18 |
| 14 | 26 | 2405 | 00 | 800 | 22 | 01 | 1,179.30 | 60.47 | 1,239.77 | 699.72 | 540.05 | 479.58 |
| **மொத்தம்** | | | | | | | **26,075.83** | **2,132.95** | **28,208.78** | **23,076.40** | **5,132.38** | **2,999.43** |

(ஆதாரம் : 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

### 3.3.4 தேவையற்ற/மிகையாக/ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள்

ஒரு மானியத்தினுள் சேமிப்பு எதிர்நோக்கப்படும் ஒரு அலகின் ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி தேவைப்படும் மற்றொரு அலகிற்கு நிதியை மாற்றுவது மறுநிதியொதுக்கமாகும்.

2021-22 காலகட்டத்தில், 31 மார்ச் 2022 அன்று வெளியிடப்பட்ட 1,284 துணைத் தலைப்புகளின் கீழ் ₹ 314.57 கோடி அளவுக்கான மறுநிதியொதுக்க ஆணை, வரவு-செலவுத் திட்ட மற்றும் செலவினக் கட்டுப்பாட்டுச் செயல்முறைகளை நீர்த்துப் போகச் செய்தது. இது சம்பந்தப்பட்ட தலைப்புகளில் தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்படாமல், மறுநிதியொதுக்க ஆணைகள் முன்தேதியிட்டு கருத்துரு செய்யப்பட்டதை குறிக்கிறது.

2021-22 காலகட்டத்தில், 185 துணைத் தலைப்புகளில் மறுநிதியொதுக்கங்கள் தேவையற்றவை அல்லது மிகையானவை என்பது கண்டறியப்பட்டது. **இணைப்பு 3.3**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, ₹ 10 இலட்சம் மற்றும் அதற்கும் மேல் மறுநிதியொதுக்கம் செய்யப்பட்ட 70 துணைத் தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினமான ₹ 716.69 கோடி, மொத்த ஒதுக்கீடான ₹ 836.08 கோடிக்கும் குறைவாக இருந்ததால், இத்துணைத்

தலைப்புகளில் வழங்கப்பட்ட ₹ 45.33 கோடி மறுநிதியொதுக்கம் முழுவதும் தேவையற்றது என்பது காணப்பட்டது. மேலும், இந்த 70 துணைத் தலைப்புகளில், மறுநிதியொதுக்கம் மூலம் ₹ 10.57 கோடி தேவையற்ற ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 துணைத் தலைப்புகளின் கீழ், எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.3.5 செலவிடப்படாத தொகை மற்றும் பெரிய அளவிலான சேமிப்புகள்/ஒப்படைப்புகள்

மிகத் துல்லியமாக மதிப்பீடுகளைக் கணக்கிடுவது எப்போதும் சாத்தியமில்லை. எதிர்பார்க்கக்கூடிய அனைத்திற்கும் தேவையான அளவிற்கு மட்டுமே வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி வழங்கப்பட வேண்டும் என பொது நிதி விதிகள், 2017ன் (GFR) விதி 52 மற்றும் அதன் இணைப்பு 3ல் கருத்துரைக்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புகள் மற்றும் பயன்படுத்த முடியாத நிதிகள் ஆகியவற்றை, ஆண்டு இறுதி வரை காத்திருக்காமல் உடனடியாக அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என GFR 2017ன் விதி 62(2) கருத்துரைக்கிறது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மிகைச்செலவினங்களுக்காக எந்தவொரு சேமிப்பையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. பெருமளவு சேமிப்புகள் மற்றும் ஒப்படைப்புகள் ஏற்பட்ட நிகழ்வுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

### *3.3.5.1 எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புகள் ஒப்படைக்கப்படாமை*

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, மொத்தச் சேமிப்பான ₹ 712.44 கோடியில் ₹ 116.69 கோடி ஒப்படைக்கப்பட்டது. இருபத்து மூன்று மானியங்கள்/நிதியொதுக்கங்களில் ஏற்பட்ட சேமிப்பான ₹ 705.76 கோடியில் (₹ ஒரு கோடி மற்றும் அதற்கு மேலும் ஏற்பட்ட சேமிப்பு), ₹ 592.74 கோடி (சேமிப்பில் 83.99 சதவீதம்) ஒப்படைக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. மேலும், 19 மானியங்கள்/நிதியொதுக்கங்களை பொறுத்தவரையில், அவற்றில் ஏற்பட்ட சேமிப்பான ₹ 476.58 கோடியில் எந்தவொரு தொகையும் ஒப்படைக்கப்படவில்லை. இதற்கான விவரங்கள் முறையே **இணைப்பு 3.4(அ)** மற்றும் **3.4(ஆ)**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### *3.3.5.2 கணிசமான ஒப்படைப்புகள்*

பதினெட்டு துணைத் தலைப்புகளில் கணிசமான அளவில் (மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்குக் கூடுதலாகவும் ₹ 10 இலட்சத்திற்கு அதிகமாகவும் ஒப்படைப்பு செய்யப்பட்ட நேர்வுகள்) ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்தத் துணைத் தலைப்புகளில் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடான ₹ 143.65 கோடியில், ₹ 100.33 கோடி (69.85 சதவீதம்) ஒப்படைக்கப்பட்டது (**இணைப்பு 3.5**). நிதியாண்டின் கடைசி நாளில் செய்யப்பட்ட இந்த ஒப்படைப்புகள், போதிய நிதிக் கட்டுப்பாடு

இல்லாததையும், பிற வளர்ச்சி நோக்கங்களுக்கு நிதி கிடைக்காததையும் சுட்டிக்காட்டுகிறது.

### 3.3.5.3 பெருமளவில் சேமிப்புகள் உள்ள மானியங்கள்

2021-22 காலகட்டத்தில், மொத்தமுள்ள 33 மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் 13 மானியங்கள்/நிதியொதுக்கங்களில், ஒவ்வொரு நேர்விலும் ₹ 10 கோடி அல்லது அதற்கு மேலாக (நான்கு மானியங்கள் ₹ 50 கோடிக்கும் மேலாக சேமிப்பு உள்ளவை) ₹ 587.62 கோடி சேமிப்பு (மொத்த சேமிப்பான ₹ 712.44 கோடியில் 82.48 சதவீதம்) இருந்தது. இதன் விவரங்கள் **அட்டவணை 3.6**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.6: ₹ 10 கோடி அல்லது அதற்கு மேலாக சேமிப்புகள் உள்ள மானியங்களின் பட்டியல்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | மானிய எண் | விவரிப்பு | முதல்நிலை ஒதுக்கீடு | துணை நிலை ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | ஒப்புவிக்கப் பட்ட தொகை | சேமிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **வருவாய் - அனுமதித்தது** | | | | | | | | |
| 1 | 06 | வருவாய் மற்றும் உணவு | 374.53 | 19.85 | 394.38 | 380.81 | 0.00 | 13.57 | 3.44 |
| 2 | 10 | மாவட்ட நிர்வாகம் | 245.42 | 18.30 | 263.72 | 173.50 | 0.00 | 90.22 | 34.21 |
| 3 | 12 | காவல் | 292.10 | 25.02 | 317.12 | 300.47 | 0.00 | 16.65 | 5.25 |
| 4 | 15 | ஓய்வூதியப் பலன்கள் | 1,049.68 | 156.89 | 1,206.57 | 1,183.84 | 0.00 | 22.73 | 1.88 |
| 5 | 17 | கல்வி | 1,035.88 | 21.93 | 1,057.81 | 954.17 | 0.00 | 103.64 | 9.80 |
| 6 | 18 | மருத்துவம் | 759.93 | 28.37 | 788.30 | 714.26 | 0.00 | 74.04 | 9.39 |
| 7 | 20 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 44.35 | 7.40 | 51.75 | 37.81 | 0.00 | 13.94 | 26.94 |
| 8 | 21 | சமூக நலன் | 812.33 | 15.03 | 827.36 | 779.29 | 0.00 | 48.07 | 5.81 |
| 9 | 24 | வேளாண்மை | 130.55 | 4.90 | 135.45 | 123.76 | 0.00 | 11.69 | 8.63 |
| 10 | 26 | மீன்வளம் | 67.12 | 7.24 | 74.36 | 59.95 | 0.00 | 14.41 | 19.38 |
| 11 | 27 | சமுதாய வளர்ச்சி | 51.47 | 0.00 | 51.47 | 22.69 | 4.23 | 28.78 | 55.92 |
| **மொத்தம் (அ)** | | | **4,863.36** | **304.93** | **5,168.29** | **4,730.55** | **4.23** | **437.74** | **8.47** |
| **(B)** | **மூலதனம் - அனுமதித்தது** | | | | | | | | |
| 12 | 16 | பொதுப் பணிகள் | 146.20 | 0.00 | 146.20 | 59.11 | 61.56 | 87.09 | 59.57 |
| 13 | 18 | மருத்துவம் | 24.81 | 0.18 | 24.99 | 8.89 | 0.00 | 16.10 | 64.43 |
| 14 | 32 | கட்டட செயல் திட்டங்கள் | 64.12 | 0.00 | 64.12 | 29.61 | 4.94 | 34.51 | 53.82 |
| **மொத்தம் (ஆ)** | | | **235.13** | **0.18** | **235.31** | **97.61** | **66.50** | **137.70** | **58.52** |
| **(C)** | **மூலதனம் - சாட்டியது** | | | | | | | | |
| 15 | 16 | பொதுப் பணிகள் | 14.00 | 13.96 | 27.96 | 15.78 | 0.00 | 12.18 | 43.56 |
| **மொத்தம் (இ)** | | | **14.00** | **13.96** | **27.97** | **15.78** | **0.00** | **12.18** | **43.58** |
| **பெரு மொத்தம்** | | | **5,112.49** | **319.07** | **5,431.57** | **4,843.94** | **70.73** | **587.62** | **10.82** |

(ஆதாரம்: 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

நூற்றி முப்பத்தியெட்டு நேர்வுகளில் (துணைத் தலைப்புகள்), ஒவ்வொரு நேர்விலும் ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மற்றும் மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கும் மேலாகவும் சேமிப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. **இணைப்பு 3.6**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த துணைத் தலைப்புகளில் மொத்த ஒதுக்கீட்டான ₹ 687.54 கோடியில், ₹ 553.67 கோடி (80.53 சதவீதம்) சேமிப்பு ஏற்பட்டது. மேலும், 138 நேர்வுகளில், ₹ 238.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட 54 நேர்வுகளில், செலவு ஏதும் செய்யப்படாமல் இருந்தது. இது நிதித் தேவையின் தவறான மதிப்பீட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒவ்வொரு தொகுப்பிலும், மொத்த சேமிப்புடன் சேமிப்பின் சதவீதத்தின்படி வகைப்படுத்தப்பட்ட மானியங்கள்/ நிதியொதுக்கங்களின் எண்ணிக்கையை **விளக்கப்படம் 3.3** சித்தரிக்கிறது.




2021-22 காலகட்டத்தில் ஏற்பட்ட சேமிப்புகள் மற்றும் ஒப்படைப்புகளை **விளக்கப்படம் 3.4** காட்டுகிறது.




ஒட்டுமொத்த சேமிப்பான ₹ 712.44 கோடியில், ₹ 116.69 கோடி (16.38 சதவீதம்) மட்டுமே ஒப்படைக்கப்பட்டது. அதுவும் 31 மார்ச் 2022 அன்று செய்யப்பட்டது.

### *3.3.5.4 தொடர்ந்து நிகழும் சேமிப்புகள்*

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மொத்தமுள்ள 33 மானியங்களில், 18 மானியங்களில் மொத்த ஒதுக்கீட்டில் ₹ 50 இலட்சத்திற்கும் மேலாக சேமிப்புகள் தொடர்ந்து ஏற்பட்டது கண்டறியப்பட்டது. சேமிப்புகளின் விவரங்கள் **அட்டவணை 3.7**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.7: 2017-22 காலகட்டத்தில் மொத்த ஒதுக்கீட்டில் ₹ 50 இலட்சத்திற்கும் மேலாக தொடர் சேமிப்புகள் ஏற்பட்ட மானியங்களின் பட்டியல்**

(₹ கோடியில்)

| வரிசை எண் | மானிய எண் மற்றும் விவரிப்பு | | சேமிப்புத் தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| **(அ) வருவாய் - அனுமதித்தது** | | | | | | | |
| 1 | 6 | வருவாய் மற்றும் உணவு | 26.64 | 26.16 | 5.40 | 14.28 | 13.58 |
| 2 | 9 | செயலகம் | 13.32 | 8.09 | 23.28 | 2.99 | 2.68 |
| 3 | 10 | மாவட்ட நிர்வாகம் | 11.67 | 39.47 | 111.71 | 36.39 | 90.22 |
| 4 | 12 | காவல் | 10.25 | 5.81 | 9.11 | 5.77 | 16.65 |
| 5 | 16 | பொதுப் பணிகள் | 9.50 | 18.14 | 20.84 | 26.95 | 8.30 |
| 6 | 17 | கல்வி | 93.85 | 29.79 | 92.54 | 87.92 | 103.64 |
| 7 | 18 | மருத்துவம் | 11.39 | 15.77 | 32.08 | 96.49 | 74.04 |
| 8 | 19 | செய்தி மற்றும் விளம்பரம் | 8.60 | 5.17 | 11.13 | 10.62 | 8.55 |
| 9 | 20 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 3.55 | 6.24 | 4.72 | 8.88 | 13.94 |
| 10 | 21 | சமூக நலன் | 79.07 | 32.99 | 47.12 | 76.36 | 48.07 |
| 11 | 22 | கூட்டுறவு | 15.80 | 3.92 | 4.85 | 5.16 | 39.90 |
| 12 | 24 | வேளாண்மை | 29.27 | 13.56 | 13.02 | 22.08 | 11.69 |
| 13 | 25 | கால்நடை பராமரிப்பு | 3.81 | 1.90 | 6.68 | 3.83 | 3.98 |
| 14 | 26 | மீன்வளம் | 3.64 | 7.68 | 10.67 | 11.14 | 14.41 |
| 15 | 27 | சமுதாய வளர்ச்சி | 12.32 | 28.93 | 27.17 | 27.48 | 28.78 |
| 16 | 28 | தொழில்கள் | 12.74 | 5.37 | 10.81 | 3.28 | 5.38 |
| 17 | 29 | மின்சாரம் | 0.80 | 33.20 | 9.46 | 28.72 | 3.35 |
| 18 | 32 | கட்டட செயல் திட்டங்கள் | 2.84 | 1.52 | 5.67 | 5.08 | 2.91 |
| **மொத்தம் (அ)** | | | **349.06** | **283.71** | **446.26** | **473.42** | **490.07** |
| **(ஆ) மூலதனம் - அனுமதித்தது** | | | | | | | |
| 1 | 16 | பொதுப் பணிகள் | 109.63 | 44.15 | 114.93 | 148.95 | 87.10 |
| 2 | 29 | மின்சாரம் | 9.32 | 21.75 | 21.89 | 17.67 | 6.58 |
| 3 | 32 | கட்டட செயல் திட்டங்கள் | 39.10 | 24.95 | 35.88 | 20.80 | 34.51 |
| **மொத்தம் (ஆ)** | | | **158.05** | **90.85** | **172.70** | **187.42** | **128.19** |
| **பெருமொத்தம்** | | | **507.11** | **374.56** | **618.96** | **660.84** | **618.26** |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிபொதுக்கக் கணக்குகள்)

***மானிய எண் 10 - மாவட்ட நிர்வாகம் -*** 2017-22 காலகட்டத்தில், வருவாய் தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 11.67 கோடி மற்றும் ₹ 111.71 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. முக்கியமாக 2021-22ல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிர்நோக்கியபடி தேர்தல் நடைபெறாததால் ₹ 90.22 கோடியும், நகர மற்றும் கிராமப்புற திட்டமிடல் துறையில் எதிர்நோக்கியபடி AMRUT திட்டத்தின் கீழ் பணி நிறைவு பெறாததால் ₹ 0.92 கோடியும் சேமிப்பு ஏற்பட்டது, ₹ 90.22 கோடி சேமிப்பில் எந்தத் தொகையும் ஒப்படைக்ககப்படவில்லை.

***மானிய எண் 16 - பொதுப் பணிகள் -*** 2017-22 காலகட்டத்தில், மூலதனத் தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 44.15 கோடி மற்றும் ₹ 148.95 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. 2021-22ல், உள்ளபடியேயான தேவைக்கேற்ப கட்டுப்படுத்தப்பட்டதால் ஒப்பந்திக்கப்பட்ட கடன் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹ 31.52 கோடியை திரும்ப பெற்றதே ₹ 87.10 கோடி சேமிப்பு ஏற்பட முக்கிய காரணமாயிற்று. ₹ 87.10 கோடி சேமிப்பில், ₹ 61.56 கோடி (70.68 சதவீதம்) மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது.

***மானிய எண் 18 - மருத்துவம் –*** 2017-22 காலகட்டத்தில், வருவாய் தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 11.39 கோடி மற்றும் ₹ 96.49 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. 2021-22 காலகட்டத்தில் மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் கிட்டதட்ட ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் ₹ 8.49 கோடி, ₹ 7.32 கோடி மற்றும் ₹ 21.37 கோடி முறையே தேசிய மருத்துவ திட்டத்தின் மத்திய பங்கு, மாநில பங்கு மற்றும் மத்திய நிதியுதவி பெறும் முதன்மை திட்டங்கள் ஆகியவற்றிற்கான நிதிசெலுத்துகைக்காக ஒற்றை செயல்பாட்டு முகமை என்ற புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் ₹ 74.04 கோடி சேமிப்பு ஏற்பட முக்கிய காரணமாகும். ₹ 74.04 கோடி சேமிப்பில், எந்தவொரு தொகையும் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

***மானிய எண் 21 - சமூகநலன் -*** 2017-22 காலகட்டத்தில், வருவாய் தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 32.99 கோடி மற்றும் ₹ 79.07 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. 2021-22 காலகட்டத்தில் தேவைக்கேற்ப ஒதுக்கீடு கட்டுப்படுத்தப்பட்டதால் மொத்த சேமிப்பான ₹ 48.07 கோடியில், 'முதியோர் மற்றும் விதவைகள் ஓய்வூதிய' திட்டத்தின் கீழ் ₹ 18.83 கோடி சேமிப்பு ஏற்பட்டது. இந்திய அரசு விடுவித்த நிதியளவிற்கு மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டதால் ஏழு மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களில் சேமிப்பு ஏற்பட்டது. மொத்த சேமிப்பான ₹ 48.07 கோடியில் எந்தவொரு தொகையும் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

***மானிய எண் 27 - சமுதாய மேம்பாடு -*** 2017-22 காலகட்டத்தில், வருவாய் தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 12.32 கோடி மற்றும்

₹ 28.93 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தில் ₹ 5.87 கோடி, நிர்மல் பாரத் அபியான் - தூய்மை இந்தியா திட்டம் (கிராமம்) திட்டத்தின் கீழ் ரூபாய் இரண்டு கோடி, தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌஷல்யா யோஜனாவின் கீழ் ₹ 4.67 கோடி ஆகியவற்றிற்காக மத்திய அரசிடமிருந்து எதிர்நோக்கிய நிதி பெறப்படாததாலும், உள்ளபடியேயான தேவைக்கேற்ப ஒதுக்கீடு குறைக்கப்பட்டதாலும், நிதியை திரும்பப் பெற்றதால் ₹ 28.78 கோடி சேமிப்பு ஏற்பட்டது. ₹ 28.78 கோடி சேமிப்பில், ₹ 4.23 கோடி (14.70 சதவீதம்) மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது.

***மானிய எண் 32 - கட்டட செயல் திட்டங்கள் -*** 2017-22 காலகட்டத்தில், மூலதன தலைப்புகளில், தொடர்ந்து நிகழும் சேமிப்புகள் ₹ 20.80 கோடி மற்றும் ₹ 39.10 கோடி என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. 2021-22ல், இந்திய அரசு விடுவித்த நிதியுதவி அளவிற்கு ஆறு மத்திய நிதியுதவித் திட்டங்களுக்கான செலவு கட்டுப்படுத்தப்பட்டதால் நீதித் துறைக்கான உள்கட்டமைப்பு-நீதிமன்ற வளாகம் கட்டுமானத்தில் (₹ 4.39 கோடி) சேமிப்பு ஏற்பட்டது. மேலும் தாகூர் பண்பாட்டு அரங்கம் கட்டுவதற்கான நிதியுதவியில் ₹ 3.17 கோடி சேமிப்பு ஏற்பட்டது ஆகியவையே ₹ 34.51 கோடி மொத்த சேமிப்பு ஏற்பட முக்கிய காரணமாயிற்று. ஆனால், இறுதி சேமிப்பிற்கான காரணம் கிடைக்கப் பெறவில்லை. மொத்த சேமிப்பான ₹ 34.51 கோடியில், ₹ 4.94 கோடி (14.31 சதவீதம்) மட்டுமே ஒப்படைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் சேமிப்பை தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

## 3.3.6 அதிகப்படியான செலவினம் மற்றும் அதன் முறைப்படுத்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 205(1)(b)ன்படி, யூனியன் பிரதேச அரசு ஒரு மானியத்தின்/நிதியொதுக்கத்தின் மிகையை யூனியன் பிரதேச சட்டப்பேரவை மூலமாக முறைப்படுத்த வேண்டியது கட்டாயமாகும். மேற்கூறிய பிரிவில் செலவினத்தை முறைப்படுத்த காலக்கெடு எதுவும் பரிந்துரைக்கப்படவில்லையெனினும் பொதுக்கணக்குக் குழுவில் நிதியொதுக்கக் கணக்குகளின் மீதான விவாதம் முடிந்த பின்னரே மிகை செலவினம் முறைப்படுத்தப்படுகிறது.

### *3.3.6.1* நடப்பாண்டில் முறைப்படுத்த வேண்டிய ஒதுக்கீட்டிற்கும் கூடுதலான மிகை

அனைத்து செலவுகளுக்கும் சட்டபேரவை ஒப்புதல் தேவை. ஒதுக்கீட்டிற்கு மேலான செலவு என்பது இதற்கு மாறானது மட்டுமல்லாது தவறான நிதி திட்டமிடலையும் சுட்டிக்காட்டுகிறது. **அட்டவணை 3.8ல்**

2021-22 காலகட்டத்தில் நிதியொதுக்கத்திற்கு மேலாக கூடுதல் செலவினம் குறித்த ஒரு நிகழ்வு கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.8: 2021-22 காலகட்டத்தில் ஒதுக்கீட்டிற்கு மேலான மிகைச் செலவினம்**

**(₹ கோடியில்)**

| மானியத்தின் பெயர் | அனுமதித்தது | | | சாட்டியது | | |
|---|---|---|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன்கள் மற்றும் முன்பணங்கள் | வருவாய் | மூலதனம் | கடன்கள் மற்றும் முன்பணங்கள் |
| பொதுக்கடன் (மானிய எண் 33) | -- | -- | -- | | 3.96 | |
| **மொத்தம்** | | | | | **3.96** | **--** |

2011-12 காலகட்டத்தில் மின் நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற ₹ 4.22 கோடி கடனை 2021-22 காலகட்டத்தில் சரிசெய்தது மற்றும் COVID கடன் தடைக் காலத்தில் நிதி நிறுவனங்களுக்கு வட்டி வழங்கியதை ₹ 2.09 கோடி கடன் திருப்பிச்செலுத்துகை என வகைப்படுத்தியதும், அவற்றை 2021-22 காலகட்டத்தில் கணக்குப் பதிவேடுகளில் சரிசெய்ததும் மிகை ஏற்பட்டதற்கான காரணமாகும்.

## 3.4 வரவு-செலவுத் திட்டம் மற்றும் கணக்கியல் செயல்முறையின் திறன் குறித்த கருத்துரைகள்

பல்வேறு நிதிச் சுட்டிக்காட்டிகளை எய்துவதற்கான சமநிலையை வரி நிர்வாகம்/பிற வரவினங்கள் மற்றும் பொதுச் செலவினங்களின் திறமையான மேலாண்மை சமநிலைப்படுத்தி வைக்கிறது. நம்பத்தகாத கருத்துருக்கள், வறிதான செலவினக் கண்காணிப்பு இயக்கமுறை, வலுவற்ற திட்டம் செயல்படுத்தும் திறன்கள்/வலுவற்ற உள்கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பல்வேறு தேவையுள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு குறைவான ஒதுக்கீட்டிற்கு வழிவகுக்கிறது. சில துறைகளில் அதிகப்படியான சேமிப்புகள் ஏற்படுவதால், பிற துறைகள் அந்நிதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பை இழக்க நேரிடுகிறது.

### 3.4.1 வரவு-செலவுத் திட்ட ஏற்பாடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியேயானவைக்கும் உள்ள இடைவெளி

2021-22 காலகட்டத்தில், உள்ளபடியேயான செலவினங்கள் (அனுமதித்த மானியங்கள்/சாட்டிய நிதியொதுக்கங்கள்) மற்றும் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு (முதல்நிலை மற்றும் துணைநிலை) ஆகியவற்றின் சுருக்க விவரங்கள் **அட்டவணை 3.9**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.9: உள்ளபடியேயான செலவினங்களுக்கெதிராக முதல் நிலை/துணை நிலை ஒதுக்கீடுகளின் நிலை**

**(₹ கோடியில்)**

| | செலவினத்தின் தன்மை | முதல் நிலை மானியம்/ நிதி-யொதுக்கம் | துணை நிலை மானியம்/ நிதி-யொதுக்கம் | மொத்தம் | உள்ளபடியே-யான செலவினம்[1] | சேமிப்பு (-)/ மிகை (+) | 31 மார்ச் 2022 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்ட தொகை | மார்ச் 2022 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்ட சேமிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனும-தித்தது | I வருவாய் | 7,877.99 | 429.43 | 8,307.42 | 7,784.22 | 523.20 | 43.90 | 8.39 |
| | II மூலதனம் | 292.10 | 3.11 | 295.21 | 136.22 | 158.99 | 72.28 | 45.46 |
| | III கடன்களும் முன்பணங்களும் | 0.50 | 0.00 | 0.50 | 0.06 | 0.44 | 0.42 | 95.45 |
| **மொத்தம் - அனுமதித்தது** | | **8,170.59** | **432.54** | **8,603.13** | **7,920.50** | **682.63** | **116.60** | **17.08** |
| சாட்டியது | IV வருவாய் | *845.98* | *141.61* | *987.59* | *971.33* | *16.26* | *0.08* | *0.49* |
| | V மூலதனம் | *22.97* | *29.52* | *52.49* | *34.98* | *17.51* | *0.01* | *0.06* |
| | VI பொதுக்கடன் - திருப்பிச் செலுத்தல் | *884.87* | *2.60* | *887.47* | *891.43* | *(-) 3.96* | *0.00* | *0.00* |
| ***மொத்தம் - சாட்டியது*** | | ***1,753.82*** | ***173.73*** | ***1,927.55*** | ***1,897.74*** | ***29.81*** | ***0.09*** | ***0.30*** |
| **பெரு மொத்தம்** | | **9,924.41** | **606.27** | **10,530.68** | **9,818.24** | **712.44** | **116.69** | **16.38** |

- ஒட்டுமொத்த சேமிப்பான ₹ 712.44 கோடியானது 2021–22ல் அந்தந்த மானியங்களுக்கெதிராக, துணைநிலை மானிய ஒதுக்கீட்டான ₹ 606.27 கோடியையும் சேர்த்து மொத்த ஒதுக்கீட்டில் 6.77 சதவீதமாக இருந்தது.

- ₹ 712.44 கோடி சேமிப்பில், நிதியாண்டின் கடைசி நாளன்று ₹ 116.69 கோடி ஒப்படைக்கப்பட்டது.

- வருவாய் பிரிவின்கீழ் 29 மானியங்கள் மற்றும் 13 நிதியொதுக்கங்களில் ₹ 539.47 கோடியும், மூலதன பிரிவின்கீழ் 16 மானியங்கள் மற்றும் 10 நிதியொதுக்கங்களில் ₹ 176.93 கோடியும் மற்றும் கடன்கள் பிரிவின்கீழ் ₹ 3.96 கோடி மிகையும் ஏற்பட்டது.

- முதல்நிலை ஒதுக்கீடான ₹ 10,530.68 கோடிக்கெதிராக, ₹ 9,818.24 கோடி செலவினம் ஏற்பட்டது. ஒட்டுமொத்த சேமிப்பான ₹ 712.44 கோடியைக் கருத்தில் கொண்டால், 18 மானியங்களில் வழங்கப்பட்ட துணைநிலை ஒதுக்கீடான ₹ 115.19 கோடி முழுவதுமாக தேவையற்றது மற்றும் 19 மானியங்களில் வழங்கப்பட்ட ₹ 454.48 கோடி பகுதியளவு தேவையற்றது என்பதும் நிரூபணமானது.

முதல்நிலை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளுடன் கடந்த ஐந்தாண்டு காலத்திற்கான செலவினங்களின் போக்குகள் **அட்டவணை 3.10**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

[1] செலவினக் குறைப்பாகக் காட்டப்பட்ட திரும்பச்செலுத்துகைகளைத் தவிர்த்தது.

**அட்டவணை 3.10: 2017-22 காலகட்டத்தில் முதல்நிலை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியேயான செலவினங்கள்**

**(₹ கோடியில்)**

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| முதல்நிலை ஒதுக்கீடு | 6,945.00 | 7,530.00 | 8,425.00 | 9,000.00 | 9,924.41 |
| துணைநிலை ஒதுக்கீடு | 644.01 | 432.68 | 463.26 | 256.04 | 606.27 |
| மொத்த ஒதுக்கீடு | 7,589.01 | 7,962.68 | 8,888.26 | 9,256.04 | 10,530.68 |
| உள்ளபடியேயான செலவினம் | 6,799.94 | 7,423.20 | 7,939.74 | 8,361.93 | 9,818.24 |
| சேமிப்பு (-)/மிகை (+) | (-) 789.07 | (-) 539.48 | (-) 948.52 | (-) 894.11 | (-) 712.44 |
| சேமிப்பின் சதவீதம் | 10.40 | 6.78 | 10.67 | 9.66 | 6.77 |

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

ஐந்தாண்டுகளிலும் துணைநிலை ஒதுக்கீட்டை விட சேமிப்புகள் மிக அதிகமாக இருந்ததென்பது தேவைகளின் முறையற்ற மதிப்பீட்டினை சுட்டிக்காட்டுகிறது என்பது **அட்டவணை 3.10**லிருந்து தெரியவருகிறது.

2017-18ல் மொத்த ஒதுக்கீட்டில் சேமிப்பானது 10.40 சதவீதத்திலிருந்து 2018-19ல் 6.78 சதவீதமாகக் குறைந்தாலும், 2019-20ல் அது 10.67 சதவீதமாக உயர்ந்து, 2020-21 மற்றும் 2021-22ல் மறுபடியும் குறைந்தது ஓர் நேர்மறையான போக்காகும்.

### 3.4.2 சேமிப்புகள்/மிகைக்கான காரணங்கள்

வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் ஏதேனும் பற்றாக்குறையோ அல்லது மிகையோ இருந்தால் அதற்காக விரிவான காரணங்களை துறைத் தலைவர்கள் வழங்கவேண்டும் என்று GFRன் விதி 57(7) கருத்துரைக்கிறது. எனினும், மறுநிதியொதுக்கத்தில், பல நேர்வுகளில் சேமிப்பு/மிகைக்கு பொதுவான காரணங்களே வழங்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. பொதுவான/குறிப்பிட்ட காரணங்கள் அளிக்கப்பட்ட நேர்வுகளின் விவரங்கள் **விளக்கப்படம் 3.5**ல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 3.5: நிதியொதுக்கக் கணக்குகளில் மாறுபாட்டிற்கான விளக்கங்களின் சுருக்கம்




காரணங்கள் தேவைப்படும் 1,284 துணைத் தலைப்புகளுக்கெதிராக, 679 துணைத் தலைப்புகளுக்கு குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் துறைகளால் அளிக்கப்படவில்லை என்பது **விளக்கப்படம் 3.5**லிருந்து தெரிகிறது. 13 மானியங்களில் விளக்கங்கள் வழங்கப்படாத நிலையை **அட்டவணை 3.11** விவரிக்கிறது.

**அட்டவணை 3.11: விளக்கங்கள் வழங்கப்படாத நேர்வுகளின் விவரங்கள்**

| வரிசை எண் | மானிய எண் மற்றும் பெயர் | காரணங்கள் தேவைப்படும் மொத்த துணைத் தலைப்புகள் | குறிப்பிட்ட விளக்கங்கள் வழங்கப் படாதவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 06 - வருவாய் மற்றும் உணவு | 57 | 24 | 42.11 |
| 2 | 10 - மாவட்ட நிர்வாகம் | 70 | 39 | 55.71 |
| 3 | 16 - பொதுப்பணிகள் | 77 | 38 | 49.35 |
| 4 | 17 - கல்வி | 141 | 78 | 55.32 |
| 5 | 18 - மருத்துவம் | 165 | 94 | 56.97 |
| 6 | 20 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 45 | 24 | 53.33 |
| 7 | 21 - சமூக நலன் | 144 | 61 | 42.36 |
| 8 | 24 - வேளாண்மை | 73 | 50 | 68.49 |
| 9 | 26 - மீன்வளம் | 41 | 26 | 63.41 |
| 10 | 27 - சமுதாய வளர்ச்சி | 22 | 14 | 63.64 |
| 11 | 28 - தொழில்கள் | 40 | 19 | 47.50 |
| 12 | 29 - மின்சாரம் | 54 | 31 | 57.41 |
| 13 | 32 - கட்டட செயல் திட்டங்கள் | 71 | 45 | 63.38 |

(ஆதாரம்: 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

சேமிப்புகள்/ஒப்படைப்புகளுக்கு குறிப்பான விவரங்கள் வழங்குவதை கருத்தில் கொள்வதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

### 3.4.3 வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட முக்கிய கொள்கை அறிவிப்புகள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கான உள்ளபடியேயான நிதி வழிமுறைகள்

திட்ட வழிகாட்டு நெறிமுறைகள்/முறைமைகள் அங்கீகரிக்கப்படாமை, பணிகள் தொடங்குவதற்கு நிர்வாக அனுமதி பெறப்படாமை, வரவு-செலவுத் திட்டத்தில் நிதிகள் விடுவிக்கப்படாமை போன்ற காரணங்களால் அரசால் செய்யப்பட்ட பல கொள்கை முயற்சிகள் பகுதியளவு செயல்படுத்தப்படுகிறது அல்லது முழுவதுமாக செயல்படுத்தப்படுவதில்லை. இதனால் பயனாளிகள் உத்தேசிக்கப்பட்ட பயன்களை இழக்க நேரிடுகிறது.

பல்வேறு துறைகளின் கீழ் 2021-22 வரவு-செலவுத் திட்ட உரையில் சில புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. எனினும், இத்திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடோ அல்லது எந்தச் செலவினமோ செய்யப்படவில்லை. செயல்படுத்தப்படாத திட்டங்களின் பட்டியலும் அதற்கான காரணங்களும் **அட்டவணை 3.12**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.12: 2021-22 வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள்**

| வரிசை எண் | துறையின் பெயர் | திட்டத்தின் பெயர் | காரணங்கள் |
|---|---|---|---|
| 1 | வேளாண்மை | ₹ 60 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து சமுதாயக் குழாய் கிணறுகளைக் கட்டுதல்/பழுது நீக்குதல் | துணை நிலை மானியத்தில் நிதி கோரப்படவில்லை. |
| 2 | மின்சாரம் | மரப்பாலம் துணை மின் நிலைய வளாகத்தில் GIS துணை மின் நிலையம் அமைத்தல் | தனியார்மயமாக்கல் காரணமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை என துறை குறிப்பிட்டது. தனியார்மயமாக்கல் செயல்முறை இன்னும் செயல்படுத்தப்படாததால் காரணம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 3 | பொதுப்பணிகள் | ஏம்பலம்-கரிக்கலாம்பாக்கத்தில் தற்போதுள்ள ஒற்றை வழிப் பாலத்தை இரட்டை வழிப் பாலமாக புனரமைத்தல். | திட்டம் துவங்கப்படவில்லை. |
| 4 | | ₹ 52.90 கோடி செலவில் காரைக்காலில் மீன் பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல் | தொழில் நுட்ப மற்றும் செலவின ஒப்புதல் அளிக்கப்படவில்லை. |
| 5 | | மாஹே பகுதியில் கூடுதல் விருந்தினர் விடுதி கட்டுதல் | சுற்றுலாத் துறையின் அனுமதி பெறப்படவேண்டும். வரவு-செலவு திட்டத்தில் நிதி பற்றிய உறுதி பெறப்பட |

| வரிசை எண் | துறையின் பெயர் | திட்டத்தின் பெயர் | காரணங்கள் |
|---|---|---|---|
| | | | வேண்டும். திருத்திய மதிப்பீடும் தயாரிக்கப்பட வேண்டும். |
| 6 | | மாஹேயில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு மற்றும் சிறப்பு விருந்தினர் விடுதி கட்டுதல் | இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. ஜூலை 2020ல் முதல்கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரிடம் சமர்ப்பிக்கப் பட்டது. வரைபடம் உறுதிப்படுத்துதல் மற்றும் ஒப்புதல் கடிதம் காவல் துறையிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. |
| 7 | | பல்லூர் சமுதாய சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்டுதல் | சுகாதாரத் துறை இன்னும் இடத்தை அடையாளம் காணவில்லை. |
| 8 | | மாஹே நதியின் மீது புதிய பாலம் மற்றும் மஞ்சக்கல் முதல் கல்லாயி வரை மதகு மற்றும் பாலம் அமைத்தல் | நிதி பற்றாக்குறையால் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 9 | | கடலோர காவல் நிலையம், மாஹே | மே 2021ல் ₹ 2.43 கோடிக்கு முதல்கட்ட மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது. திட்டத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் கடலோர ஒழுங்கு மண்டல அனுமதியும் காவல் துறையிடமிருந்து பெறப்பட வேண்டும். |

### 3.4.4 விரைவுச் செலவினம்

பொது நிதி விதிகள், 2017ன் விதி 62(3)ன் படி, குறிப்பாக நிதியாண்டின் இறுதி மாதங்களில் விரைவு செலவினங்கள் மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு மாறாக, **இணைப்பு 3.7**ல் பட்டியலிடப்பட்டுள்ள 97 துணைத் தலைப்புகளின்கீழ், மார்ச் 2022ல், ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மற்றும் மொத்த செலவினத்தில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன. **அட்டவணை 3.13**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பின்வரும் மானியங்களில் 2021-22ன் இறுதிக் காலாண்டில் பெருந்தொகை செலவிடப்பட்டது காணப்பட்டது.

**அட்டவணை 3.13: 2021-22ன் இறுதிக் காலாண்டில் பயன்படுத்தப்பட்ட நிதி**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | துறையின் பெயர் | மொத்தச் செலவினம் | இறுதிக் காலாண்டில் செய்யப்பட்ட செலவினம் | இறுதிக் காலாண்டில் பயன்படுத்தப்பட்ட நிதி (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 03 - சட்டப் பேரவை | 11.96 | 5.54 | 46.32 |
| 2 | 10 - மாவட்ட நிர்வாகம் | 173.69 | 90.91 | 52.34 |
| 3 | 19 - செய்தி மற்றும் விளம்பரம் | 36.13 | 21.12 | 58.46 |
| 4 | 28 - தொழில்கள் | 123.63 | 67.66 | 54.73 |

| வரிசை எண் | துறையின் பெயர் | மொத்தச் செலவினம் | இறுதிக் காலாண்டில் செய்யப்பட்ட செலவினம் | இறுதிக் காலாண்டில் பயன்படுத்தப்பட்ட நிதி (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 5 | 29 - மின்சாரம் | 2,330.65 | 952.27 | 40.86 |
| 6 | 30 - துறைமுகங்கள் மற்றும் கப்பல் வழிகாட்டல் | 6.76 | 2.74 | 40.53 |
| 7 | 32 - கட்டட செயல் திட்டங்கள் | 36.74 | 24.37 | 66.33 |
| 8 | 33 - பொதுக்கடன் | 1,822.58 | 1,052.98 | 57.77 |

வரவு-செலவுத் திட்ட கட்டுப்பாட்டு இயக்கமுறை மற்றும் சிறந்த நிதி மேலாண்மைக்கு முதன்மைத் தேவையான சீரான செலவின ஓட்டம் பேணப்படவில்லை என்பது **அட்டவணை 3.13** மூலம் தெரியவருகிறது.

2021-22 காலகட்டத்தில், யூனியன் பிரதேச அரசின் மாதாந்திர வரவினங்கள் மற்றும் செலவினங்களின் விவரங்கள் **விளக்கப்படம் 3.6ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.6: 2021-22 காலகட்டத்தில் மாதாந்திர வரவினங்கள் மற்றும் செலவினங்கள்**




மானிய எண் 10-மாவட்ட நிர்வாகம் மற்றும் மானிய எண் 28-தொழில்களின் கீழ் 2021-22 காலகட்டத்தில் செய்யப்பட்ட மாதவாரியான செலவினத்தில் கண்டறியப்பட்ட விரைவுச் செலவினம் **விளக்கப்படம் 3.7ல்** சித்தரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.7: மார்ச் 2022ல் மிகஅதிக சதவீத செலவினங்களுடன் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொழில் துறைகளின் மாதவாரியான செலவினம்**




2021-22 காலகட்டத்தில், மானிய எண் 10-மாவட்ட நிர்வாகம் மற்றும் மானிய எண் 28-தொழில்களின் கீழ், மொத்தச் செலவினமாக முறையே ₹ 173.58 கோடி மற்றும் ₹ 123.63 கோடி செலவிடப்பட்டுள்ளதை **விளக்கப்படம் 3.7**லிருந்து காணலாம். இந்த இரண்டு மானியங்களிலும், மார்ச் 2022ல் செய்யப்பட்ட செலவினம் மட்டும் ₹ 79.14 கோடி மற்றும் ₹ 53.94 கோடி, அதாவது மொத்தச் செலவினத்தில் முறையே 45.59 சதவீதம் மற்றும் 43.63 சதவீதம் ஆகும். நிதியாண்டின் இறுதியில் இந்த இரண்டு மானியங்களில் செய்யப்பட்ட விரைவுச் செலவினம் நிதி ஒழுங்குமுறையை மீறுவதாகக் கருதப்படுகிறது.

## 3.4.5 தெரிவு செய்யப்பட்ட மானியங்களின் பகுப்பாய்வு

மானிய எண் 27-சமுதாய வளர்ச்சியில் பின்பற்றப்பட்ட வரவு-செலவுத் திட்ட நடைமுறை மற்றும் செலவினம் மீதான கட்டுப்பாடு பற்றிய பகுப்பாய்வில் பின்வருவன கண்டறியப்பட்டன:

### *3.4.5.1* ஒதுக்கீடு மற்றும் செலவினம்

2021-22 காலகட்டத்தில், மானிய எண்-27ன் கீழ் செய்யப்பட்ட முதல்நிலை/துணைநிலை மானியம் மற்றும் உள்ளபடியேயான செலவினங்களின் சுருக்கம் அட்டவணை **3.14**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.14: மானிய எண்-27ன் கீழ் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் உள்ளபடியேயான செலவினத்தின் விவரங்கள்**

(₹ கோடியில்)

| | செலவினத்தின் தன்மை | முதல் நிலை மானியம் | துணை நிலை மானியம் | மொத்தம் | செலவினம் | சேமிப்பு (-)/ மிகை (+) | சேமிப்பின் சதவீதம் | ஒப்படைப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| **அனும-தித்தது** | I வருவாய் | 51.47 | 0.00 | **51.47** | 22.69 | (-) 28.78 | 55.92 | 4.23 |
| | II மூலதனம் | 0.00 | 0.00 | **0.00** | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| **மொத்தம்** | | **51.47** | **0.11** | **51.47** | **22.69** | **(-) 28.78** | **55.92** | **4.23** |

(ஆதாரம்: 2021-22 ஆண்டுக்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

அனுமதித்த மானியங்களின் வருவாய் பிரிவின் கீழ், மொத்த ஒதுக்கீடான ₹ 51.47 கோடிக்கெதிராக செலவிடப்பட்ட ₹ 22.69 கோடியானது, மொத்த ஒதுக்கீட்டில் 44.08 சதவீதம் என்பதை **அட்டவணை 3.14** மூலம் காணலாம். சேமிப்பான ₹ 28.78 கோடிக்கெதிராக, துறையானது ₹ 4.23 கோடியை மட்டுமே ஒப்படைப்பு செய்தது. மானியத்தில் 55 சதவீதத்திற்கும் அதிக அளவிலான சேமிப்பு தேவைப்பாட்டின் தவறான மதிப்பீட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

### *3.4.5.2* மறுநிதியொதுக்கம் மற்றும் ஒப்படைப்பு மூலமாக நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் திரும்பப்பெறுதல்

திருத்தப்பட்ட மதிப்பீட்டில் துறை பல்வேறு திட்டங்கள்/ பணிகளுக்காக கூடுதல் நிதிகளைக் கோரியது. ஒன்பது நேர்வுகளில், முதல்நிலை ஒதுக்கீடான ₹ 17.14 கோடிக்குக் கூடுதலாக, ₹ 5.06 கோடி மறுநிதியொதுக்கம் மூலம் வழங்கப்பட்டது காணப்பட்டது. அதன் விவரங்கள் **அட்டவணை 3.15**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.15: மறுநிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள்**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | கணக்குத் தலைப்பு | முதல் நிலை மானியம் | துணை நிலை மானியம் | மறுநிதி-யொதுக்கம் | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2505.02.101.08.01 | 50.00 | 0.00 | 30.14 | 80.14 | 0.00 | 80.14 |
| 2 | 2505.02.789.03.01 | 20.00 | 0.00 | 14.34 | 34.34 | 0.00 | 34.34 |
| 3 | 2515.00.102.01.01 | 723.66 | 0.00 | 46.63 | 770.29 | 765.73 | 4.56 |
| 4 | 2515.00.102.01.02 | 227.65 | 0.00 | 9.50 | 237.15 | 234.44 | 2.71 |
| 5 | 2515.00.102.01.03 | 37.11 | 0.00 | 0.92 | 38.03 | 38.02 | 0.01 |
| 6 | 2515.00.102.01.04 | 27.11 | 0.00 | 1.89 | 29.00 | 28.87 | 0.13 |
| 7 | 2515.00.102.08.02 | 5.30 | 0.00 | 0.85 | 6.15 | 0.52 | 5.63 |
| 8 | 2515.00.800.11.01 | 650.00 | 0.00 | 100.00 | 750.00 | 750.00 | 0.00 |
| 9 | 2515.00.800.12.01 | 0.00 | 0.01 | 301.99 | 302.00 | 0.00 | 302.00 |
| **மொத்தம்** | | **1,740.83** | **0.01** | **506.26** | **2247.10** | **1,817.58** | **429.52** |

₹ 18.18 கோடி மட்டுமே செலவினம் ஏற்பட்டதன் விளைவாக தேவையற்ற ஒதுக்கீடு மற்றும் மறுநிதியொதுக்கம் வாயிலாக பெறப்பட்டதில் ₹ 4.30 கோடி அளவு சேமிப்பு ஏற்பட்டதில் முடிந்தது என்பதை **அட்டவணை 3.15**லிருந்து காணலாம். மேலும் மூன்று நேர்வுகளில் மறுநிதியொதுக்கம் மூலமாக வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ₹ 3.46 கோடியும் இந்தத் தலைப்புகளில் எந்தவொரு தொகையும் செலவிடப்படாததால் பயன்படுத்தப்படவில்லை. இவற்றைத் தவிர, நான்கு துணைத் தலைப்புகளில் ₹ 18.26 கோடி ஒதுக்கப்பட்டதற்கெதிராக, ₹ 2.96 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இந்திய அரசிடமிருந்து மத்திய நிதியுதவித் திட்டங்களுக்கு குறைவாக நிதி பெறப்பட்டதே இதற்கு முக்கிய காரணமாகும். நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரங்கள் **அட்டவணை 3.16**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.16: வழங்கப்பட்ட நிதிகள் மற்றும் செய்யப்பட்ட செலவினங்களின் விவரங்கள்**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | கணக்குத் தலைப்பு | முதல் நிலை மற்றும் துணை நிலை மானியம் | மறுநிதி-யொதுக்கம் | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு | ஒப்படைப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2505.02.101.07.01 - தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌஷல்ய யோஜனா (CSS முன்னுரிமைத் திட்டம்) | 500.00 | (-) 228.28 | 271.72 | 33.24 | 238.48 | 222.72 |
| 2 | 2505.02.101.02.01 - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (CSS) | 775.00 | (-) 5.00 | 770.00 | 187.67 | 582.33 | 582.33 |
| 3 | 2505.02.101.04.01 - நிர்மல் பாரத் அபியான் - தூய்மை இந்தியா திட்டம் (கிராமம்) (CSS) | 200.00 | 0.00 | 200.00 | 0.00 | 200.00 | 200.00 |
| 4 | 2505.02.789.01.01 - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (CSS முன்னுரிமைத் திட்டம்) | 351.20 | (-) 51.20 | 300.00 | 75.00 | 225.00 | 0.00 |
| | **மொத்தம்** | **1,826.20** | **(-) 284.48** | **1,541.72** | **295.91** | **1,245.81** | **1,005.05** |

இந்திய அரசின் ஒப்பளிப்பு ஆணைகளின்படி, செயல்பாட்டு முகமைகள் தணிக்கை அறிக்கைகளுடன் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதை தணிக்கை நோக்கியது. இருப்பினும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பயன்பாட்டுச் சான்றிதழ்களை தாமதமாக சமர்ப்பித்தது மற்றும் தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் விளைவாக மத்திய அரசு ஊக்குதவித் திட்டத்திற்கான நிதிகள் சரியான நேரத்தில் பெறப்படவில்லை.

## 3.5 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

### தேவையற்ற துணைநிலை மானிய/மறுநிதியொதுக்கங்கள்

ஒவ்வொரு நேர்விலும் ₹ 50 இலட்சம் அல்லது அதற்கு மேல் துணைநிலை மானிய ஒதுக்கீடு செய்யப்பட்ட 14 நேர்வுகளில் பெறப்பட்ட ₹ 21.33 கோடி, முதல் நிலை ஒதுக்கீடு முழுவதுமாக செலவிடப்படாததால் அது முற்றிலும் தேவையற்றது என நிரூபணமானது. மேலும், 70 துணைத் தலைப்புகளைப் பொறுத்தமட்டில், ₹ 836.08 கோடி (முதல் நிலை மற்றும் துணைநிலை மானியம்) இருந்த போதிலும், மறுநிதியொதுக்க கட்டத்தில் கூடுதலாக ₹ 45.33 கோடி வழங்கப்பட்டது, இந்த துணைத் தலைப்புகளில் ₹ 716.69 கோடி மட்டுமே செலவிடப்பட்டு, இது முன்னதாக செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்குள்ளாகவே இருந்ததால், இது தேவையற்றது. இது போன்ற ஒதுக்கீடுகளைச் செய்வதில் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மெத்தனம் காட்டுவது மட்டுமல்லாமல், அரசின் வறிதான வரவு–செலவு திட்ட மேலாண்மையையும் இது சுட்டிக்காட்டுகிறது.

***பரிந்துரை:*** *தேவையற்ற துணைநிலை ஒதுக்கீடுகள்/மறுநிதியொதுக்கங்கள் தவிர்க்கப்படுவதை உறுதிசெய்ய யூனியன் பிரதேச அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.*

**(பத்திகள் 3.3.3 மற்றும் 3.3.4)**

### செலவிடப்படாத தொகை, சேமிப்புகள் ஒப்புவிக்கப்படாமை மற்றும் தொடர்ந்து நிகழும் சேமிப்புகள்

தலா ரூபாய் ஒரு கோடிக்கு மேல் 23 மானியங்கள்/நிதியொதுக்கங்களில், ₹ 705.76 கோடி அளவிற்கு சேமிப்பு இருந்தது. இந்த சேமிப்பில் ₹ 592.74 கோடி (83.99 சதவீதம்) ஒப்படைக்கப்படவில்லை. ஒப்புவிப்புகள்/ மறுநிதியொதுக்கங்கள் கூட நிதியாண்டின் கடைசி நாளில் செய்யப்பட்டது என்பது போதிய நிதிக் கட்டுப்பாடு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. 18 மானியங்களின் கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் ₹ 50 இலட்சத்திற்கும் மேல் தொடர் சேமிப்புகள் இருந்தன.

***பரிந்துரை:*** *சேமிப்புகள் குறைக்கப்படுவதையும், மானியங்கள்/ மறுநிதியொதுக்கத்தில் உள்ள பெரிய சேமிப்புகள் கட்டுப்படுத்தப் படுவதையும், எதிர்பார்க்கப்படும் சேமிப்புகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அடையாளம் காணப்பட்டு ஒப்புவிக்கப்படுவதையும் உறுதிசெய்ய, வரவு செலவுத் திட்டத்தை முறையானபடி செயல்படுத்த மற்றும் கண்காணிப்பை அமல்படுத்த, யூனியன் பிரதேச அரசு பொருத்தமான கட்டுப்பாட்டு பொறிமுறையை நிறுவுவதன் மூலம், அந்த நிதியை வேறு வளர்ச்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.*

**(பத்திகள் 3.3.5.1 மற்றும் 3.3.5.4)**

### விரைவுச் செலவினம்

₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மற்றும் மொத்த செலவினத்தில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும், மார்ச் 2022ல், 97 துணைத் தலைப்புகளின்கீழ் ₹ 520.29 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்பது நிதியாண்டின் இறுதி மாதங்களில் விரைவுச் செலவினங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள பொது நிதி விதிகள், 2017ன் விதி 62 (3)க்கு எதிரானதாகும்.

***பரிந்துரை:*** *கடைசி நேர ஒப்புவிப்பு மற்றும் விரைவுச் செலவினங்களைத் தவிர்க்க யூனியன் பிரதேச அரசு பொருத்தமான கட்டுப்பாட்டு நெறிமுறையை நிறுவ வேண்டும். செலவினங்களின் போக்கை தொடர்ந்து கண்காணிப்பதற்கான ஒரு நெறிமுறையை அது உருவாக்க வேண்டும்.*

**(பத்தி 3.4.4)**

# அத்தியாயம் IV

## கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்

# அத்தியாயம் IV: கணக்குகளின் தரம் மற்றும் நிதிசார் அறிக்கை நடைமுறைகள்

ஒரு சிறந்த உள் நிதி அறிக்கை முறைமையும் தொடர்புடைய விதிகள் மற்றும் நடைமுறைகளை அமல்படுத்துவதும் சிறப்பான மற்றும் திறனுடைய நிர்வாகத்திற்கு முக்கியப் பங்காற்றுகின்றன. நிதி விதிகள், நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் இவற்றுடன் இணக்கமாகவும், குறித்த நேரம் மற்றும் தரத்துடன் அறிக்கை அளித்தல் சிறந்த நிர்வாகத்திற்கான பண்புகளில் ஒன்றாகும். கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கத்தன்மை மீதான அறிக்கைகள் சிறப்பானதாகவும் செயல்படுத்தக் கூடியதாகவும் இருந்தால், நுணுக்கமான திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் ஆகிய அடிப்படைக் கடமைகளை நிறைவேற்ற அரசுக்கு உதவியாக இருக்கும்.

இந்த அத்தியாயம் யூனியன் பிரதேச அரசின் பல்வேறு துறைகளில் உள்ள அதிகாரிகள், அரசின் பல்வேறு நிதி விதிகள், நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணக்கமாக செயல்பட்ட நிலை பற்றிய உள்நோக்குப் பார்வையை வழங்குகிறது.

## 4.1 யூனியன் பிரதேச தொகுநிதி அல்லது பொதுக்கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்ட நிதி

புதுச்சேரி அரசு, புதுச்சேரி மோட்டார் வாகன (திருத்தம்) விதிகள், 2011ன்கீழ் ஓர் அறிவிக்கையை[1] வெளியிட்டது. ஓட்டுநர் உரிமம், பதிவுச் சான்றிதழ், வரி விதிப்பு மற்றும் அனுமதிச்சீட்டு ஆகியவற்றிற்கு சேவைக் கட்டணம் வசூலிக்கும் வகையில் புதிய விதி 252ஐ உள்ளிடும் விதமாக இந்த அறிவிக்கை அமைந்தது. இந்நோக்கத்திற்காக பொது நிதி விதிகளின் படி, போக்குவரத்து ஆணையர் கையாளும் விதமாக, ஒரு தனி வைப்புக் (PD) கணக்கு துவக்கப்படவேண்டும். மேலும், அவ்வாறு சேவைக் கட்டணம் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகையில் மின்னணு அட்டை வழங்குபவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதுடன், மீதத் தொகை ஏதாவது இருந்தால், அதை துறைக்கான வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொது நிதி விதிகள், 2017ன் விதி 97(1)ன்படி PD கணக்கு அரசுக் கணக்கின் ஓர் அங்கமாக பொதுக் கணக்கில் ஒரு பகுதியாக அமைந்திருக்க வேண்டும். சிவில் கணக்கு நடைமுறை நூலின் விதி 17.7.5ன்படி கணக்குகள் மற்றும் கருவூல இயக்குநரகம் மாதந்தோறும் வங்கி பட்டிகளுடன் இவற்றை ஒத்திசைவு செய்யவேண்டும்.

---

[1] 16 நவம்பர் 2011 தேதியிட்ட அரசு ஆணை Ms எண் 16/Tr.Sectt/2011.

போக்குவரத்துத் துறை, வசூலிக்கப்பட்ட கட்டணத்தை புதுச்சேரி பாரத ஸ்டேட் வங்கியில் நடப்புக் கணக்கை துவக்கியும் பாரதியார் கிராம வங்கியில் வைப்பு நிதியாக வைத்திருந்தும் மின்னணு அட்டை வழங்குபவர்களுக்கு பணத்தை செலுத்தியது. 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, இந்தக் கணக்கில் ₹ 9.41 கோடி (பாரத ஸ்டேட் வங்கியில் பேணப்பட்ட நடப்புக் கணக்கில் ₹ 6.06 கோடி மற்றும் புதுவை பாரதியார் கிராம வங்கியில் வைப்பு நிதியாக ₹ 3.35 கோடி) மீதமிருந்தது.

போக்குவரத்து துறையால் பேணப்படும் மேற்கூறிய கணக்கு பொதுக்கணக்கில் PD கணக்காக பிரதிபலிக்கவில்லை என்பது புதுச்சேரி யூனியன் பிரதேச நிதிக்கணக்குகளிலிருந்து தெரியவந்தது. இவ்வாறு, அரசுக் கணக்கிற்கு வெளியே PD கணக்கு பேணப்படுவது முறையற்றது. மேலும், யூனியன் பிரதேசத்தின் வருவாய் வசூலிப்புக்கான பொறுப்புணர்வு இல்லாமல் போகக்கூடிய அபாயமும் உள்ளது.

கணக்குகளை பராமரிப்பது தொடர்பான பொது நிதி விதிகள் பின்பற்றப்படுவதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023). தனி வைப்புக் கணக்கு அரசுக் கணக்கின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் மற்றும் பொதுக் கணக்கில் ஒரு பகுதியாக அமைந்திருக்க வேண்டுமென்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. எனவே, பொதுக்கணக்கிற்கு வெளியே நிதிகள் இருப்பது பொது நிதி விதிகளுக்கு எதிரானதாகும்.

## 4.2 வரவு–செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவான பொறுப்புகளை உள்ளடக்காமை

### ஒப்பந்ததாரர்களுக்கு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பொறுப்புகள் மற்றும் பிற பொறுப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை

எந்தவொரு ஆண்டிலும் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயார் செய்யும் போது, சம்பந்தப்பட்ட துறைகள், அந்த ஆண்டில் வரக்கூடிய வரவினங்கள் மற்றும் செலவினங்கள் இவற்றுடன் தீர்வு செய்யவேண்டிய ஏற்கப்பெற்ற பொறுப்புறுதிகளையும் விழிப்போடு கவனத்தில் கொள்ளவேண்டும். பொது நிதி விதிகள், 2017ன் விதி 50(3)ல் நடப்பாண்டில் தீர்க்கப்பட வேண்டிய முந்தைய ஆண்டுகளின் பொறுப்புறுதிகள் தக்கபடி மதிப்பீட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மானிய எண் 16 - பொதுப்பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளை கூர்ந்தாய்வு செய்ததில், மார்ச் 2021 அன்றுள்ளவாறு, ₹ 72.80 கோடி அளவிலான ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்புறுதிகள் பொதுப்பணித் துறையில் நிலுவையில் இருப்பது தெரிய வந்தது. மேலும், மார்ச் 2022 அன்றுள்ளவாறு, ₹ 3.88 கோடி அளவிற்கு ஒப்பந்ததாரர்களின் பட்டிகள்

பொறுப்புறுதியாக சேர்ந்து, ஏற்கப்பெற்ற நிலுவை பொறுப்புறுதி ₹ 76.68 கோடியாவதற்கு வழிவகுத்தது. அதே வேளையில், மானிய எண் 16ல் மூலதனப் பிரிவில் ₹ 99.28 கோடி சேமிப்பு காணப்பட்டது.

இதே போல், புதுச்சேரி மின்துறையில் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மார்ச் 2022 அன்றுள்ளவாறு நிலுவைத் தொகையாக ₹ 189.01 கோடி நிலுவைப் பொறுப்புறுதியாக உள்ளது.

பொறுப்புறுதிகளை தீர்க்க வருங்காலங்களில் ஒதுக்கீடு மேற்கொள்ளப் படுமென அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

## 4.3 வட்டி ஈட்டும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி செலுத்தும் பொறுப்பை மேற்கொள்ளாமை

யூனியன் பிரதேசத்தில் வட்டி பெறும் பிணை வைப்புத்தொகைகள் 8336 - 101 - பிணை வைப்புத்தொகை என்ற கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டு, யூனியன் பிரதேச வரவு–செலவுத் திட்டத்தில் வைப்புத்தொகைகளுக்கு வட்டியும் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்குத் தொகுப்பு, 2010ன் விதி 6.10 (8) மற்றும் மின்சாரச் சட்டம், 2003ன் பிரிவு 47 (4)ன் படி, மின் விநியோகிக்கும் உரிமதாரர் நுகர்வோரிடமிருந்து பிணை வைப்புத்தொகை பெற்ற நாளிலிருந்து இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது அறிவிக்கும் வங்கி வட்டி வீதப்படி வட்டி வழங்கவேண்டும். மேலும், இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கு தொகுப்பு, 2018ன் விதி 5.135ன் படி, அறிவிப்பிற்குப் பின்னர் செயல்படத் துவங்கிய புதிய இணைப்புகளுக்கு அத்தகைய பிணை வைப்புத்தொகை பெறப்பட்ட நாளிலிருந்தும், மற்றவர்களுக்கு இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கு தொகுப்பு, 2018ன் அறிவிப்பு வெளியான தேதியிலிருந்தும் அந்தந்த ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி அன்றுள்ளவாறு, பாரத ஸ்டேட் வங்கியின் அடிப்படை வட்டி வீதத்தில், உரிமதாரர், நுகர்வோரின் பிணை வைப்புத்தொகைக்கு ஆண்டு வட்டி வழங்கவேண்டும். இவ்வாறு, அந்த ஆண்டில் சேர்ந்த வட்டி தொடர்ந்து வரும் நிதியாண்டில் நுகர்வோரின் முதல் பட்டியில் சரி செய்யப்படவேண்டும்.

2019-20 முதல் 2021-22 வரையான ஆண்டுகளில் பிணை வைப்புத்தொகைக்கு செலுத்தப்படவேண்டிய வட்டி, இந்த பொறுப்புறுதிக்கான வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு, உள்ளபடியே கொடுக்கப்பட்ட வட்டி மற்றும் நிதி ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஆகியவை **அட்டவணை 4.1**ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1: பிணை வைப்புத்தொகைகளுக்கு செலுத்தவேண்டிய வட்டி விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | பிணை வைப்புத் தொகைக்கு செலுத்த வேண்டிய வட்டி | வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டில் பற்றாக்குறை அளவு (சதவீதத்தில்) | துறை செலுத்திய வட்டி* | சேமிப்பு | செலுத்த வேண்டிய வட்டி |
|---|---|---|---|---|---|---|
| 2019-20 | 13.14 | 5.38 | 59 | 5.11 | 0.27 | 8.03 |
| 2020-21 | 10.23 | 6.89 | 33 | 6.84 | 0.05 | 3.39 |
| 2021-22 | 9.52 | 7.00 | 26 | 6.92 | 0.08 | 2.60 |
| **மொத்தம்** | **32.89** | **19.27** | **41** | **18.87** | **0.40** | **14.02** |

*நிதிக் கணக்குகளில் 2049-60-101-01 என்ற கணக்குத் தலைப்பின்கீழ்

2019-22 காலகட்டத்தில் 26 முதல் 59 சதவீதம் வரை ஒதுக்கீட்டில் பற்றாக்குறை இருந்ததால், பிணை வைப்புத்தொகைகளின் வட்டி மீதான பொறுப்புறுதி ₹ 14.02 கோடி அளவிற்கு தீர்க்கப்படாமல் தொடர வழிவகுத்தது.

## 4.4 மாநில செயலாக்க முகமைகளுக்கு நேரிடையாக மாற்றம் செய்யப்பட்ட நிதி

இந்திய அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக யூனியன் பிரதேசத்திலுள்ள அரசுத் துறைகள்/செயலாக்க முகமைகளுக்கு இந்திய அரசு நிதியை நேரிடையாக மாற்றம் செய்கிறது. இந்த மாற்றங்கள் நிதிக் கணக்குகளின் தொகுதி IIன் இணைப்பு VIல் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிகள் யூனியன் பிரதேச அரசின் வரவு–செலவுத் திட்டம்/கருவூல அமைப்பு வழியாக செலுத்தப்படாததால், நிதிக் கணக்குகள் இந்த நிதிகள் வரும் விதத்தையோ அல்லது தொடர்புடைய செலவினத்தையோ காட்டாது.

2021-22ம் ஆண்டில், இந்திய அரசு பல்வேறு மத்தியத் திட்டங்களுக்காக ₹ 222.64 கோடியை நேரடியாக யூனியன் பிரதேச அரசுத் துறைகள்/செயலாக்க முகமைகளுக்கு மாற்றம் செய்தது. 2021-22ம் ஆண்டில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்திய அரசிடமிருந்து நேரடியாக ₹ ஒரு கோடிக்கும் மேலாக நிதியை பெற்ற முகமைகள் **அட்டவணை 4.2**ல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2: ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக செயலாக்க முகமைகளுக்கு இந்திய அரசால் நேரடியாக மாற்றம் செய்யப்பட்ட நிதிகள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | இந்திய அரசுத் திட்டங்களின் பெயர் | செயலாக்க முகமையின் பெயர் | 2021-22 காலகட்டத்தில் இந்திய அரசு விடுவித்த தொகை |
|---|---|---|---|
| 1 | தேசிய நீரியல் திட்டம் | புதுச்சேரி நீர்வள நிறுவனம் | 1.00 |
| 2 | இளைஞர்கள் மற்றும் இளம் பருவத்தினர் மேம்பாட்டிற்கான தேசிய திட்டம் | புதுச்சேரி யூனியன் பிரதேச அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் இயக்க ஆணையம் | 5.00 |
| 3 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளாட்சி மேம்பாட்டுத் திட்டம் (MPLAD) | திட்ட இயக்குநர், RDA, புதுச்சேரி | 9.50 |
| 4 | தேசிய கால்நடை பராமரிப்புத் திட்டம் | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத் துறை | 1.44 |
| 5 | NFSAன் கீழ் மாநிலங்களுக்குள் உணவு தானியங்களை கொண்டு செல்வதற்கும் நியாயவிலைக் கடை வணிகர்களின் ஆதாய விலைக்கும் மாநில முகமைகளுக்கு உதவி | பொது விநியோகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை, புதுச்சேரி | 2.25 |
| 6 | பிரதம மந்திரியின் உழவர் கௌரவ நிதி (PM-Kisan) | வேளாண் துறை, புதுச்சேரி | 6.17 |
| 7 | புதிய தொழில் முனைவோர் இந்தியா விதை நிதித் திட்டம் (SISFS) | AIC-பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி நிறுவனம் | 1.26 |
| 8 | SAMARTHYA (சக்தி சதன் (Swadhar Ujjawala Widow Home) Shakhi Niwas Palna PMMVY - பெண்களின் மேம்பாட்டிற்கான தேசிய மையம், பாலின தொகுதி ஆராய்ச்சி, திறன் பயிற்சி ஊடகம் போன்றவை) | மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, புதுச்சேரி | 2.39 |
| 9 | குடிநீர் வழங்கல் திட்டம்/தேசிய ஊரக குடிநீர் திட்டம் | புதுச்சேரி மாநில நீர் மற்றும் சுகாதார இயக்கம் (PSWSM) | 7.47 |
| 10 | பயண இலக்குகள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்தல் | புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டு கழக வரையம் | 5.00 |
| 11 | மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் | DRDA புதுச்சேரி | 3.96 |
| 12 | மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் | SEGF-Ne-FMS கணக்கு | 9.13 |
| 13 | தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாட்டுத் திட்டம் | புதுச்சேரி AIDS கட்டுப்பாட்டு அமைப்பு | 5.93 |

| வரிசை எண் | இந்திய அரசுத் திட்டங்களின் பெயர் | செயலாக்க முகமையின் பெயர் | 2021-22 காலகட்டத்தில் இந்திய அரசு விடுவித்த தொகை |
|---|---|---|---|
| 14 | குறிப்பிட்ட கருத்தை உள்ளடக்கிய சுற்றியுள்ள சுற்றுலா தலங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி (ஸ்வதேஷ் தர்ஷன்) | புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டு கழக வரையம் | 10.76 |
| 15 | தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பன்முக அடிப்படையில் உணவு தானியம் கொள்முதல் செய்ய உணவு மானியம் | பொது விநியோகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை, புதுச்சேரி | 142.11 |
| 16 | கடல் மாலைத் திட்டம் (Sagarmala) | DRDA புதுச்சேரி | 2.22 |
| மொத்தம் | | | 215.59 |

## 4.5 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தலில் காலதாமதம்

குறிப்பிட்ட நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்ட உதவி மானியங்களுக்கு, மானியம் பெற்ற அமைப்புகளிடமிருந்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், அந்த நிதியாண்டு முடிந்த 12 மாதங்களுக்குள் பயன்பாட்டுச் சான்றிதழ்களைப் பெற்று, அவை சரிபார்க்கப்பட்ட பின்னர், அந்த பயன்பாட்டுச் சான்றிதழ்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிதி செலவிடப்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்ள கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று பொது நிதி விதிகள்[2] வரையறுக்கின்றன.

மார்ச் 2022 அன்றுள்ளவாறு, 769 நேர்வுகளில் ₹ 502.16 கோடிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையிலிருந்தன. நிலுவையிலுள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்களின் ஆண்டுவாரியான விவரங்கள் **அட்டவணை 4.3**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

[2] பொது நிதி விதிகள், 2017ன் விதி 238.

**அட்டவணை 4.3: நிலுவையிலுள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்களின் ஆண்டுவாரியான விவரங்கள்**

| வரிசை எண் | ஆண்டு எண்ணிக்கையில் காலதாமதம் | நிலுவையிலுள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்கள் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
| 1 | 9 ஆண்டுகளுக்கும் மேல் | 199 | 37.91 |
| 2 | 9 முதல் 5 ஆண்டுகள் வரை | 88 | 47.88 |
| 3 | 5 முதல் ஓராண்டு வரை | 482 | 416.37 |
| **மொத்தம்** | | **769** | **502.16** |

(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் வழங்கிய தரவுகள்)

- 769 பயன்பாட்டுச் சான்றிதழ்களில், ₹ 37.91 கோடிக்கான (7.55 சதவீதம்) 199 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஒன்பது ஆண்டு காலத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ளது.
- ₹ 47.88 கோடிக்கான (9.53 சதவீதம்) 88 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஒன்பது முதல் ஐந்தாண்டு காலத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ளது.
- ₹ 416.37 கோடிக்கான (82.92 சதவீதம்) 482 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஐந்து முதல் ஓராண்டு காலத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

நிலுவையிலுள்ள ₹ 433.52 கோடிக்கான 576 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஆதி திராவிடர் நலன், உள்ளாட்சி நிர்வாகம், கிராமப்புற மேம்பாடு மற்றும் நகர் மற்றும் கிராமப்புற திட்டமிடல் துறைகளை சார்ந்ததாகும். பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிப்பதில் ஆண்டு வாரியான நிலுவைகள் **அட்டவணை 4.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4: பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிப்பதில் ஆண்டுவாரியான நிலுவைகள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | ஆரம்ப நிலுவை | தொகை | இறுதி நிலுவை | தொகை |
|---|---|---|---|---|
| 2017-18 வரை | 351 | 106.66 | 417 | 232.18 |
| 2018-19 | 417 | 232.18 | 492 | 336.65 |
| 2019-20 | 492 | 336.65 | 587 | 376.93 |
| 2020-21 | 587 | 376.93 | 769 | 502.16 |
| 2021-22 | 769 | 502.16 | 278 | 207.25 |

* 2021-22 காலகட்டத்தில் வழங்கப்பட்ட உதவி மானியங்களுக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் 2022-23ல் நிலுவையாகும்.

(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் வழங்கிய தரவுகள்)

துறைவாரியாக நிலுவையிலுள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்களின் விவரங்கள் **விளக்கப்படம் 4.1**ல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.1 : பத்து முக்கிய துறைகளில் 2021-22 வரை வழங்கப்பட்ட மானியங்களுக்கான நிலுவையிலுள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்கள்**




(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் வழங்கிய தரவுகள்)

பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாதது என்பது கடந்த காலங்களில் நிதிகள் எவ்வாறு செலவிடப்பட்டது என்பதை அதிகாரிகள் விளக்காததே ஆகும். எனவே, மானியங்களிலிருந்து செய்யப்பட்ட செலவினங்கள் உண்மையில் அது அங்கீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காகத்தான் செய்யப்பட்டது என்பதற்கான உத்திரவாதம் இல்லை. பயன்பாட்டுச் சான்றிதழ்களில் அதிகமான நிலுவை, நிதிகள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதற்கான அபாயத்துடன் தொடர்பு இருப்பதால், யூனியன் பிரதேச அரசு இந்நிகழ்வை தீவிரமாக கண்காணித்து சம்பந்தப்பட்ட நபர்களை குறிப்பிட்ட காலத்தில் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க பொறுப்பாக்க வேண்டும்.

## 4.6 தற்காலிக முன்பணங்களை சரிகட்டாமை

யூனியன் பிரதேச அரசின் குறிப்பிட்ட ஒப்புகைகளின்படியோ அல்லது நிலையான ஆணைகளின் அடிப்படையிலோ பணம் பெற்று வழங்கும் அதிகாரிகள் (Drawing and Disbursing Officers - DDOக்கள்) எதிர்பாரா மற்றும் இதரச் செலவினங்களை எதிர்கொள்ள தற்காலிக முன்பணங்களைப் பெறுகிறார்கள். பொது நிதி விதிகள், 2017ன் விதி 323 (2)ன்படி, முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் 15 நாட்களுக்குள் மீதத்தொகை ஏதாவது இருப்பின் அவற்றோடு சரிகட்டும் பட்டிகளை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அந்த முன்பணங்கள்/மீதத் தொகைகள் அரசு ஊழியர்களின் அடுத்த மாத சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

புதுச்சேரி கணக்குகள் மற்றும் கருவூல இயக்குநரகத்தின் பதிவுருக்களின் படி, மொத்தமுள்ள 656 DDOக்களில், 192 DDOக்களுக்குத் தொடர்புடைய ₹ 130.70 கோடிக்கான 1,100 முன்பணங்கள் 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு நிலுவையில் இருந்தன. நிலுவையிலுள்ள முன்பணங்களின் காலவாரியான பகுப்பாய்வு **அட்டவணை 4.5**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5: நிலவையிலுள்ள முன்பணங்களின் காலவாரியான பகுப்பாய்வு**

| வரிசை எண் | நிலுவையின் காலம் | முன்பணங்களின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பத்தாண்டுகளுக்கு மேல் | 296 | 17.65 |
| 2 | ஐந்தாண்டுகளுக்கு மேல் பத்தாண்டுகளுக்குள் | 156 | 9.15 |
| 3 | ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகளுக்குள் | 575 | 69.92 |
| 4 | ஓராண்டுக்கும் குறைவாக | 73 | 33.98 |
| **மொத்தம்** | | **1,100** | **130.70** |

(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் வழங்கிய தரவுகள்)

துறைவாரியாக நிலுவையிலுள்ள முன்பணங்களின் விவரங்கள் **விளக்கப்படம் 4.2**ல் சித்தரிக்கப்பட்டுள்ளது.




(ஆதாரம்: கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் வழங்கிய தரவுகள்)

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, ₹ 17.65 கோடிக்கான 296 முன்பணங்கள் நிலுவையில் இருப்பது, முன்பணங்கள் சரிகட்டுவது தொடர்பாக கருத்துரைக்கப்பட்ட விதிமுறைகளை அமலாக்கம் செய்ய துறைகள் தீவிரம் காட்டவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. மேலும், அந்தந்த

நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ₹ 130.70 கோடிக்கான செலவினங்கள் உண்மையில் அது சட்டப்பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக தான் செய்யப்பட்டது என்பதற்கான உத்திரவாதமும் இல்லை. முன்பணங்கள் பெறப்பட்டு கணக்கிடப்படாதது, வீணடித்தல்/ முறைகேடு/தவறிழைத்தல் ஆகியவற்றிற்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கக்கூடும்.

பயன்பாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தற்காலிக முன்பண நிலுவைகளை விரைந்து தீர்க்க கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகம் சுற்றறிக்கைகளை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

## 4.7 கணக்குச் சிறு தலைப்பு '800'ஐ பாகுபாடற்ற வகையில் உபயோகித்தல்

கணக்குகளில் பொருத்தமான சிறு தலைப்புகள் கொடுக்கப்படாதபோது மட்டுமே, சிறு தலைப்பு "800 - பிற வரவினங்கள்/பிற செலவினங்கள்" இயக்கப்பட வேண்டும். சிறு தலைப்பு 800ஐ தொடர்ந்து இயக்கும் போக்கை தவிர்க்கவேண்டும். ஏனெனில், அது கணக்குகளைத் தெளிவற்றதாக்கி விடும்.

2017-18 முதல் 2021-22 வரை ஏற்பட்ட மொத்த வருவாய் செலவினங்கள்/வரவினங்கள், "800-பிற செலவினங்கள்/ வரவினங்கள்" என்ற சிறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினங்கள்/ வரவினங்கள் மற்றும் வருவாய் வரவினங்கள்/செலவினங்களில் அதன் சதவீதம் ஆகியவை **விளக்கப்படம் 4.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.3: 2017-22 காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்ட சிறு தலைப்பு '800 – பிற வரவினங்கள்/செலவினங்கள்'**




அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிலக்கங்கள் வருவாய் வரவினங்கள்/வருவாய் செலவினங்களின் சதவீதத்தைக் குறிக்கும்

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதிக் கணக்குகள்)

விளக்கப்படம் 4.4: மொத்தச் செலவினத்தில் "800 - பிற செலவினங்கள்"




2021-22ல் பத்து பெருந்தலைப்புகளின் கீழ் ₹ 2,389.24 கோடி அளவிற்கு (இந்தத் தலைப்புகளின் மொத்தச் செலவினமான ₹ 2,641.53 கோடியில் 90.45 சதவீதம்) சிறு தலைப்பு "800 - பிற செலவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. "2217-நகர்ப்புற மேம்பாடு", "2801-மின் திட்டங்கள்" மற்றும் "3456-குடிமைப் பொருள் வழங்கல்" ஆகிய தலைப்புகளில், பெருந்தலைப்புகளின் கீழுள்ள தொடர்புடைய சிறு தலைப்புகளின் கீழ் காட்டப்படவேண்டிய பெருவாரியான செலவினங்கள் தற்காலிக சிறு தலைப்பு "800-பிற செலவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விவரங்கள் **இணைப்பு 4.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 4.5: மொத்த வரவினத்தில் "800 - பிற வரவினங்கள்"




இதே போல், பத்து பெருந்தலைப்புகளின் கீழ் ₹ 17.47 கோடிக்கான வருவாய் வரவினங்கள் (இத்தலைப்புகளில் மொத்த வரவினமான ₹ 18.38 கோடியில் 95.05 சதவீதம்) சிறு தலைப்பு "800 - பிற வரவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. "0059 - பொதுப் பணி", "0216 - வீட்டுவசதி, "1051 - துறைமுகங்கள் மற்றும் கலங்கரை விளக்கங்கள்" மற்றும் "1452 - சுற்றுலா" ஆகிய தலைப்புகளில், பெருந்தலைப்புகளின் கீழுள்ள தொடர்புடைய சிறு தலைப்புகளின் கீழ் காட்டப்படவேண்டிய பெருவாரியான வரவினங்கள் தற்காலிக சிறு தலைப்பு "800-பிற வரவினங்களின்" கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விவரங்கள் **இணைப்பு 4.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக சிறு தலைப்பு "800-பிற செலவினங்கள்/வரவினங்களின்" கீழ் ₹ 2,406.71 கோடியை வகைப்படுத்தியது நிதிஅறிக்கை அளித்தலில் வெளிப்படைத்தன்மை இல்லை என்பதை பிரதிபலிக்கிறது.

பள்ளிக் கல்வி மற்றும் மின் துறைகளைப் பொறுத்தவரை, கணக்குத் தலைப்புகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருப்பதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

## 4.8 தன்னாட்சி அமைப்புகள் ஆண்டுக்கணக்குகள்/தனி தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிக்காமை

இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1971ன் பிரிவுகள் 14 மற்றும் 15ன் படியும் தணிக்கை மற்றும் கணக்குகள் வரைமுறைகள், 2020ன் பத்தி 88 படியும் தணிக்கைக்குத் தகுதி பெறும் நிறுவனங்களை அடையாளம் காண்பதற்காக, பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள், நிதியுதவி வழங்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அந்த நிறுவனங்களின் மொத்தச் செலவினம் பற்றிய விரிவான விவரங்களை ஒவ்வொரு ஆண்டும் அரசு/துறைத்தலைவர்கள் கணக்காய்வு தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்டபடி இந்த விவரங்களை துறைகள் தணிக்கைக்கு வழங்கவில்லை. எனினும், கணக்குகள் மற்றும் கருவூலங்கள் இயக்குநரகத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தணிக்கை மேற்கொள்வதற்கு நிறுவனங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1971ன் பிரிவுகள் 14 மற்றும் 15ன்படி, 70 தன்னாட்சி அமைப்புகளில் தணிக்கை நடத்தப்படுகிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள இரண்டு தன்னாட்சி அமைப்புகள்/குழுமங்கள் மீதான தணிக்கை, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1971ன் பிரிவு 19(2)ன் கீழ் நடத்தப்படுகிறது.

கணக்குகள் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்குகள் சமர்ப்பிக்காத அமைப்புகளின் விவரங்கள் **இணைப்பு 4.3**லும், காலவாரியான நிலுவை விவரம் **அட்டவணை 4.6**லும் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.6: தன்னாட்சி அமைப்புகள்/குழுமங்களிடமிருந்து பெறப்படவேண்டிய ஆண்டுக்கணக்குகளின் காலவாரியான நிலுவைகள்**

| வரிசை எண் | நிலுவை (ஆண்டுகளில்) | அமைப்புகள்/குழுமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக | 17 |
| 2 | 5 முதல் 3 ஆண்டுகள் வரை | 15 |
| 3 | 2 முதல் ஓராண்டு வரை | 29 |
| | **மொத்தம்** | **61** |

(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த தகவல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)

துறைகள் விவரங்களைத் தெரிவிக்காததாலும், அரசின் நிதியுதவிகளை பெற்ற தன்னாட்சி அமைப்புகள்/குழுமங்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்படாததாலும், அரசு மானியங்கள் குறித்துரைக்கப்பட்ட

நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என உறுதி செய்து கொள்ள இயலவில்லை. கணக்குகள் சமர்ப்பிக்கப்படாதது, பொது நிதி விதிகள், 2017ன் விதி 236ஐ மீறிய செயலாகும். கணக்குகளை இறுதி செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் ஏற்படும் தாமதம், மானியங்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதா என சட்டப்பேரவைக்கு உறுதி அளிப்பதில் தணிக்கைக்கு இடையூறை விளைவிக்கும்.

அமைப்புகள்/குழுமங்களின் அதிகாரிகள் கணக்குகளை வழங்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அரசு தெரிவித்தது (மார்ச் 2023).

## 4.9 முறைகேடுகள், இழப்புகள், களவுகள் போன்றவை

முறைகேடு, இழப்பு, களவு மற்றும் பொதுப் பணக்கையாடல்களில் அரசுப் பணம் மற்றும் சொத்துக்களில் இழப்பு அல்லது குறைவு நேர்ந்தால் அதை அடுத்த உயர் அதிகாரியிடமும் மற்றும் சட்டமுறை தணிக்கை அதிகாரிக்கும் அலுவலக தலைவர்கள் தெரிவிக்க வேண்டும் என பொது நிதி விதிகள், 2017ன் விதிகள் 33 மற்றும் 34 வலியுறுத்துகின்றன.

மார்ச் 2022 வரையில் இறுதி நடவடிக்கை நிலுவையிலுள்ள 322 நேர்வுகளில் ₹ 27.98 கோடிக்கான அரசுப் பணம், முறைகேடு, இழப்பு மற்றும் பணக்கையாடல்கள் செய்யப்பட்டுள்ளதாக யூனியன் பிரதேச அரசுத்துறைகள் தெரிவித்திருந்தன. துறைவாரியான நிலுவையிலுள்ள நேர்வுகளும், அவற்றின் தன்மையும் **இணைப்பு 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 26.55 கோடியை உள்ளடக்கிய 255 நேர்வுகள் மின்துறையைச் சார்ந்ததே ஆகும்.

காலவாரியாக நிலுவையிலுள்ள களவு மற்றும் முறைகேடு/இழப்பு போன்ற நேர்வுகள் **அட்டவணை 4.7**ல் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.7: முறைகேடு/இழப்பு மற்றும் பணக்கையாடல்களின் காலவாரியான குறிப்பு**

| ஆண்டுகளின் ஈரெல்லை | நேர்வுகளின் எண்ணிக்கை | உள்ளடக்கிய தொகை (₹ இலட்சத்தில்) |
|---|---|---|
| 25 **ஆண்டுகளுக்கு மேல்** | 91 | 6.95 |
| 20-25 | 96 | 11.14 |
| 15-20 | 62 | 213.23 |
| 10-15 | 20 | 2,475.61 |
| 5 - 10 | 34 | 55.62 |
| 0 - 5 | 19 | 35.88 |
| **மொத்தம்** | **322** | **2,798.43** |

(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த தகவல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)

நிலுவையிலுள்ள களவு மற்றும் முறைகேடு/இழப்பு போன்ற நேர்வுகள் நிலுவையில் இருப்பதற்கான காரணங்கள் **அட்டவணை 4.8ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.8: களவு மற்றும் முறைகேடு/இழப்பு மற்றும் பணக்கையாடல் நேர்வுகளின் நிலுவைக்கான காரணங்கள்**

| நிலுவைக்கான காரணங்கள் | | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (i) | துறைரீதியான மற்றும் குற்றரீதியான விசாரணையை எதிர்நோக்கியுள்ளவை | 17 | 8.74 |
| (ii) | துறை நடவடிக்கை தொடங்கப்பட்டு முடிவுறாமல் இருப்பவை/நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளவை | 33 | 2,715.82 |
| (iii) | வசூல் செய்ய அல்லது தள்ளுபடி செய்ய ஆணைகளை எதிர்நோக்கியுள்ளவை | 272 | 73.87 |
| **மொத்தம்** | | **322** | **2,798.43** |

(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த தகவல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)

ரூபாய் 27.25 கோடியை உள்ளடக்கிய 50 நேர்வுகளில் முறைகேடு மற்றும் களவு/பொருள் இழப்பு போன்ற நேர்வுகளுக்கான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது; ஆனால், விசாரணை முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## 4.10 யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான பின்தொடர் நடவடிக்கை

2008-09 முதல் யூனியன் பிரதேச நிதிகளின் மீது தனி அறிக்கை தயாரிக்கப்பட்டு யூனியன் பிரதேச சட்டப்பேரவைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. 2020-21ம் ஆண்டு வரையிலான யூனியன் பிரதேச நிதிநிலை தணிக்கை அறிக்கைகள் யூனியன் பிரதேச சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2014-15ம் ஆண்டு வரையிலான அறிக்கைகள் பொதுக்கணக்குக் குழுவில் விவாதிக்கப்பட்டுள்ளது. 2015-16ம் ஆண்டு முதல் 2020-21ம் ஆண்டு வரை, 91 பத்திகள் பொதுக்கணக்குக் குழுவின் விவாதத்திற்காக நிலுவையிலுள்ளன.

## 4.11 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

ரூபாய் 502.16 கோடி அளவிற்கு பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பது, துறை அதிகாரிகளின் விதிகளுக்கு இணங்காமை மற்றும் பொறுப்புறுதிகளை உறுதி செய்யத் தவறியது என்பது மானியங்கள் வழங்கும் நோக்கை முறியடிப்பதை சுட்டிக்காட்டியது. அத்தகைய பயன்பாட்டுச் சான்றிதழ்கள் மூலதன உருவாக்கத்திற்கான

**உதவித்தொகைக்கு எதிராக நிலுவையில் இருந்தால், அது அதிக முக்கியத்துவம் பெறும்.**

**பல ஆண்டுகளாக ₹ 130.70 கோடி அளவிற்கான தற்காலிக முன்பணங்கள் சரிசெய்யப்படாதது, முன்பணங்களை சரிசெய்தல் தொடர்பான விதிகளை அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் மெத்தன போக்கை காட்டுகிறது.**

**பரிந்துரை:** ***கட்டுப்பாட்டு அதிகாரிகள் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதையும் தற்காலிக முன்பணங்களை சரியாக காலத்தில் சரிசெய்வதை உறுதி செய்வதுடன், அவ்வாறு செய்யத் தவறியவர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்க வேண்டும். பயன்பாட்டு சான்றிதழ்கள் மற்றும் தற்காலிக முன்பணங்கள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதையும் சரிகட்டப்படுவதையும் உறுதி செய்ய அரசு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு மற்றும் கண்காணிப்பு அமைப்பில் ஒரு பொருத்தமான கட்டமைப்பை மேற்கொள்வதை பரிசீலிக்கலாம்.***

**(பத்திகள் 4.5 மற்றும் 4.6)**

**மார்ச் 2022 நிலவரப்படி, தன்னாட்சி அமைப்புகள்/குழுமங்கள் தொடர்பான 61 கணக்குகள் இறுதி செய்வதற்காக நிலுவையில் உள்ளன. மேலும், நிலுவையின் காலஅளவு ஓராண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உள்ளது.**

**பரிந்துரை:** ***நிலுவையில் உள்ள கணக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரிகளின் மீது யூனியன் பிரதேச அரசு பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும்.***

**(பத்தி 4.8)**

# அத்தியாயம் V

# யூனியன் பிரதேச

# பொதுத்துறை நிறுவனங்கள்

# அத்தியாயம் V: யூனியன் பிரதேச பொதுத்துறை நிறுவனங்கள்

அரசு பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட நிதிச் செயலாக்கத்தைப் பற்றி இவ்வத்தியாயம் விவாதிக்கிறது. அரசு நிறுவனங்கள் மற்றும் அத்தகைய அரசு நிறுவனங்களின் துணை நிறுவனங்களின் முதலீட்டில் 51 சதவீதம் அல்லது அதற்கும் மேலாக யூனியன் பிரதேச அரசு நேரடியாக முதலீடு செய்திருந்தால், அவை யூனியன் பிரதேசத்தின் பொதுத்துறை நிறுவனங்கள் எனப்படும்.

## 5.1 அரசு நிறுவனங்களின் பொருள் வரையறை

அரசு நிறுவனம் என்பது அதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 51 சதவீதத்திற்கு குறையாமல், மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது மாநில அரசுகள் அல்லது மத்திய அரசு மற்றும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளோ இணைந்து முதலீடு செய்திருந்தால் அவை அரசு நிறுவனம் என நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 2 (45)ன் கீழ் வரையறுக்கப்படுகிறது. மேலும், அரசு நிறுவனத்தின் துணை நிறுவனமும் இதில் அடங்கும்.

## 5.2 உரிமைக் கட்டளை

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143(5) முதல் 143(7) வரையிலான பிரிவுகளின் கீழும், இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி விதிமுறைகள்) சட்டம் 1971ன் பிரிவு 19 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழும், அரசு நிறுவனங்களின் தணிக்கை, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரால் (CAG) மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ், பட்டயக் கணக்காளர்களை நிறுவனங்களுக்கான சட்டமுறை தணிக்கையாளர்களாக, நிறுவனங்கள் சட்டம், 2013ன் சட்டப்பிரிவு 139 (5) மற்றும் (7)ன்கீழ், CAGயால் நியமிக்கப்பட்டு, கணக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டிய வழிமுறைகள் வழங்கப்படுகிறது. மேலும், துணைத் தணிக்கையை மேற்கொள்ளவும் மற்றும் சட்டமுறைத் தணிக்கையாளர்களின் தணிக்கை அறிக்கையின் மீது கருத்துக்களை வெளியிடவும் மற்றும் கூடுதல் அறிக்கை வழங்கவும் CAGக்கு உரிமை உண்டு.

## 5.3 பொதுத்துறை நிறுவனங்களின் பரப்பு மற்றும் தன்மை

**அட்டவணை 5.1**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, 13[1] பொதுத்துறை நிறுவனங்கள் (ஒரு செயல்படாத பொதுத்துறை நிறுவனம்[2] உள்பட) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை அதிகாரத்தின் கீழ் இருந்தது.

**அட்டவணை 5.1: இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பரப்பு மற்றும் தன்மை**

| பொதுத்துறை நிறுவனங்களின் தன்மை | பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட யூனியன் பிரதேச பொதுத்துறை நிறுவனங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட கணக்குகள் | | | 2018-19[3] மற்றும் அதற்கு முந்தையவை | மொத்தம் |
| | | 2021-22 | 2020-21 | 2019-20 | | |
| செயல்படும் அரசு நிறுவனங்கள் | 12 | இல்லை | 2 | 1 | 9 | 12 |
| மொத்த நிறுவனங்கள் | 12 | இல்லை | 2 | 1 | 9 | 12 |
| செயல்படாத அரசு நிறுவனங்கள் | 1# | -- | -- | -- | | -- |
| **மொத்தம்** | **13** | **இல்லை** | **2** | **1** | **9** | **12** |

\# பாண்டிச்சேரி மின்னணு வரையம் (PELECON) தனது நிறுவனத்தை மூடும் நடவடிக்கையை 2013-14லிருந்து மேற்கொண்டுள்ளது. மேலும், அதன் கணக்குகள் எதிர்பார்க்கப்படவில்லை.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்டமுறைக் கழகங்கள் எதுவும் இல்லை. 2021-22 காலகட்டத்தில் CAGயின் தணிக்கை அதிகாரத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனங்களின் விவரங்கள் **இணைப்பு 5.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் எந்த நிறுவனங்களும் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படவில்லை.

## 5.4 யூனியன் பிரதேச GSDPயில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு

மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GSDP) பொதுத்துறை நிறுவனங்களின் விற்றுமுதல் விகிதம், யூனியன் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டின் அளவை வெளிப்படுத்துகின்றன. 31 மார்ச் 2022 அன்றுடன் முடிவடைந்த

---

[1] அனைத்து 13 பொதுத்துறை நிறுவனங்களும் அரசு நிறுவனங்களாகும்.

[2] எந்தவொரு வணிகத்தையும் அல்லது செயல்பாட்டையும் மேற்கொள்ளாதவை செயல்படாத பொதுத்துறை நிறுவனங்கள் எனப்படுகின்றன மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 455ன் கீழ் 'செயலற்ற நிறுவனம்' என வரையறுக்கப்பட்டுள்ள இவை இந்த அறிக்கையில் "செயல்படாத நிறுவனங்கள்" எனப்படுகின்றன.

[3] ஆண்டுகளுக்கான கணக்குகள் - 2012-13:1, 2013-14:1, 2014-15:2, 2015-16:1, 2016-17: 2, 2017-18: 1 மற்றும் 2018-19:1.

மூன்றாண்டு காலகட்டத்திற்கான பொதுத்துறை நிறுவனங்களின் விற்றுமுதல் மற்றும் GSDPயின் விவரங்கள் **அட்டவணை 5.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2: பொதுத்துறை நிறுவனங்களின் விற்றுமுதல் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் GSDPயின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| விவரங்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|
| விற்றுமுதல் | 414.89 | 435.46 | 387.75 |
| புதுச்சேரியின் GSDP | 36,724 | 35,685 | 37,485 |
| புதுச்சேரியின் GSDPக்கும் விற்றுமுதலுக்கும் உள்ள சதவீதம் | 1.13 | 1.22 | 1.03 |

அந்தந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி, இந்த பொதுத்துறை நிறுவனங்களின் வருவாய் 2020-21ஐ ஒப்பிடுகையில் 2021-22ல் 10.98 சதவீத வீழ்ச்சி அடைந்திருந்தது. எனினும், GSDPயில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மிகக் குறைந்த அளவே இருந்தது.

## 5.5 யூனியன் பிரதேச அரசு நிறுவனங்களில் முதலீடுகள்

### 5.5.1 பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் கடன்கள்

**அட்டவணை 5.3**ல் கண்டுள்ளபடி, 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு செயல்படும் 12[4] யூனியன் பிரதேச அரசு நிறுவனங்களில் பங்கு மூலதனமாகவும் கடனாகவும் அளிக்கப்பட்ட முதலீடு ₹ 731.81 கோடி (31.03.2021 வரை ₹ 738.03 கோடி) ஆகும்.

**அட்டவணை 5.3: அரசு நிறுவனங்களில் பங்கு மூலதன முதலீடு மற்றும் கடன்கள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | முதலீடுகளின் ஆதாரங்கள் | 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு | | | 31 மார்ச் 2021 அன்றுள்ளவாறு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பங்கு மூலதனம் | நீண்டகால கடன்கள் | மொத்தம் | பங்கு மூலதனம் | நீண்டகால கடன்கள் | மொத்தம் |
| 1. | யூனியன் பிரதேச அரசு | 712.39 | 9.15 | 721.54 | 712.39 | 10.67 | 723.06 |
| 2. | மத்திய அரசு | 1.68 | 0.00 | 1.68 | 1.68 | 0.00 | 1.68 |
| 3. | நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனையவை | 8.59 | 0.00 | 8.59 | 8.59 | 4.70 | 13.29 |
| **மொத்தம்** | | **722.66** | **9.15** | **731.81** | **722.66** | **15.37** | **738.03** |
| மொத்த முதலீட்டில் யூனியன் பிரதேசத்தின் முதலீட்டின் சதவீதம் | | 98.58 | 100 | 98.60 | 98.58 | 69.42 | 97.97 |

(ஆதாரம்: பொதுத்துறை நிறுவனங்கள் அளித்த விவரங்கள்)

4 பன்னிரெண்டு பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளும் ஒன்று முதல் ஒன்பது ஆண்டுகள் வரை நிலுவையில் இருந்தன.

31 மார்ச் 2022 அன்றுள்ளபடி, 12 அரசு நிறுவனங்களில் மூன்று[5] பொதுத்துறை நிறுவனங்களில் யூனியன் பிரதேச அரசிடமிருந்து பெற்ற நீண்ட காலக் கடன்கள் ₹ 9.15 கோடி நிலுவையில் இருந்தது. 2021-22ல், அரசு நிறுவனங்களின் நீண்ட கால கடன்கள் ₹ 1.52 கோடி அளவிற்கு குறைந்து காணப்பட்டது.

### 5.5.2 பங்கு விலக்கல், மறுசீரமைப்பு மற்றும் தனியார்மயமாக்கல்

2021-22 காலகட்டத்தில், பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்ட நிகழ்வுகள் ஏதுமில்லை. பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட பங்கு மூலதனத்தில், பங்கு விலக்கல் சம்பந்தப்பட்ட எந்தவொரு கொள்கையையும் யூனியன் பிரதேச அரசு தயாரிக்கவில்லை.

## 5.6 பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து மீள்வரவுகள்

### 5.6.1 பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டிய இலாபம்

அந்தந்த ஆண்டுகளில் இறுதி செய்யப்பட்ட சமீபத்திய கணக்குகளின்படி, 2020-21ல் இலாபம் ஈட்டிய ஆறு பொதுத்துறை நிறுவனங்களுக்கெதிராக 2021-22ல் ஐந்து நிறுவனம் மட்டும் இலாபம் ஈட்டின. 2020-21ல் ₹ 35.07 கோடியாக இருந்த இலாபம், 2021-22ல் ₹ 38.48 கோடியாக அதிகரித்தது. இதன் விளைவாக ஆறு பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் 2020-21ல் 10.63 சதவீதத்திலிருந்து 2021-22ல் ஐந்து நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் 11.37 சதவீதமாக அதிகரித்தது. இலாபம் அதிகரித்திருந்தபோதிலும், அனைத்து 12 பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து (நட்டம் அடைந்த ஏழு நிறுவனங்களையும் உள்ளடக்கியது) பெறப்பட்ட பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் எதிர்மறையாகவே இருந்தது.

### 5.6.2 பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஆதாயப்பங்கு

2021-22 காலகட்டத்தில் 12 செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒரு பொதுத்துறை நிறுவனம் மட்டுமே ஆதாயப்பங்கை அறிவித்திருந்தது. சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் ஈட்டிய இலாபம் மற்றும் அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்கு ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 5.4**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

5 புதுச்சேரி ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம், புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் மற்றும் புதுச்சேரி நெசவாலை கழகம்.

**அட்டவணை 5.4: ஈட்டிய இலாபம் மற்றும் அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்கு**

| வகை | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | செலுத்திய மூலதனம் (₹ கோடியில்) | நிகர இலாபம் (₹ கோடியில்) | அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கு (₹ கோடியில்) |
|---|---|---|---|---|
| பொதுத்துறை நிறுவனங்கள் | 1[6] | 99.78 | 14.10 | 5.64 |
| **மொத்தம்** | **1** | **99.78** | **14.10** | **5.64** |

(ஆதாரம்: சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

கடந்த ஆண்டில் இரண்டு பொதுத்துறை நிறுவனங்களால் அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கான ₹ 2.71 கோடிக்கெதிராக ஒரு பொதுத்துறை நிறுவனத்தால் நடப்பாண்டில் ₹ 5.64 கோடி ஆதாயப்பங்கு அறிவிக்கப்பட்டது. மேற்கூறிய பொதுத்துறை நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கு நிகர இலாபத்தில் 40 சதவீதம் ஆகும்.

யூனியன் பிரதேச அரசு முதலீடு செய்த பங்கு மூலதனத்திற்கு குறைந்தபட்ச ஆதாயப்பங்கை வழங்குவதற்கான எந்தவொரு கொள்கையையும் வகுக்கவில்லை. யூனியன் பிரதேச அரசால் 12 பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடான ₹ 712.39 கோடிக்கு ஆதாயப்பங்கு வடிவில் பெறப்பட்ட வருவாய் வெறும் 0.79 சதவீதம் மட்டுமேயாகும்.

## 5.7 கடன் சேவைகள்

### 5.7.1 வட்டி பரப்பு

வட்டி பரப்பு விகிதம் (Interest coverage ratio - ICR), ஒரு நிறுவனத்தின் நிலுவையிலுள்ள கடன் தொகைக்கு வட்டி செலுத்தும் திறனைத் தீர்மானிக்கப் பயன்படுகிறது. இது, நிறுவனத்தின் வட்டி மற்றும் வரிகளுக்கு முன் உள்ள வருவாயை (Earnings Before Interest and Taxes - EBIT) அதே காலகட்டத்திற்கான வட்டிச் செலவினங்களால் வகுத்து கணக்கிடப்படுகிறது. எந்த அளவிற்கு விகிதம் குறைவாக உள்ளதோ அந்த அளவிற்கு ஒரு நிறுவனத்தின் கடனுக்கு வட்டி செலுத்தும் திறன் குறையும். ஒன்றிற்கும் கீழேயுள்ள வட்டி பரப்பு விகிதம், நிறுவனம் அதன் வட்டி செலவுகளை பூர்த்தி செய்யப் போதுமான வருவாயை ஈட்டவில்லை என்பதைக் குறிக்கிறது. 2019-20 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் நிலுவையிலுள்ள கடன்களைக் கொண்டிருந்த பொதுத்துறை நிறுவனங்களின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான வட்டி பரப்பு விகிதத்தின் விவரங்கள் **அட்டவணை 5.5**ல் தரப்பட்டுள்ளன.

---

6 புதுச்சேரி மின்னாற்றல் கழகம்.

**அட்டவணை 5.5: வட்டி பரப்பு விகிதம்**

| ஆண்டு | வட்டி (₹ கோடியில்) | வட்டி மற்றும் வரிகளுக்கு முன் உள்ள வருவாய் (₹ கோடியில்) | பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒன்றிற்கும் மேலே வட்டி பரப்பு விகிதம் கொண்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒன்றிற்கும் கீழே வட்டி பரப்பு விகிதம் கொண்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 19.46 | 0.01 | 8 | 4 | 4 |
| 2020-21 | 19.46 | 0.01 | 8 | 4 | 4 |
| 2021-22 | 19.27 | 6.18 | 7 | 3 | 4 |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

வட்டிக் கடன்பொறுப்புகள் கொண்ட ஏழு பொதுத்துறை நிறுவனங்களில், நான்கு பொதுத்துறை நிறுவனங்களின் வட்டி பரப்பு விகிதம் ஒன்றை விடக் குறைவாக இருந்தது. அவற்றின் வட்டி மீதான செலவினங்களை எதிரேற்க போதுமான வருவாயை அவற்றால் ஈட்ட முடியாமல் போனதை இது சுட்டிக்காட்டுகிறது.

## 5.8 அரசு நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறன்

### 5.8.1 பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட வருவாய்

பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட வருவாய் (Return on Capital Employed - RoCE) என்பது நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் மற்றும் அதன் பங்கு மூலதனம் எவ்வளவு திறமையாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அளவிடும் ஒரு விகிதமாகும். வட்டி மற்றும் வரிகளுக்கு முன் உள்ள வருவாயை (EBIT) பயன்படுத்தப்பட்ட மூலதனத்தால்[7] வகுப்பதன் மூலம் அதன் மீது பெறப்பட்ட வருவாய் கணக்கிடப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்கள் வாரியான RoCE விவரங்கள் **இணைப்பு 5.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2019-20 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் 12 செயல்படும் அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த RoCE **அட்டவணை 5.6**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.6: பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது பெறப்பட்ட வருவாய்**

| ஆண்டு | EBIT (₹ கோடியில்) | பயன்படுத்தப்பட்ட மூலதனம் (₹ கோடியில்) | RoCE (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2019-20 | (-) 3.03 | 62.11 | -- |
| 2020-21 | (-) 2.00 | 52.19 | -- |
| 2021-22 | 13.84 | 50.49 | 27.41 |

[7] பயன்படுத்தபட்ட மூலதனம் = செலுத்தப்பட்ட மூலதனம் + உபரி மற்றும் இருப்புகள் + நீண்ட காலக் கடன்கள் கழிக்க திரண்ட இழப்புத் தொகை கழிக்க ஒத்திவைக்கப்பட்ட வருவாய் செலவுகள்.

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

2019-20 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளில், 12 பொதுத்துறை நிறுவனங்களின் EBIT எதிர்மறையாக இருந்ததன் காரணமாக, அந்த காலகட்டத்தில் அனைத்து நிறுவனங்களின் RoCEயும் எதிர்மறையாகவே இருந்தது.

ஆயினும் இரண்டு[8] நிறுவனங்களின் நட்டம் குறைந்தது மற்றும் ஒரு[9] நிறுவனத்தின் இலாபம் அதிகரித்தின் காரணத்தால் 2021-22ல் EBIT நேர்மறையாக மாறியது. இதன் விளைவாக அனைத்து நிறுவனங்களின் RoCE, 2021-22ல் 27.41 சதவீதம் என்ற அளவிற்கு நேர்மறையாக இருந்தது.

ஏகபோக உரிமையுடைய[10] மற்றும் ஏகபோக உரிமையற்ற பொதுத்துறை நிறுவனங்களின் RoCE **அட்டவணை 5.7**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.7: ஏகபோக உரிமையுடைய மற்றும் ஏகபோக உரிமையற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கான RoCE**

| ஆண்டு | ஏகபோக உரிமையுடையவை | | | | ஏகபோக உரிமையற்றவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பொதுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | EBIT (₹ கோடியில்) | பயன்படுத்தப் பட்ட மூலதனம் (₹ கோடியில்) | RoCE (சதவீதத்தில்) | பொதுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | EBIT (₹ கோடியில்) | பயன்படுத்தப் பட்ட மூலதனம் (₹ கோடியில்) | RoCE (சதவீதத்தில்) |
| 2019-20 | 6 | (-) 9.62 | 213.62 | -- | 6 | 6.59 | (-) 151.51 | -- |
| 2020-21 | 6 | 1.47 | 219.41 | 0.67 | 6 | (-) 3.47 | (-) 167.22 | -- |
| 2021-22 | 6 | 13.29 | 224.97 | 5.91 | 6 | 0.55 | (-) 174.48 | -- |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

2020-21ல் ஆறு ஏகபோக உரிமைப் பிரிவு நிறுவனங்களின் RoCE 0.67 சதவீதத்திலிருந்து 2021-22ல் 5.91 சதவீதமாக அதிகரித்தது. 2019-20ம் ஆண்டில் அது எதிர்மறையாக இருந்தது. ஆயினும், மூன்றாண்டுகளிலும் பயன்படுத்தப்பட்ட மூலதனம் நேர்மறையாக மற்றும் அதிகரித்து வரும் போக்கில் இருந்தது. 2019-20ல் நேர்மறையாக இருந்த EBIT, 2020-21ல் எதிர்மறையாக மாறி மீண்டும் 2021-22ல் நேர்மறையாக மாறிய போதிலும் அனைத்து மூன்றாண்டுகளிலும் அனைத்து ஆறு ஏகபோக உரிமையற்ற பிரிவு நிறுவனங்களின் பயன்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் RoCE ஆகியவை எதிர்மறையாகவே இருந்தது.

---

8 புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம்.

9 புதுச்சேரி மின்னாற்றல் கழகம்.

10 ஒரு பொதுத்துறை நிறுவனத்திற்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அதன் செயல்பாட்டில் எந்தவொரு போட்டியும் இல்லையேல், அந்த நிறுவனம் ஏகபோக உரிமையுடைய நிறுவனம் எனவும், செயல்பாடுகளில் போட்டியைச் சந்திக்கும் நிறுவனம் ஏகபோக உரிமையற்ற நிறுவனம் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 5.8.2 பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய்

பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் (Return on Equity - RoE)[11] என்பது நிறுவனத்தின் நிதி செயல்பாட்டினை மதிப்பிட பங்குதாரர்களின் முதலீட்டால் நிகர வருமானத்தை வகுத்து கணக்கிடப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்கள் வாரியான RoE விவரங்கள் **இணைப்பு 5.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2019-20 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் 12 செயல்படும் அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த RoE **அட்டவணை 5.8**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.8: பங்கு மூலதனம் மீதான வருவாய்**

| ஆண்டு | வரிகளுக்கு பிறகு நிகர இலாபம் (₹ கோடியில்) | பங்குதாரர்களின் பங்கு மூலதனம் (₹ கோடியில்) | பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 2019-20 | (-) 24.32 | 19.34 | -- |
| 2020-21 | (-) 27.36 | 9.42 | -- |
| 2021-22 | (-) 11.39 | 9.22 | -- |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

2021-22 உடன் முடிவடைந்த மூன்றாண்டுகளிலும், நிகர வருமானம் எதிர்மறையாக இருந்ததால், RoEயும் எதிர்மறையாகவே இருந்தது என்பது **அட்டவணை 5.8**லிருந்து தெரிகிறது.

ஏகபோக உரிமையுடைய மற்றும் ஏகபோக உரிமையற்ற பொதுத்துறை நிறுவனங்களின் RoE **அட்டவணை 5.9**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.9: ஏகபோக உரிமையுடைய மற்றும் ஏகபோக உரிமையற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கான RoE**

| ஆண்டு | ஏகபோக உரிமையுடையவை | | | | ஏகபோக உரிமையற்றவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பொதுத் துறை நிறுவனங் களின் எண்ணிக்கை | பங்கு மூலதனம் (₹ கோடியில்) | வரிகளுக்கு பிறகு நிகர இலாபம் (₹ கோடியில்) | RoE (சதவீதத்தில்) | பொதுத் துறை நிறுவனங் களின் எண்ணிக்கை | பங்கு மூலதனம் (₹ கோடியில்) | வரிகளுக்கு பிறகு நிகர இலாபம் (₹ கோடியில்) | RoE (சதவீதத்தில்) |
| 2019-20 | 6 | 173.65 | (-) 13.32 | -- | 6 | (-) 154.31 | (-) 11.00 | -- |
| 2020-21 | 6 | 179.44 | (-) 6.30 | -- | 6 | (-) 170.02 | (-) 21.06 | -- |
| 2021-22 | 6 | 186.50 | 5.57 | 2.99 | 6 | (-) 177.28 | (-) 16.96 | -- |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

[11] பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் = (வரிகளுக்கு பிறகு நிகர இலாபம் மற்றும் முன்னுரிமை ஆதாயப்பங்கு/பங்கு மூலதனம்)*100. இதில் பங்கு மூலதனம் = செலுத்தப்பட்ட மூலதனம் + உபரி மற்றும் இருப்புகள் கழிக்க திரண்ட நட்டம் கழிக்க ஒத்திவைக்கப்பட்ட வருவாய்ச் செலவுகள்.

2021-22 உடன் முடிவடைந்த மூன்றாண்டுகளிலும் ஆறு ஏகபோக உரிமை நிறுவனங்களின் பங்கு மூலதனம் நேர்மறையாக இருந்தது, ஆயினும் 2019-20 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளில் எதிர்மறையாக இருந்த RoE 2021-22ல் நேர்மறையாக மாறியது. 2020-21உடன் முடிவடைந்த மூன்றாண்டு காலகட்டத்தில், ஏகபோக உரிமையற்ற நிறுவனங்களின் பங்கு மூலதனம் மற்றும் RoE ஆகியவை எதிர்மறையாகவே இருந்தது.

### 5.8.3 அரசு முதலீட்டின் உண்மையான வருவாய் விகிதம் (RoRR)

உண்மையான வருவாய் விகிதம் (Rate of Real Return - RoRR) என்பது நிறுவனத்தின் இலாபத்தையும் செயல்திறனையும், பங்கு மூலதனத்துடன் மற்ற வட்டியில்லா முதலீடுகள் போன்றவற்றையும் காலமதிப்பிற்கு ஏற்ப சரிசெய்து அளவிடும் ஒரு விகிதமாகும். இது, வரிக்குப்பின் உள்ள நிகர இலாபத்தை (RoR), புராதன அடக்க விலையில் கணக்கிடப்பட்ட அனைத்து முதலீடுகளின் கூட்டுத்தொகையால் வகுத்து வழக்கமான முறையில் கணக்கிடப்படும் வருவாய் விகிதத்துடன் ஒப்பிடும்போது முக்கியத்துவம் பெறுகிறது.

அனைத்து 12 பொதுத்துறை நிறுவனங்களிலும் யூனியன் பிரதேச அரசு நேரடி முதலீடு செய்திருந்தது. 12 பொதுத்துறை நிறுவனங்களின் RoRRஐ தணிக்கை ஆய்வு செய்தது.

இந்த பொதுத்துறை நிறுவனங்களில் யூனியன் பிரதேச அரசின் முதலீடுகளின் RoRR பின்வரும் ஊகங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது:

- யூனியன் பிரதேச அரசால் பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் வட்டியில்லாக் கடன்கள் வடிவில் உள்ளபடியேயான உட்செலுத்தங்கள் மட்டுமே முதலீடுகளாகக் கருதப்படுகையில், மானியங்கள்/உதவித் தொகைகளாக கிடைக்கக்கூடிய நிதி, முதலீடுகளாக கருதப்படவில்லை. ஏனெனில், அவை யூனியன் பிரதேச அரசால் உட்செலுத்தப்பட்ட முதலீடுகளாக கருதப்படுவதற்கு தகுதியானவை அல்ல.
- பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வட்டியில்லாக் கடன்கள் பின்னர் பங்கு மூலதனமாக மாற்றப்பட்ட நேர்வுகளில், பங்கு மூலதனமாக மாற்றப்பட்ட கடன் தொகை வட்டியில்லாக் கடன்களிலிருந்து கழிக்கப்பட்டு அந்த ஆண்டின் பங்கு மூலதனத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
- பொதுத்துறை நிறுவனங்களால் அந்த ஆண்டில் உள்ளபடியாக வழங்கப்பட்ட ஆதாயப்பங்கு, அந்தந்த ஆண்டுகளின் மொத்த முதலீட்டிலிருந்து கழிக்கப்படுகிறது.

- சம்பந்தப்பட்ட நிதியாண்டிற்கான[12] அரசு கடன்களுக்கு சராசரி வட்டி விகிதத்தை கூட்டு விகிதமாகக் கொண்டு முதலீட்டின் தற்போதைய மதிப்பு கணக்கிடப்பட்டுள்ளது. ஏனெனில், அவை அந்த ஆண்டிற்கான நிதி முதலீட்டிற்கு அரசு செய்த செலவை பிரதிநிதித்துவப்படுத்துவதால் அவை அரசால் முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச வருவாய் விகிதமாகிறது.

- யூனியன் பிரதேச அரசின் முதலீடுகளின் உண்மையான வருவாய் விகித கணக்கீட்டிற்காக யூனியன் பிரதேச அரசு 2009-10 முதல் 2021-22 வரை இந்த 12 பொதுத்துறை நிறுவனங்களில் 31 மார்ச் 2010 நிலவரப்படி செய்த முதலீடு 2009-10ன் ஆரம்பத்திலுள்ள தற்போதைய மதிப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

**அட்டவணை 5.10: 2009-10 முதல் 2021-22 வரை யூனியன் பிரதேச அரசின் முதலீடு மற்றும் அரசு நிதிகளின் RoRRன் ஆண்டுவாரியான விவரங்கள்**

(₹ கோடியில்)

| நிதி ஆண்டு | ஆண்டின் தொடக்கத்தில் மொத்த முதலீட்டின் தற்போதைய மதிப்பு | நடப்பாண்டில் யூனியன் பிரதேச அரசால் உட்செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | நடப்பாண்டில் யூனியன் பிரதேச அரசால் வழங்கப்பட்ட வட்டியில்லாக் கடன்கள் | நடப்பாண்டில் மானியமாக மாற்றப் பட்ட வட்டியில்லாக் கடன்கள் | பொதுத்துறை நிறுவனங்கள் வழங்கிய ஆதாயப் பங்கு | ஆண்டின் இறுதியில் ஆதாயப் பங்கினை கழித்த பிறகுள்ள மொத்த முதலீடு | அரசு கடன்களுக்கான சராசரி வட்டி விகிதம் (சதவீதத்தில்) | ஆண்டு இறுதியில் மொத்த முதலீட்டின் தற்போதைய மதிப்பு | நிதிக்கான செலவை மீட்க குறைந்தபட்சம் எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருவாய் | ஆண்டிற்கான மொத்த வருவாய் | உண்மையான வருவாய் விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **(7)= (2+3+ 4-5-6)** | **8** | **(9)= (7+((7x8) / 100))** | **(10)= (9x 8/100)** | **11** | **12** |
| 2009-10 வரை | -- | 244.30 | -- | -- | 6.46 | 237.84 | 8.00 | 256.87 | 20.55 | -- | -- |
| 2010-11 | 256.87 | 21.24 | -- | -- | 5.47 | 272.64 | 7.81 | 293.93 | 22.96 | (-) 58.80 | (-) 20.00 |
| 2011-12 | 293.93 | 6.61 | -- | -- | 0.93 | 299.61 | 7.80 | 322.98 | 25.19 | (-) 55.81 | (-) 17.28 |
| 2012-13 | 322.98 | 0.25 | -- | -- | 3.62 | 319.61 | 8.00 | 345.18 | 27.61 | (-) 31.68 | (-) 9.18 |
| 2013-14 | 345.18 | 3.83 | -- | -- | 4.24 | 344.77 | 7.70 | 371.32 | 28.59 | (-) 32.17 | (-) 8.66 |
| 2014-15 | 371.32 | 7.96 | -- | -- | 4.52 | 374.76 | 7.90 | 404.36 | 31.94 | (-) 32.50 | (-) 8.04 |
| 2015-16 | 404.36 | 0.31 | -- | -- | 0.00 | 404.67 | 7.50 | 435.02 | 32.63 | (-) 70.62 | (-) 16.23 |
| 2016-17 | 435.02 | -- | -- | -- | 1.39 | 433.63 | 7.20 | 464.85 | 33.47 | (-) 24.79 | (-) 5.33 |
| 2017-18 | 464.85 | -- | -- | -- | 3.81 | 461.04 | 8.02 | 498.02 | 39.94 | (-) 39.05 | (-) 7.84 |
| 2018-19 | 498.02 | -- | -- | -- | 1.21 | 496.81 | 7.88 | 535.96 | 42.23 | (-) 57.76 | (-) 10.78 |
| 2019-20 | 535.96 | -- | -- | -- | 2.61 | 533.35 | 7.42 | 572.92 | 42.51 | (-) 24.32 | (-) 4.25 |
| 2020-21 | 572.92 | -- | -- | -- | 0.26 | 572.66 | 7.44 | 615.27 | 45.78 | (-) 27.36 | (-) 4.45 |
| 2021-22 | 615.27 | | | | 1.05 | 614.22 | 7.43 | 659.86 | 49.03 | (-) 11.39 | (-) 1.73 |
| **மொத்தம்** | | **284.50** | **--** | **--** | **35.57** | **5,365.61** | | | | | |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

---

12 யூனியன் பிரதேச அரசுக் கடன்களுக்கான சராசரி வட்டி விகிதம் சம்பந்தப்பட்ட ஆண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் யூனியன் பிரதேச அரசின் நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் செலுத்தப்பட்ட வட்டிக்கான சராசரி விகிதத்திற்கான கணக்கீடு = செலுத்தப்பட்ட வட்டி/[(முந்தைய ஆண்டின் நிதிப் பொறுப்புகள் + நடப்பாண்டின் நிதி பொறுப்புகள்)/2]*100.

அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த வருவாய்[13] பல ஆண்டுகளாக எதிர்மறையாக இருந்து வருவதால், RoRRம் அனைத்து ஆண்டுகளிலும் எதிர்மறையாக இருந்தது.

**அட்டவணை 5.11: 2021-22 ஆண்டிற்கான யூனியன் பிரதேச அரசின் முதலீடுகளின் ஒருங்கிணைந்த RoRR**

| 2021-22ல் மொத்த வருவாய்/நட்டம் (₹ கோடியில்) | ஆரம்பம் முதல் 2021-22 வரை யூனியன் பிரதேச அரசின் முதலீடுகள் (₹ கோடியில்) | புராதன மதிப்பின் அடிப்படையில் யூனியன் பிரதேச அரசின் முதலீட்டின் மீதான வருவாய் (சதவீதத்தில்) | 2021-22 இறுதியில் யூனியன் பிரதேச அரசின் முதலீடுகளின் மீதான தற்போதைய மதிப்பு (₹ கோடியில்) | முதலீடுகளின் தற்போதைய மதிப்பில் யூனியன் பிரதேச அரசின் முதலீடுகளின் மீதான RoRR (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ |
| மேலேயுள்ள அட்டவணையின் நிலை 11ன் மதிப்பு | மேலேயுள்ள அட்டவணையின் நிலை (3-6)ன் மதிப்பு | அ*100/ஆ | மேலேயுள்ள அட்டவணையின் நிலை 9ன் மதிப்பு | அ*100/ஈ |
| (-) 11.39 | 248.93 | (-) 4.58 | 659.86 | (-) 1.73 |

2021-22ல் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்த நட்டம் ஏற்பட்டதால், புராதன அடக்கவிலை மதிப்பின் மீதான RoRR எதிர்மறையாக (−) 4.58 சதவீதமாக இருந்தது. மேலும், இதனை தற்போதைய மதிப்பின் மீதான RoRRஉடன் ஒப்பிடுகையில், அதுவும் எதிர்மறையாக (−) 1.73 சதவீதமாக இருந்தது என்பதை **அட்டவணை 5.11**லிருந்து காணலாம்.

## 5.9 நட்டத்தைச் சந்திக்கும் பொதுத்துறை நிறுவனங்கள்

### 5.9.1 அரசு நிறுவனங்களில் ஏற்பட்ட நட்டம்

2021-22ல் ஏழு அரசு நிறுவனங்கள் நட்டத்தைச் சந்தித்தன. 2020-21ல் ஆறு பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்பட்ட நட்டம் ₹ 62.43 கோடியிலிருந்து, 2021-22ல் ₹ 49.87 கோடியாக குறைந்திருந்தது **அட்டவணை 5.12**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

13 துணை நிறுவனங்கள் உட்பட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபம்(+)/ நட்டம்(−) இதில் அடங்கும்.

**அட்டவணை 5.12: 2021-22ல் நட்டத்தை சந்தித்த பொதுத்துறை நிறுவனங்கள்**

| ஆண்டு | நட்டத்தை சந்தித்த பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | நடப்பாண்டில் நிகர நட்டம் (₹ கோடியில்) | திரண்ட மொத்த நட்டம் (₹ கோடியில்) | நிகர மதிப்பு[14] (₹ கோடியில்) |
|---|---|---|---|---|
| 2019-20 | 6 | 52.37 | 720.17 | (-) 274.43 |
| 2020-21 | 6 | 62.43 | 735.88 | (-) 290.14 |
| 2021-22 | 7 | 49.87 | 771.35 | (-)308.02 |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது)

2021-22 ஆண்டில் நட்டம் குறைந்ததற்கான முக்கிய காரணம் இரு[15] பொதுத் துறை நிறுவனங்களில் நட்டம் குறைந்து காணப்பட்டதேயாகும்.

இவ்வாறு, மொத்த 12 செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில், ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 38.48 கோடி இலாபத்தையும், ஏழு பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 49.87 கோடி நட்டத்தையும் அடைந்து, 2021-22 ஆண்டில் மொத்தம் ₹ 11.39 கோடி நிகர நட்டத்தைச் சந்தித்தன.

### 5.9.2 அரசு நிறுவனங்களில் முதலீடு தேய்தல்

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, எட்டு அரசு நிறுவனங்கள் ₹ 826.25 கோடி திரண்ட நட்டத்தை அடைந்திருந்தன. இந்த எட்டு பொதுத்துறை நிறுவனங்களில், ஏழு பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 49.87 கோடி நட்டத்தைச் சந்தித்திருந்தன. ஒரு[16] பொதுத்துறை நிறுவனத்தின் திரண்ட நட்டம் ₹ 54.90 கோடியாக இருந்த போதிலும், கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி அந்நிறுவனம் நட்டத்தைச் சந்திக்கவில்லை.

திரண்ட நட்டங்களால் எட்டு பொதுத்துறை நிறுவனங்களில், ஏழு நிறுவனங்களின் நிகர மதிப்பு முழுவதுமாக தேய்ந்து அவற்றின் நிகர மதிப்பு எதிர்மறையானது. 31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, இந்த ஏழு பொதுத்துறை நிறுவனங்களில் யூனியன் பிரதேச அரசால் செய்யப்பட்ட பங்கு மூலதன முதலீடான ₹ 482.13 கோடிக்கெதிராக, இந்த பொதுத்துறை நிறுவனங்களின் நிகர மதிப்பு ₹ 329.96 கோடியாக இருந்தது. முதலீடு முழுவதுமாக தேய்ந்த (எதிர்மறை நிகர மதிப்பு) இந்த ஏழு பொதுத்துறை நிறுவனங்களில்,

---

14 நிகர மதிப்பு என்பது செலுத்தப்பட்ட மூலதனத்துடன் உபரி மற்றும் இருப்பு, திரண்ட நட்டங்கள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருவாய்ச் செலவுகளை கழித்ததன் மொத்தமாகும். இருப்பு என்பது இதுவரை ஈட்டிய மொத்த இலாபம் மற்றும் முதலீட்டு முன்னுரிமைக் கணக்கை உள்ளடக்கியது. இதில் சொத்து மறுமதிப்பீடு மூலம் கிடைக்கப்பெற்ற ஆதாயம் மற்றும் தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டைத் திருப்பிச் செலுத்தல் ஆகியவற்றின் மூலம் ஏற்பட்ட இருப்புகள் உள்ளடங்காது.

15 புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம்.

16 சுதேசி பாரதி நெசவாலை வரையம்.

கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின்படி ஒரு பொதுத்துறை நிறுவனம் ₹ 22.19 கோடி இலாபத்தை ஈட்டியது (**இணைப்பு 5.4**).

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, முதலீடு முழுவதுமாக தேய்ந்த நிலையில் இரு[17] பொதுத்துறை நிறுவனங்களில் ₹ 6.19 கோடி அரசுக் கடன்கள் நிலுவையிருந்தது.

31 மார்ச் 2022 முடிவில் நிகர மதிப்பு நேர்மறையாக உள்ள ஐந்து பொதுத்துறை நிறுவனங்களில் ஒரு[18] நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனத்தை விட அதன் நிகர மதிப்பு பாதியை விடக் குறைவாக இருந்தது என்பது அதன் உள்ளார்ந்த நிதிச் சோர்வைச் சுட்டிக்காட்டுகிறது.

ஐந்து பொதுத்துறை நிறுவனங்களில் ₹ 339.18 கோடி நேர்மறை நிகர மதிப்பு இருந்தது. ஒட்டுமொத்தமாக, கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் படி, 12 செயல்படும் அரசு நிறுவனங்களில் செலுத்தப்பட்ட மூலதனமான ₹ 722.35 கோடிக்கெதிராக, அவற்றின் நிகர மதிப்பு ₹ 9.22 கோடியாக இருந்தது.

## 5.10 பொதுத்துறை நிறுவனங்கள் கணக்குகளை சமர்ப்பித்தல்

### 5.10.1 கணக்குகளை காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம்

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 394 மற்றும் 395ன்படி ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்ற மூன்று மாதங்களுக்குள்ளாக, அரசு நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் நடவடிக்கைகள் பற்றிய ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு தணிக்கை அறிக்கையின் நகலுடன் CAGயின் கருத்துரை மற்றும் கூடுதல் தணிக்கை அறிக்கை ஏதாவது இருப்பின் அவற்றை விரைவில் சட்டப் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த நடவடிக்கை மூலமாக யூனியன் பிரதேச அரசின் தொகுநிதியிலிருந்து நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட பொது நிதிகள் பயன்பாட்டின்மீது சட்டப்பேரவை தேவையான கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 96ன்படி ஒவ்வொரு நிறுவனமும் பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை ஆண்டுக்கு ஒரு முறையாவது நடத்தவேண்டும். இரண்டு ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கான இடைவெளி 15 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 129, அந்த நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கை ஆண்டு பொதுக்

[17] புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் மற்றும் புதுச்சேரி நெசவாலைக் கழகம்.

[18] புதுச்சேரி ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம்.

கூட்டத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 129ன் வகைப்பாடுகளைக் கடைபிடிக்காத நபர்களுக்கு, நிறுவனத்தின் இயக்குநர்கள் உட்பட, அபராதம் மற்றும் சிறைத்தண்டனை போன்ற தண்டனைகள் விதிக்க நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 129 (7) வழிவகுக்கிறது.

மேற்கூறிய பிரிவுகள் இருந்த போதிலும், பின்வரும் பத்தியில் விவரித்துள்ளவாறு, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகள் நிலுவையில் இருந்தன.

### 5.10.2 அரசு நிறுவனங்கள் கணக்குகளை காலக்கெடுவிற்குள் சமர்ப்பித்தல்

31 மார்ச் 2022 அன்றுள்ளவாறு, 12 அரசு நிறுவனங்கள் மற்றும் ஒரு துணை நிறுவனம் CAGயின் தணிக்கை வரம்பின் கீழ் இருந்தன. பல்வேறு காரணங்களால் 12 அரசு நிறுவனங்களின் கணக்குகளும் இறுதி செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன (**இணைப்பு 5.5**). நடப்பாண்டில் நான்கு நிறுவனங்கள், நிலுவையிலிருந்த ஐந்து கணக்குகளை CAGயின் தணிக்கைக்காக சமர்ப்பித்தன. அரசு நிறுவனங்களின் கணக்குகளை சமர்ப்பித்தலிலுள்ள நிலுவை விவரங்கள் **அட்டவணை 5.13**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.13: அரசு நிறுவனங்கள் கணக்குகளை சமர்ப்பித்தலிலுள்ள நிலுவை பற்றிய விவரங்கள்**

| விவரங்கள் | | | அரசு நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | அரசு நிறுவனங்கள் | செயல்படா நிறுவனம்# | மொத்தம் |
| 31.3.2022 அன்றுள்ளவாறு, CAGயின் தணிக்கை வரம்பின் கீழ் வரும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | | | 12 | 1 | 13 |
| 2021-22க்கான கணக்குகள் நிலுவையிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | | | 12 | -- | 12 |
| 2021-22க்கான கணக்குகளை CAGயின் தணிக்கைக்கு சமர்ப்பித்த நிறுவனங்களின் எண்ணிக்கை | | | -- | -- | -- |
| நிலுவையிலுள்ள கணக்குகளைக் கொண்ட நிறுவனங்களின் எண்ணிக்கை [19] | | | 12 | -- | 12 |
| நிலுவைகளின் வகை | (i) | கலைப்பின் கீழ் உள்ளது | | | |
| | (ii) | செயல்படாதது | | | |
| | (iii) | முதல் கணக்கை சமர்ப்பிக்காதது | | | |
| | (iv) | மற்றவை | 12 | -- | 12 |

[19] 31 டிசம்பர் 2022 அன்றுள்ளவாறு.

| விவரங்கள் | | அரசு நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|
| | | அரசு நிறுவனங்கள் | செயல்படா நிறுவனம்# | மொத்தம் |
| நிலுவையின் ஆண்டு வாரியான பகுப்பாய்வு | ஓராண்டு (2021-22) | 2 | 0 | 2 |
| | இரண்டாண்டுகள் (2021-22 மற்றும் 2020-21) | 1 | 0 | 1 |
| | மூன்றாண்டுகள் மற்றும் அதற்கும் மேல் | 9 | 0 | 9 |

# நிறுவனத்தை மூடும் நிலையிலுள்ள PELECONஐக் குறிக்கிறது. அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை அதன் உடைமை நிறுவனமான PIPDICஆல் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அதன் கணக்குகள் எதிர்ப்பார்க்கப்படவில்லை.

12 பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்று முதல் ஒன்பது ஆண்டுகளாக கணக்குகள் நிலுவையிலுள்ள விவரங்களை மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவர் 27 ஜூன் 2022 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் யூனியன் பிரதேச அரசின் முதன்மை செயலருக்கு சுட்டிக் காட்டினார். முதன்மை செயலர் நிலுவையிலுள்ள கணக்குகளை ஆண்டிற்கு மூன்று கணக்குகளை தயாரித்து தணிக்கைக்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

## 5.11 இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வை பொறுப்பு – கணக்குகளின் தணிக்கை மற்றும் துணைநிலைத் தணிக்கை

### 5.11.1 நிதிநிலை அறிக்கையில் கட்டமைப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013ன் அட்டவணை IIIல் கூறப்பட்டுள்ள படிவத்தின்படி நிதிநிலை அறிக்கைகளை நிறுவனங்கள் தயாரிக்க வேண்டும். மேலும், கணக்கியல் தரநிலைகள் பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் பேரில், மத்திய அரசு பரிந்துரைத்த கட்டாய கணக்கியல் தரநிலைகளை பின்பற்றவேண்டும்.

### 5.11.2 சட்டமுறை தணிக்கையாளர்கள் மூலம் அரசு நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல்

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 139ன் கீழ் CAGயால் நியமிக்கப்பட்ட சட்டமுறை தணிக்கையாளர்கள், அரசு நிறுவனங்களின கணக்குகளை தணிக்கை செய்து, நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143ன் கீழ் தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்கின்றனர்.

பொதுத்துறை நிறுவனங்களின் தணிக்கையை மேற்கொள்ளும் சட்டமுறைத் தணிக்கையாளர்களின் செயல்பாட்டை கண்காணிக்கும் பணியை மேற்கொள்வதுடன் அவர்கள் தங்களுக்கு இடப்பட்ட பணிகளை ஒழுங்காகவும் திறமையாகவும் செய்கிறார்களா என்ற ஒட்டுமொத்த நோக்கத்தையும் மேற்பார்வையிடும் பொறுப்பை CAG ஏற்கிறார். இப்பணியை கீழ்க்காணும் அதிகாரங்கள் மூலம் செயலாக்குகிறார்.

- நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143(5)ன்படி சட்டமுறைத் தணிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவது மற்றும்
- நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143(6)ன்படி சட்டமுறைத் தணிக்கையாளர்களின் அறிக்கை மீது கூடுதல் தணிக்கைக் குறிப்புகள் வழங்குவது.

### 5.11.3 அரசு நிறுவனங்களின் கணக்குகளின் மீதான கூடுதல் தணிக்கை

நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் கட்டமைப்புகளுக்கு ஏற்ப நிதி நிலை அறிக்கைகளை தயாரிப்பதான முதன்மைப் பொறுப்பு அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தைச் சார்ந்ததாகும்.

CAG வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAI) நிலையான தணிக்கை நடைமுறைகளுக்கு இணங்க ஒரு சுதந்திரமான தணிக்கையின் அடிப்படையில் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143ன் கீழ் நிதி அறிக்கைகளின் மீது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 139ன் கீழ் CAGஆல் நியமிக்கப்பட்ட சட்டமுறைத் தணிக்கையாளர்களுக்கு பொறுப்பு உண்டு. நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143ன் படி சட்டமுறைத் தணிக்கையாளர்கள் தணிக்கை அறிக்கையை CAGக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நிறுவனங்களின் சான்றளிக்கப்பட்ட கணக்குகள், சட்ட முறைத் தணிக்கையாளர்களின் அறிக்கையோடு கூடுதல் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு CAGஆல் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த மதிப்பாய்வின் அடிப்படையில், குறிப்பிடத்தக்க தணிக்கை குறிப்புகள் ஏதேனும் இருப்பின், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143 (6)ன்படி அவை ஆண்டு பொதுக் கூட்டத்தின் முன் வைக்கப்படவேண்டும்.

## 5.12 இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வைப் பொறுப்பின் முடிவுகள்

2021-22ம் ஆண்டிற்கான தங்களுடைய நிதிநிலை அறிக்கைகளை 12 அரசு நிறுவனங்களும் சமர்ப்பிக்கவில்லை. தங்களுடைய நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் நிலுவை இருப்பதால் ஆண்டு பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது தொடர்பான நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 96 மற்றும் 129ஐ கடைபிடிக்க இந்நிறுவனங்கள் தவறிவிட்டன. ஆனால், நான்கு[20] நிறுவனங்கள் நிலுவையிலிருந்த தங்களுடைய கணக்குகளை 2022ம் ஆண்டில் சமர்ப்பித்துள்ளன. இவற்றில் ஒரு[21] கணக்கு CAGஆல் தணிக்கையில் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

மதிப்பாய்வின் முடிவுகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

### 5.12.1 திருத்தியமைக்கப்பட்ட தணிக்கையாளர்களின் அறிக்கைகள்

மேற்கூறிய நிலுவை கணக்குகளின் மேல் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் தணிக்கையில் சட்டமுறை தணிக்கையாளர்களின் அறிக்கையை திருத்தியமைக்க வேண்டிய நிகழ்வுகள் எதுவுமில்லை.

### 5.12.2 கணக்கியல் தரநிலைகள்/இந்திய கணக்கியல் தரநிலைகளின் விதிகளை கடைபிடிக்காமை

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 469 மற்றும் பிரிவு 129 (1), 132 மற்றும் 133ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மத்திய அரசு கணக்கியல் தரநிலைகள் ஒன்று முதல் ஏழு வரையிலும் மற்றும் ஒன்பது முதல் 29 வரையிலும் வகுத்துரைத்துள்ளது. இவற்றைத் தவிர, 39 இந்தியக் கணக்கியல் தரநிலைகளை நிறுவனங்கள் (இந்தியக் கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015 மற்றும் நிறுவனங்கள் (இந்தியக் கணக்கியல் தரநிலைகள்) (திருத்தம்) விதிகள், 2016ன் கீழ் மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால், இந்திய கணக்கியல் தரநிலைகளின் அளவுகோல்கள் எந்தவொரு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் உட்படாத காரணத்தால் அவை பின்பற்றப்பட வேண்டிய தேவை எழவில்லை.

ஒரு நிறுவனம்[22] கட்டாயக் கணக்கியல் தரநிலைகளை கடைபிடிக்கவில்லை என சட்டமுறைத் தணிக்கையாளர்களின் அறிக்கையில் தெரிவித்தனர்.

---

[20] புதுச்சேரி மின்னாற்றல் கழகம் (2020-21), புதுச்சேரி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (2019-20 மற்றும் 2020-21), புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் (2019-20) மற்றும் புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக் கழகம் (2018-19).

[21] புதுச்சேரி மின்னாற்றல் கழகம்.

[22] புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக் கழகம்.

## 5.13 மேலாண்மைக் கடிதங்கள்

நிறுவனங்களை நிர்வகிக்கும் பொறுப்பிலிருப்பவர்கள் மற்றும் தணிக்கையாளர்கள் இடையே நிதி அறிக்கையின் தணிக்கையிலிருந்து எழும் தணிக்கை குறித்த விவரங்களுக்காக ஒரு தகவல் பரிமாற்றம் ஏற்படுத்துவது நிதித் தணிக்கையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 143 (5)ன் படி, பொதுத்துறை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளின் முக்கியக் குறிப்புகள் CAGயின் கருத்துகளாக அறிக்கையளிக்கப்படுகிறது. இந்த கருத்துகள் தவிர நிதி அறிக்கைகள் அல்லது அறிக்கை அளிக்கும் செயல்பாட்டில் CAGஆல் சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகள் மற்றும் குறைபாடுகள், அவற்றை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்வாகத்திற்கு 'மேலாண்மைக் கடிதம்' மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

நடப்பாண்டில் ஒரு பொதுத்துறை நிறுவனத்திற்கு[23] மேலாண்மைக் கடிதம் வழங்கப்பட்டது. அதில், சட்டமுறைத் தணிக்கையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்யும் நடவடிக்கை எடுக்கத் தவறியதே நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட முக்கியமான கருத்தாகும்.

## 5.14 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

### பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு

மார்ச் 2022 அன்றுள்ளவாறு, 12 பொதுத்துறை நிறுவனங்களில் புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு ₹ 721.54 கோடி (பங்கு மூலதனம் மற்றும் நீண்டகாலக் கடன்கள்) மொத்த முதலீடு செய்துள்ளது. இந்த பொதுத்துறை நிறுவனங்களில், ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 38.48 கோடி இலாபம் ஈட்டியும் மற்றும் ஏழு பொதுத்துறை நிறுவனங்கள் ₹ 49.87 கோடி நட்டம் அடைந்தும் ஒட்டுமொத்தமாக ₹ 11.39 கோடி நட்டத்தை அடைந்தன. ஏழு பொதுத்துறை நிறுவனங்களின் திரண்ட நட்டத்தால் அதன் பங்கு மூலதனங்கள் முற்றிலும் தேய்ந்து, அதன் நிகர மதிப்பு ₹ 329.96 கோடி எதிர்மறையாக இருந்தது.

***பரிந்துரை:*** *மிக நீண்டகாலமாக நட்டத்தை அடைந்த அரசு நிறுவனங்கள், குறிப்பாக அந்நிறுவனங்கள் எந்தவொரு சமூகநல நோக்கத்தையும் பூர்த்தி செய்யவில்லையெனில், அவை தொடர்ந்து செயல்படுவதை யூனியன் பிரதேச அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்.*

**(பத்திகள் 5.5.1, 5.9.1 மற்றும் 5.9.2)**

[23] புதுச்சேரி மின்னாற்றல் கழகம்.

## காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்கப்படாத கணக்குகள்

நிறுவனங்கள் சட்டம் 2013ன் படி கணக்குகளை சமர்பிக்க குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவை அரசு நிறுவனங்கள் கடைபிடிக்கவில்லை. அதன் விளைவாக அனைத்து 12 பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள் ஒன்று மற்றும் ஒன்பது ஆண்டுகள் என்ற ஈரெல்லைக்குள் இறுதி செய்யப்படாமலே நிலுவையிலிருந்தன.

***பரிந்துரை:*** *பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிப்பதை யூனியன் பிரதேச அரசு உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு கணக்குகளை இறுதி செய்யாமல் இருந்தால், பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் முதலீடு யூனியன் பிரதேச சட்டப்பேரவையின் மேற்பார்வைக்கு உட்படாமலே இருக்கும்.*

**(பத்தி 5.10.2)**

சென்னை
நாள்

**(கோ. ப. ஆனந்த்)**
முதன்மை கணக்காய்வுத் தலைவர்,
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி

*மேலொப்பமிடப்பட்டது*

புது தில்லி
நாள்

**(கிரீஷ் சந்திர முர்மூ)**
இந்திய தணிக்கைத் துறைத் தலைவர்

# இணைப்புகள்

## இணைப்பு 2.1

### (பார்வை: பத்தி 2.1; பக்கம் 17)

### புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் நிதி நிலைமையின் சுருக்கம்

(₹ கோடியில்)

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **பகுதி அ : வரவுகள்** | | | | | |
| **1. வருவாய் வரவினங்கள்** | **6,003 (77)** | **6,400 (78)** | **6,781 (77)** | **5,890 (63)** | **7,859 (72)** |
| **(i) வரி வருவாய்** | **2,806 (47)** | **3,188 (50)** | **2,475 (37)** | **1,948 (33)** | **3,236 (41)** |
| சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 852 | 1,499 | 781 | 433 | 1,273 |
| வேளாண்மை வருமானம் மீதான வரி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| விற்பனை, வணிகம் போன்றவற்றின் மீதான வரி | 1,008 | 632 | 596 | 549 | 656 |
| மாநில ஆயத் தீர்வை | 770 | 850 | 868 | 798 | 1,096 |
| வாகனங்களின் மீதான வரிகள் | 104 | 114 | 139 | 84 | 99 |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்கள் | 71 | 92 | 88 | 82 | 111 |
| நில வருவாய் | 1 | 1 | 2 | 2 | 1 |
| சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரி | இல்லை | இல்லை | இல்லை | 0 | 0 |
| **(ii) வரியல்லாத வருவாய்** | **1,374 (23)** | **1,584 (25)** | **1,638 (24)** | **1,460 (25)** | **2,184 (28)** |
| **(iii) மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** |
| **(iv) இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட உதவி மானியங்கள்** | **1,823 (30)** | **1,628 (25)** | **2,668 (39)** | **2,482 (42)** | **2,439 (31)** |
| **2. பல்வகை மூலதன வரவுகள்** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** |
| **3. வசூலிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள்** | **1** | 1 | **இல்லை** | **இல்லை** | **இல்லை** |
| **4. மொத்த வருவாய் மற்றும் கடனல்லாத மூலதன வரவுகள் (1+2+3)** | **6,004** | **6,401** | **6,781** | **5,890** | **7,859** |
| **5. பொதுக்கடன் வரவுகள்** | **1,061(14)** | **1,007 (12)** | **1,044 (12)** | **2,529 (27)** | **2,516 (23)** |
| வெளிநாட்டுக்கடன் | - | 50 | -- | 0 | 0 |
| உள்நாட்டுக் கடன் மற்றும் சந்தைக் கடன் | 989 | 957 | 1,043 | 1,787 | 1,420 |
| வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்றின் கீழ் நிகர வரவுகள் | இல்லை | இல்லை | இல்லை | 0 | இல்லை |
| இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் முன் பணங்களும் | 72 | இல்லை | 1 | 742 | 1,096 |

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **6. தொகுநிதிக்கு மொத்த வரவுகள் (4+5)** | **7,065** | **7,408** | **7,825** | **8,419** | **10,375** |
| **7. எதிர்பாராச் செலவு நிதி வரவுகள்** | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | **இல்லை** |
| **8. பொதுக்கணக்கு வரவுகள்** | **717 (9)** | **778 (10)** | **928 (11)** | **906 (10)** | **568** |
| **9. யூனியன் பிரதேசத்தின் மொத்த வரவுகள் (6+7+8)** | **7,782** | **8,186** | **8,753** | **9,325** | **10,943** |
| **பகுதி – ஆ : செலவுகள்/தொகை கொடுத்தல்** | | | | | |
| **10. வருவாய் செலவினங்கள்** | **5,807 (82)** | **6,387 (74)** | **6,836 (78)** | **7260 (78)** | **8,748 (81)** |
| (i) திட்டப்பணிகள் | 1,659 (29) | 6,387 (100) | 6,836 (100) | 7,260 (100) | 8,748 |
| (ii) திட்டமல்லாதவை | 4,148 (71) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| (iii) பொது சேவைகள் (வட்டி கொடுப்பு உட்பட) | 1,874 | 2,154 | 2,313 | 2,432 | 2,787 |
| (iv) சமூக சேவைகள் | 2,235 | 2,401 | 2,440 | 2,450 | 2,761 |
| (v) பொருளாதார சேவைகள் | 1,694 | 1,832 | 2,083 | 2,378 | 3,200 |
| (vi) உதவி மானியங்கள் மற்றும் பங்குத் தொகைகள் | 4 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| **11. மூலதனக் கணக்கில் செலவுகள்** | **394 (6)** | **313 (4)** | **327 (4)** | **240 (3)** | **163 (2)** |
| (i) திட்டப்பணிகள் | 388 (98) | 313 (100) | 327 (100) | 240 (100) | 163 (52) |
| (ii) திட்டமல்லாதவை | 6 (2) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| (iii) பொது சேவைகள் | 88 | 19 | 21 | 39 | 16 |
| (iv) சமூக சேவைகள் | 107 | 126 | 160 | 87 | 58 |
| (v) பொருளாதார சேவைகள் | 199 | 168 | 146 | 114 | 89 |
| **12. கடன்கள் மற்றும் முன்பணங்கள் கொடுத்தது** | **இல்லை** | **3** | **இல்லை** | **5** | **இல்லை** |
| **13. மொத்தம் (10+11+12)** | **6,201** | **6,703** | **7,163** | **7,505** | **8,901** |
| **14. பொதுக்கடன் திருப்பியவை** | **570 (8)** | **639 (7)** | **762 (9)** | **838 (9)** | **891 (8)** |
| வெளிநாட்டுக்கடன் | .. | .. | .. | .. | |
| உள்நாட்டுக் கடன் (வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்று நீங்கலாக) | 434 | 488 | 611 | 719 | 1,420 |
| வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்றின் கீழ் நிகர நடவடிக்கைகள் | இல்லை | இல்லை | இல்லை | 0 | இல்லை |
| இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களும் முன்பணங்களும் | 136 | 151 | 151 | 119 | 1,096 |

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 15. எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதியொதுக்கம் | இல்லை | இல்லை | இல்லை | 0 | 0 |
| 16. தொகுநிதியிலிருந்து மொத்தச் செலவு (13+14+15) | 6,771 | 7,342 | 7,925 | 8,343 | 9,802 |
| 17. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து கொடுப்புகள் | இல்லை | இல்லை | இல்லை | 0 | இல்லை |
| 18. பொதுக் கணக்கிலிருந்து கொடுப்புகள் | 269(4) | 1,335 (15) | 807 (9) | 950 (10) | 567 |
| 19. யூனியன் பிரதேசத்தின் மொத்த கொடுப்புகள் (16+17+18) | 7,040 | 8,677 | 8,732 | 9,293 | 10,369 |
| பகுதி – இ : பற்றாக்குறைகள் | | | | | |
| 20. வருவாய் பற்றாக்குறை(–)/வருவாய் மிகை(+) (1–10) | 196 | 13 | (-) 55 | (-) 1,370 | (-) 889 |
| 21. நிதிப்பற்றாக்குறை (–)/நிதி மிகை (+) (4–13) | (-) 197 | (-) 302 | (-) 381 | (-) 1,615 | (-) 1,052 |
| 22. முதல்நிலை பற்றாக்குறை (–)/மிகை (+) (21+23) | 489 | 405 | 308 | (-) 858 | (-) 175 |
| பகுதி – ஈ : இதர விவரங்கள் | | | | | |
| 23. வட்டி கொடுப்புகள் (வருவாய் செலவினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது) | 686 | 707 | 690 | 757 | 877 |
| 24. உள்ளாட்சி அமைப்புகள் முதலியவற்றுக்கு நிதி உதவி | 660 | 748 | 779 | 780 | 512 |
| 25. வழிவகை முன் பணங்கள்/பயன்படுத்திய மிகைப்பற்று (நாட்கள்) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| பயன்படுத்திய வழிவகை முன் பணங்கள் (நாட்கள்) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| பயன்படுத்திய மிகைப்பற்று (நாட்கள்) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 26. வழிவகை முன்பணங்கள்/மிகைப்பற்று மீதான வட்டி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 27. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) | 32,129 | 36,386 | 36,724 | 35,685 | 37,485 |
| 28. நிலுவையிலுள்ள நிதிப்பொறுப்புகள் (ஆண்டு இறுதியில்) | 8,799 | 9,144 | 9,449 | 10,894 | 12,593 |
| 29. ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் (வட்டியுடன் சேர்த்து) | 51 | 51 | 44 | 43 | 35 |
| 30. அதிகபட்ச உத்தரவாதத் தொகை (ஆண்டு இறுதியில்) | 63 | 63 | 63 | 53 | 53 |
| 31. முடிக்கப்படாத திட்டங்களின் எண்ணிக்கை | 12 | 30 | 74 | 58 | 60 |
| 32. முடிக்கப்படாத திட்டங்களில் முடக்கப்பட்டுள்ள மூலதனம் | 76.96 | 184.49 | 151.53 | 212.95 | 124.93 |
| பகுதி உ : நிதி நல குறியீடுகள் | | | | | |
| I நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் | | | | | |
| சொந்தவரி வருவாய்/GSDP | 0.09 | 0.09 | 0.06 | 0.05 | 0.09 |

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சொந்த வரியல்லாத வருவாய்/GSDP | 0.04 | 0.04 | 0.04 | 0.04 | 0.06 |
| மத்திய அரசிடமிருந்து மாற்றமானவை/GSDP | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| **II செலவின மேலாண்மை** | | | | | |
| மொத்த செலவினம்/GSDP | 0.19 | 0.18 | 0.20 | 0.21 | 0.24 |
| மொத்த செலவினம்/வருவாய் வரவினங்கள் | 1.03 | 1.05 | 1.06 | 1.27 | 1.13 |
| வருவாய் செலவினம்/மொத்த செலவினம் | 0.94 | 0.95 | 0.95 | 0.97 | 0.98 |
| சமூக சேவைகள் மீதான செலவினம்/மொத்த செலவினம் | 0.36 | 0.36 | 0.34 | 0.33 | 0.31 |
| பொருளாதார சேவைகள் மீதான செலவினம்/ மொத்த செலவினம் | 0.27 | 0.27 | 0.29 | 0.32 | 0.36 |
| மூலதன செலவினம்/மொத்த செலவினம் | 0.06 | 0.05 | 0.05 | 0.03 | 0.02 |
| சமூக மற்றும் பொருளாதார சேவைகள் மீதான மூலதனச் செலவினம்/மொத்த செலவினம் | 0.05 | 0.04 | 0.04 | 0.03 | 0.02 |
| **III நிதி ஏற்றத் தாழ்வுகளின் மேலாண்மை** | | | | | |
| வருவாய் பற்றாக்குறை (மிகை)/GSDP | 0.006 | 0.000 | (-) 0.001 | (-) 0.038 | (-) 0.024 |
| நிதிப் பற்றாக்குறை/GSDP | (-) 0.006 | (-) 0.008 | (-) 0.010 | (-) 0.044 | (-) 0.028 |
| முதல்நிலை பற்றாக்குறை (மிகை)/GSDP | 0.015 | 0.011 | 0.008 | (-) 0.024 | (-) 0.005 |
| வருவாய் பற்றாக்குறை/நிதிப் பற்றாக்குறை | (-) 0.995 | (-) 0.043 | 0.144 | 0.848 | 0.845 |
| முதல்நிலை வருவாய் இருப்பு/GSDP | 0.027 | 0.020 | 0.017 | (-) 0.017 | இல்லை |
| **IV நிதிப் பொறுப்புகளின் மேலாண்மை** | | | | | |
| நிதிப் பொறுப்புகள்/GSDP | 0.27 | 0.25 | 0.25 | 0.28 | 0.34 |
| நிதிப் பொறுப்புகள்/வருவாய் வரவினங்கள் | 1.47 | 1.43 | 1.39 | 1.85 | 1.60 |
| முதல்நிலை பற்றாக்குறைக்கு எதிராக கடன் அளவின் பரப்பு | 2.93 | 1.38 | 0.92 | 83.18 | 58.16 |
| கடன் மீட்பு (அசல் + வட்டி)/ மொத்த கடன் வரவுகள் | 1.12 | 1.18 | 1.37 | 0.60 | 0.60 |
| **V இதர நிதி நலக் குறியீடுகள்** | | | | | |
| முதலீடு மீதான வருமானம் (₹ கோடியில்) | 0.09 | 0.09 | இல்லை | 0.09 | 0.09 |
| நிதி சார்ந்த சொத்துக்கள்/பொறுப்புகள் | 0.89 | 0.89 | 0.89 | 0.78 | 0.78 |
| வருவாய் செலவினம்/வருவாய் வரவினங்கள் | 97 | 100 | 101 | 123 | 111 |

ஒவ்வொரு துணைத் தலைப்பின் மொத்தத்திற்கான சதவீதத்தை (முழுமையாக்கப்பட்ட) அடைப்புக்குறிகளுக்குள் உள்ள இலக்கங்கள் காட்டுகின்றன

## இணைப்பு 3.1

### (பார்வை: பத்தி 3.1; பக்கம் 75)

### வரவு–செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய சொற்தொகுதிகளின் விளக்கம்

1. கணக்கியல் அதிகாரியின் புத்தகங்களில் (CAGஆல் தணிக்கை செய்யப்பட்டபடி) இறுதியாக பதிவு செய்யப்பட்டபடி, 1 ஏப்ரல் முதல் 31 மார்ச் வரை முடிவடையும் நிதியாண்டிற்கான வரவினங்கள் மற்றும் செலவினங்கள் ***'ஆண்டின் கணக்குகள் அல்லது உள்ளபடியேயானவை'*** ஆகும். தணிக்கை செய்யப்படாத கணக்குகள் தற்காலிகமான கணக்குகளாகும்.
2. ***'ஒரு திட்டம், கருத்துரு அல்லது பணிக்கான நிர்வாக ஒப்புதல்'*** என்பது செலவினங்கள் செய்யப்படும் நோக்கத்திற்காக ஒப்பளிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரியால் முறையாக ஏற்றுக் கொள்ளப்படுவதே ஆகும். வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஆண்டில் இது ஒரு பணிக்கான நிதியனுமதியாக செயல்படுகிறது.
3. ***'ஆண்டு நிதிநிலை அறிக்கை'*** எனப்படும் இது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் யூனியன் பிரதேச அரசால் மதிப்பிடப்பட்ட வரவினங்கள் மற்றும் செலவினங்கள் மீதான ஒரு அறிக்கை. வரவு–செலவுத் திட்ட அறிக்கை எனவும் கூறப்படும் இது யூனியன் பிரதேசத்தின் சட்டப்பேரவை முன் வைக்கப்படுகிறது.
4. வெவ்வேறு முதன்மை நிதியொதுக்கீட்டு அலகுகளின் கீழ் செலவினங்களுக்காக யூனியன் பிரதேச அரசால் வழங்கீட்டு அதிகாரியின் வசம் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொகை ***'நிதியொதுக்கம்'*** ஆகும்
5. அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் சட்டப்பேரவையின் வாக்கெடுப்பிற்கு சமர்ப்பிக்கப்படாத செலவினங்கள் ***சாட்டிய செலவினங்கள்*** எனப்படும்.
6. ***'யூனியன் பிரதேசத்தின் தொகுநிதி'*** – அரசின் அனைத்து வருவாய்கள், பெறப்பட்ட கடன்கள் மற்றும் கடன்கள் திருப்பிச் செலுத்துகையில் பெறப்பட்ட அனைத்துத் தொகைகளும் யூனியன் பிரதேசத்தின் தொகுநிதியை உருவாக்குகின்றன. சட்டத்தின்படியும் மற்றும் குறித்த நோக்கங்களுக்காகவும், அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட முறைமைகளையும் தவிர இந்நிதியிலிருந்து எந்தவொரு பணத்தையும் நிதியொதுக்கம் செய்யமுடியாது.
7. ***எதிர்பாராச் செலவு நிதி*** என்பது முன்பணத் தன்மையிலுள்ளது. ஒரு ஆண்டில் எழும் எதிர்பாராத செலவினங்களை எதிரேற்க, யூனியன் பிரதேச சட்டப்பேரவையின் அங்கீகாரம் நிலுவையிலுள்ளபோது, நிர்வாக/அரசிற்கான முன்பணங்களை வழங்கும் நோக்கம் கொண்டது எதிர்பாராச் செலவு நிதியாகும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து பெறப்பட்ட தொகைகள், யூனியன் பிரதேசத்தின் சட்டப்பேரவையின் அனுமதிக்குப் பிறகு துணைநிலை கோரிக்கைகளாக ஈடுசெய்யப்படுகின்றன.
8. ஒரு துறையால் செலவினம் மேற்கொள்ளல் மற்றும்/அல்லது வருவாய் வசூலித்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பொறுப்புகளை ஒப்படைக்கப்பட்ட

அதிகாரி ***கட்டுப்பாட்டு அதிகாரி (வரவு–செலவுத் திட்டம்)*** ஆவார். இது துறைத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளையும் உள்ளடக்கியதாகும்.

9. யூனியன் பிரதேச அரசின் சார்பாக பட்டிகளைப் பெற்றுக்கொள்ளவும் அதற்கான தொகை விடுவிக்கவும் யூனியன் பிரதேச அரசின் நிதித்துறையால் நியமிக்கப்பட்ட ஒரு தலைமை அதிகாரி மற்றும் வேறு எந்த அதிகாரியும் ***பணம் பெற்று மற்றும் வழங்கும் அதிகாரி (DDO)*** ஆவார். அத்தகைய செயல்பாட்டை நிறைவேற்றும் துறை தலைவரும் இதில் அடங்குவார்.

10. முதல் நிலை/துணை நிலை மானியங்கள் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டவற்றிற்கு மிகையாக செலவிடப்பட்ட தொகை இருந்தால் அது ***மிகை மானியம்*** எனப்படுகிறது. யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 30ன் கீழ் யூனியன் பிரதேச சட்டப்பேரவையிலிருந்து கூடுதல் மானியம் பெறப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படவேண்டும்.

11. ***'புதிய பணி'*** – யூனியன் பிரதேச சட்டப்பேரவையின் கவனத்திற்குக் முன்னரே கொண்டுவரப்படாத ஒரு புதிய நடவடிக்கை அல்லது புதிய ரக முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு புதிய கொள்கை முடிவிலிருந்து எழும் செலவினம் புதிய பணி எனப்படும்.

12. தற்போதுள்ள ஒரு நடவடிக்கையின் முக்கியமான விரிவாக்கத்தின் மூலம் எழும் பெரிய செலவினம் ***'புதிய பணிக்கான சேவைகள்'*** என பொருள்படும்.

13. ***'பொதுக்கணக்குகள்'*** என்பது யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963ன் பிரிவு 47(அ)ல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுக்கணக்கு ஆகும். தொகுநிதியின் ஒரு பகுதியாக இல்லாத வைப்புநிதிகள், சேமநிதிகள், வழங்கீடுகள் போன்ற வரவினங்கள் மற்றும் செலுத்தங்கள் பொதுக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொதுக்கணக்கிலிருந்து செய்யப்படும் செலுத்தங்கள், யூனியன் பிரதேசத்தின் தொகுநிதியிலிருந்து செலவிடப்படும் பணங்கள் அல்லாததால், அவை யூனியன் பிரதேசத்தின் சட்டப்பேரவையால் வாக்களிக்கப்படுவதில்லை.

14. ***'மறுநிதியொதுக்கம்'*** – என்பது ஒரு நிதியொதுக்க அலகிலுள்ள சேமிப்புகளை, அதே மானியம் அல்லது சாட்டிய நிதியொதுக்கத்திலுள்ள கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேறொரு அலகிற்கு தகுதியுடைய அதிகாரியால் மடைமாற்றம் செய்யப்படுவதேயாகும்.

15. ***'திருத்திய மதிப்பீடு'*** – என்பது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முன்னமே வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் ஆண்டின் எஞ்சிய காலத்திற்கான எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைக் கொண்டு, அந்த ஆண்டின்போது வடிவமைக்கப்பட்ட ஒரு நிதியாண்டிற்கான சாத்தியக்கூறுடைய வரவினங்கள் மற்றும் செலவினங்களின் மதிப்பீடாகும்.

16. அந்த ஆண்டின் ஆண்டு நிதி அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கும் மேலாக ஒரு நிதியாண்டிற்குத் தேவையான கூடுதல் செலவினங்களின் மதிப்பிடப்பட்ட தொகையைக் காட்டும், சட்டப்பேரவையின் முன் வைக்கப்படும் துணைநிலை கோரிக்கைகளின் அட்டவணை ***'துணைநிலை மானியக் கோரிக்கைகள்'*** எனப்படும். துணைநிலைக் கோரிக்கை என்பது

அடையாள சிறு தொகையாகவோ, தொழில்நுட்ப அல்லது கணிசமான அளவு பணமாகவோ இருக்கலாம்.

17. ***பணத் துணைநிலை*** என்பது முதல் நிலை வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு மேல் மற்றும் கோரிக்கை/மானியத்திற்கான ஒதுக்கீட்டை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. இது ஒரு கடைசி முயற்சியாகவும் உரிய கவனத்துடனும் பெறப்படவேண்டும். தற்போது, யூனியன் பிரதேசத்தில் இவ்வழிமுறை பின்பற்றப்படுகிறது.

18. ஒவ்வொரு கோரிக்கையிலும், வருவாய் அனுமதித்தது, வருவாய் சாட்டியது, மூலதனம் அனுமதித்தது மற்றும் மூலதனம் சாட்டியது என நான்கு பிரிவுகள் உள்ளன. யூனியன் பிரதேசத்தின் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், ***தொழில்நுட்பத் துணைநிலை*** மானியம் ஒரு பிரிவின் சேமிப்பை வேறொரு பிரிவும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது.

19. ***அடையாளத் துணைநிலை*** ஒரு பிரிவின் சேமிப்பை மானியத்திலுள்ள அதே பிரிவில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது.

20. யூனியன் பிரதேசத்தின் வரவினங்கள் மற்றும் செலவினங்களை பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்தல் நோக்கத்திற்காக செயல்படுத்தப்படும் பெரும் கணக்குத் தலைப்பு ***'பெருந்தலைப்பு'*** எனப்படும். குறிப்பாக தொகுநிதியின் கீழ் வரும் ஒரு பெருந்தலைப்பு, பொதுவாக, அரசின் வேளாண்மை, கல்வி, சுகாதாரம் போன்ற செயல்பாட்டை ஒத்திருக்கிறது.

21. சிறுதலைப்புகள் அதிகமான இருக்கும்போது, பெருந்தலைப்புக்கும் அதன் கீழுள்ள சிறுதலைப்புக்களுக்கும், இடையில் அறிமுகப்படுத்தப்படும் இடைநிலைக் கணக்குத் தலைப்பு ***'இடைநிலை பெருந் தலைப்பு'*** எனப்படும். மற்றும், அத்தகைய இடைநிலைத் தலைப்புகளின் கீழ் அவற்றை பொருத்தமாக தொகுக்கலாம்.

22. ***'சிறுதலைப்பு'*** என்பது பெருந்தலைப்பு அல்லது ஒரு இடைநிலைக் கணக்குத் தலைப்பிற்குக் கீழ்ப்பட்ட கணக்குத் தலைப்பாகும். பெருந்தலைப்பிற்குக் கீழ்ப்பட்ட சிறுதலைப்பு பெருந்தலைப்பால் எடுத்துரைக்கப்படும் நடவடிக்கையின் நோக்கத்தை எய்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தை அடையாளம் காட்டுகிறது.

23. சிறுதலைப்பிற்கு அடுத்து கீழ்ப்பட்ட ஒரு கணக்கின் அலகு ***'துணைத் தலைப்பு'*** எனப்படுகிறது. இது பொதுவாக அந்த சிறுதலைப்பு அல்லது செயல்முறைத் திட்டத்தின் கீழ் வரும் திட்டம் அல்லது நிறுவனத்தைக் குறிக்கிறது.

24. துறைக் கட்டணங்களைத் தவிர்த்த, மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு அதிகமாக அவ்வப்போது அரசால் அறிவிக்கப்பட்ட தொகையை அடக்கிய ஒரு மூலப்பணியே ***'பெரும் பணி'*** எனப்படும்.

25. துறைக் கட்டணங்களைத் தவிர்த்த, மதிப்பிடப்பட்ட செலவினம் அவ்வப்போது அரசால் அறிவிக்கப்பட்ட தொகைக்கு குறைவாக இருக்கும் ஒரு மூலப் பணியே ***'சிறு பணி'*** எனப்படும்.

26. நிதியொதுக்கத்தின் எந்தவொரு துணைத் தலைப்பிற்கும் மறுநிதியொதுக்கத்திற்குப் பிறகு ஒதுக்கப்பட்ட தொகை அல்லது தகுதியுடைய

அதிகாரியால் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் அல்லது துணைநிலை மானியம் ***'மாற்றியமைக்கப்பட்ட மானியம் அல்லது நிதியொதுக்கம்'*** எனப்படும்.

27. அந்த ஆண்டிற்கான நிதியொதுக்கச் சட்டத்தில் முன்னரே உள்ளடக்கப்பட்ட தொகையை விட அதிகமான செலவினங்களை எதிரேற்க, நிதியாண்டின் போது ஒரு நிதியொதுக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட ஒரு ஒதுக்கீடு ***'துணைநிலை அல்லது கூடுதல் மானியம் அல்லது நிதியொதுக்கம்'*** எனப்படும்.

28. அடுத்த ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு கருத்துரைக்கப்பட்ட புதிய செலவினங்களுக்கான நேர்வுகளின் அறிக்கையே ***'புதிய செலவினங்களின் அட்டவணை'*** எனப்படும்.

29. ஒப்பளிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்ட மானியத்தின் சேமிப்பிலிருந்து ஒரு புதிய சேவைக்கான மொத்தச் செலவையும் எதிரேற்க முன்மொழியப்படும் போது சட்டப்பேரவையில் வைக்கப்படும் சிறிதளவு அல்லது அடையாளத் தொகைக்கான ஒரு கோரிக்கை ***'அடையாளக் கோரிக்கை'*** எனப்படும்.

## இணைப்பு 3.2

### (பார்வை: பத்தி 3.3.3; பக்கம் 84)

### ரூபாய் 50 இலட்சம் அல்லது அதற்கு மேலான துணைநிலை மானியங்கள் பகுதியளவு தேவையற்றது என நிரூபிக்கப்பட்ட நேர்வுகளின் விவரங்கள்

(₹ கோடியில்)

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | முதல் நிலை ஒதுக்கீடு | துணை நிலை ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | துணை நிலை ஒதுக்–கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 01 | 2011 | 02 | 101 | 02 | 01 | 3.06 | 1.55 | 4.61 | 3.28 | 1.33 |
| 2 | 06 | 2029 | 00 | 101 | 03 | 01 | 7.87 | 0.53 | 8.40 | 8.13 | 0.27 |
| 3 | 06 | 2408 | 01 | 102 | 08 | 01 | 150.50 | 12.00 | 162.50 | 157.88 | 4.62 |
| 4 | 06 | 3456 | 00 | 190 | 01 | 01 | 1.65 | 4.79 | 6.44 | 6.31 | 0.13 |
| 5 | 08 | 2070 | 00 | 114 | 01 | 01 | 4.00 | 0.54 | 4.54 | 4.42 | 0.12 |
| 6 | 10 | 2216 | 80 | 800 | 23 | 01 | 7.25 | 9.60 | 16.85 | 16.80 | 0.05 |
| 7 | 12 | 2055 | 00 | 001 | 02 | 01 | 1.87 | 2.49 | 4.36 | 2.53 | 1.83 |
| 8 | 12 | 2055 | 00 | 104 | 01 | 01 | 38.38 | 4.38 | 42.76 | 39.87 | 2.89 |
| 9 | 12 | 2055 | 00 | 104 | 02 | 01 | 64.53 | 8.00 | 72.53 | 69.67 | 2.86 |
| 10 | 12 | 2055 | 00 | 109 | 01 | 01 | 60.36 | 5.00 | 65.36 | 63.75 | 1.61 |
| 11 | 12 | 2055 | 00 | 115 | 01 | 01 | 29.12 | 2.22 | 31.34 | 30.80 | 0.54 |
| 12 | 12 | 2070 | 00 | 107 | 01 | 01 | 11.67 | 0.93 | 12.60 | 12.03 | 0.57 |
| 13 | 12 | 2070 | 00 | 108 | 03 | 01 | 10.78 | 1.32 | 12.10 | 11.24 | 0.86 |
| 14 | 15 | 2071 | 01 | 101 | 01 | 07 | 527.00 | 43.24 | 570.24 | 564.75 | 5.49 |
| 15 | 15 | 2071 | 01 | 102 | 01 | 07 | 96.00 | 28.52 | 124.52 | 117.38 | 7.14 |
| 16 | 15 | 2071 | 01 | 104 | 01 | 07 | 96.00 | 48.24 | 144.24 | 139.13 | 5.11 |
| 17 | 15 | 2071 | 01 | 105 | 01 | 07 | 164.00 | 10.72 | 174.72 | 171.97 | 2.75 |
| 18 | 15 | 2071 | 01 | 117 | 01 | 07 | 97.00 | 14.59 | 111.59 | 105.86 | 5.73 |
| 19 | 16 | 2059 | 01 | 053 | 04 | 01 | 0.00 | 1.00 | 1.00 | 0.56 | 0.44 |
| 20 | 16 | 2059 | 80 | 001 | 03 | 01 | 2.90 | 0.52 | 3.42 | 3.11 | 0.31 |
| 21 | 16 | 2702 | 02 | 001 | 02 | 02 | 6.60 | 0.52 | 7.12 | 6.83 | 0.29 |
| 22 | 16 | 3054 | 04 | 800 | 04 | 01 | 1.95 | 9.46 | 11.41 | 11.27 | 0.14 |
| 23 | 16 | 4711 | 03 | 103 | 01 | 01 | 0.05 | 2.45 | 2.50 | 0.12 | 2.38 |
| 24 | 16 | 5054 | 04 | 800 | 01 | 01 | 0.05 | 3.46 | 3.51 | 1.14 | 2.37 |

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | முதல் நிலை ஒதுக்கீடு | துணை நிலை ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | செலவினம் | துணை நிலை ஒதுக்–கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 | 17 | 2202 | 01 | 800 | 01 | 02 | 54.09 | 4.19 | 58.28 | 58.09 | 0.19 |
| 26 | 17 | 2202 | 02 | 109 | 18 | 01 | 87.96 | 7.68 | 95.64 | 94.63 | 1.01 |
| 27 | 18 | 2210 | 01 | 110 | 01 | 01 | 120.23 | 4.45 | 124.68 | 122.66 | 2.02 |
| 28 | 18 | 2210 | 02 | 800 | 01 | 01 | 1.00 | 0.62 | 1.62 | 1.24 | 0.38 |
| 29 | 18 | 2210 | 80 | 800 | 21 | 01 | 0.00 | 0.80 | 0.80 | 0.67 | 0.13 |
| 30 | 18 | 4210 | 80 | 800 | 01 | 01 | 0.00 | 1.20 | 1.20 | 1.19 | 0.01 |
| 31 | 19 | 5452 | 01 | 800 | 02 | 01 | 4.00 | 6.85 | 10.85 | 10.80 | 0.05 |
| 32 | 20 | 2230 | 03 | 101 | 01 | 01 | 3.30 | 0.55 | 3.85 | 3.72 | 0.13 |
| 33 | 20 | 2230 | 03 | 101 | 01 | 02 | 3.96 | 0.52 | 4.48 | 4.36 | 0.12 |
| 34 | 21 | 2225 | 01 | 277 | 17 | 01 | 4.83 | 2.00 | 6.83 | 6.44 | 0.39 |
| 35 | 21 | 2225 | 01 | 789 | 41 | 01 | 0.00 | 0.55 | 0.55 | 0.50 | 0.05 |
| 36 | 21 | 4225 | 01 | 789 | 01 | 01 | 0.00 | 1.90 | 1.90 | 1.86 | 0.04 |
| 37 | 25 | 2403 | 00 | 101 | 08 | 01 | 3.79 | 0.61 | 4.40 | 3.92 | 0.48 |
| 38 | 26 | 2405 | 00 | 800 | 19 | 01 | 10.38 | 2.65 | 13.03 | 11.88 | 1.15 |
| 39 | 26 | 2405 | 00 | 800 | 19 | 02 | 2.61 | 1.16 | 3.77 | 3.17 | 0.60 |
| 40 | 26 | 2405 | 00 | 800 | 19 | 04 | 3.65 | 1.51 | 5.16 | 4.38 | 0.78 |
| 41 | 32 | 4202 | 03 | 800 | 01 | 01 | 0.00 | 1.03 | 1.03 | 1.02 | 0.01 |
| 42 | 33 | 2049 | 03 | 104 | 01 | 07 | 51.61 | 28.90 | 80.51 | 73.47 | 7.04 |
| **மொத்தம்** | | | | | | | **1,734.00** | **283.24** | **2,017.24** | **1,952.83** | **64.41** |

## இணைப்பு 3.3

**(பார்வை: பத்தி 3.3.4; பக்கம் 85)**

**ரூபாய் 10 இலட்சம் அல்லது அதற்கு மேலான முற்றிலும் தேவையற்ற மறுநிதியொதுக்கங்கள்**

(₹ இலட்சத்தில்)

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | ஒதுக்கீடு | மறுநிதி-யொதுக்கம் | செலவினம் | ஒதுக்கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06 | 2408 | 01 | 102 | 08 | 01 | 16,250.00 | 19.54 | 15,787.50 | 462.50 |
| 2 | 06 | 2408 | 01 | 789 | 02 | 01 | 3,697.00 | 217.00 | 3,665.66 | 31.34 |
| 3 | 07 | 2043 | 00 | 001 | 01 | 01 | 1,095.41 | 12.77 | 1,094.69 | 0.72 |
| 4 | 09 | 2062 | 00 | 800 | 01 | 01 | 201.22 | 15.33 | 190.27 | 10.95 |
| 5 | 10 | 2216 | 80 | 800 | 04 | 01 | 520.00 | 53.70 | 389.01 | 130.99 |
| 6 | 10 | 2216 | 80 | 800 | 19 | 03 | 96.80 | 15.40 | 7.80 | 89.00 |
| 7 | 10 | 2216 | 80 | 800 | 19 | 04 | 30.00 | 57.60 | 0.00 | 30.00 |
| 8 | 10 | 2217 | 01 | 191 | 01 | 01 | 150.95 | 15.00 | 70.12 | 80.83 |
| 9 | 12 | 2055 | 00 | 001 | 02 | 01 | 436.12 | 16.66 | 252.91 | 183.21 |
| 10 | 12 | 2055 | 00 | 003 | 02 | 01 | 54.00 | 20.00 | 29.53 | 24.47 |
| 11 | 12 | 2055 | 00 | 003 | 03 | 01 | 60.00 | 20.00 | 51.74 | 8.26 |
| 12 | 12 | 2055 | 00 | 109 | 01 | 01 | 6,535.51 | 10.40 | 6,375.28 | 160.23 |
| 13 | 12 | 2055 | 00 | 115 | 01 | 01 | 3,133.51 | 13.66 | 3,079.70 | 53.81 |
| 14 | 12 | 4055 | 00 | 207 | 01 | 01 | 748.38 | 99.92 | 432.26 | 316.12 |
| 15 | 12 | 4070 | 00 | 800 | 04 | 01 | 15.05 | 10.45 | 6.67 | 8.38 |
| 16 | 13 | 2056 | 00 | 101 | 01 | 01 | 584.38 | 17.12 | 568.95 | 15.43 |
| 17 | 16 | 4215 | 01 | 800 | 03 | 01 | 4,300.00 | 278.23 | 1,674.24 | 2,625.76 |
| 18 | 16 | 5054 | 04 | 800 | 05 | 01 | 800.00 | 300.00 | 186.67 | 613.33 |
| 19 | 16 | 5054 | 04 | 800 | 05 | 04 | 386.95 | 13.05 | 27.74 | 359.21 |
| 20 | 16 | 5054 | 04 | 800 | 09 | 01 | 3,644.00 | 269.98 | 1,774.38 | 1,869.62 |
| 21 | 17 | 2202 | 01 | 108 | 01 | 02 | 215.29 | 94.29 | 49.00 | 166.29 |
| 22 | 17 | 2202 | 01 | 789 | 03 | 01 | 285.55 | 20.18 | 76.64 | 208.91 |
| 23 | 17 | 2202 | 01 | 789 | 03 | 02 | 86.43 | 29.27 | 13.67 | 72.76 |
| 24 | 17 | 2202 | 01 | 800 | 01 | 02 | 5,828.13 | 56.82 | 5,809.42 | 18.71 |
| 25 | 17 | 2202 | 02 | 109 | 18 | 01 | 9,564.21 | 37.77 | 9,462.85 | 101.36 |
| 26 | 17 | 2202 | 03 | 103 | 03 | 01 | 2,400.41 | 25.09 | 2,359.83 | 40.58 |

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | ஒதுக்கீடு | மறுநிதி–யொதுக்கம் | செலவினம் | ஒதுக்கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | 17 | 2202 | 03 | 103 | 09 | 04 | 650.51 | 30.09 | 619.05 | 31.46 |
| 28 | 17 | 2202 | 03 | 103 | 29 | 02 | 965.66 | 22.77 | 898.40 | 67.26 |
| 29 | 17 | 2202 | 80 | 789 | 09 | 01 | 98.61 | 42.26 | 48.00 | 50.61 |
| 30 | 17 | 2202 | 80 | 800 | 14 | 01 | 451.83 | 22.02 | 349.85 | 101.98 |
| 31 | 17 | 2236 | 02 | 102 | 05 | 01 | 514.63 | 26.63 | 303.87 | 210.76 |
| 32 | 18 | 2210 | 01 | 001 | 01 | 01 | 949.94 | 61.18 | 727.86 | 222.08 |
| 33 | 18 | 2210 | 01 | 001 | 09 | 02 | 110.00 | 25.00 | 103.73 | 6.27 |
| 34 | 18 | 2210 | 02 | 800 | 01 | 01 | 161.66 | 415.44 | 123.97 | 37.69 |
| 35 | 18 | 2210 | 02 | 800 | 02 | 01 | 127.00 | 93.00 | 84.53 | 42.47 |
| 36 | 18 | 2210 | 03 | 104 | 01 | 01 | 439.85 | 14.27 | 417.52 | 22.33 |
| 37 | 18 | 2210 | 06 | 107 | 04 | 01 | 285.24 | 16.98 | 276.81 | 8.43 |
| 38 | 18 | 2210 | 80 | 789 | 06 | 01 | 400.00 | 280.40 | 0.00 | 400.00 |
| 39 | 18 | 2210 | 80 | 800 | 21 | 01 | 80.00 | 100.00 | 67.00 | 13.00 |
| 40 | 18 | 2210 | 80 | 800 | 22 | 01 | 500.00 | 13.60 | 0.00 | 500.00 |
| 41 | 18 | 2210 | 80 | 800 | 23 | 01 | 100.00 | 19.70 | 0.00 | 100.00 |
| 42 | 18 | 2210 | 80 | 800 | 24 | 01 | 200.00 | 25.00 | 0.00 | 200.00 |
| 43 | 18 | 2210 | 80 | 800 | 25 | 01 | 50.00 | 40.01 | 0.00 | 50.00 |
| 44 | 19 | 2070 | 00 | 115 | 01 | 06 | 485.51 | 14.07 | 417.49 | 68.02 |
| 45 | 19 | 3452 | 80 | 001 | 01 | 01 | 479.11 | 22.41 | 190.63 | 288.48 |
| 46 | 20 | 2230 | 03 | 102 | 07 | 01 | 250.00 | 23.00 | 0.00 | 250.00 |
| 47 | 20 | 2230 | 03 | 789 | 19 | 01 | 50.00 | 50.00 | 0.00 | 50.00 |
| 48 | 20 | 2230 | 03 | 800 | 04 | 01 | 395.91 | 119.09 | 0.00 | 395.91 |
| 49 | 21 | 2225 | 01 | 789 | 32 | 01 | 1,000.00 | 100.00 | 661.44 | 338.56 |
| 50 | 21 | 2225 | 01 | 789 | 34 | 02 | 400.00 | 67.00 | 351.11 | 48.89 |
| 51 | 21 | 2225 | 01 | 789 | 45 | 01 | 1,000.00 | 73.90 | 985.50 | 14.50 |
| 52 | 21 | 2235 | 02 | 102 | 01 | 01 | 306.71 | 206.94 | 106.37 | 200.34 |
| 53 | 21 | 2235 | 02 | 102 | 03 | 01 | 463.12 | 56.37 | 401.62 | 61.50 |
| 54 | 21 | 2235 | 02 | 102 | 26 | 01 | 136.00 | 40.40 | 5.95 | 130.05 |
| 55 | 21 | 2235 | 02 | 103 | 18 | 01 | 42.54 | 19.24 | 0.00 | 42.54 |
| 56 | 21 | 2235 | 02 | 106 | 01 | 01 | 127.83 | 10.02 | 122.77 | 5.06 |

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | ஒதுக்கீடு | மறுநிதி–யொதுக்கம் | செலவினம் | ஒதுக்கீட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 57 | 21 | 2235 | 60 | 102 | 01 | 04 | 996.68 | 15.00 | 988.32 | 8.36 |
| 58 | 24 | 2401 | 00 | 789 | 01 | 02 | 101.20 | 44.71 | 87.37 | 13.83 |
| 59 | 24 | 2401 | 00 | 800 | 13 | 01 | 23.33 | 16.97 | 6.00 | 17.33 |
| 60 | 24 | 2406 | 01 | 102 | 06 | 01 | 0.01 | 13.34 | 0.00 | 0.01 |
| 61 | 26 | 2405 | 00 | 103 | 05 | 01 | 62.23 | 14.00 | 41.17 | 21.06 |
| 62 | 26 | 2405 | 00 | 103 | 05 | 02 | 49.46 | 14.74 | 39.42 | 10.04 |
| 63 | 26 | 2405 | 00 | 120 | 01 | 01 | 211.94 | 10.56 | 188.11 | 23.83 |
| 64 | 27 | 2505 | 02 | 101 | 08 | 01 | 50.00 | 30.14 | 0.00 | 50.00 |
| 65 | 27 | 2505 | 02 | 789 | 03 | 01 | 20.00 | 14.34 | 0.00 | 20.00 |
| 66 | 27 | 2515 | 00 | 800 | 12 | 01 | 0.01 | 301.99 | 0.00 | 0.01 |
| 67 | 28 | 2851 | 00 | 105 | 01 | 01 | 1,444.09 | 60.83 | 1,365.72 | 78.37 |
| 68 | 28 | 2851 | 00 | 800 | 06 | 01 | 857.35 | 45.00 | 802.50 | 54.85 |
| 69 | 32 | 4070 | 00 | 800 | 04 | 02 | 0.01 | 49.99 | 0.00 | 0.01 |
| 70 | 33 | 6004 | 01 | 102 | 01 | 07 | 7,451.00 | 111.00 | 7,450.00 | 1.00 |
| மொத்தம் | | | | | | | 83,608.27 | 4,532.63 | 71,668.61 | 11,939.66 |

## இணைப்பு 3.4

### (பார்வை: பத்தி 3.3.5.1; பக்கம் 86)

### (அ) ரூபாய் ஒரு கோடிக்கும் மேலான சேமிப்புகள் ஒப்புவிக்கப்படாத நேர்வுகளின் விவரங்கள்

(₹ கோடியில்)

| வரிசை எண் | மானிய எண் | விவரிப்பு | சேமிப்பு | ஒப்புவிக்கப் பட்ட தொகை | ஒப்புவிக்கப் படாத தொகை |
|---|---|---|---|---|---|
| **(அ) வருவாய் - அனுமதித்தது** | | | | | |
| 1 | 01 | சட்டப் பேரவை | 1.25 | 0.00 | 1.25 |
| 2 | 04 | நீதி நிர்வாகம் | 1.53 | 0.00 | 1.53 |
| 3 | 06 | வருவாய் மற்றும் உணவு | 13.58 | 0.00 | 13.58 |
| 4 | 09 | செயலகம் | 2.68 | 0.00 | 2.68 |
| 5 | 10 | மாவட்ட நிர்வாகம் | 90.22 | 0.00 | 90.22 |
| 6 | 12 | காவல் | 16.65 | 0.00 | 16.65 |
| 7 | 14 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 2.33 | 0.00 | 2.33 |
| 8 | 15 | ஓய்வூதியப் பலன்கள் | 22.74 | 0.00 | 22.74 |
| 9 | 16 | பொதுப்பணிகள் | 8.30 | 0.00 | 8.30 |
| 10 | 17 | கல்வி | 103.64 | 0.00 | 103.64 |
| 11 | 18 | மருத்துவம் | 74.04 | 0.00 | 74.04 |
| 12 | 19 | செய்தி மற்றும் விளம்பரம் | 8.55 | 2.94 | 5.61 |
| 13 | 20 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 13.94 | 0.00 | 13.94 |
| 14 | 21 | சமூக நலன் | 48.07 | 0.00 | 48.07 |
| 15 | 22 | கூட்டுறவு | 39.90 | 33.43 | 6.47 |
| 16 | 24 | வேளாண்மை | 11.69 | 0.00 | 11.69 |
| 17 | 25 | கால்நடை பராமரிப்பு | 3.98 | 0.00 | 3.98 |
| 18 | 26 | மீன்வளம் | 14.41 | 0.00 | 14.41 |
| 19 | 27 | சமுதாய வளர்ச்சி | 28.78 | 4.23 | 24.55 |
| 20 | 28 | தொழில்கள் | 5.38 | 0.00 | 5.38 |
| 21 | 29 | மின்சாரம் | 3.35 | 0.00 | 3.35 |
| 22 | 32 | கட்டட செயல் திட்டங்கள் | 2.91 | 0.80 | 2.11 |
| **மொத்தம் (அ)** | | | **517.92** | **41.40** | **476.52** |
| **(ஆ) வருவாய் – சாட்டியது** | | | | | |
| 23 | 21 | சமூக நலன் | 7.70 | 0.06 | 7.64 |

| வரிசை எண் | மானிய எண் | விவரிப்பு | சேமிப்பு | ஒப்புவிக்கப் பட்ட தொகை | ஒப்புவிக்கப் படாத தொகை |
|---|---|---|---|---|---|
| 24 | 33 | பொதுக் கடன் | 6.38 | 0.00 | 6.38 |
| **மொத்தம் (ஆ)** | | | **14.08** | **0.06** | **14.02** |
| **(இ) மூலதனம் – அனுமதித்தது** | | | | | |
| 25 | 12 | மாவட்ட நிர்வாகம் | 7.14 | 1.03 | 6.11 |
| 26 | 16 | பொதுப்பணிகள் | 87.10 | 61.56 | 25.54 |
| 27 | 18 | மருத்துவம் | 16.09 | 0.00 | 16.09 |
| 28 | 21 | சமூக நலன் | 6.00 | 1.40 | 4.60 |
| 29 | 29 | மின்சாரம் | 6.58 | 2.63 | 3.96 |
| 30 | 32 | கட்டட செயல் திட்டங்கள் | 34.51 | 4.94 | 29.56 |
| **மொத்தம் (இ)** | | | **157.42** | **71.56** | **85.86** |
| **(ஈ) மூலதனம் – சாட்டியது** | | | | | |
| 31 | 16 | பொதுப்பணிகள் | 12.18 | 0.00 | 12.18 |
| 32 | 17 | கல்வி | 1.05 | 0.00 | 1.05 |
| 33 | 28 | தொழில்கள் | 3.11 | 0.00 | 3.11 |
| **மொத்தம் (ஈ)** | | | **16.34** | **0.00** | **16.34** |
| **பெரு மொத்தம்** | | | **705.76** | **113.02** | **592.74** |

**இணைப்பு 3.4**

**(பார்வை: பத்தி 3.3.5.1; பக்கம் 86)**

**(ஆ) மொத்த சேமிப்புகள் (₹ ஒரு கோடிக்கும் மேலானவை) ஒப்புவிக்கப்படாத நேர்வுகளின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | மானிய எண் | விவரிப்பு | சேமிப்பு | ஒப்புவிக்கப் பட்ட தொகை | ஒப்புவிக்கப் படாத தொகை |
|---|---|---|---|---|---|
| **(அ) வருவாய் – அனுமதித்தது** | | | | | |
| 1 | 01 | சட்டப் பேரவை | 1.25 | 0.00 | 1.25 |
| 2 | 04 | நீதி நிர்வாகம் | 1.53 | 0.00 | 1.53 |
| 3 | 06 | வருவாய் மற்றும் உணவு | 13.58 | 0.00 | 13.58 |
| 4 | 09 | செயலகம் | 2.68 | 0.00 | 2.68 |
| 5 | 10 | மாவட்ட நிர்வாகம் | 90.22 | 0.00 | 90.22 |
| 6 | 12 | காவல் | 16.65 | 0.00 | 16.65 |
| 7 | 14 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 2.33 | 0.00 | 2.33 |
| 8 | 15 | ஓய்வூதியப் பலன்கள் | 22.74 | 0.00 | 22.74 |
| 9 | 16 | பொதுப்பணிகள் | 8.30 | 0.00 | 8.30 |
| 10 | 17 | கல்வி | 103.64 | 0.00 | 103.64 |
| 11 | 18 | மருத்துவம் | 74.03 | 0.00 | 74.03 |
| 12 | 20 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | 13.94 | 0.00 | 13.94 |
| 13 | 21 | சமூக நலன் | 48.07 | 0.00 | 48.07 |
| 14 | 24 | வேளாண்மை | 11.69 | 0.00 | 11.69 |
| 15 | 25 | கால்நடை பராமரிப்பு | 3.98 | 0.00 | 3.98 |
| 16 | 26 | மீன்வளம் | 14.41 | 0.00 | 14.41 |
| 17 | 28 | தொழில்கள் | 5.38 | 0.00 | 5.38 |
| 18 | 29 | மின்சாரம் | 3.35 | 0.00 | 3.35 |
| **மொத்தம் (அ)** | | | **437.77** | **0.00** | **437.77** |
| **(ஆ) வருவாய் – சாட்டியது** | | | | | |
| 19 | 33 | பொதுக் கடன் | 6.38 | 0.00 | 6.38 |
| **மொத்தம் (ஆ)** | | | **6.38** | **0.00** | **6.38** |

| வரிசை எண் | மானிய எண் | விவரிப்பு | சேமிப்பு | ஒப்புவிக்கப் பட்ட தொகை | ஒப்புவிக்கப் படாத தொகை |
|---|---|---|---|---|---|
| **(இ) மூலதனம் – அனுமதித்தது** | | | | | |
| 20 | 18 | மருத்துவம் | 16.09 | 0.00 | 16.09 |
| **மொத்தம் (இ)** | | | **16.09** | **0.00** | **16.09** |
| **(ஈ) மூலதனம் – சாட்டியது** | | | | | |
| 21 | 16 | பொதுப்பணிகள் | 12.18 | 0.00 | 12.18 |
| 22 | 17 | கல்வி | 1.05 | 0.00 | 1.05 |
| 23 | 28 | தொழில்கள் | 3.11 | 0.00 | 3.11 |
| **மொத்தம் (ஈ)** | | | **16.34** | **0.00** | **16.34** |
| **பெரு மொத்தம்** | | | **476.58** | **0.00** | **476.58** |

**இணைப்பு 3.5**

**(பார்வை: பத்தி 3.3.5.2; பக்கம் 86)**

**மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் மற்றும் ₹ 10 இலட்சத்திற்கும் அதிகமாக ஒப்புவிப்பு செய்யப்பட்ட நேர்வுகளின் விவரங்கள்**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | V/C | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு | ஒப்புவிக்கப் பட்டது | ஒப்புவிக்கப் பட்ட தொகை (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | 4058 | 00 | 103 | 01 | 01 | V | 48.00 | 20.11 | 27.89 | 27.55 | 98.78 |
| 2 | 16 | 4215 | 01 | 800 | 03 | 01 | V | 4,300.00 | 1,674.24 | 2,625.76 | 2,579.80 | 98.25 |
| 3 | 16 | 4702 | 00 | 800 | 02 | 01 | V | 200.00 | 0.00 | 200.00 | 175.00 | 87.50 |
| 4 | 16 | 4702 | 00 | 800 | 02 | 02 | V | 50.00 | 0.00 | 50.00 | 50.00 | 100.00 |
| 5 | 16 | 4711 | 03 | 800 | 04 | 01 | V | 300.00 | 0.00 | 300.00 | 300.00 | 100.00 |
| 6 | 16 | 4711 | 03 | 800 | 04 | 02 | V | 300.00 | 0.00 | 300.00 | 300.00 | 100.00 |
| 7 | 16 | 4711 | 03 | 800 | 04 | 04 | V | 305.00 | 0.00 | 305.00 | 256.81 | 84.20 |
| 8 | 16 | 5054 | 04 | 800 | 09 | 01 | V | 3,644.00 | 1,774.38 | 1,869.62 | 1,968.00 | 105.26 |
| 9 | 19 | 3452 | 80 | 800 | 30 | 01 | V | 398.00 | 0.00 | 398.00 | 293.53 | 73.75 |
| 10 | 22 | 2852 | 08 | 201 | 01 | 01 | V | 4,011.00 | 0.00 | 4,011.00 | 3,342.95 | 83.34 |
| 11 | 27 | 2505 | 02 | 101 | 04 | 01 | V | 200.00 | 0.00 | 200.00 | 200.00 | 100.00 |
| 12 | 31 | 7610 | 00 | 201 | 01 | 07 | V | 25.00 | 0.00 | 25.00 | 25.00 | 100.00 |
| 13 | 31 | 7610 | 00 | 204 | 02 | 07 | V | 25.00 | 6.45 | 18.55 | 17.00 | 91.64 |
| 14 | 32 | 3452 | 01 | 800 | 13 | 03 | V | 40.00 | 20.00 | 20.00 | 20.00 | 100.00 |
| 15 | 32 | 4059 | 01 | 051 | 03 | 01 | V | 275.61 | 36.20 | 239.41 | 239.40 | 100.00 |
| 16 | 32 | 4059 | 01 | 051 | 03 | 02 | V | 200.00 | 0.00 | 200.00 | 200.00 | 100.00 |
| 17 | 32 | 4210 | 05 | 105 | 01 | 03 | V | 25.00 | 0.00 | 25.00 | 25.00 | 100.00 |
| 18 | 32 | 4235 | 02 | 101 | 02 | 01 | V | 17.93 | 4.09 | 13.84 | 13.00 | 93.93 |
| **மொத்தம்** | | | | | | | | **14,364.54** | **3,535.47** | **10,829.07** | **10,033.04** | |

**V/C : அனுமதித்தது/சாட்டியது**

## இணைப்பு 3.6

**(பார்வை: பத்தி 3.3.5.3; பக்கம் 88)**

**ஒவ்வொரு நேர்விலும் சேமிப்புகள் ₹ 50 இலட்சத்திற்கு அதிகமாகவும் மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு மேலாகவும் உள்ள நேர்வுகளின் விவரங்கள்**

(₹ இலட்சத்தில்)

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | V/C | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06 | 2245 | 02 | 101 | 01 | 01 | V | 91.00 | 0.00 | 91.00 | 100.00 |
| 2 | 10 | 2215 | 01 | 102 | 01 | 01 | V | 680.00 | 71.94 | 608.06 | 89.42 |
| 3 | 10 | 2215 | 01 | 789 | 04 | 01 | V | 220.00 | 23.28 | 196.72 | 89.42 |
| 4 | 10 | 2215 | 01 | 796 | 01 | 01 | V | 100.00 | 10.58 | 89.42 | 89.42 |
| 5 | 10 | 2216 | 80 | 789 | 11 | 01 | V | 1,162.20 | 562.98 | 599.22 | 51.56 |
| 6 | 10 | 2216 | 80 | 800 | 04 | 02 | V | 149.02 | 26.30 | 122.72 | 82.35 |
| 7 | 10 | 2216 | 80 | 800 | 19 | 02 | V | 195.00 | 0.00 | 195.00 | 100.00 |
| 8 | 10 | 2216 | 80 | 800 | 19 | 03 | V | 96.80 | 7.80 | 89.00 | 91.94 |
| 9 | 10 | 2217 | 01 | 191 | 01 | 01 | V | 150.95 | 70.12 | 80.83 | 53.55 |
| 10 | 10 | 2217 | 05 | 800 | 03 | 04 | V | 200.00 | 93.17 | 106.83 | 53.41 |
| 11 | 10 | 2217 | 05 | 800 | 08 | 01 | V | 2,000.00 | 0.00 | 2,000.00 | 100.00 |
| 12 | 10 | 2217 | 05 | 800 | 09 | 01 | V | 800.00 | 0.00 | 800.00 | 100.00 |
| 13 | 10 | 2217 | 80 | 001 | 02 | 01 | V | 2,328.00 | 728.36 | 1,599.64 | 68.71 |
| 14 | 10 | 2217 | 80 | 191 | 10 | 01 | C | 73.34 | 0.00 | 73.34 | 100.00 |
| 15 | 10 | 2217 | 80 | 191 | 17 | 01 | V | 600.00 | 0.00 | 600.00 | 100.00 |
| 16 | 10 | 2217 | 80 | 191 | 18 | 01 | V | 190.44 | 0.00 | 190.44 | 100.00 |
| 17 | 10 | 2217 | 80 | 800 | 10 | 01 | V | 61.60 | 0.00 | 61.60 | 100.00 |
| 18 | 10 | 3475 | 00 | 108 | 03 | 01 | V | 600.00 | 0.00 | 600.00 | 100.00 |
| 19 | 12 | 2055 | 00 | 003 | 01 | 01 | V | 150.02 | 69.78 | 80.24 | 53.49 |
| 20 | 12 | 4055 | 00 | 207 | 03 | 01 | V | 278.25 | 0.00 | 278.25 | 100.00 |
| 21 | 16 | 2702 | 02 | 190 | 01 | 01 | V | 65.00 | 0.00 | 65.00 | 100.00 |
| 22 | 16 | 4215 | 01 | 102 | 01 | 01 | C | 54.10 | 0.00 | 54.10 | 100.00 |
| 23 | 16 | 4215 | 01 | 800 | 03 | 01 | V | 4,300.00 | 1,674.24 | 2,625.76 | 61.06 |
| 24 | 16 | 4215 | 01 | 800 | 03 | 02 | V | 1,200.00 | 48.07 | 1,151.93 | 95.99 |
| 25 | 16 | 4702 | 00 | 800 | 02 | 01 | V | 200.00 | 0.00 | 200.00 | 100.00 |
| 26 | 16 | 4711 | 03 | 103 | 01 | 01 | C | 249.74 | 11.82 | 237.92 | 95.27 |

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | | | | | V/C | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | 16 | 4711 | 03 | 800 | 01 | 01 | V | 70.00 | 18.74 | 51.26 | 73.23 |
| 28 | 16 | 4711 | 03 | 800 | 04 | 01 | V | 300.00 | 0.00 | 300.00 | 100.00 |
| 29 | 16 | 4711 | 03 | 800 | 04 | 02 | V | 300.00 | 0.00 | 300.00 | 100.00 |
| 30 | 16 | 4711 | 03 | 800 | 04 | 04 | V | 305.00 | 0.00 | 305.00 | 100.00 |
| 31 | 16 | 5054 | 04 | 800 | 01 | 01 | C | 351.00 | 114.11 | 236.89 | 67.49 |
| 32 | 16 | 5054 | 04 | 800 | 05 | 01 | V | 800.00 | 186.67 | 613.33 | 76.67 |
| 33 | 16 | 5054 | 04 | 800 | 05 | 02 | V | 500.00 | 81.44 | 418.56 | 83.71 |
| 34 | 16 | 5054 | 04 | 800 | 05 | 04 | C | 313.05 | 0.00 | 313.05 | 100.00 |
| 35 | 16 | 5054 | 04 | 800 | 05 | 04 | V | 386.95 | 27.74 | 359.21 | 92.83 |
| 36 | 16 | 5054 | 04 | 800 | 09 | 01 | V | 3,644.00 | 1,774.38 | 1,869.62 | 51.31 |
| 37 | 16 | 5054 | 04 | 800 | 09 | 02 | V | 1,000.00 | 267.81 | 732.19 | 73.22 |
